

# சமாதான நோக்கு

மலர் 12 இதழ் 01
பெப்ரவரி – மார்ச் 2015
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு

# புதிய அரசியல் கலாசாரத்திற்கான சவால்கள்

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து / சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா / சிரேஷ்ட விரிவுரையாளர் ரொஹான் எதிரிசிங்க / கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன / கலாநிதி அசங்க வெலிகல
சிரேஷ்ட ஊடகவியலாளர் காமினி வியங்கொட / சட்டத்தரணி பவாணி ஃபொன்சேக்கா / பேராசிரியர் ஜயந்த செனெவிரத்ன / பேராசிரியர் சுமனசிறி லியனகே / சட்டத்தரணி எல்மோ பெரேரா
சட்டத்தரணி கே.டபிள்யூ.ஜனரஞ்ஜன / சட்டத்தரணி சந்திரபால குமாரகே / வைத்தியர் ராஜா விஜயதுங்க / லயனல் குருகே / கலாநிதி நிர்மல் ரஞ்ஜித் தேவசிறி / சட்டத்தரணி டீ.எம். திசாநாயக்க
கலாநிதி தர்மசேன பதிராஜ / திம்பிரியாகம பண்டார / ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன / பிரதமர் ரணில் விக்கிரமசிங்க / எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிரிபால டி சில்வா
ஜே.வீ.பீ. தலைவர் அநுரகுமார திசாநாயக்க / சட்டத்தரணி வாசுதேவ நாணயக்கார / சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் /சட்டத்தரணி நிஷாம் காரியப்பர்

# சமாதான நோக்கு

ISSN 955-1800-0061

மலர் 12 இதழ் 01 பெப்ரவரி – மார்ச் 2015

தொலைபேசி : 94-1-2370801/4

ஃபெக்ஸ் : 94-1-2370802

மின்னஞ்சல் : cpa@cpalanka.org

இணையதளம் : cpalanka.org

ஆசிரியர் **எஸ். சிவகுருநாதன்**


## தேசிய ஐக்கியத்தின் ஊடாக புதிய அரசியல் கலாசாரம்

அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் கூர்மையான விவாதச் சூழ்நிலையை உருவாக்கி, 2015 ஜனாதிபதித் தேர்தல் நிறைவுபெற்றது.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரான காலகட்டம் வெற்றிவாகை சூடியதும், தோல்வியுற்றோரை ஒடுக்கும் அநாகரீகமான அரசியல் மரபைப் புறக்கணித்து. அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும், தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது. அதேசமயம், நாட்டுக்கு உகந்த புதிய அரசியலமைப்பைச் சிருஷ்டித்தல்மீதும் கூடிய கவனம் செலுத்தப்படும் ஒருகால கட்டத்தை நாம் எட்டியுள்ளோம்.

இது நாட்டுக்குத் தகுதியான புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு ஏற்ற மிகச் சிறந்த நுழைவாயில் என்பது தெளிவு.

நாடு எதிர்நோக்கியுள்ள பல்வேறு துன்பியல் நடவடிக்கைகளைத் தடுக்கக் கூடிய ஒரே மார்க்கம் தேசிய ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்புவதற்கான சவாலாகும் என்பதை இங்கு நாம் முக்கியமாக கருத்தில்கொள்ள வேண்டும்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுவேட்பாளர் முன்வைத்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு வடக்கு – கிழக்கு –மலையகம் ஆகிய பிரதேசங்களில் வாழும் அதிகமான மக்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்தக்கூடிய 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இலங்கை மக்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்திருப்பதோடு அதனை ஆழ்ந்த கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர்.

ஆனால், வடபுலத்தில் வாழும் மக்களின் மையப் பிரச்சினைகளுக்கும், வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும், புதிதாக உதயமாகிய இச் சந்தர்ப்பத்தை நழுவ விடாது பயன்படுத்துதல், புதிய அரசாங்கத்தின் வகைப்பொறுப்பும் இன்றியமையாத கடமையுமாகும்.

இத்தகைய சிறந்த சந்தர்ப்பங்களை கடந்த காலத்திலும் நழுவ விட்டுள்ளோம். இவ்வாறு நழுவ விட்ட சந்தர்ப்பங்களின் இறுதிச் சந்தர்ப்பம், 2009 இல் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பின்னர் கைநழுவிப் போனது. அது இயல்பாகவே ஏற்பட்டதொன்றல்ல. அவ்வாறு கைநழுவுவதற்கு இயல்பான காரணங்களை சாக்குப்போக்குச் சொல்ல முடியாது.

போருக்குப் பின்னர் தேசிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு எம்மால் முடியவில்லை. மேற்படி சாதகமான சூழ்நிலையை உருவாக்க முடியாமை காரணமாக ஜெனீவா நகரில் மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக் குழுவை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

புதிய தலைமைத்துவம் தனது சுயநலத்திற்காக சிங்களப் பேரினவாதத்தை தூண்டுவதன்மூலம், ஏனைய தேசிய இனங்கள் மத்தியில் ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தாமை பாராட்டுக்குரியது. இதனை முழுமையான யதார்த்தமாக்குவதாயின், வடக்கு – கிழக்கு – மலையகம் ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை வழங்க வேண்டும். ஆகவே, இதை செயற்படுததுவதாயின் குறுகியகால, நீண்டகால செயற்பாடுகள் இன்றியமையாதவையாகும்.

முன்னைநாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்த (பின்னர் அவரே கைவிட்ட) “சர்வகட்சி மாநாட்டின்” பிரேரணைகளைப் போலவே, அவரால் நியமிக்கப்பட்ட “கற்றபாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின்” (எல்.எல்.ஆர்.சீ) பரிந்துரைகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

இவற்றுக்காக செலவு செய்த பணமும், விரயமாக்கப்பட்ட நேரத்தையும் கவனிக்கும்போது, புதிய நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்குச் செலவு செய்ய நேரும் பணத்தையும், நேரத்தையும் ஒப்புநோக்குகையில், புதிய கருத்துக்களை அமுலாக்குவதற்கான ஒரு பொறிமுறையைத் தயாரிப்பது இன்றியமையாததாகும்.

பாராளுமன்றம், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளும், பிரதிநிதித்துவப்படுத்தப்படும் பிரஜைகள் சமூகங்களுக்கிடையே அடிமட்டத்தில் இருந்து மேல் மட்டத்தை நோக்கிச் செல்லும் பிரஜைகளின் கலந்துரையாடலின் அவசியத்தை, நாம் புதிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவதன் நன்னோக்கத்திற்காக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இங்கு நிறைவேற்றுத்துறை இதுவரை தேசிய ஐக்கியத்தை அளிப்பதற்கு வழிநடத்தும் நான்காவது அரசாங்கமான ஊடகங்கள் இந்த தொந்தரவுகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

அயல் நாடான இந்தியாவில் “தூரதர்ஷன்” பிரித்தானியாவின் பி.பி.சி. ஆகிய ஊடக நிறுவனங்களின் மரபினைக் கருத்திற்கொண்டு புதிய ஊடக சம்பிரதாயத்தை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டும்.


ஆலோசகர்: **லயனல் குருகே**

நானாவித உதவிகள் : **மஹிந்த ரத்நாயக்க, திம்பிரியாகம பண்டார** பக்க வடிவமைப்பு: **கமலாதேவி சசிசந்திரன்**

அச்சாக்கம் : **க்ளோப் ப்ரின்டிங் வேர்க்ஸ் 0777-315971**

“சமாதான நோக்கு” என்பது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதானமும் மோதல் ஆய்வும் பற்றிய பிரிவினதும் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவினதும் பிரசுரமாகும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் என்பன மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இலங்கையின் மோதலைத் தீர்ப்பதற்கு ஏதுவான பிரச்சினைகளையிட்டு, எமக்கும் பொதுமக்களுக்கும் இடையே இடையீட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு மார்க்கமாக “சமாதான நோக்கு” பயன்படுகிறது. இச்சஞ்சிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதோ அல்லது அதன் பணிப்பாளர் சபையினதோ கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்க.

தொடர்புகளுக்கு : **“சமாதான நோக்கு”**
24/2, 28வது ஒழுங்கை, ஃப்ளவர் வீதி, கொழும்பு-7
தொலைபேசி : 011 2565304-6, தொலைநகல் : 011 4714460
மின் அஞ்சல் : cpa@cpalanka.org இணைய தளம் : www.cpalanka.org




# உள்ளடக்கம்




**வரலாற்று ரீதியான வெற்றியின் பாரிய சவால்கள் 3**
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

**பிரஜைகள் மயமாக்கல் 8**
சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா

**மூன்றாவது குடியரசு அரசியலமைப்பை நோக்கி 11**
சிரேஷ்ட விரிவுரையாளர் ரொஹான் எதிரிசிங்க

**அரசியலமைப்பிற்கான திருத்தத்தை மேற்கொள்ளும் அதேவேளை புதிய அரசியலமைப்பைப் பற்றி சிந்திப்பதற்கும் காலம் கனிந்துள்ளது 17**
கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன

**புதிய இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தைப் பலப்படுத்துதல்: அத்தியாவசியமான நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்கள் 22**
கலாநிதி அசங்க வெலிகல

**மஹிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்கும் போராட்டத்திற்கு ஒப்பாக தற்போதைய போராட்டம் மிகப் பாரதூரமானது 29**
சிரேஷ்ட ஊடகவியலாளர் காமினி வியங்கொட

**இலங்கையில் உண்மை மற்றும் நீதிக்கான வரைபடத்திற்கு ஒருசில கருத்துக்கள்.... 35**
சட்டத்தரணி பவாணி ஃபொன்சேக்கா

**இராணுவக் கரத்தின் நல்லாட்சி 43**
பேராசிரியர் ஜயந்த செனெவிரத்ன

**பிரமுகர்களின் ஜனநாயகமும் பிரமுகர் அல்லாதவர்களின் ஜனநாயகமும் 47**
பேராசிரியர் சுமனசிறி லியனகே

**தேர்தல் ஆணைக்குழுவை வலுவூட்டுவோம் 52**
சட்டத்தரணி எல்மோ பெரேரா

**மனித உரிமைகள் ஆணைக்குழுவை வலுவூட்டுதல் 53**
சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா

**சரிபார்த்தலும் சமநிலைப்படுத்தலும் பற்றிய கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்படுதல் 54**
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

**தகவல்களை அறியும் உரிமை 55**
சட்டத்தரணி கே.டபிள்யூ.ஜனரஞ்ஜன

**தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கடமைப் பொறுப்பு 56**
சட்டத்தரணி சந்திரபால குமாரகே

**தேசிய ஔடதக் கொள்கையை அமுலாக்குதல் 57**
வைத்தியர் ராஜா விஜயதுங்க

**உள்ளக ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதன் மூலமே நல்லாட்சியை ஏற்படுத்த முடியும் 58**
லயனல் குருகே

**ஆட்சி செய்யும் பிரமுகர்களால் கைவிட முடியாத ஒருசில மறுசீரமைப்புக்கள் 63**
கலாநிதி நிர்மல் ரஞ்ஜித் தேவசிறி

**நல்லாட்சியும் சுயாதீன ஆணைக்குழுக்களும் 69**
சட்டத்தரணி டீ.எம். திசாநாயக்க

**அரசாங்கம் எதுவாயினும் கலைஞர்களை அடிவருடிகளாக்குவது தவறு74**
கலாநிதி தர்மசேன பதிராஜ

**புதிய அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் சவால்கள் 81**
திம்பிரியாகம பண்டார

**சர்வகட்சி அரசாங்கம் ஏன் அவசியப்படுகிறது ? 85**
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

**ஆளும் கட்சி – எதிர்க்கட்சி ஆகிய இரு தரப்பினரும் புதிய அரசியல் கலாசாரத்தை விரும்புகின்றனர்.87**
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

**இந்தச் சுயாதீனம் தான் என்ன? 89**
எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா

**உற்பத்திப் பொருளாதாரமே எமது குறிக்கோள் 93**
ஜே.வீ.பீ. தலைவர் அநுரகுமார திசாநாயக்க

**மக்கள் தமது அபிலாஷைகளுக்கு அமைய வாக்களித்தனர் இது ஜனநாயகத்தின் நேரடியான பெறுபேறு 94**
சட்டத்தரணி வாசுதேவ நாணயக்கார

**வடக்கு கிழக்கு மக்களுக்கு சிவில் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் 99**
தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்
சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன்

**தேசிய அரசாங்கத்தின் கனவை நனவாக்குவோம் 100**
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் நாயகம்
சட்டத்தரணி நிஷாம் காரியப்பர்




முன்னை நாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியை ஏற்றுக்கொண்டு அலரி மாளிகையில் இருந்து வெளியேறுகிறார்.



**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

# வரலாற்று ரீதியான வெற்றியின் பாரிய சவால்கள்

ஜனவரி 08 ஆந் திகதி இடம்பெற்ற, ஜனாதிபதித் தேர்தலின்போது, ஆட்சி அதிகாரத்தில் இருந்த முன்னைநாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார். திரு.மைத்திரிபால சிறிசேன பெற்ற வெற்றி பல காரணங்களினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இலங்கையில் அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதி ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அதேசமயம், கடந்த சாதனைகளை வீழ்த்தி, 81% ஆன வாக்காளர்கள் வாக்களித்த ஜனாதிபதித் தேர்தலும் இதுவேயாகும். மேலும், இதுவும் அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதி ஒருவர் மூன்றாவது பதவிக் காலத்தைக் கைப்பற்றுவதற்கு தேர்தலில் முகம்கொடுத்த முதற் சந்தர்ப்பமும் இதுவாகும். பரந்துபட்ட முறையில் செயற்பட்ட பல்வேறு சக்திகள், அதிகாரத்தில் இருந்த ஒரு ஜனாதிபதிக்கு எதிராக அணிதிரண்ட தேர்தலும் இதுவே என பலர் தர்க்கம் செய்கின்றனர். இந்த பரந்துபட்ட அணிகளில், ஒருபுறம் சிங்கள பௌத்த தேசியவாதமும் மறுபுறம் தமிழ் தேசியவாதிகளும் மறுமுனையில் ஒருங்கிணைந்தனர். 47.58% சதவீதத்தைப்



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்




**தேர்தல் தினத்தின்போது ஏற்படக்கூடுமென அச்சமடைந்த வன்முறைச் சம்பவங்களும், மோசடிகளும் இடம்பெறவில்லை. ஆனால், ராஜபக்ஷாக்கள் அதிகாரத்தைக் கைவிட விரும்பமாட்டார்கள் என்ற உணர்வு அவ்வாறே நிறைவேறியது.**

பெற்றுக்கொண்ட திரு.ராஜபக்ஷவிற்கு எதிராக 51.28% சதவீத வாக்குகளைப் பெற்றுக்கொண்டு திரு. மைத்திரிபால சிறிசேன வெற்றிகண்டார். அதேசமயம் இருவருக்கிடையேயான வாக்கு வித்தியாசம் குறைந்தபட்சம் 450,000 ஆகும்.

சிறுபான்மை தேசிய இனங்களை பாரியளவில் மையப்படுத்திய பிரதேசங்களில் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்கள் பாரிய வெற்றியீட்டியதோடு, சிங்கள பெரும்பான்மை மக்கள் வாழும் பிரதேசங்களில் திரு.மகிந்த ராஜபக்ஷ பெற்ற வாக்குகளின் நூற்றுவீதம் அதிகமானது. விடுதலைப் புலிகளை தோல்வியுறச் செய்த பின்னர் 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ பெற்ற அதிஉயர் நூற்றுவீதத்தோடு இம்முறை தேர்தலை ஒப்புநோக்கும்போது குறிப்பிடத்தக்க வாக்குகளின் குறைவு உயர்மட்டத்திலேயே உள்ளது. 22 தேர்தல் மாவட்டங்களில் 12 தேர்தல் மாவட்டங்களிலும் முதலில் வெற்றிக் கம்பத்தைக் கடப்பவரின் வெற்றியை நிர்ணயிக்கும் வாக்களிப்பு முறைமூலம், கணக்கிடப்பட்ட போது 70 தொகுதிகளில் திரு. மைத்திரிபால சிறிசேன வெற்றிகண்டார். திரு.மகிந்த ராஜபக்ஷ 10 தேர்தல் மாவட்டங்களில் வெற்றிகண்டு ஒட்டுமொத்தமாக 160 தேர்தல் தொகுதிகளில் 90 தொகுதிகளை வெற்றி கண்டார். இந்தப் பெறுபேறுகளை குறுக்கு வெட்டாக நோக்குகையில் பெரும்பான்மை சமூகத்தின் குறிப்பிடத்தக்க வாக்குகள் தமக்கு கிடைத்தன என மகிந்த ராஜபக்ஷ கூறக்கூடும். எதிர்வரும் 5 மாதங்களில் அல்லது உயர்மட்ட தாமதத்தின் பின்னர் 2016 ஏப்பிரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் இதனை நாம் காணமுடியும். திரு.மைத்திரிபால சிறிசேன சகல பிரஜைகளின் வாக்குகளால் வெற்றிபெற்றது உண்மை. பெரும்பான்மை தேசியத்துவ வாக்காளர்களினால் வெற்றி பெற்றதாகவும், பெரும்பான்மை சமூகத்தில் இருந்து திரு.ராஜபக்ஷ அவர்களின் வாக்கு வங்கிகளை 2010 ஜனாதிபதி தேர்தலைவிட இம்முறை 10% ஆல் குறைந்துள்ளதாகவும் ஜனாதிபதி முறையை வெற்றிகொள்வதாயின் முஸ்லிம், இந்து சமூகங்களில் இருந்து பெறமுடியும் என்பதும் இங்கு தெளிவாகிறது.

தேர்தல் தினத்தின்போது ஏற்படக்கூடுமென அச்சமடைந்த வன்முறைச் சம்பவங்களும், மோசடிகளும் இடம்பெறவில்லை. ஆனால், ராஜபக்ஷாக்கள் அதிகாரத்தைக் கைவிட விரும்பமாட்டார்கள் என்ற உணர்வு அவ்வாறே நிறைவேறியது. அவசர காலசட்டத்தைப் பிரகடனப்படுத்திவிட்டு அதன் மூலம் வாக்குகள் எண்ணப்படுவதை இடைநிறுத்தி, இராணுவத்தை தக்கவைத்து அவர்கள் அதிகாரத்தில் தொடர்ந்தும் வீற்றிருக்க எண்ணினர் என அறிக்கைகளில் குறிப்பிடப்படுகின்றன. சட்டமா அதிபரும், இராணுவத் தளபதியும் இந்த வேண்டுகோளை நிராகரித்தனர்.அதே சமயம் அன்று எதிர்கட்சித் தலைவராக இருந்த தற்போது பிரதமராகப் பதவி வகிக்கும் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலையீடு மூலம் இது தடுக்கப்பட்டது. இக் குற்றச்சாட்டுக்கள் தற்போது விசாரணை செய்யப்படுகின்றன. திரு.ராஜபக்ஷ இலங்கையில் வசிப்பதோடு அவர் பாராளுமன்றத்தில் இணைய முற்படுகின்றார் என்ற தகவலும் தற்போது சமூகத்தில் நிலவுகிறது. ஜனாதிபதி திரு.மைத்திரபால சிறிசேன சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி வழங்கப்பட்ட நிலையில் சிலவேளை அவரது அரசியல் செயற்பாட்டின்போது தனக்குரித்தான அரசியல் அபிலாஷைகள் மீது கவனம் செலுத்துவதை விடுத்து இவற்றை அதிகரிப்பதற்கான ஓர் அரங்கை அறிமுகப்படுத்துவதாகவும் அமையலாம்.

தீர்மானகரமான சந்தர்ப்பங்களில், தேர்தல் நடைமுறையின் நேர்மைத் திறனைப் பாதுகாப்பதற்கு செயற்பட்ட தேர்தல் ஆணையாளரின் வகிபாகம் குறித்து விசேடமாகக் குறிப்பிட வேண்டும். ஆட்சி தொடர்பான நிறுவன ரீதியான செயற்பாடுகளுக்கு மறுசீரமைப்புகளை முதன்மையாகக் கொண்ட தேர்தலின்போது, ஒரு தனிநபரின் தைரியமும், நேர்மைத் திறனும் இடம்பெற இருந்த மோசமான நிலைமையை தடுப்பதன்மூலம் சுட்டிக்காட்டப்படும் நிலைமையை கவனத்திற்கொண்டு அதன் முக்கியத்துவத்தையும் நடைமுறையில் கவனம் செலுத்த வேண்டும்.

www.newsfirst.lk



**தீர்மானகரமான சந்தர்ப்பங்களில், தேர்தல் நடைமுறையின் நேர்மைத் திறனைப் பாதுகாப்பதற்கு செயற்பட்ட தேர்தல் ஆணையாளரின் வகிபாகம் குறித்து விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.**

*தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேஷப்பிரிய*

திரு.மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் மேடையின் முக்கிய தொனிப்பொருள் ஆட்சியின் பலவீனங்களுக்கு சிகிச்சை செய்வதாகவே அமைந்திருந்தது. இவ் விடயத்தின்பொருட்டு அர்ப்பணிப்புடனான நீண்ட மறுசீரமைப்புகளைச் செய்யும் அவர் தனது 100 நாள் திட்டத்தின்மூலம் உறுதியளித்தார். இக் காலஎல்லையில் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் பாரியளவில் குறைக்கப்படும். அதேசமயம் நிறைவேற்று அதிகாரங்களை சமநிலைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்திற்கு நன்மையளிக்கக் கூடிய வகையில் அமையும். பொலிஸ், அரசசேவை, மற்றும் தேர்தல்கள் உட்பட அரசின் அங்கங்களுக்கான சுயாதீனமான ஆணைக்குழுக்கள் என்பன அமைக்கப்படும். தகவல்களைப் பெறும் உரிமையை உறுதி செய்யும் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதேசமயம், சகல தேர்தல் தொகுதிகளிலும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையும் கலந்த தேர்தல் மறுசீரமைப்புக்கள் இடம்பெறும். தற்போதைய அரசாங்கத்தின் கூட்டமைப்பு வீழ்ச்சியடையாமல் ராஜபக்ஷ முகாமின் 30 பேரோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையினரோ வழங்கும் ஒத்துழைப்பு அனைத்தும் தீர்மானகரமான முறையிலேயே தங்கியுள்ளது. ஆகவே, இது திரு.ராஜபக்ஷவின் தந்திரத்தில் தங்கியுள்ளது எனவும் குறிப்பிடலாம். ஏதிரக்கட்சி பா.உ.க்கள் இதுவரை இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க உறுதிபூண்டுள்ளனர். 100 நாள் முடிவில் பாராளுமன்றம் கலைக்கப்படும். பொதுத் தேர்தல் ஒன்று யூன் மாத முதல் வாரத்தில் இடம்பெறும்.

இத் தருணத்தில் திரு.மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு இது ஒரு வரலாற்று வெற்றியாகும். ஆனால், அவர் பல்வேறு சவால்களை வெற்றிகாண வேண்டியுள்ளது. பூர்தியடையாத பாரிய பணிகள் எஞ்சியுள்ளன. ஜனநாயக ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு அவசியமான பின்னணியை அவர் தயாரிப்பார்.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் உண்மையான முக்கிய விடயம் இந்நாடு எதிர்நோக்கும் பாரிய சவாலான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாகும். அதேசமயம் போர்க் குற்றங்கள் உட்பட ஏனைய மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வகைப் பொறுப்புக் கொண்ட அர்த்தபுஷ்டியான ஐக்கிய கூட்டமைப்பு பற்றிய எதுவிதமான தெளிவான கருத்துரையும் இல்லாமை பற்றி எதுவித தெளிவும் கிடையாது. பரந்துபட்ட கூட்டமைப்பின் பங்காளர்களுக்கு இடையே ஓர் அமைதியான உடன்பாடு காணப்படுகிறது. இக் கூட்டணியின் தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்படி இரண்டாவது விடயம் தொடர்பாக “நம்பிக்கை வைக்கக்கூடிய உள்நாட்டு பொறிமுறை” பற்றிய பிரகடனங்களை முன்வைத்திருந்தனர். அதேசமயம் மேலே குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக அரசியலமைப்பின் 13வது திருத்தம் முழுமையாக செயற்படுத்துதல், புதிய அரசாங்கத்தின் கூட்டு ரீதியான புத்திசாலித்தனமான, அரசியல் உபாய மார்க்கமாக இப் பிரச்சினைகளை பாராளுமன்றத் தேர்தலின் இறுதிவரை பொதுமக்கள் உரையாடலுக்காக குறிப்பிட்டளவு தொலைவில் வைக்க வேண்டுமென்பது தெளிவுபடுத்தப்பட்டது. அவற்றைச் சீண்டுவதன்மூலம் பரந்துபட்ட கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு இறுதியாக பாரதூரமாக அமையுமென எண்ணக்கூடும்.

மனித உரிமைகள் பற்றிய புதிய அரசின் கொள்கை மற்றும் மனித உரிமைகள் மீதான அரசின் அர்ப்பணிப்பு பற்றிய முதலாவது பரிசோதனை மார்ச் மாதத்தில் இடம்பெறும். அதாவது 2014 மார்ச் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் ஆணையாளர் அலுவலகத்தின்கீழ் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு வெளியிடும் அறிக்கை மார்ச் மாதத்தில் இடம்பெற உள்ளது. பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அறிக்கை சமர்ப்பிப்பது தாமதிக்கப்பட வேண்டுமென்பது புதிய அரசினுடைய விருப்பமாகும். அதாவது ஆகக் குறைந்தபட்சம் மனித உரிமைகள் பேரவையின் செப்டெம்பர் அமர்வு வரை அறிக்கை பிற்போடப்பட்டது. இதனிடையே அவர்கள் உறுதிமொழி அளித்த உள்நாட்டுப் பொறிமுறையைக் கண்டறிவதற்கு ஐக்கிய கூட்டமைப்பு மற்றும் வகைப்பொறுப்பு தொடர்பாக இதுவரை தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கும் உறுதிமொழி





www.timesofisrael.com



**மனித உரிமைகள் பற்றிய புதிய அரசின் கொள்கை மற்றும் மனித உரிமைகள் மீதான அரசின் அர்ப்பணிப்பு பற்றிய முதலாவது பரிசோதனை மார்ச் மாதத்தில் இடம்பெறும்.**

*ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத் தொடர்*

கூறப்பட்டது.

பாதிக்கப்பட்டோர் மற்றும் சிவில் சமூகத்தைப் பொறுத்தவரை அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்பது பற்றி எதுவிதமான நெகிழ்ச்சிப்போக்கோ அல்லது இணக்கப்பாடு கொண்ட பிரவேசமோ இருக்கக் கூடாது. அதேசமயம் உள்நாட்டுப் பொறிமுறையைத் திட்டமிடுவதிலும் அதன் குறிக்கோள் தொடர்பாகவும் அரசு சிவில் சமூகத்துடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் முதல் நடவடிக்கையாக மனித உரிமைகள் பிரச்சினைபற்றி வகைப்பொறுப்புக் கூறவேண்டிய அமைச்சரவை மட்டத்திலான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நபரை அடையாளம் காணவேண்டி உள்ளது. குறிப்பிட்ட சாதகமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இராணுவ அனுபவங்கள் இல்லாத ஐக்கியக் கூட்டமைப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு பற்றிய நம்பிக்கை வாய்ந்த தகுதிபெற்ற இரண்டு நபர்கள் முறையே வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். இராணுவத்தினர் கையகப்படுத்திய காணிகளை மீளப்பெறுவது தொடர்பான ஆரம்ப நடவடிக்கையாக அவர்கள் பற்றிய உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. ஏ9 பாதையில் சில சோதனைச் சாவடிகள் நீக்கப்பட்டுள்ளன. இது இவ்வாறு இடம்பெறுகையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியல் இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அதேசமயம் எதுவிதமான சான்றாதாரங்களும் இன்றி பல்லாண்டு காலமாக சிலசமயங்களிலே பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் சிறைச்சாலைகளிலே வாடும் இளைஞர்கள் விடுவிக்கப்படவில்லை. அதேசமயம் பசி பட்டினிக்கு எதிரான செயற்பாடு (ACF) அமைப்பின் 17 ஊழியர்களும், திருகோணமலையில் சுட்டுக்கொல்லப்பட்ட 5 மாணவர்கள் தொடர்பாகவும் இதுவரை வழக்கு தொடரப்படவில்லை. எல்எல்ஆர்சி அறிக்கை மூலம் பரிந்துரைக்கப்பட்ட தேசிய கீதம் சிங்களத்திலும், தமிழிலும் இசைப்பதும் இதுவரை அமுலாக்கப்படவில்லை. இங்கு பின்னர் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளான மனித உரிமைகளைப் பேணுதல், விசேடமாக தண்டனையில் இருந்து விலக்களிக்கப்பட்டு கலாசாரத்தை மீளமைப்பு செய்ய வேண்டி உள்ளது. அதேசமயம் ஆட்சி அமைப்பு பற்றிய அடிப்படைக் கருத்துக்களுக்கு வலுவூட்டும் அதன்மீதான அர்ப்பணிப்பைக் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளும் சர்வதேச சமூகம், விசேடமாக இந்தியாவும் மேற்கு நாடுகளும் அரசுமீது காட்டும் நல்லெண்ணம் ஏற்கனவே ஏற்பட்டுள்ள உயர்மட்ட தூது விஜயங்கள் மூலமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. புதிய அரசாங்கத்திற்கு நியாயமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அல்லது அதற்கெதிராக தற்போது நிலவும் அரசியல் அபிலாஷைமீது மிகவும் அமைதியாக கூருணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும். அதேசமயம் பரந்துபட்ட அரசியல் சமூகம் தொடர்பில் நோக்கும்போது ராஜபக்ஷவின் ஊழல்கள் பற்றி தினசரி அம்பலப்படுத்தப்படும் குற்றச்சாட்டுக்களைக் கவனத்திற்கொள்ளும் போது இதுதொடர்பாக குற்றவாளிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதை தாமதிக்காமல் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது மக்களின் பிரதான எதிர்பார்ப்பாகும். இது தண்டனை பெறாமல் குற்றம் செய்யும் மற்றைய பக்கமாகும். மேற்கூறிய நடவடிக்கைகளை அமுல்படுத்தாமல் இருப்பின் புதிய அரசுக்கு பொதுத் தேர்தல் ஒன்றில் பாரதூரமான நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டி வரும். அதேசமயம் நஷ்டஈடு தொடர்பாக வலியுறுத்த வேண்டிய ஒரு விடயம் உண்டு. இங்கு சரியான வழிமுறை அமுல்படுத்தப்பட வேண்டும். அதேசமயம் கவனம் ஈர்க்கப்பட வேண்டிய ஒரு விடயம் உண்டு. உரிய முறைகளை அனுசரிக்க வேண்டும். குற்றம் சுமத்தப்பட்ட அளவில் மோசடியை நாம் கணிப்பீடு செய்யலாம். இதற்குரித்தான சாட்சியங்களைப் பெறுவதற்கு குறிப்பிட்ட காலம் எடுக்கலாம். அதேசமயம் சர்வதேச ஒத்துழைப்பும் அவசியப்படலாம்.

தேர்தல் உறுதிமொழியான 100 நாள் காலஎல்லைக்குள் சிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசராக மீண்டும் சேவையில் அமர்த்தப்படுதல் பற்றிய பிரச்சினையின்போது 100

www.groundviews.org



**தேர்தல் உறுதிமொழியான 100 நாள் காலஎல்லைக்குள் சிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசராக மீண்டும் சேவையில் அமர்த்தப்படுதல் பற்றிய பிரச்சினையின்போது 100 நாள் வேலைத்திட்டத்திற்கு ஏற்ற வகையில் செயற்படுகையில் புதிய அரசு முகநூ ல் சவாலையும் எதிர்நோக்க வேண்டி இருந்தது.**

*ஷிராணியின் மீள் வருகை*

நாள் வேலைத்திட்டத்திற்கு ஏற்ற வகையில் செயற்படுகையில் புதிய அரசு முகநூல் சவாலையும் எதிர்நோக்க வேண்டி இருந்தது. இங்கு பயன்படுத்தப்பட்ட செயற்பாடு திரு. மொஹான் பீரிஸினால் வகித்த(De fecto) பதவிபற்றி வெற்றிடமாக இருக்கவில்லையெனவும் , உண்மையிலேயே அவர் பலவந்தமாக அதனை கைப்பற்றி இருந்தார் எனவும் (Usurper) என்ற வகையில் ஜனாதிபதி திரு.பீரிஸ் அவர்களுக்கு அறிவித்தார். இது குறைபாடு கொண்ட குற்றப் பிரேரணை காரணமாகவே நிகழ்ந்தது. இங்கு பிரதம நீதியரசரை குற்றப் பிரேரணைக்கு ஆளாக்குவதற்கு பாராளுமன்றம் வாக்குகளைப் பயன்படுத்தவில்லை. அவ்வாறு செய்வதற்கு தெரிவுக் குழுவை நியமித்தல் பற்றிய யோசனையை பாராளுமன்றம் அங்கீகரித்தமையே இடம்பெற்றது. இது இடம்பெற்ற காலகட்டத்தில் எதிர்கட்சி இவ்விடயத்தைச் சுட்டிக்காட்டினாலும், சபாநாயகர் அவர்களுடைய எதிர்ப்பைப் புறக்கணித்துச் செயற்பட்டார்.

பாராளுமன்றப் பிரேரணைமூலம் தொழில்நுட்ப மற்றும் சட்டரீதியான அடிப்படையில் அமைந்த விடயங்களை நியாயப்படுத்துவதற்கு முடிந்ததாக விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்மூலம் ஆளுகை (Governance) மீது உள்ள அரசின் அர்ப்பணிப்பு பற்றி சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. சட்டத்தரணிகள் சங்கம் இது தொடர்பாக திரு.மொஹான் பீரிசுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்த ஊர்வலத்தின்போதும், திரு.பீரிஸ் தனது பதவியை இராஜினாமா செய்தால், அவருக்கு ஒரு இராஜதந்திர பதவியை வழங்குவதுபற்றி கவனத்திற் கொள்வதாகவும், அதற்கு பேரம் பேசியதாகவும், ஊடக அறிக்கைகள் கூறின. இதுபற்றியும் சட்டத்தரணிகள் சங்கம் பிரஸ்தாபித்து இருந்தது. ஊடக அறிக்கைகளில் இவ்விடயமும் சுட்டிக் காட்டப்பட்டது. இங்கு பின்னர் குறிப்பிடப்பட்ட விடயம் மன்னிக்கக் கூடிய விடயமல்ல. மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அவர்கள் தடையாக இருப்பதன் ஆபத்தைச் சிந்திக்கும்போது அதில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு அரசுக்கு இருந்த தேவையைப் புரிந்துகொள்ள முடியும். எனினும் ஏற்கனவே திட்டமிட்ட நிகழ்ச்சித்திட்டம் குற்றம் சுமத்தப்பட முடியாததொன்றாக இருக்கக் கூடிய சாத்தியக்கூறு இருந்தபோதிலும் ஈடுபடுத்தப்பட்ட நடைமுறை குற்றம் சுமத்தக்கூடியதொன்றாக இருந்த அதேவேளை சந்தேகத்திற்கு இடமின்றி பாராளுமன்றத்தின் பெரும்பான்மை தொடர்பாக அரசிடம் இருந்த நிரந்தரமற்ற தன்மையையும், காணக்கூடியதாக உள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி பாராளுமன்றத்தின் பெரும்பான்மை தொடர்பாக அரசிடம் நிலவிய ஸ்திரமற்ற தன்மை மற்றும் பாதுகாப்பற்ற நிலைமைக்கு இரையாகும் ஒரு நிலைமையும் இருந்தது.

100 நாள் காலஎல்லையுள் நாலில் ஒரு பங்கை நாம் கடந்து வந்துள்ளோம். அதேசமயம், மக்களுக்கு நன்மைகளை ஏற்படுத்தும் வரவுசெலவுத் திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டது. திருமதி சிராணி பண்டாரநாயக்க மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு, மறுநாள் அவர் இராஜினாமா செய்த பின்னர் புதிய பிரதம நீதியரசரும் நியமிக்கப்பட்டு விட்டார். ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, சர்வதேசத்தின் நல்லெண்ணத்தைப் பெறுவதும், அதேசமயம், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களும் படிப்படியாக குறைக்கப்பட்டு வருகின்றன.

இரண்டு தசாப்தங்களாக தமது மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சிநிரல் இன்றைய அரசாங்கத்தின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலே என நம்பிக்கை வைத்து அவர்கள் களைப்பாறுவது சிவில் சமூகத்தினால் முடியாது. அவர்கள் விமர்சன ரீதியான ஒத்துழைப்பை வழங்க வேண்டிய அதே வேளை இந் நடவடிக்கைகள் பிழையான முறையில் இடம் பெற்றால், கிடைத்த இச் சந்தர்ப்பம் தவறவிடாத வகையில் உறுதிப்படுத்துவதற்காக பூர்வாங்க விமர்சனங்களும் முன்வைக்கப்பட வேண்டும்.







www.srilankaguardian.org

*பிரஜைகளின் செயற்பாடு*

சட்டத்தரணி
**எஸ்.ஜீ. புஞ்சிஹேவா**

# பிரஜைகள் மயமாக்கல்

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்றது ஜனாதிபதித் தேர்தல் அல்ல. பிரஜைகளினுடைய செயற்பாடே இடமபெற்றது. ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டது உண்மை. ஆனால், நாட்டுக்கு அத்தியாவசியமான பிரஜையே தெரிவுசெய்யப்பட்டார். பிரேற்றோல் பிரெஸ்ட் கவிதைமூலம் கூறியதாவது "புதிய ஆட்சியாளர்கள் நியமிக்கப்படாவிட்டால் புதிய மக்களை நியமிக்க வேண்டும்." உண்மையிலேயே இந்த இரண்டு அம்சங்களும் இடம்பெற்றன. பிரஜைகள் நித்திரை செய்யும்போது அவர் வெறும் வாக்காளர் ஆவார். வாக்காளர் எழுச்சியுறும்போது ஒரு பிரஜை உருவாக்கப்படுகிறார். எமக்கு விழித்திருக்கும் ஒரு பிரஜையே தேவைப்படுகிறார்.

கடந்து பத்து ஆண்டுகளுக்குள் இடம்பெற்ற சம்பவங்களை மீண்டும் ஞாபகமூட்டல் ஓர் அருவருக்கத்தக்க விடயமாகும். அது கோபத்துக்கும் காரணமாக அமையும். ஆனால், கட்சிகளை மறுசீரமைத்து மீண்டும் பதவிக்கு வருவதற்கு ஒரு நப்பாசை காட்டப்பட்டுள்ளது. 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்திற்காக இவர்களிடம் இருந்து பெறவேண்டிய பயனைக் கைவிடவேண்டிய அவசியமில்லை. ஆனால், முன்னைநாள் அமைச்சர்கள் அவர்களின் அடிவருடிகள். எந்தவொரு ஆட்சி நிறுவனத்திற்கும் நியமனம் பெறக்கூடாது. இவர்களுடைய குப்பை ஆத்மாக்கள் வெள்ளை நிற உடைகளால் மூடி மறைத்துக்கொண்டு தொடர்ந்தும் களவெடுத்த

www.journalofhumanitarianaffairs.blogspot.com



**பிரேற்றோல் பிரெஸ்ட் கவிதைமூலம் கூறியதாவது “புதிய ஆட்சியாளர்கள் நியமிக்கப்படாவிட்டால் புதிய மக்களை நியமிக்க வேண்டும்.” உண்மையிலேயே இந்த இரண்டு அம்சங்களும் இடம்பெற்றன. பிரஜைகள் நித்திரை செய்யும்போது அவர் வெறும் வாக்காளர் ஆவார். வாக்காளர் எழுச்சியுறும்போது ஒரு பிரஜை உருவாக்கப்படுகிறார். எமக்கு விழித்திருக்கும் ஒரு பிரஜையே தேவைப்படுகிறார்.**

*அமைதியின் பின்னர்..........*

பணத்தையே செலவு செய்கின்றனர். அவர்கள் வஞ்சகத் தனமாக கையகப்படுத்திய சொத்துக்களையே அனுபவித்து வருகின்றனர். மீண்டும் அதிகாரத்திற்கு வர பல உபாய மார்க்கங்களில் ஈடுபடுகின்றனர். அதனைச் செய்வதற்கே இவ்வாறு செயற்படுகின்றனர் என்பதை பிரஜைகள் மறந்துவிடலாகாது. இவர்கள் மத்தியில் வெகு அபூர்வமாக ஒரு நல்ல மனிதன் இருந்திருப்பின் அந்த நல்ல மனிதன் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

இந்தத் தேசிய பாதுகாப்பு என்ற மோசமான அடையாளத்தின்கீழ் படுகொலைகள், காணாமற்போகச் செய்தல், வடமாகாணத்து மக்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. தென்னிலங்கையின் மக்களை அச்சுறுத்திய வேறொரு யுகம் இருக்கவில்லை. ஒரு குடும்பம் ஒன்றிணைந்து இவ்வளவு பொதுமக்களின் சொத்துக்களையும் தமதாக்கிக் கொண்ட ஒரு யுகம் இலங்கை வரலாற்றில் இருக்கவில்லை. ஆங்கில ஸ்பானிய கடற்கொள்ளைக்காரர்களின் பின்னர் ராஜபக்ஷ குடும்பத்தினர் தரைக் கொள்ளைக்காரர்களாக வரலாற்றில் இடம்பெற்றனர்.

இந்த மாபெரும் தேச விபத்தின் இறுதி விளைவு, மாபெரும் பயங்கரவாதத்தில் இருந்து நாட்டைக் காத்தமைக்கு பிரஜைகள் நன்றி தெரிவிக்க வேண்டும். மீண்டும் அத்தகைய ஓர் ஆபத்தைக் கண்டால் உடனடியாக எழுச்சியுறுவது அத்தியாவசியமாகும். எமது நாட்டை புதியதொரு பயணப் பாதையில் இட்டுச் சென்ற திருப்புமுனை என இதனைக் கருதுவது நியாயமானது. சமூகத்தின் சகல மட்டங்களையும் புதிதாக நிர்மாணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அது கட்டாயமாக செயற்படுத்தப்பட வேண்டும். அதற்கு இலாபத்தையும், சுகபோகங்களையும் பொருட்படுத்தாது நடவடிக்கை எடுத்தல் ஆட்சியாளர்களதும், நிர்வாகிகளதும், அரச உத்தியோகத்தர்களதும் கடமையாகும். இச் சகல சந்தர்ப்பங்களிலும் பிரஜைகள் தமது கண்களைத் திறந்துகொண்டு இருக்க வேண்டும். ஒரு மக்கள் பிரிவினருக்கு ஏற்படும் அநீதிக்கு எதிராக ஏனைய சகல மக்களும் குரலெழுப்ப வேண்டும். ஒரு மனிதனுக்கு இழைக்கப்படும் அநீதி அனைத்து மனித வர்க்கத்திற்கும் எதிரான குற்றமாகும் எனக் கருதும் ஒரு கலாசாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

புதிதாகக் கட்டியெழுப்பக் கூடிய இத்தகைய சமூகத்திற்கு அடித்தளமிடுவதற்கு சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்கள் காட்டிய ஐக்கியத்தையும் அரசியல் முதிர்ச்சியையும் மென்மேலும் பேணிப் பாதுகாப்பது ஆட்சியாளர்களின் வகைப்பொறுப்பாகும். இலங்கையின் வாக்காளர்கள் சகல விடயங்களையும் சரியாகப் புரிந்துகொண்டு காட்டிய பிரஜைகளின் முதிர்ச்சியை அனேகமாகப் பயன்படுத்தப்படும் சட்டத்தின் ஆட்சி பாரிய அளவில் ஆரம்பித்தல் வேண்டும்.

நீண்டகாலமாக இவ்வாறாக விடயங்களைப் புரிந்துகொண்டு தீர்மானகரமான பிரதிபலிப்புக்களை மதித்து, தேர்தல் பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்கு அண்மித்த நேரத்தில் இடம்பெற இருந்த மாபெரும் பலிபூஜையில் இருந்து நாட்டை நீதியான முறையில் காப்பாற்றுவதற்கு தீர்மானித்த ஒரு சிலருக்கு பகுத்தறிவு கொண்ட மக்களின் பாராட்டுதல்கள் உரித்தாக வேண்டும். தேர்தல் ஆணையாளர், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதி ஆகியோர் மேற்கொண்ட புத்திசாதுரியமான நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம்.

ஜனாதிபதித் தேர்தல் அண்மித்த நாட்களில் அனைத்து வெகுஜன ஊடகங்களையும் அரச சொத்துக்களையும் தனது கட்டுப்பாட்டில் எடுத்து மேற்கொண்ட பச்சைப் பொய் பிரசாரங்களையும், தீவிரவாத வர்ணனைகளையும், விநியோகித்த பொருட்களையும், பணத்தையும் பொருட்படுத்தாது மக்கள் அணிதிரண்டனர். இதன்மூலம் மக்கள் தாம் எவருக்கும் அடிபணிந்தவர்கள் அல்ல என்பதை எடுத்துக் காட்டினர். மக்கள் இப்படியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆரம்பத்தில் இருந்தே செயற்பட்ட தொண்டர் நிறுவனங்களுக்கும், மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கும் எமது மகிழ்ச்சியும் பாராட்டுக்களும் உரித்தாகுக. இவர்களில் ஒருசிலர் பல்வேறு தடைகளையும் தாண்டி தமது கடமைகளைப் புரிந்தனர்.

இங்கு மக்களின் கருத்தியலைத் தயாரிப்பதற்கு மிக நெருக்கமாக, ஆனால், பலர் காணாத வகையில் செயற்பட்டோர் இருக்கின்றனர். பத்திரிகைகளின் பிரபல கேலிச் சித்திர வரைஞர்களே அவர்கள். அரசியல் செயற்பாடுகளின் உள்ளார்ந்த உண்மைகளை மிகச் சரளமாக சிரித்த முகத்துடன் புரிந்துகொள்வதற்கு அவர்களுடைய பங்களிப்பு அளப்பரிய சேவை செய்துள்ளது. அரசியல் யதார்த்தம் அல்லது மாற்றத்தின் அடிப்படை தயாரிப்பு அவர்கள் மூலமே வெளிப்படுத்தப்பட்டது. லங்காதீப பத்திரிகையின் இரண்டு கார்ட்டூன் வரைஞர்களுக்கும் அதிஉயர் விருதுகள் உரித்தாக்கப்பட வேண்டும். ஆட்சியாளர்களின்





www.news.bbc.co.uk



**மாபெரும் பயங்கரவாதத்தில் இருந்து நாட்டைக் காத்தமைக்கு பிரஜைகள் நன்றி தெரிவிக்க வேண்டும். மீண்டும் அத்தகைய ஓர் ஆபத்தைக் கண்டால் உடனடியாக எழுச்சியுறுவது அத்தியாவசியமாகும். எமது நாட்டை புதியதொரு பயணப் பாதையில் இட்டுச் சென்ற திருப்புமுனை என இதனைக் கருதுவது நியாயமானது.**

*தமது வாக்குரிமையை பயன்படுத்துகின்றனர்.*

விசமத்தனமான நடத்தைகளைப் பற்றி கேலிச் சித்திரக்காரர்கள் காட்டிய கூருணர்வு பாராட்டுக்குரியது. ஆகாயத்தின் நட்சத்திரங்களை எண்ணும், தமது ஆட்சியாளர்களை வணங்கிப் போற்றும் கலைஞர்கள் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தனர். மக்களை மறந்து ஆட்சியாளர்களின் சார்பில் அடிவருடித்தனம் செய்த கலைஞர்களைப் பற்றி கூறுவதற்கு ஒன்றுமில்லை.

மக்களின் பாராட்டுக்கள் உரித்தான மற்றைய நிறுவனம் இலங்கை சட்டத்தரணிகளின் சங்கமாகும். ஆரம்பத்தில் இருந்தே பொதுமக்களுக்கு அநீதி ஏற்படும் என்று கண்டவுடன் அதற்கு எதிராகப் பிரகடனத்தை மாத்திரம் வெளியிட்டு அமைதியாக இராமல் பயனுறுதி வாய்ந்த நடைமுறைத் தீர்மானங்களை மேற்கொண்டனர். சட்டத்தரணிகள் சங்கத்தால் இதற்கு முன் ஒருபோதும் இவ்வாறு இடம்பெறவில்லை. நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்குச் சட்டத்தரணிகள் சங்கத்தின் பங்களிப்பு ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பேருதவியாக அமைந்தது. சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், திரு.உப்புல் ஜயசூரிய மேற்படி சங்கத்தைப் புதிய திசையில் வழிநடத்தினார். இது ஏனைய தொழில்சார் அமைப்புக்களுக்கும் சிறந்த உதாரணமாகும். இச் சகல தொழில்வாண்மையாளர்களும் இலவசக் கல்வியின் அனைத்து அடிப்படை வசதிகளையும் பொதுமக்களின் பணத்தில் இருந்தே பெற்றனர் என்பதை அவர்கள் மறந்துவிடவில்லை.

ஆனால், இன்றைய யுகத்தின் நீதி, அநீதிமீது அதிக கூருணர்வு கொண்ட கலைஞர்களில் ஒருசிலர் கள்வர்களின் குடும்பங்களுக்குச் சார்பாக நடந்துகொண்டனர். விக்ரர் ஹாரா, பிரேட்டோல்ட் பிரெஸ்ட் போன்ற கலைஞர்களைப் பற்றிச் சிந்திக்கும்போது இலங்கையின் சிறு குழுமமான மேற்படி கலைஞர்கள் தமது வயிற்றுப் பிழைப்புக்காக இக் கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர். இதனிடையே ஒருசிலர் எழுத்தாளர்கள் என்ற வகையில் மக்களிடமிருந்து பெற்ற நற்பெயரை அநீதியான முறையில் ஈட்டிய ஒரு அம்சம் என்றே கருதினர். ஏனைய இனங்கள்மீது பகைமை பாராட்டி, பரப்பிய பகைமை வாய்ந்த எண்ணக்கருக்கள், இலக்கியப் பாத்திரங்களிலும் வசனங்களிலும் பிரிக்க முடியாதபடி மறைந்துள்ளன.

சிறந்ததொரு சமூகத்தை எதிர்காலத்தில் கட்டியெழுப்புவதாயின், கலையையும் இலக்கியத்தையும் புதிய பரிமாணங்களில் முன்னெடுப்பது இன்றியமையாதது. அதேசமயம், சரியான கலைஞர்களும் உருவாக்கப்படுவார்கள். அடிவருடித்தனம் புரிந்த கலைஞர்களாயினும் இந்த நற்பணியின்போது சிறு அளவிலேனும் அவர்கள் பயன்படுத்தக்கூடும் என்ற காரணத்தினாலே இந் நடவடிக்கைகளுக்கு சிறு வியாபாரிகள் தேவைப்படுவார்கள். நாம் எதிர்பார்க்கும் சிறந்த சமூகத்திற்கு கலைஞர்களினதும், இலக்கிய கர்த்தாக்களினதும் பங்கேற்பு மிக அவசியமாகும். அதற்கு அவசியமான நடத்தைகளையும், நெறிமுறைகளையும் அனுசரிக்க வேண்டும். அதேசமயம், அவை கலைப் படைப்புக்களில் சிருஷ்டிக்கப்பட வேண்டும். ஆனால், அதற்குரிய படைப்புக்களுக்கான சுயாதீனத்தையும், சுதந்திரத்தையும் ஆட்சியாளர்கள் வழங்க வேண்டும்.

ஏற்கனவே, ஒருசில முன்னைநாள் அமைச்சர்கள் புதிய அரசாங்கத்தில் மெல்ல நுழைவதற்கு முயற்சிக்கின்றார்கள் என்ற தகவலை அறிந்ததும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதை தவிர்க்க முடியாது. இதன் உள்ளார்ந்த நோக்கம் அனைத்து கட்சிகளுக்கும் நல்ல மனிதர்கள் தேர்ந்தெடுக்க வேண்டி இருந்தது. இதற்கென ஒருசில ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பத்தில் இருந்தே எடுத்திருத்தல் வேண்டும்.

ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிபீடத்தில் இருந்த காலகட்டத்தைப்போல மனிதத்துவம், ஒழுக்க நெறிமுறைகள் வீழ்ச்சியடைந்த ஒருகால கட்டம் இல்லையெனலாம். 1931 சர்வஜன வாக்குரிமை, 1947 இலவசக் கல்வியோடு எமக்கு அளவற்ற இயற்கை வளங்கள் இருந்தன. இவற்றோடு பழைய பௌத்த, இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், கலாசாரங்களின் பெறுமானங்கள்மூலம் பெறுமதி வாய்ந்த மனித வளங்களின் உரித்தாளர்கள் நாமாவோம். இன்று இங்கு உலகத்தில் மிகச்சிறந்த நாடே இருத்தல் வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஆற்றல் இல்லாத ஒரு அரசே எமக்கு எஞ்சியுள்ளது. இந்த நிலைமையை மாற்றியமைப்பது இலகுவானது அல்ல. ஆனால், இக் கடமையை இம்முறை பிரஜைகளே ஆரம்பித்து வைத்தனர். அதனை அவர்கள் ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டார்கள். அதனைப் பறிப்பதற்கும் இடமளிக்க மாட்டார்கள். சாதாரண மனிதர்களை மதிக்கும் மக்களின் நண்பர்களே ஆட்சியாளர்கள் ஆகவேண்டும். மக்களின் பணத்தைச் செலவிட்டு டாம்பீகமான வாழ்க்கை நடத்தும் வெறும் மனிதர்கள் எமக்குத் தேவையில்லை. கட்சிப் பேர்கள், முத்திரைகள் என்பவற்றில் இருந்து வேறுபாடுடைய பகுதியினரையே நாம் பிரஜைகளென குறிப்பிடுகிறோம்.



www.lakhiru.org




சிரேஷ்ட விரிவுரையாளர்
**ரொஹான் எதிரிசிங்க**

# மூன்றாவது குடியரசு அரசியலமைப்பை நோக்கி

இனத்துவ மோதல் கொண்ட பன்மைத்துவ நாட்டிற்கு சக்திவாய்ந்த நிறைவேற்றுத் துறை அவசியமென சிலர் நம்புகின்றனர். அதன் பின்னணியை ஆராய்ந்து பார்ப்போம். திரு. ஜே.ஆர். ஜயவர்தன 1978 அரசியலமைப்பிற்கு நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை அறிமுகப்படுத்தியபோது அதற்குச் சார்பாக இரண்டு தர்க்கங்கள் முன்வைக்கப்பட்டன. முதலாவது தர்க்கம்: அதன்மூலம் நிலையான ஆட்சி மேம்படுத்தப்படும் என்பதாகும். இரண்டாவது தர்க்கம்: இந்த அரசியலமைப்பு தேசிய சிறுபான்மை இனங்களுக்கு நன்மையாக அமையும் என்பதாகும். அதேசமயம் நாட்டின் தமிழ் கட்சிகள் இக் காரணத்தை முன்னிட்டு நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு ஆதரவு நல்கினர். ஆனால், இலங்கையின் அனுபவங்களை நோக்குகையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை சிறுபான்மை இனங்களுக்கு நன்மைபயக்கும் என்ற தர்க்கம் பலவீனமானது என்றே கூறவேண்டும். எழுபதுகளில் ஜனாதிபதி முறைமைக்கு ஆதரவளித்த தமிழ் கட்சிகள் இன்று முழுமையாக அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.








www.infolanka.com

**இலங்கையின் அனுபவங்களை நோக்குகையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை சிறுபான்மை இனங்களுக்கு நன்மைபயக்கும் என்ற தர்க்கம் பலவீனமானது என்றே கூறவேண்டும். எழுபதுகளில் ஜனாதிபதி முறைமைக்கு ஆதரவளித்த தமிழ் கட்சிகள் இன்று முழுமையாக அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.**

தேர்தல் காலங்களில் ஜனாதிபதி முறைமை சிறுபான்மை இனங்களுக்கு ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருப்பினும், ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட பின்னர், தேசிய சிறுபான்மை இனங்களுக்கு எதுவித அதிகாரமும் கிடையாது என்பதை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நிரூபித்துள்ளது. ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கும், கொள்கைகளுக்கும் செல்வாக்குச் செலுத்துவதற்கு அவர்களுக்கு எதுவித ஆற்றலும் கிடைக்க மாட்டாது. நாம் இலங்கையில் அனுபவ வாயிலாக இதனைக் கண்டுள்ளோம். எமக்கு பாராளுமன்ற நிறைவேற்று முறைமை உண்டாயின் பிரதான அரசியல் செயற்பாட்டாளர் பிரதமராகவே செயற்படுவார். அவருக்குத் தொடர்ச்சியாக பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமாகும். தமிழ், முஸ்லிம் சிறுபான்மை கட்சிகளுக்கு குறிப்பிடத்தக்க பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை விகிதாசார தேர்தல் முறைப்படி வென்றெடுக்கக்கூடிய சூழ்நிலையில் பிரதமருக்கு அவர்கள் கூடிய செல்வாக்கை செலுத்தக்கூடியதாக இருக்கும். இவ்வாறாக பாராளுமன்றம் செயற்படும் காலஎல்லை பூராவும் தமது தேவைகளின் நிமித்தமும் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் பிரதமர்மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய வாய்ப்பு கிட்டுகிறது. இது ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் காலத்தின்போது கிடைக்கும் அரசியல் அதிகாரத்தைவிட கூடிய நன்மைகளைப் பெறமுடியும் எனக் குறிப்பிடலாம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை சிறுபான்மையினருக்கு நன்மை பயக்கும் எனக் கூறுவது மூட நம்பிக்கையாகும் என இதன் காரணமாகவே கூறவேண்டி உள்ளது.


### தேசியப் பாதுகாப்பு

தேசிய பாதுகாப்பை பொறுத்தவரை பயங்கரவாதத்தை தடுத்தல் போன்ற தீர்மானகரமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொறுப்பு வாய்ந்த ஒரு தலைவரின் தேவை ஏற்படும்போது நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் பதவி வகிப்பது மிகவும் சிறந்தது என்ற கருத்தும் நிலவுகிறது.

தேசிய பாதுகாப்பை பொறுத்தவரை இவ்விடயம் சார்ந்த பிரச்சினைகளின்போது துரிதமாக செயற்படும் ஆற்றல் நிறைவேற்று ஜனாதிபதி ஒருவருக்கு உண்டு எனக் கருதினாலும், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் ஏனைய தீமைகளோடு ஒப்புநோக்கும்போது இந்தத் தீமைகள் அதிகரிக்க மாட்டாதா என கேள்விக்கு உட்படுத்த வேண்டும். இதற்கென நாம் செலவிட வேண்டிய ஒரு விலையும் இருக்கிறது. இலங்கையில் நாம் இதனை அனுபவித்திருக்கிறோம். தீர்மானங்களை மேற்கொள்ளுதல், போருக்கான கொள்கைகளை உருவாக்குதல் என்பவற்றை செயற்படுத்த முடியும். ஆனால், நீண்டகாலக் கண்ணோட்டத்தில் நோக்கும்போது தேசிய ஐக்கியம் (National Unity), தேசிய ஒருங்கிணைப்பு, சமத்துவம் மற்றும் அபிமானம் என்பவற்றைக் கருத்தில்கொள்ளும்போது ஜனாதிபதி பதவி நன்மையைப் பயக்குமெனக் கூறமுடியாது.

இரண்டாவது விடயம் ஒரு போர் இடம்பெறும்போதும், உண்மையான தேசிய நெருக்கடி நிலவும்போதும் பாராளுமன்ற நிறைவேற்று முறைமையிலும் பிரதமர் சக்திவாய்ந்த முறைமையில் செயற்பட முடியும். பிரித்தானியாவிலும் போர்க்கால அமைச்சரவை இயங்கியது. அதன்மூலம் விசேட நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டன. அச் சந்தர்ப்பங்களில் பிரதமர் மேலதிக அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டி இருந்தது.

மூன்றாவதாக இன்று இலங்கையில் அத்தகைய தேசிய பாதுகாப்பு என்ற மனோபாவத்துடன் செயற்படும் ஜனாதிபதி ஒருவர் அவசியமா? அல்லது நல்லிணக்கத்தை (Reconciliation) ஏற்படுத்தக்கூடிய, அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய சிறுபான்மை இனங்கள் நிறைவேற்று அதிகாரத்தின் பங்காளர்களாக செயற்படக்கூடிய ஒரு முறைமை அவசியமா? என்பன பற்றி நாம் மூன்றாவதாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது ஜனாதிபதி முறைமையின் மற்றுமோர் பலவீனமாகும். அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது மிகக் கஷ்டமான ஒரு விடயமாகும். பிரதமரையும், அமைச்சர்களையும்விட மிகக் கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதன் காரணமாக பிரதமருக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் தமது பதவிகளை இழக்கக்கூடும். ஜனாதிபதியன் அதிகாரம் மிகப் பாதுகாப்பானது, உறுதியானது. திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக கடமையாற்றியபோது அன்று பிரதமர் ரணில்



www.slnewsonline.net

**அப்போது நாம் ஏதோவொரு வகையிலான கூட்டரசாங்கத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். இலங்கையில் உள்ள அனைவரையும் உள்வாங்கிக் கொள்ளக்கூடிய அதிகாரத்தைப் பகிர்ந்து நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு முறைமையின்கீழ் நாம் பயணிக்க வேண்டி உள்ளது.**

விக்கிரமசிங்கவின் பதவி பறிக்கப்பட்டதை நாம் கண்டோம். அச் சந்தர்ப்பத்தில் அதிகாரம் பகிர்ந்துகொள்ளப்படுவது மிகக் கஷ்டமான ஒரு காரியமாகவே கருதப்பட்டது. இவற்றின்மூலம் இன்றைய சூழமைவில் இலங்கையில் மிகச் சக்திவாய்நத நிறைவேற்று அதிகாரம் கொண்ட முறைமை அவசியப்பட மாட்டாது. ஆனால், ஒரு மாற்றம் தேவைப்படுகிறது.

இங்கு அரசம், நிறைவேற்றுத்துறையும் அனைவரையும் உள்வாங்கும் (Inclusive) பல்கட்சி முறைமையை அனுசரித்தல் வேண்டும். அப்போது நாம் ஏதோவொரு வகையிலான கூட்டரசாங்கத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். இலங்கையில் உள்ள அனைவரையும் உள்வாங்கிக் கொள்ளக்கூடிய அதிகாரத்தைப் பகிர்ந்து நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு முறைமையின்கீழ் நாம் பயணிக்க வேண்டி உள்ளது.

மக்கள் குழுக்களாகவும், நிறுனங்களின் விசேட நிலைமைகளுக்கு ஏற்பவும் அதாவது தொழிற்சங்க செயற்பாடுகள் போன்ற சந்தர்ப்பங்களில் துரிதமான பயனுறுதிவாய்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அத்தகைய பிரச்சினைகளை துரிதமாகத் தீர்ப்பதற்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை பயனுள்ளதாக அமையுமென ஒரு தர்க்கம் முன்வைக்கப்படுகிறது. ஆனால் இந்தப் பழக்கத்தை மிகத் துரிதமாக இல்லாதொழிக்க வேண்டுமென நான் கருதுகிறேன். 1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதி முறைமை இலங்கையில் அமுலில் இருக்கவில்லை. ஜனநாயகம் மற்றும் பங்கேற்பு ஆளுகை ஆகிய எண்ணக்கருக்களுக்கு முற்றிலும் எதிராகச் செயற்படும் ஓர் வழக்கமே இந்த ஜனாதிபதி முறைமை ஆகும். இதன் காரணமாகவே இம்முறையை மாற்றியமைக்க வேண்டி உள்ளது. ஆட்சி அமைப்புக் கலாசாரத்தை மாற்றியமைப்பது தொடர்பாக நாம் கலந்துரையாடினோம். அரசியலமைப்பு வாதத்திற்கும் (Constitutionalism) , ஜனநாயகத்திற்கும் மீளப் பயணிப்பதைப் பற்றியும் இந்த அனைத்து அதிகாரங்களைக் கொண்ட ஒரு நபர் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கும் ஒருவராகவும் எமக்கு இருக்க வேண்டுமென்ற உணர்வு அரசியலமைப்பு வாதத்திற்கும், ஜனநாயகத்திற்கும் எந்தவகையிலும் பொருத்தமாக இருக்க மாட்டாது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மிகத் துரிதமாகப் புறக்கணிப்பது எமக்கு நன்மையே பயக்கும்.

மக்களுக்குச் சார்பான முற்போக்கான ஆட்சி அமைப்பை பயனுறுதி வாய்ந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு நிறைவேற்று ஜனாதிபதி முறைமை பயனுள்ளதாக அமையும் ஒரு கருவி எனவும், எனவே அதனை கைவிட முடியாதெனவும் இலத்தீன் அமெரிக்க பிராந்தியத்தின் முற்போக்கு அரசாங்கங்கள் சான்று பகருகின்றன என, கலாநிதி தயான் ஜயதிலக கூறும் ஒரு தர்க்கமும் உண்டு. ஆனால், இத் தர்க்கத்தோடு நான் உடன்பட மாட்டேன்.

லத்தீன் அமெரிக்க அரசியல் சூழமைவு எமது சூழமைவிட வித்தியாசமானது. யூலியஸ், லிஸஸ் போன்ற அரச அறிவியியல் விஞ்ஞானிகள் லத்தீன் அமெரிக்காவின் ஜனாதிபதி முறைமைபற்றி விபரமாக எழுதி உள்ளனர். இந்த ஜனாதிபதி முறைமை லத்தீன் அமெரிக்காவின் ஏகபோக மற்றும் சர்வாதிகார ஆட்சிக்கு ஒரு காரணியாக அமைந்துள்ளது என்பது அவர்களின் கருத்தாகும்.

சில சமயங்களில் முற்போக்கு மறுசீரமைப்புக்களையும் மாற்றங்களையும் அறிமுகம் செய்வதற்காக, சக்திவாய்ந்த ஜனாதிபதி முறைமை அவசியம் என்ற அடிப்படையில் இருந்து மேற்படி தர்க்கங்கள் முன்வைக்கப்படலாம். இத்தகைய சில விமர்சனங்களைப் பொறுத்தவரை பொலீவியா போன்ற நாடுகள் கவனத்திற்கு எடுத்துக்கொண்டுள்ளன. லத்தீன் அமெரிக்காவின் ஜனநாயக முறை மற்றும் அரசியலமைப்பு நெருக்கடி இத்தகைய ஜனாதிபதி முறைமை காரணமாக ஏற்பட்டதாகும். இதன் பெறுபேறாகக் கட்டாயம் இராணுவ சர்வாதிகாரி ஒருவரே ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். இலங்கையின் சூழமைவு இதற்கு முற்றிலும் வித்தியாசமானது. நாம் 1970 களில் ஒப்புநோக்கில் நிலவிய நிலைப்பாட்டைவிட வித்தியாசமான ஒரு சூழ்நிலையிலேயே நாம் வாழ்ந்து வந்துள்ளோம். இங்கு இலங்கையில் 1977 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலையற்ற ஒரு ஆட்சி நிலவியது என்ற ஜே.ஆர்.ஜயவர்தன, ஏ.ஜே.வில்சன் போன்றோரின் தர்க்கங்களை ஏற்றுக்கொள்ளாமலேயே இதனை முன்வைக்கின்றோம். ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை அல்லது ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீதியானதும், சுதந்திரமானதுமான ஒரு தேர்தலின்மூலம் ஆட்சியில் மாற்றம் ஏற்படுவது நிலையற்ற ஒரு தன்மையென நான் கூறமாட்டேன். ஆட்சி அதிகாரத்தில் இருந்த குழுமத்திற்கு







srilankanewspapercartoon.blogspot.com

**பாராளுமன்ற நிறைவேற்று மாதிரியிலும் குறிப்பிட்ட மட்டத்தில் ஓர் நிலையான தன்மை உண்டு என்பதை உறுதிசெய்யும் மற்றுமொரு முறைமை உண்டு. ஒருபுறம் நிலையான தன்மையும் மக்களுக்கு பொறுப்புக்கூறக் கூடிய வகையிலும் ஒரு சமநிலை பேணப்பட வேண்டியது முக்கியமாகும்.**

அது மாற்றமாக இருந்தாலும், நாட்டிற்கும், ஜனநாயகத்திற்கும், அரசியலமைப்பிற்கும் அது நிலையற்ற ஒரு தன்மையை உருவாக்க மாட்டாது. எனவே, இந்த அடிப்படை தர்க்கத்திற்கு நான் சவால் விடுக்க விரும்புகின்றேன். நாம் நிலையற்ற தன்மையெனக் கருதுவது என்ன? என்பது பற்றி மிகச் சிறந்ததும், சிக்கலானதுமான ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு குழுமத்தின் நிலையான தன்மையையும், தேசிய நிலையான தன்மையையிட்டும் நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். ஒரு பலம்வாய்ந்த அரசாங்கம் நீண்டகாலம் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பது நிலையான தன்மையெனக் கருதமுடியாது. இது நிலையற்ற தன்மையின் ஒரு அடையாளம் என்றே நான் கருதுகின்றேன். ஒரு தனிநபர், ஒரு சந்தர்ப்பத்தில் அரசாங்க உறுப்பினராகவும், இன்னுமொரு காலகட்டத்தில் எதிர்கட்சியிலும் இருப்பதன்மூலம் ஒரே அணி தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் இருப்பதைத் தடுக்கிறது. அதிகாரம் ஒரு குழுவிடம் இருந்து இன்னுமொரு குழுவிற்கு மாற்றம் செய்யப்படும்போது சாதகமான ஒரு மாற்றம் உண்மையிலேயே நிலையற்ற தன்மையைவிட நிலைபேறான தன்மையையே எடுத்துக் காட்டுகிறது.


## பாராளுமன்ற நிறைவேற்று முறைமை

எனவே, 1977 க்கு முன்னரான இலங்கை, 1977 க்குப் பின்னரான இலங்கையைவிட அனேகமாக நிலையானதாக இருந்திருக்கக்கூடும் என்று விவாதிக்க முடியும். லத்தீன் அமெரிக்கா என்ற விடயத்திற்கு மீண்டும் பிரவேசித்தால் அச் சூழமைவு முற்றிலும் வேறுபட்டது. பொலீவியாவை எடுத்துக் கொண்டால் இராணுவத்தின் அதிகாரத்திற்கும், வலதுசாரி பிரமுகர்கள் அணியின் அதிகாரத்தையும் எதிர்நோக்கக் கூடிய சக்திவாய்ந்த ஒரு ஜனாதிபதி அங்கு பதவியில் இருந்தார். அதேசமயம், பிரபுக்கள் வர்க்கத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட வேண்டிய அவசியமும் அங்கு இருந்தது. அத்தகைய ஒரு நிலைமை இலங்கையில் இருக்கின்றது என நான் கருதவில்லை. தென்னாசியப் பிராந்தியத்தில் அத்தகைய ஒரு நிலைமை கிடையாது. சர்வாதிகாரத்தின் நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றி மிகவும் கவர்ச்சிகரமான ஓர் விவாதம் தற்போது நேபாளத்தில் இடம்பெறுகிறது. மாஓ வாதிகளுக்குச் சக்திவாய்ந்த ஒரு ஜனாதிபதி முறைமை தேவைப்பட்டது. ஆனால், தற்போது அத்தகைய மனப்பாங்கு நாட்டில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. சக்திவாய்ந்த ஜனாதிபதி முறைமையில் உள்ள ஆபத்துக்கள் பற்றி நேபாள மக்கள் அனேகமாக தற்போது புரிந்துகொண்டுள்ளனர். இலங்கையில் என்ன நடந்தது என்பதையும் அவர்கள் கண்டறிந்துள்ளனர். தற்போதைய நிலையில் நேபாளம் மறுசீரமைக்கப்பட்ட பாராளுமன்ற நிறைவேற்று முறைமையை நோக்கிப் பயணிக்கக்கூடும். ஆனால், நேபாளத்தில் பாராளுமன்றம் அடிக்கடி கலைக்கப்படுவதனால் ஓர் நிலையற்ற தன்மையைத் தடுப்பதற்கு சில நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றன.

பாராளுமன்ற நிறைவேற்று மாதிரியிலும் குறிப்பிட்ட மட்டத்தில் ஓர் நிலையான தன்மை உண்டு என்பதை உறுதிசெய்யும் மற்றுமொரு முறைமை உண்டு. ஒருபுறம் நிலையான தன்மையும் மக்களுக்கு பொறுப்புக்கூறக் கூடிய வகையிலும் ஒரு சமநிலை பேணப்பட வேண்டியது முக்கியமாகும். ஜனநாயகம், அரசியலமைப்பு மற்றும் பன்மைத்துவம் என்பவற்றைக் கவனத்திற்கொண்டு நோக்குகையில் ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு அழிவையே ஏற்படுத்தி உள்ளது.

நாட்டின் மாகாணங்களுக்கு ஆட்சியுரிமை வேண்டுமென்ற குரல் ஒருபுறம் ஓங்குகிறது. மாகாணங்களுக்கான பிரதிநிதித்துவத்தை உத்தரவாதம் செய்யாமல் மேற்கொள்ளப்படும் அதிகாரப் பகிர்வை முன்னெடுத்துச் செல்வதற்கு முயற்சித்தாலும் அது குறித்து இலங்கை மிக விசேட தன்மையுடன் கவனிக்கப்பட வேண்டும்.

எமக்கு தென்னாபிரிக்காவைப் போன்று பயனுறுதி வாய்ந்த மாகாண சபை இருந்திருப்பின், அதாவது மாகாணங்கள் தமது நடவடிக்கைகளை கவனிக்கக் கூடிய சுயாட்சி வழங்கப்படுவதோடு, தேசியக் கொள்கைகளை மெருகூட்டுவதில் பங்கேற்பதற்கு கொழும்பிற்கு ஒரு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டால் அது சிறப்பாக இருக்கும். அது ஜனாதிபதி முறையின் ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதற்கும் பன்மைத்துவத்தில் ஒற்றுமையை மேம்படுத்துவதற்கும் அனேகமாக பயனுறுதிவாய்ந்த



www.groundviews.org

> **நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைப் போலவே நிறைவேற்று பிரதமர் முறைமையிலும் காணப்படும் சரிபார்த்தல் மற்றும் சமநிலைப்படுத்தல் (Checks & balances) முறை ஆகிய இரண்டும் கலந்த முறையை கைவிடக் கூடியதன் காரணமாகவே இது இவ்வாறு அமைகிறது. இறுதியில் எமக்கு இந்த இரு முறைகளிலும் தீய அம்சங்களே கிடைக்கின்றன. இலங்கையில் இந்த கலப்பு முறைமை அழிவைத் தேடித் தந்துள்ளது.**

*மைத்ரீயும் சக்தியும்*

முறையாக அமைந்திருக்கும். இலங்கையின் ஜனாதிபதி முறைமையின்கீழ் அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. அது எந்த வகையில் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது என்பது மிகத் தெளிவானது. இங்கு மாகாண சபைகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவர்களின் கடமைகளைச் செய்ய விடாது பலவீனப்படுத்துவதற்கு மாகாண ஆளுநர்களைப் பயன்படுத்துவதை நாம் தெளிவாகக் காண முடிகிறது. அந்த வகையில் ஒரு நாட்டில் அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடுகள் இருக்கும்போது, நாட்டின் ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதற்கு வேறு நிறுவனங்கள் அவசியம் என்ற கருத்தை நான் ஏற்கவில்லை.

ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதற்காக வேறு நிறுவனங்களையும், வேறு பொறிமுறைகளையும் பயன்படுத்த முடியும். ஜனாதிபதி முறைமையின் ஒருசில நன்மை தீமைகள் இருக்கலாம். ஆனால், அதன் தீமைகளைவிட நன்மைகளே அதிகம்.

### இரட்டைத்தன்மை

வேறு நாடுகளில் வித்தியாசமான முறைகளைக் காண முடிகிறது. சில நாடுகளில் முழுமையாக சம்பிரதாயபூர்வமான அரசத் தலைவர்கள் மாத்திரம் இருக்கின்றனர். அரச தலைவருக்கும், அரசாங்கத் தலைவருக்குமிடையே பல்வேறு முறைகளில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் அரசுகளும் இருக்கின்றன. இத்தகைய நானாவித வழிமுறைகளைவிட வித்தியாசமான வழிமுறை இலங்கையில் உள்ளது. ஜனாதிபதி முறையினதும், பாராளுமன்ற முறையினதும் ஒரு கலவையே இலங்கையில் உள்ளது. அதாவது இரட்டை முறைமையே இங்கு உண்டு. இரட்டை வழிமுறை உலகத்தில் உள்ள மிகக் கூடாத முறைமையாகும். இலங்கைக்கு அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தைப் போல தூய்மையான ஜனாதிபதி முறை இருந்தால் நல்லதென பலர் கூறினாலும் அத் தர்க்கம் பற்றி நான் மிக விழிப்பாகவே இருக்கின்றேன். அமெரிக்காவில் நிறைவேற்றுத் துறைக்கும், சட்டவாக்கத் துறைக்குமிடையே கடுமையான வலுவேறாக்கம் உள்ளது. ஜனாதிபதி அமைச்சரவை உறுப்பினர்களாக நியமிப்பவர்கள் சட்டவாக்கத் துறைக்கு வெளியில் இருந்தே நியமிக்கப்படுகின்றனர். அங்கு நிறைவேற்றுத் துறைக்கும், சட்டவாக்கத் துறைக்குமிடையே பகை உறவே காணப்படுகிறது. காங்கிரஸ் சபையின் அதிகாரங்களை ஜனாதிபதி ஒபாமா அச்சுறுத்தினால் அல்லது பொருட்படுத்தாமல் விட்டால், ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள்கூட ஆழ்ந்த அமைதியின்மைக்கு ஆளாக்கப்படுவார்கள். இப் பகைமை உறவு சில சமயங்களிலே தமது கட்சி விசுவாசம் மற்றும் கட்சி உறவையும் மீறிச் செல்லும். இம்முறை தற்போது இலங்கையில் நிலவும் முறையைவிடச் சிறந்தது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைப் போலவே நிறைவேற்று பிரதமர் முறைமையிலும் காணப்படும் சரிபார்த்தல் மற்றும் சமநிலைப்படுத்தல் (Checks & balances) முறை ஆகிய இரண்டும் கலந்த முறையை கைவிடக் கூடியதன் காரணமாகவே இது இவ்வாறு அமைகிறது. இறுதியில் எமக்கு இந்த இரு முறைகளிலும் தீய அம்சங்களே கிடைக்கின்றன. இலங்கையில் இந்த கலப்பு முறைமை அழிவைத் தேடித் தந்துள்ளது. அனேகமான நாடுகள் இந்நிலைமை பற்றி விழிப்புணர்வு பெற ஆரம்பித்துள்ளன. ஒன்றில் எமது ஜனாதிபதி முறைமை அமெரிக்காவை ஒத்ததாக அமைய வேண்டுமென தர்க்கம் புரிகின்றனர். அதேசமயம் இதனை சரிபார்த்தல் மற்றும் சமநிலைப்படுத்தல் முறையுடன் நாம் ஒப்புநோக்க வேண்டும் அல்லது பிரித்தானிய முறையையும் அதன் தர்க்கத்தையும் சரிபார்த்தல் மற்றும் சமநிலைப்படுத்தல் வழிமுறையுடன் நாம் பின்பற்ற வேண்டும். இலங்கையில் நிறைவேற்றுத் துறையின் வசதியைக் கவனத்திற்கொண்டு திட்டமிட்ட ஓர் அரசியலமைப்பை ஜே.ஆர்.ஜயவர்தன தயாரித்துக் கொண்டார். ஜனாதிபதி முறையில் திட்டவட்டமாக அப் பதவியை வகிப்பதற்கான காலஎல்லை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாராளுமன்ற நிறைவேற்று வழிமுறையில் குறிப்பிட்ட பதவியை வகிக்கும் பிரதமர் குறிப்பிட்ட காலஎல்லையுள் தேர்தலை நடத்த முடியும். அரசியலமைப்பின் மூன்றாவது திருத்தத்தின்மூலம் ஜே.ஆர்.ஜயவர்தன அந்த அதிகாரத்தையும் தம்வசப்படுத்திக் கொண்டார். இதன் பெறுபேறாக எந்தவொரு கொள்கையும் நிலையான கொள்கையாக அமையவில்லை. எனவே இலங்கை பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.







www.sundaytimes.lk

> **பலம்வாய்ந்த ஜனாதிபதி முறைமையின் மூலம் தேசியப் பொருளாதாரம் ஆபத்தான ஒரு நிலையில் இருப்பதே இலங்கையின் அனுபவமாகும். திரு.டி.பி. விஜயதுங்க ஜனாதிபதிப் பதவிக்கு நியமனம் பெற்ற நாள்முதல் இது எமக்கு தீய அனுபவங்களையே ஏற்படுத்தி உள்ளது.**

### ஆசிய அரசியல் கலாசாரம்

நிலைமை இதுவாயினும் தென்னாசிய நிலைமைகளுக்கு பொருத்தமான முறையிலேயே தென்னாசிய அரசியல் கலாசாரத்தைக் கருத்தில்கொண்டு நாம் திட்டமிட வேண்டும். படிநிலை கலாசாரம், அனுசரணை அரசியல் கலாசாரம், பலவீனமான ஜனநாயக நிறுவனங்கள் ஆகிய சூழமைவுகளில் அதிகாரம் தனியொரு மனிதன் கையில் குவிமையப்படுத்தப்பட்டு இருத்தல் அரசியலமைப்பில் நோக்கும்போது மிகவும் ஆபத்தான நிலையாகும்.

சக்திவாய்ந்த தேசியப் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அவசியமாகும் என்ற நம்பிக்கை ஓர் அடிப்படையாக அமைய மாட்டாது.

பலம்வாய்ந்த ஜனாதிபதி முறைமையின் மூலம் தேசியப் பொருளாதாரம் ஆபத்தான ஒரு நிலையில் இருப்பதே இலங்கையின் அனுபவமாகும். திரு.டி.பி.விஜயதுங்க ஜனாதிபதிப் பதவிக்கு நியமனம் பெற்ற நாள்முதல் இது எமக்கு தீய அனுபவங்களையே ஏற்படுத்தி உள்ளது. ஜனாதிபதி நிதி அமைச்சுப் பதவியை வகிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இது தேசியப் பொருளாதாரத்திற்கு தீமையான தாக்கங்களையே ஏற்படுத்தியது. பொதுமக்களின் நிதி பாராளுமன்றத்தின் கண்காணிப்பிற்கு உள்ளாக்கப்படுவதே தேசியப் பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கும். திரு.டி.பி. விஜயதுங்க, சந்திரிக்கா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகிய அனைவரும் நிதி அமைச்சுப் பொறுப்பையும் வகித்ததன்மூலம் இலங்கையின் அரசியலமைப்பை மீறினர். திறமையான நிதி அமைச்சர், சக்திவாய்ந்த சுயாதீன நிறுவனங்கள், தனிநபர் ஒருவரினால் நிருவகிப்பதால் ஏற்படும் தீமைகளையிட்டு பல்வேறு கலந்துரையாடல்களும், விவாதங்களும் ஏற்பட்டன. எனவே திறமை மிகுந்த பொருளாதாரக் கொள்கை நிலவுவதாயின் திறமையான நிதி அமைச்சர் ஒருவர் பொறுப்புக் கூறுவதன்மூலமே, தேசிய பொருளாதாரம் சிறப்பாக அமையும். பொதுமக்களின் நிதிபற்றிய விடயங்களை பொதுமக்கள் மிகச் சிறப்பாக பாராளுமன்ற நிறைவேற்று முறைமூலம் கண்காணிக்க முடியுமாயின், அதுவே சிறந்த முறையாகும். ஒரு ஜனாதிபதி முறைமை நடைமுறையில் இருப்பதைவிட நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அது பெரிதும் உதவும்.

இலங்கையைப் போன்ற ஒரு நாட்டிற்கு வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி முறைமை மிகவும் தகுதியானது என ஒரு தர்க்கம் உண்டு. அதாவது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முழுமையாக இல்லாதொழித்து எமது அரசியலமைப்பு முறையை முன்னெடுத்துச் செல்வதாகும்.

அது மாற்றத்திற்கு உள்ளான வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி முறைமையாகும். இங்கு நாம் அரசியலமைப்பு அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு குவிமையப்படுத்தும் தவறைச் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தல் மற்றைய முறைமையைப் போலவே தவறானது. அதிகாரத்தை முழுமையாக பாராளுமன்றத்தில் குவிமையப்படுத்துவதைப் போலவே அதிகாரத்தை முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதியிடம் குவிமையப்படுத்துவதும் தவறு. ஆனால் மறுசீரமைக்கப்பட்ட பாராளுமன்ற நிறைவேற்றுமுறை முக்கியத்துவம் வாய்ந்தது. அதாவது பிரதமர் பிரதான அரசியல் செயற்பாட்டாளராக அமைய வேண்டும். பிரதமர் தானே பாராளுமன்றத்தில் பிரசன்னமாக வேண்டும். பிரதமர் தொடர்ச்சியாக பாராளுமன்றத்திற்கும் மக்களுக்கும் வகைபொறுப்புக் கூறவேண்டும். எந்தவொரு கட்சிக்கும் அமைப்பிற்கும் தெளிவான பெரும்பான்மை இல்லாதபோது அது நிலையற்ற வகையில் ஆடிஅசையும் பாராளுமன்றம் உருவாவதை தடுக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும். இந் நிலைமையை ஊக்குவிக்கும் தேர்தல் முறைமையைப் போலவே ஏனைய சுயாதீன நிறுவனங்களுடனான சட்டவாக்கம் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் அரசியலமைப்பின் உன்னத தன்மை பாதுகாக்கப்படுவதோடு முன்னகர வேண்டும். எதிர்காலத்தில் இடம்பெறும் தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் மீண்டும் அழைக்கப்பட்டால் முதலாவது மற்றும் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் தவறுகளில் இருந்து பாடம் கற்று மூன்றாவது குடியரசு அரசியலமைப்பு வரையும் கருத்திட்டம் நோக்கி இலஙகை தனது பயணத்தை ஆரம்பிக்கும் என எண்ணுகின்றேன்.

**(திரு.ரொஹான் எதிரிசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்பட்டது.**






கலாநிதி
**ஜயம்பதி விக்கிரமரத்ன**

# அரசியலமைப்பிற்கான திருத்தத்தை மேற்கொள்ளும் அதேவேளை புதிய அரசியலமைப்பைப் பற்றி சிந்திப்பதற்கும் காலம் கனிந்துள்ளது

**ஜனநாயகத்தின் ஊடாக நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பு, ஜனநாயகக் கோட்டுபாட்டுக்கு மாறாக 1978 இல் தயாரிக்கப்பட்டது. இதன் பெறுபேறாக இலங்கையில் ஜனநாயகம் சுருக்கமடைந்ததோடு மாத்திரமல்லாமல் இறுதியில் சட்டத்தின் ஆட்சியும் இல்லாதொழிக்கப்பட்டது. 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அத்துமீறிய ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அது ஏன் தோல்வியடைந்தது?**

1978 அரசியலமைப்பு மூலம் உருவாக்கப்பட்ட மிகச் சக்திவாய்ந்த ஜனாதிபதி பதவி இரண்டு சந்தர்ப்பங்களில் கட்டுப்படுத்தப்பட்டது. ஒன்று அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின்மூலம் சில விடயங்கள் பற்றிய நிறைவேற்று அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டன. அடுத்து 2001





kusalperera.blogspot.com



**இந்த நியமனங்கள் பற்றிய இறுதி அதிகாரங்கள் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அரசியலமைப்பிற்கு அமைய அமைச்சரவையிடமே ஒப்படைக்கப்பட்டு இருந்தது. மேற்படி அதிகாரங்கள் 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்மூலம் நீக்கப்பட்டடது. ஆனால் அதுபற்றி இடம்பெற்ற கலந்துரையாடல்கள் போதாது.**

*ஜே.ஆர். ஜயவர்தன - காமினி திசாநாயக்க*

ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்மூலம் முக்கியமான அதிகாரங்கள் சுயாதீனமான ஆணைக்குழு உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, ஜனாதிபதி அதிகாரங்களுக்கு சில மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அரச சேவை நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பன தொடர்பாக அமைச்சரவைக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் அனைத்தும் அரச சேவை ஆணைக்குழுவிடம் 17 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்மூலம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கமைய அமைச்சுச் செயலாளர்களும், திணைக்களத் தலைவர்களும், அரசசேவை ஆணைக்குழுவும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர். இந்த நியமனங்கள் பற்றிய இறுதி அதிகாரங்கள் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அரசியலமைப்பிற்கு அமைய அமைச்சரவையிடமே ஒப்படைக்கப்பட்டு இருந்தது. மேற்படி அதிகாரங்கள் 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்மூலம் நீக்கப்பட்டடது. ஆனால் அதுபற்றி இடம்பெற்ற கலந்துரையாடல்கள் போதாது.

அமைச்சரவையிடம் இருந்த அனைத்து அதிகாரங்களும் 17 ஆவது அரசியலமைப்பின்மூலம் நீக்கப்பட்டதோடு அதன் பின்னர் மேற்படி அதிகாரங்கள் அரச சேவை ஆணைக்குழுவிடம் முழுமையாக ஒப்படைக்கப்பட்டது. அதற்கமைய அனைத்து ஆணைக்குழுக்களுக்கும் முக்கியமான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அதாவது சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் ஆகிய முக்கிய பதவிகளுக்கான நியமனங்கள், ஜனாதிபதியின் விருப்பப்படி நியமிக்கும் அதிகாரம் 15 ஆவது அரசியலமைப்பின்மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவை 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் முக்கிய நிறுவனமாகும். இப் பேரவைக்கான நியமனங்கள் அரசாங்கக் கட்சியையும் எதிர்கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக எதிர்கட்சித் தலைவர், பிரதமர், சிறுகட்சிகளின் சார்பில் ஒருவர், அறிவு ஜீவிகள் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் தேசிய ஒருமைப்பாட்டின் மூலம் மேற்படி நியமனங்களைச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி சபையினர் பரிந்துரைக்கும் நபர்கள் மாத்திரமே ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கப்பட்டனர். மேற்குறிப்பிட்ட முக்கிய பதவிகளுக்கு நியமனங்கள் மேற்கொள்ளப்படும்போது அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்துடனேயே அவை செய்யப்பட்டன.

ஆனால், அரசியலமைப்பிற்கான 18 ஆவது திருத்தத்தின்மூலம் அவை மீண்டும் திசை திருப்பப்பட்டன. அதேசமயம் வெறுமனே பாராளுமன்றப் பேரவையென ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால், அதற்கு எதுவித அதிகாரமும் இல்லை. இப் பேரவையின் கருத்துக்களை அறிவதற்கு மாத்திரமே ஜனாதிபதியினால் முடிந்தது. ஜனாதிபதி மேற்கொள்ளும் நியமனங்களுக்கு இச் சபையின் அங்கீகாரம் அவசியப்படவில்லை. அவ்வளவு தாழ்நிலைக்கு இச் சபை மாற்றியமைக்கப்பட்டது.

மிகவும் மோசமான நிலைமை 2010 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்டது. ஜனாதிபதி ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னரே அது முற்றுப் பெற்றது. இந்த கட்டமைப்புக்கு எதிராக பொதுமக்கள் பாரியளவில் எதிர்ப்புத் தெரிவித்தனர். இறுதியில் பொதுமக்களின் கருத்துப்படி ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியுற்றார்.

**இவ்வாறாக அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தம் பின்னோக்கிச் செல்வதற்கு காரணமான பலவீனங்கள் யாவை?**

அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தத்தின் பலவீனங்கள் காரணமாக 18 ஆவது திருத்தம் கொண்டுவரப்படவில்லை. ஆனால், 17 ஆவது திருத்தத்தில் சில பலவீனங்கள் இருந்தன. உதாரணமாக அரசியலமைப்புப் பேரவையின் அனைத்து நியமனங்களும் செய்யப்படும்வரை அரசியலமைப்புப் பேரவை கூடுவதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. அதாவது இப்பேரவையின் ஓர் உறுப்பினரின் பதவி வெற்றிடமாக இருந்தாலும் பேரவை கூட முடியாது. அதைவிட வேறுசில பலவீனங்களும் காணப்பட்டன. இப் பலவீனங்களை டியூ குணசேகர அவர்களின் தலைமைத்துவத்தின்கீழ் அமைந்த தெரிவுக் குழு ஆராய்ந்திருந்தது. அக் குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்படா விட்டாலும் வரைவு அறிக்கை ஒன்று இருந்தது. காணப்பட்ட அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவ் அறிக்கையில் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டு இருந்தன. ஓர் அரசியலமைப்புத் திருத்தத்தின்மூலம் அவற்றைத் தீர்க்க முடிந்திருந்தாலும், மகிந்த ராஜபக்ஷவிற்கு அவ்வாறு திருத்தம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மேற்படி அதிகாரங்களை தனது கரங்களிலேயே வைத்திருக்க மகிந்த



www.onlanka.com

**ஓர் அரசியலமைப்புத் திருத்தத்தின்மூலம் அவற்றைத் தீர்க்க முடிந்திருந்தாலும், மகிந்த ராஜபக்ஷவிற்கு அவ்வாறு திருத்தம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மேற்படி அதிகாரங்களை தனது கரங்களிலேயே வைத்திருக்க மகிந்த ராஜபக்ஷ விரும்பினார். எனவே, அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தின் பின்னரே மகிந்த ராஜபக்ஷவின் உண்மையான வீழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.**

*முன்னைநாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ*

ராஜபக்ஷ விரும்பினார். எனவே, அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தின் பின்னரே மகிந்த ராஜபக்ஷவின் உண்மையான வீழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவின் பிரச்சினை எழுந்தது. மிகவும் தான்தோன்றித்தனமாக சிராணி பண்டாரநாயக்கவின் சம்பவத்தின்போது மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டார். அதில் இருந்துதான் பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத் தருணத்தில் கட்டுநாயக்க, துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருந்தது. அதற்கு முன்னர் சிலாபத்தில் ஒரு மீனவர் ஆர்ப்பாட்டத்தின்போது சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் பின்னர் ரத்துபஸ்வெல உட்பட அனைத்து பிரச்சினைகளும் தொடரத் தொடங்கின. சுருங்கக் கூறுவதாயின் கடைசி ஆண்டுகளின்போது மகிந்த ராஜபக்ஷ மிகத் தான்தோன்றித் தனமாகவே செயற்பட்டார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஏதேச்சதிகார ஆட்சியில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலின்போது பொருத்தமற்ற ஓர் அமைப்பாக மாறியது. சகல விடயங்களின்போதும் மகிந்த அரச அதிகாரத்தையும், வளங்களையும் பயன்படுத்தினார். உதாரணமாக அவருடைய பரப்புரை சுவரொட்டிகளும், விசாலமான கட்அவுட்டுக்களும் ஒவ்வொரு அரச நிறுவனத்தின் செலவிலேயே தயாரிக்கப்பட்டன. துறைமுக அதிகார சபை ஒன்றைச் செய்யும்போது மற்றுமொரு அரச நிறுவனம் இன்னுமொன்றைச் செய்யும். அடுத்து கிராமங்களின் வாக்காளர் பட்டியல் பரிசீலனை செய்யப்பட்டன. முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகள் கிராமங்களில் மேற்கொள்ளும் மேற்படி நடவடிக்கைகள் சமுர்தி உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

சுருங்கக் கூறின் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், அரசுக்குமிடையிலான வேறுபாடு: கிசுகிசுக்கத் தொடங்கியது. கட்சி ஒன்று தேவையில்லை என்ற நிலைக்கு தள்ளப்பட்டது. இத்தகைய ஓர் பின்னணியிலேயே ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது. எனவே, அரசியலமைப்பிற்கான 18 ஆவது திருத்தம் ராஜபக்ஷ ஆட்சியின் திருப்பு முனையாகும்.

நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை நீக்குதல் அல்லது அதிகாரங்களைக் குறைத்தல், அத்தோடு சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபித்தல் என்பனவே தற்போது பொதுமக்களின் அபிலாஷைகளாகும்.

**அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தத்தைத் தவிர்த்து 19 ஆவது திருத்தத்தை மேற்கொள்வதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?**

அரசியலமைப்பிற்கான 18 ஆவது திருத்தத்தை நீக்கி 17 ஆவது திருத்தத்தை மீள நடைமுறைப்படுத்துவதாயின் அதில் அமைந்த குறைபாடுகளைத் திருத்தியே மீண்டும் அமுலாக்க வேண்டும். அதாவது கூட்ட நிறைவெண் பற்றி இங்கு திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. அடுத்ததாக ஓர் உறுப்பினர் நியமிக்கப்படா விட்டாலும் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் அது கட்டமைக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக பேரவை பரிந்துரைக்கும் ஆட்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி கடப்பாடு கொண்டுள்ளார். இரண்டு வாரங்களுக்குள் மேற்படி நியமனங்கள் செய்யப்படாவிட்டால் அவர்கள் நியமனம் பெற்றதாக கருதப்படுவார்கள். ராஜபக்ஷ சில நியமனங்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை நியமிக்கவில்லை. இது எமக்குள்ள அனுபவங்களாகும். இவ்வாறு அமைந்த பலவீனங்களை நீக்கி சுயாதீன ஆணைக்குழுக்கள் மீள நிறுவப்படும். அடுத்து தேசிய கணக்காய்வு ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதுபற்றிய கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. அதேசமயம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அரசியலமைப்பு ரீதியான அந்தஸ்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது அமுலில் உள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அரசியலமைப்பு ரீதியான அந்தஸ்து கிடையாது. எனவே பழைய முறைப்படி அரசியலமைப்பு பேரவைக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

**தேர்தல் ஆணைக்குழு தொடர்பாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படும்?**

தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படும். இயன்றளவு துரிதமாக தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்கவே எதிர்பார்க்கின்றோம். மேற்படி தேர்தல் ஆணைக்குழு அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய நியமிக்கப்படும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு சமமான அதிகாரங்கள் மேற்படி தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படுமா?

இல்லை. தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படும். ஆனால், தேர்தல் சட்டங்கள் இச் சந்தர்ப்பத்தில் மாற்றப்பட மாட்டாது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. தேர்தல் முறையும், தேர்தல்







kusalperera.blogspot.com

**தற்போது அமுலில் உள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அரசியலமைப்பு ரீதியான அந்தஸ்து கிடையாது. எனவே பழைய முறைப்படி அரசியலமைப்பு பேரவைக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.**

*ஊழல்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டம்*

சட்டங்களும் இரண்டு வகையானவை. தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் பற்றிப் புதிதாக சிந்திக்க வேண்டும். புதிய பாராளுமன்றம் அதுபற்றி தனது கவனத்தைச் செலுத்த வேண்டும். தேர்தல் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மிக வரையறுக்கப்பட்டது என்பது இம்முறை ஜனாதிபதி தேர்தலின்போது காணமுடிந்தது. அத்தகைய மட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் இலங்கையின் தேர்தல் ஆணையாளரும், பொலிசாரும் பாராட்டத்தக்க வகையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது செயற்பட்டனர். அவர்களின் அர்ப்பணிப்புக் காரணமாகவே ஜனாதிபதி தேர்தலை இவ்வாறு நடத்த முடிந்தது. ஆனால் அரச சொத்துக்கள் அரச ஊடகங்கள் என்பன மகிந்த ராஜபக்ஷவிற்கு சாதகமாகவே செயற்பட்டன. எனவே, இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான மிகக் குறைந்த அதிகாரங்களே இருந்தன. தேர்தல் காலங்களில் அரச சேவை, பொலிஸ் திணைக்களம் என்பன பற்றி இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு இருக்கும் அதிகாரங்கள் எமது தேர்தல் ஆணையாளருக்கு கிடையாது. எமது தேர்தல் ஆணையாளர் இதுபற்றி பலமுறை எடுத்துக் கூறியுள்ளார். இந்தியாவினதும் வேறு நாடுகளினதும் தேர்தல் சட்டதிட்டங்களைப் பார்வையிட்டு, புதிய தேர்தல் சட்டங்கள் இயற்றப்பட்டால் மிகச் சிறந்தது என நான் கருதுகின்றேன். அது புதிய பாராளுமன்றத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**தேர்தலின்போது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை நீக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படும் என்றே இப்போது கூறப்படுகிறது. ஏன்?**

இக் கருத்து தவறானது. தேர்தல் விஞ்ஞாபனத்தை வாசித்துப் பார்த்தால் தேர்தலின்போது மக்களுக்கு வழங்கப்பட்ட செய்தியும், தேர்தல் மேடைகளில் தெளிவாகக் கூறப்பட்ட விடயங்களையும் ஒட்டுமொத்தமாக எடுத்தால் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படுமென்றே கூறப்பட்டது. அதற்கமைய நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படும். ஆனால் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் திரு.வில்லியம் கோப்பல்லாவ ஜனாதிபதியாக பதவி வகித்தபோது இருந்த பெயரளவிலான அதிகாரங்களுக்கு இன்றைய ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்த முடியாது என்பது உண்மை. வில்லியம் கோபல்லாவ ஜனாதிபதியின் அதிகாரங்களைவிடக் கூடிய அதிகாரங்கள் இன்றைய ஜனாதிபதிக்கு உரித்தாகும். உதாரணமாக அமைச்சரவை வழங்கும் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளாமல் செயற்படுவது உசிதமானது என எனக்குப்படுகிறது. அவை உசிதமற்றவையாயின் மீண்டும் அமைச்சரவை அவற்றைப் பரிசீலிக்க முடியும். எனவே, இரண்டாவது தடவை அமைச்சரவை வழங்கும் ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தியாவிலும் அவ்வாறே இடம்பெறுகிறது. அடுத்து பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அதனை உறுதிப்படுத்தும் அதிகாரம் இதன் பின்னரே ஜனாதிபதிக்கு வழங்கப்படும். அவையும் அவசியமாயின் மீண்டும் பரிசீலனை செய்வதற்கு பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க முடியும். இரண்டாவது முறையாக அவற்றைப் பரிசீலித்த பின்னர் இந்தியாவைப் போலவே அது அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். இந்தியாவின் அனுபவங்களை பரிசீலித்துப் பார்க்கையில் இத்தகைய சந்தர்ப்பங்கள் மிக அபூர்வமாகவே இடம்பெறுகிறது. ஆனால் அந்த அதிகாரங்கள் இருக்கின்றன. அடுத்து நல்லாட்சி பற்றி விசேட பல அதிகாரங்களை இந்த அரசியலமைப்புப் பேரவையும், சுயாதீன ஆணைக்குழுக்களும் செயற்படுத்தும் முறையைப் பரிசீலிக்கும் வழிமுறை, கண்காணிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப்படுகிறது. அடுத்ததாக தேர்தல் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

இதற்கு மேலதிகமாக தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு, அவருடைய பதவிக் காலத்திற்கான விசேட அதிகாரங்களை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் திரு. மைத்திரிபால சிறிசேன இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு தலைமை வகித்தார். அவர் முன்வராதிருந்தால் இந்த மாற்றம் நிகழ மாட்டாது. ஏனைய தலைவர்களும் பங்களிப்புச் செய்தது உண்மை. அவருடைய தலைமை இல்லாதிருந்தால் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்க மாட்டாது. தனது உயிரைக்கூட அவர் பணயம் வைத்தார். அவர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றிருந்தால் என்ன நடந்திருக்கும் எனச் சொல்வது மிகக் கடினம். எமக்குக் கிடைக்கும் தகவல்களுக்கு அமைய அவர் வெற்றியீட்டியும் பல தடைகள் இருந்ததைக் காணமுடியும். தேர்தலில் வாக்குகளை எண்ணுவது நிறுத்தப்பட்டு அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு இருந்தன என்ற



www.dailynews.lk

*இறுதி ஆளுநரும் முதல் ஜனாதிபதியுமான வில்லியம் கொபல்லாவ*

**1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் திரு.வில்லியம் கோப்பல்லாவ ஜனாதிபதியாக பதவி வகித்தபோது இருந்த பெயரளவிலான அதிகாரங்களுக்கு இன்றைய ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்த முடியாது என்பது உண்மை. வில்லியம் கோபல்லாவ ஜனாதிபதியின் அதிகாரங்களைவிட கூடிய அதிகாரங்கள் இன்றைய ஜனாதிபதிக்கு உரித்தாகும்.**

தகவல்களை நாம் அறிகிறோம். இதுபற்றிய புலனாய்வு நடவடிக்கைகள் பொலிசாரினால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிலைமைகளின்கீழ், நாட்டு மக்கள் அவருடைய பதவிக்காலத்தின்போது சில விசேட அதிகாரங்களை மைத்திரிக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள். மீண்டும் தான் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட மாட்டேன் என அவர் பகிரங்கமாகக் கூறியுள்ளார். அது மிகவும் முன்னுதாரணமான ஒரு பிரகடனம். எனவே, சில விடயங்கள் தொடர்பான அமைச்சரவை அதிகாரங்களை அவர் வைத்திருக்க விரும்புகிறார். அதுபற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

**அமைச்சரவை அரசாங்க முறையின்கீழ் பாராளுமன்றத்தின் ஊடாகவே நிறைவேற்று அதிகாரம் பிறக்கிறது. அதாவது, பிரதமரை முதன்மையாகக் கொண்ட அமைச்சரவையே அதனை மேற்கொள்ளும். மரபுரீதியான ஜனாதிபதியை மேற்படி நிறைவேற்றுத்துறையே நியமிக்கும். முன்னர் இருந்த நிலைமையின்படி திரு.மைத்திரிபால சிறிசேன பொதுமக்களின் வாக்குகளாலேயே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். எதிர்காலத்தில் ஜனாதிபதி பொதுமக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுவாரா?**

இது பாராளுமன்ற நிறைவேற்றுத்துறையாகும் இம்முறை, சமர்ப்பிக்கும் அரசியலமைப்பிற்கான திருத்தத்தின்மூலம் ஜனாதிபதி நியமனம் பெறும்முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட மாட்டாது.

**ஏன் அவ்வாறு மாற்றம் செய்யப்பட மாட்டாது?**

அடிப்படைக் காரணம் அதற்கு சர்ஜன வாக்கெடுப்பொன்று அவசியம். சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு இச் சந்தர்ப்பத்தில் பாரிய தொகைப் பணம் செலவு செய்ய நேரும். மறுபுறம் அவற்றை செய்ய முற்பட்டால் 100 நாள் வேலைத்திட்டத்தை அமுலாக்க முடியாது. எனவே, அதனை பிற்போட வேண்டி உள்ளது. புதிய பாராளுமன்றம் மேலும் மாற்றங்களைச் செய்ய வேண்டி உள்ளது. புதிதாக தயாரிக்கப்படும் அரசியலமைப்பு சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும்.

**இத் திருத்தம் நிலைமாற்றத்திற்குரிய ஓர் சந்தர்ப்பமா? அதாவது எதிர்காலத்தில் முழுமையான அரசியலமைப்புத் திருத்தம் ஏற்படுமா?**

புதிய அரசியலமைப்பின் அவசியத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். எனது கருத்துப்படி தற்போது திருத்தங்கள்மூலம் மாத்திரம் முன்னேற முடியாது. தற்போது மேற்கொள்ளப்படும் திருத்தம் அவசியமானது. ஆனால் புதிய தேர்தல்முறை, நீதித்துறை, அடிப்படை உரிமைகள் போன்ற பல்வேறு விடயங்களையிட்டு காலத்திற்குக் காலம் திருத்தங்களை மேற்கொள்வதை விடுத்து புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பதே உசிதமானது. அதனை தேர்தலின் பின்னர் புதிய பாராளுமன்றம் மேற்கொள்ள வேண்டிய பிரதான நடவடிக்கையாகவே மேற்கொள்ளலாம். நான் அறிந்தவரை இதற்கு ஓர் உடன்பாடு உண்டு. எமது அரசியலமைப்பு எவ்வாறு அமைய வேண்டுமென நாம் கலந்துரையாட முடியும்.

**தேர்தல் முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது. தற்போது அது கைவிடப்பட்டதா?**

100 நாள் வேலைத்திட்டத்தின்கீழ் தேர்தல் முறை பற்றிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மிகத் துரிதமாக இதற்கான கமிட்டி நிறுவப்பட வேண்டும். தற்போது அரசியல் கட்சிகள் முன்வைக்கும் கருத்துக்களே இருக்கின்றன. விகிதாசார தேர்தல் முறையும், தொகுதிவாரி தேர்தல் முறையும் கலந்த ஒரு தேர்தல் முறை அமைய வேண்டுமென ஒரு பொதுவான இணக்கப்பாடு உண்டு. ஆனால், இந்த முறை பற்றிய ஒரு திட்டவட்டமான முடிவு எட்டப்படவில்லை. அது தீர்மானிக்கப்பட வேண்டும். அடுத்ததாக, விகிதாசார முறை மாவட்ட மட்டத்தில் அமைவதா? தேசிய மட்டத்தில் அமைவதா? மாகாண மட்டத்தில் அமைவதா என தீர்மானிக்கப்பட வேண்டும். அடுத்து எல்லை நிர்ணயம் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும். அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்? எல்லைகளை நிர்ணயிக்க முடியாது போனால் அடுத்த தேர்தலுக்கு முன்னர் ஏற்கனவே அமுலில் உள்ள முறையைக் கையாள்வதா? இந்த இரண்டு முறைகளினதும் ஒரு கலவை உருவாக்கப்பட வேண்டுமென்பது தெளிவு. பழைய தேர்தல்முறை நீக்கப்படும். ஆனால், எல்லைகளை நிர்ணயித்து அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

நேர்காணல் – **மகிந்த ரத்னாயக்க**







கலாநிதி
**அசங்க வெலிகல**




www.quazoo.com

*ஊடகச் சுதந்திரத்தைக் கோரி.....*

## புதிய இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தைப் பலப்படுத்துதல்:

# அத்தியாவசியமான நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்கள்

ஊடகச் சுதந்திரத்திற்கு பொது எதிரணி அபேட்சகரின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தின் அத்தியாயம் 11 அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஏனைய விடயங்கள் மத்தியில், வெளிநாடுகளிலிருந்து நிருவகிக்கப்படும் செய்தி இணையதளங்கள் மீதான தடைகளை நீக்குதல் போன்ற எளிய அர்ப்பணிப்புக்களை அது உள்ளடக்குகின்றது. முன்னைய பாதுகாப்பு அமைச்சிலிருந்து வெளிப்பட்ட இத்தகைய குழந்தைத்தனமான நடவடிக்கைகள், கீழ்த்தரமானதும், இறுதியாக சுயமாக–தோற்கடிக்கப்பட்டதுமான எதேச்சாதிகாரத்தின் எடுத்துக்காட்டாகும். ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் சுதந்திரமான ஊடகங்களும், சுதந்திரமான இதழியலாளர்களும் உட்பட அதிசயமான அடக்குமுறையினதும், அரசாங்க ஊடகங்கள் ஆட்சிக்கு சேவையளிப்பதற்காக அமிழ்ந்த வெறுக்கத்தக்க ஆழங்களினதும் காரணமாக விஞ்ஞாபனத்தின் வேறோர் அத்தியாயத்தில் ஊடகங்களின் சுதந்திரம் மீதான வலியுறுத்தல் மிகவும் சரிவர இடப்பட்டுள்ளது. ஜனநாயக சமூகமொன்றை மட்டுமல்ல, ஆனால் கௌரவமான சமூகமொன்றையும் நாம் கட்டியெழுப்ப வேண்டுமென்றால், ஜனநாயக வாழ்க்கை

www.indiamike.com




**இந்த முன்னேற்றங்களின் தொழில்நுட்பப் பரிமாணங்களில் அதிகளவு தகுதியைக் கொண்டவர்கள் நான் இங்கு முன்வைக்கும் நிறுவனரீதியிலான சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளுக்கு விடயங்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் அத்துடன் அவற்றை மேம்படுத்துவதற்கும் இயலக்கூடிய நிலையில் இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.**

*அரச ஊடக நிறுவனமான லேக் ஹவுஸ் நிலையம்*

முறையின் மையமானதும், மிகவும் முக்கியமானதுமான பாதுகாப்பாக விளங்கும் கருத்துச் சுதந்திரத்திற்கான நிறுவனரீதியிலான திட்டவரையானது மிகவும் உடனடித் தேவையின் விடயமொன்று என்பதுடன், இது சீர்திருத்தப்பட்டு, பலப்படுத்தப்படவும் வேண்டும். இது தொடர்பில் கடந்த காலத்தில் சிவில் சமூகத்தினாலும், இதழியலாளர்களினாலும் ஒரு தொகையிலான கருத்துக்கள் விருத்திசெய்யப்பட்டு, மேம்படுத்தப்பட்டதுடன், இவை புதிய அரசாங்கத்தினால் மதிக்கப்படவும் வேண்டும். தசாப்தகால ராஜபக்ஷ ஆட்சியின் போது கருத்துச் சுதந்திரத்திற்கான அரசியலமைப்பு மற்றும் மனித உரிமையின் தரத்திலும், தன்மையிலும் இலங்கை மோசமான நிலைக்குத் தள்ளப்பட்ட போது, உலகின் எஞ்சிய நாடுகள் விசேடமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் முன்னேற்றங்கள் ஊடாக பாரிய முன்னோக்கிய பாய்ச்சல்களை மேற்கொண்டன. இந்த முன்னேற்றங்களின் தொழில்நுட்பப் பரிமாணங்களில் அதிகளவு தகுதியைக் கொண்டவர்கள் நான் இங்கு முன்வைக்கும் நிறுவனரீதியிலான சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளுக்கு விடயங்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் அத்துடன் அவற்றை மேம்படுத்துவதற்கும் இயலக்கூடிய நிலையில் இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

எமது நாட்டில் கருத்துச் சுதந்திரத்தினை மீள்வலுவூட்டுவதைக் கரிசனைக்கெடுக்கையில் வெளிப்படையான ஆரம்ப முனையாக, அது தொடர்பில் எமது சர்வதேசக் கடப்பாடுகளின் பொருட்டு அந்த அடிப்படை உரிமைகளுக்காக உள்நாட்டு அரசியலமைப்பு ஏற்பாடு எவ்வாறு எச்சரிக்கையோடு கையாளப்படுகின்றது என்பதைப் பரிசீலிப்பது விளங்குகிறது. ஆரம்பநிலையாக இது தொடர்பில் சர்வதேச சிவில், அரசியல் உரிமைகள் மீதான ஒப்பந்தத்தில் [International Covenant on Civil and Political Rights (ICCPR)] எமது சர்வதேசக் கடப்பாடுகள் உள்ளடங்கியுள்ளன. கருத்து மற்றும் பேச்சுச் சுதந்திரத்திற்கு ICCPR இன் உறுப்புரை 19 தொடர்பினைக் கொண்டிருப்பதுடன், தலையீடு இன்றி கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கும் அத்துடன் ஒன்றில் வாய்மொழியாக அல்லது எழுத்தில் அல்லது அச்சில், அல்லது கலையின் அமைப்பில் அல்லது நபர் ஒருவரின் விருப்பொன்றின் ஏதேனும் வேறு ஊடகத்தின் ஊடாக நாட்டு எல்லைப் புறங்களுக்கு அக்கறையின்றி சகல வகைகளைக் கொண்ட தகவலையும், கருத்துக்களையும் பெறுவதற்கும் அத்துடன் பகிர்வதற்குமான உரிமையை உள்ளடக்குவதற்கு இலங்கையின் அரசியலமைப்பின் உறுப்புரை 14(1)(அ)இல் பேச்சுக்கான ஒத்திசைவிலான உரிமையை விட பரந்த பதங்களில் வகுத்தமைக்கப்பட்டுள்ளன. “கருத்தை; எது அடக்கியுள்ளது என்ற தாராள மனப்பான்மையிலான அணுகுமுறையொன்றை மீஉயர் மன்றத்தில் வழக்குச் சட்டம் எடுத்துள்ள போதிலும், மறுதலையாக மட்டும், வெளியீடு உட்பட பேச்சுச் சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் இலங்கையின் அரசியலமைப்பின் உறுப்புரை 14(1)(அ) தாபிக்கின்றது. இதன் பிரகாரம், வாக்களிப்பதற்கான உரிமையும் (உதாரணம்; முதலமைச்சரின் வழக்கு), அத்துடன் அரசியல் எதிர்ப்பின் உரை சாராத அமைப்புக்களும் கருத்துச் சுதந்திரத்தினதும் (ஜன கோஷ வழக்கு) அத்துடன் கருத்து வேறுபாட்டின் உரிமையினதும் (யுக்திய வழக்கு) வரம்பினுள் வைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் அரசியலமைப்பில் அடிப்படை உரிமையொன்றாக தகவலுக்கான திட்டவட்டமான உரிமையொன்று இல்லாத போதிலும், தகவலின் சில அமைப்புக்களைப் பெறுவதற்கும், பரப்புவதற்குமான சுதந்திரத்தை (உதாரணம், விமல் பெர்னாண்டோவின் வழக்கு), கருத்துச் சுதந்திரம் உள்ளடக்குகின்றது என சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது – பின்னர் இது பற்றி மேலும்.

எனினும், நீதிமன்றத்தின் இந்த அறிவிப்புகள், ICCPR உட்பட சர்வதேச நியமங்களுக்கு அமைவாக கருத்துச் சுதந்திரத்தின் இன்மையை சீர்படுத்தமாட்டா அல்லது மிகவும் திடமான உரைசார் வடிவமைத்தலொன்றுக்கான அவசியத்தைச் சீர்குலைக்கமாட்டா. மேலும், இது தொடர்பில் ஒரே சீரான தாராளமயமான பதிவொன்றை மீஉயர் நீதிமன்றம் கொண்டிருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பெருமளவு சந்தர்ப்பங்களில்,





www.edition.cnn.com




**எனினும், நீதிமன்றத்தின் இந்த அறிவிப்புகள், ICCPR உட்பட சர்வதேச நியமங்களுக்கு அமைவாக கருத்துச் சுதந்திரத்தின் இன்மையை சீர்படுத்தமாட்டா அல்லது மிகவும் திடமான உரைசார் வடிவமைத்தலொன்றுக்கான அவசியத்தைச் சீர்குலைக்கமாட்டா. மேலும், இது தொடர்பில் ஒரே சீரான தாராளமயமான பதிவொன்றை மீஉயர் நீதிமன்றம் கொண்டிருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.**

*ஜெனீவா மாநாடு*

சர்வதேச நியமங்களைப் பொறுத்தளவில் அதன் தீர்ப்புக்கள் பின்னோக்கியதாகவும், இணக்கமற்றதாகவும் விளங்கின. அண்மைய வழக்கொன்றில் வயது வந்த ரசிகர்களுக்கான கருத்தினைக் கொண்டிருந்த திரைப்படமொன்றை (அக்ஷ ரய வழக்கில்) தடைசெய்வது தொடர்பில் கலாச்சாரத்தினதும், ஒழுக்கத்தினதும் மீது அதன் சொந்தக் கருத்துக்களை அது சுமத்தியிருந்தது. இதேபோல, நீதிமன்றத்தை அவதூறு செய்யும் சட்டத்தின் கீழ், அதிகாரங்களின் முழுமையான தன்னிச்சையிலானதும், பிற்போக்கானதுமான உபயோகமானது கருத்து வெளிப்படுத்தலினதும், ஊடகங்களினதும் சுதந்திரம் மீது நேரடித்தன்மையிலான மறுதலையிலான தாக்கமொன்றைக் கொண்டிருந்தது. அண்மையில் என்றில்லாமல், கடந்த காலத்தில் செய்திப்பத்திரிகைகளுக்கும், இதழியலாளர்களுக்கும் எதிராக அடக்குமுறையிலான அவதூறுக்கு தண்டனையளிப்பதற்கு அதன் அதிகாரத்தைப் பாராளுமன்றம் பயன்படுத்தியது.

கருத்துச் சுதந்திரத்தையிட்டு எமது அரசியலமைப்பு தெளிவாக உச்சரிக்கும் விதத்தில் உள்ள பாரிய பலவீனங்களில் ஒன்றாக, இந்த உரிமையின் கட்டுப்பாட்டுக்காக ICCPR உறுப்புரை 19(3)இல் உள்ள “இன்றியமையாமையின்; தேவைப்பாடானது கட்டுப்பாடுகளுக்கான இலங்கையின் வரைச்சட்டத்தில் இல்லை என்பதாக உள்ளது. இதேவாறு, இந்த ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டின் ஏனைய ஆதாரங்கள் ICCPRஇனால் அனுமதிக்கப்படுகின்ற போதிலும், ஜனநாயக சமூகமொன்றின் பொதுவான சேமநலனின் நியாயமான தேவைப்பாடுகளை நிறைவேற்றும்; அரசியலமைப்பின் உறுப்புரை 15(7)இல் உள்ள ஏற்பாடானது ICCPRஇல் கடப்பாட்டின் முற்றிலும் வேறான ஆதாரமொன்றாக அனுமதிக்கப்படவில்லை. இனத்தினதும், சமய ஒற்றுமையினதும் அக்கறைகள் போன்ற கருத்துச் சுதந்திரம் மீது அல்லது பாராளுமன்றச் சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு அல்லது குற்றமொன்றுக்கு ஊக்குவித்தல் ஆகியன தொடர்பில் கட்டுப்பாட்டின் திட்டமான ஆதாரங்களை அரசியலமைப்பின் உறுப்புரை 15(1) சுமத்துகின்றது. ICCPR உறுப்புரை 19(3)(அ) மற்றும் உறுப்புரை 20 ஆகியவற்றினால் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றமொன்றுக்கான முறையே அவமதிப்பு மற்றும் தூண்டுதல் ஆகியன புறநீங்கலாக, கட்டுப்பாட்டுக்கான இந்த வேறு ஆதாரங்களில் எவையேனும் ICCPRஇனால் அங்கீகரிக்கப்படவில்லை. ICCPRஇனால் வலியுறுத்தப்பட்டவாறு கருத்துச் சுதந்திரத்திற்கு பகையான தன்மையொன்றில் இந்த அதிகாரங்களில் உபயோகத்தை இலங்கையில் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் சட்டத்தின் சட்டபூர்வரீதியில் கட்டுப்படுத்தப்படாத தன்மை மீது அண்மையில் உணர்ச்சியற்ற தாக்கமொன்றைக் கொண்டிருந்த இன்னொரு பிரச்சனையை இது கீழ்கோடிட்டு காட்டுகின்றது. நீதிமன்றத்தின் பொதுவான சட்ட அவமதிப்பினை அண்மையில் துஷ்பிரயோகித்த மிகவும் முக்கியமானவராக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா விளங்குகிறார். அவர் சார்புரீதியில் சிறிய அத்துமீறலுக்கு ரோனி பெர்னாண்டோ மற்றும் எஸ்.பீ.திசநாயக்க ஆகியோரை சுருக்கமான விசாரணையில் சிறையிலடைத்தார். எனவே, கருத்துச் சுதந்திரத்தின் சர்வதேச நியமங்களுடன் ஒத்துப்போகின்ற நீதிமன்ற அவமதிப்பு அதிகாரச்சட்டமொன்று ஓர் அழுத்துகின்ற அவசியமென்பதுடன், இது தொடர்பில் முன்மொழிவுகள் வழக்கறிஞர்களினாலும், இதழியலாளர் குழுக்களினாலும் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன.

ICCPRஇன் உறுப்புரை 2(1)இனால் அவசியப்படுத்தப்பட்டவாறு, உறுப்புரை 14(1)(அ)இன் கீழான உரிமைகள் இலங்கைத் தேசத்தின் நீதிபரிபாலன எல்லைக்குட்பட்டு, இலங்கையின் பிரஜைகளுக்கு மட்டுமே கிட்டுகின்றன என்பதுடன், பிராந்தியத்திலுள்ள சகல நபர்களுக்கும் கிட்டமாட்டா. அவசரகால ஒழுங்குவிதிகளின் ஊடாக, தீவிரமான நெருக்கடிநிலையிலான காலங்களின் போது விதிக்கப்படுகின்ற முன்கூட்டிய தணிக்கையுடன், அவசரகால நிலைமையிலான சூழ்நிலைகளின் கீழ் கருத்துச் சுதந்திரம் குறிப்பாக ஊறுபடத்தக்கதாக விளங்குகின்றது. இது தொடர்பில் அடிப்படை உரிமை தொடர்பான சவால்களில் அரசாங்கத்திற்கு சார்பாக விளங்கும் போக்கொன்றையே பொதுவாக மீஉயர் நீதிமன்றம் எடுத்துக்காட்டியுள்ளது (உதாரணம்: சுனிலா அபேசேகர


en.wikipedia.org

**ICCPRஇன் உறுப்புரை 2(1)இனால் அவசியப்படுத்தப்பட்டவாறு, உறுப்புரை 14(1)(அ)இன் கீழான உரிமைகள் இலங்கைத் தேசத்தின் நீதிபரிபாலன எல்லைக்குட்பட்டு, இலங்கையின் பிரஜைகளுக்கு மட்டுமே கிட்டுகின்றன என்பதுடன், பிராந்தியத்திலுள்ள சகல நபர்களுக்கும் கிட்டமாட்டா.**

*பிரஜைகளின் உரிமை*

வழக்கு). இதேவாறு, கருத்துச் சுதந்திரம் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்பு அதிகாரச்சட்டத்தின் நாசகாரமான தன்மையானது ஜே.எஸ். திசநாயக்கவின் மனச்சாட்சியற்ற தடுப்புக்காவல், குற்றஞ்சாட்டுதல், குற்றவாளியென தீர்ப்பளித்தல் மற்றும் சிறையிலடைத்தல் ஆகியவற்றில் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்தப் பக்கங்களில் வேறெங்கினும் அமல் டீ சிக்கோரவினால் அவரது தண்டனையின் ஒத்தவாறு அமையாத்தன்மை அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது: "85 சொற்கள், 20 வருடங்கள், சொல்லொன்றுக்கு மூன்று மாதங்கள்."

எனவே, இலங்கையில் அடிப்படை உரிமையொன்றாக, கருத்துச் சுதந்திரத்தை அரசியலமைப்புரீதியாகப் பாதுகாப்பதற்கும், வினைப்படுத்துவதற்குமான வழியை எம்மால் பரந்தரீதியாக திருத்தியமைக்க முடியும் என்பது மிகவும் தெளிவாக விளங்குகின்றது. சர்வஜன வாக்குரிமையொன்றை அவசியப்படுத்தாத அரசியமைப்புச் சீர்திருத்தங்களுக்கு பொது எதிரணி விஞ்ஞாபனம் மட்டுப்படுத்திக் கொண்டுள்ளதினால், அரசியலமைப்பில் வேரூன்றியுள்ள ஏற்பாடொன்றாக உறுப்புரை 14(1)(அ) விளங்கவில்லை என்பதுடன், எனவே, மேலே அடையாளங் காணப்பட்டுள்ள பிரச்சனைகளினாலும், வழிவகைகளினாலும் கோரப்பட்டவாறு அதற்கான மாற்றங்கள் உண்மையில் 100 நாள் திட்டத்தின் அங்கமாக விளங்க முடியும் என்பதைக் கவனத்திற்கெடுப்பது பெறுமதிமிக்கதாகும். உதாரணமாக, 100 நாள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாராளுமன்றக் குழு முறைமையின் சீர்திருத்தத்தை விட, இது உயர்வான முன்னுரிமையொன்றாக இருப்பதாக எனக்குத் தெரிகிறது.

அடித்தளங்களிலிருந்து பின்னர் கட்டமைப்புகளுக்கு. ராஜபக்ஷ ஆட்சியாளர் வெறுமனே சீர்திருத்தத்தை தள்ளிப் போடாததிற்கு முன்னரே, ஆனால் வெட்கப்படுத்தும் விதத்தில் ஸ்டாலினின் அரசியல் பிரச்சாரப் பொறுப்பாளர்களைப் போடுகின்ற வழிவகைகளில் அரசுக்குச் சொந்தமான அல்லது கட்டுப்படுத்தப்பட்டுள்ள ஊடக நிறுவனங்களின் சீர்திருத்தம் ஆண்டுக்கணக்காக நிகழ்ச்சிநிரலில் இருந்தது. பொது உரித்துரிமையிலானதும், வரி நிதிப்படுத்தலிலானதுமான இந் நிறுவனங்களின் பரிபூரணமான துஷ்பிரயோகம், மற்றும் விலக்கீட்டுரிமையின் கேடயத்தின் கீழ் அவற்றை நிருவகிப்பதற்கு நியமிக்கப்பட்ட கட்சிக் கைக்கூலிகளின் மிகவும் மோசமான நடத்தையும் இத் துறையில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கான அவசரமான அவசியத்தன்மையை ஒன்று சேர்த்துள்ளன. எனினும், அரசாங்க ஊடகங்களின் சீர்திருத்தத்தை அணுகும் போது, நாம் வழிகாட்டப்படுகின்ற கோட்பாடுகள் பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

அரசாங்க ஊடகங்களை வெறுமனே தனியார்மயப்படுத்துவதே அவற்றைச் சீர்திருத்துவது என்பதை சுட்டிச்சொல்லவில்லை என்பதே இது தொடர்பில் முக்கியமான கோட்பாடுகளில் ஒன்றாகும். பதிலாக, இந் நிறுவனங்கள் மீதான அரசியல் கட்டுப்பாட்டினை அகற்றிவிட்டு, அவற்றை உண்மையாகவே பொது சேவை ஊடகங்களாக மீள்கட்டுவதாகவே குறிக்கோள் இருக்க வேண்டும். இது நவீன ஜனநாயகங்களின் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக இலங்கையைக் கொண்டு வருவதை இன்றியமையாததாக்குகின்றது. இதன் காரணமாக, பிரஜாவுரிமையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை அடைவதற்காக அடிப்படையிலான கருவியொன்றை அரசாங்கச் சேவை ஊடகங்கள் அமைக்கும். இன்னொரு வழியில் போடுவதென்றால், முதலாளித்துவச் சந்தையொன்றில் வர்த்தக மையங்களாக போட்டியிடுவதற்கான முழுமையான சுதந்திரத்தை தனியாருக்குச் சொந்தமான ஊடகங்கள் கொண்டிருக்க வேண்டும் என்ற அதேவேளை, சந்தை கவனத்திற்கெடுக்காத இடைவெளிகளை நிரப்புவதற்கு பகிரங்கமான உரித்துரிமையிலான அரசாங்கச் சேவை ஊடக நிறுவனங்கள் சேவையாற்றும். அது பொதுமக்களுக்கு அறிவூட்டுவதுடன், தகவலளிக்கும், அது கருத்துக்களின் பன்மைத்தன்மையொன்றை உறுதிப்படுத்தும், அது பிரஜாவுரிமையின் பெறுமதிகளை முன்னேற்றும், அது இலங்கையின் சமூகத்தை உள்ளடக்கியுள்ள இனரீதியிலான பன்னிலைத்தன்மையின் கலாசாரக் கருத்திற்கு ஊக்கமளிக்கும் அத்துடன் அது வழமையான வர்த்தக ஊடக மையங்கள்







www.sundaytimes.lk

**எனவே, இலங்கையில் அடிப்படை உரிமையொன்றாக, கருத்துச் சுதந்திரத்தை அரசியலமைப்புரீதியாகப் பாதுகாப்பதற்கும், வினைப்படுத்துவதற்குமான வழியை எம்மால் பரந்தரீதியாக திருத்தியமைக்க முடியும் என்பது மிகவும் தெளிவாக விளங்குகின்றது.**

*பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் நியமனத்திற்கு எதிராக*

அக்கறைகொள்ளாத கருத்துக்களின் கலாசார மற்றும் புலமைசார் படைப்புக்கு ஆதரவளிக்கும். இவையே ரெயிதியன் (Reithian) பெறுமதிகளாகும். இவற்றின் மீதே இலங்கையில் ஆரம்பத்தில் பகிரங்க ஒலிபரப்பு தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், இவை காலப்போக்கில் தொலைந்து போயின.

இரண்டாவது பாரிய கோட்பாடு நிறுவனங்களின் வடிவமைப்பினைக் கரிசனையாகக் கொண்டுள்ளது: அவை ஒளிவுமறைவின்றியும், பொறுப்புகூறுவதாகவும் உள்ள அதே வேளை செயற்றிறனாகவும் இருக்க வேண்டும். பொது உரித்துரிமையைப் பொறுப்புகூறுதல் தொடர்வதுடன், 1970களில் இருந்து நாம் கண்டுள்ளவாறு, இந் நிறுவனங்களின் துஷ்பிரயோகத்தைத் தவிர்ப்பதில் ஒளிவுமறைவின்மை அவசியமானதாகும். ஆனால், அவை செயற்றிறனானவை என்பதை உறுதிப்படுத்த வேண்டும், அல்லது வேறு வார்த்தைகளில் என்றால், ஆகுசெலவு விளைபயனுள்ளவையாக விளங்குவதுடன், வரி செலுத்துபவர்களின் பணத்திற்கு சிறந்த பெறுமதியை பிரதிபலிக்கும் சேவைகளை வழங்க வேண்டும்.

எனவே, இக் கோட்பாடுகளுக்கு கருத்தினை வழங்கும் பொருத்தமானதொரு நிறுவனரீதியிலானதும், மறுபுறத்தில் இன்று இலங்கையில் அரசாங்க ஊடகக் கட்டமைப்புகளை ஆட்சிசெய்யும் அராஜகமான அனுமானங்களிலிருந்து விலகிச்செல்லும் நகர்வொன்றை பிரதிநிதிப்படுத்துவதுமான அமைப்பொன்றைக் கண்டறிவது அவசியமானதாகும். அரசாங்கத்திற்குச் சொந்தமான ஊடகங்கள் தொடர்பில், புதிய திசையொன்றில் நாம் நகர்வதென்றால், இன்றியமையாததாக பின்வரும் நடவடிக்கைகளை சிவில் சமூகமும், இதழியலாளர்கள் தாபனங்களும் அடிக்கடி சுட்டிச்சொல்லியுள்ளன.

சுதந்திரமான ஊடக ஆணைக்குழுவொன்று மூலத்திலான முன்மொழிவுகளின் அங்கமாகும். இது பின்னர் அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தமாக இயற்றப்பட்டது. இத்தகைய ஊடக ஆணைக்குழுவொன்றுக்கான அவசியம் அதிகரித்துள்ளது மட்டுமே என்பதுடன், பதினேழாவது திருத்தத்தின் மீள்-இயற்றுதலின் அல்லது 100 நாள் திட்டத்தின் கீழ் இதையொத்த சட்டத்தின் வாக்குறுதியுடன், அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ க்கான அட்டவணையில் பட்டியல்படுத்தப்பட்ட வேறு சுதந்திரமான உறுப்புக்களைப் போன்று, அதே அரசியலமைப்பிலான சுதந்திரமான ஊடக ஆணைக்குழுவொன்று அமைக்கப்படுவதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். அரசியலமைப்புப் பேரவையில் பரிந்துரையின் மீது சுதந்திரமான ஊடக ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன், பிறவற்றுள், செயல்படும் இதழியலாளர்கள், சம்பந்தப்பட்ட துறைகளில் உள்ள நூற்கல்வியாளர்கள், உரிமையாளர்கள் மற்றும் தற்போது, புதிய ஊடக; தொழில்புரிவோர் ஆகியோரின் பிரதிநிதித்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அரசாங்கச் சேவை ஊடக நிறுவனங்களை மேற்பார்வை செய்வதே அதன் முதனிலை வகிபங்காகும். ஆனால் (புதிய மற்றும் பாரம்பரியமான) ஊடக சந்தையிடத்தின் ஒழுங்குவிதி உட்பட வேறு அதிகாரங்கள் மற்றும் பணிகள் அத்துடன் புதிய தொழில்நுட்பம் உட்பட சகல அதன் வடிவங்களில் கருத்துச் சுதந்திரத்தை முன்னேற்றுதல் ஆகியனவற்றை உள்ளடக்கலாம்.

அரசியலமைப்புரீதியில் தாபிக்கப்பட்டதும், ஆணையைப் பெற்றதுமான ஊடக ஆணைக்குழுவினால் மேற்பார்வை செய்யப்படும் அரசாங்க ஒலிபரப்பு மற்றும் அச்சு ஊடகங்களுக்கு புறம்பான வழிகளிலேனும் மேலும் சீர்திருத்தங்கள் அவசியமாகும். ஆரம்பத்தில் வலியுறுத்தப்பட்டவாறு சுதந்திர தொலைக்காட்சி வலைப்பின்னல் (ஐ.ரி.என்.) தனியார்மயப்படுத்தப்பட வேண்டும். அரசாங்க அல்லது பெரிதுமே பொது உரித்துரிமையின் கீழ் தொடர்ந்துமிருக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (இ.ஒ.உ.) மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (இ.ரூ.கூ.) ஆகியன மீதான அரசியல் கட்டுப்பாடு ஊடக ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்றன. சுதந்திர ஒலிபரப்பு அதிகாரசபை ஒன்றின் கட்டுப்பாட்டினதும், வழிநடத்தலினதும் கீழ், பொது சேவை ஒலிபரப்புக்கான ஒரு புதிய சட்ட ஆட்சியொன்றின் சார்பாக உடனடியாகவே கைவிடப்பட வேண்டும்.

www.ft.lk



**இலங்கையின் சமூகத்தை உள்ளடக்கியுள்ள இனரீதியிலான பன்னிலைத்தன்மையின் கலாசாரக் கருத்திற்கு ஊக்கமளிக்கும் அத்துடன் அது வழமையான வர்த்தக ஊடக மையங்கள் அக்கறைகொள்ளாத கருத்துக்களின் கலாசார மற்றும் புலமைசார் படைப்புக்கு ஆதரவளிக்கும்.**

*சகவாழ்வுப் பிரார்த்தனைகள்*

இது தொடர்பிலான விரிவான முன்மொழிவுகள் 1996இன் முற்பகுதியிலேயே மாற்றுக் கொள்கை நிலையத்தினாலும் [Centre for Policy Alternatives (CPA)], சுதந்திர ஊடக இயக்கத்தினாலும் [Free Media Movement (FMM)] கடந்த ஐக்கிய தேசிய முன்னணி நிருவாகத்தின் போது உருவாக்கப்பட்டதுடன், சட்டமூல அமைப்பினுள்ளும் இடப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, தனியார்மயப்படுத்தல் மீது கருத்து ஒருமைப்பாடு இல்லையென்றால், அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒஃப் சிலோன் லிமிற்றெற்றின் [Associated Newspapers of Ceylon Ltd (ANCL)] உரித்துரிமையை பரந்த அடிப்படை; மீது சிதத் ஶ்ரீ நந்தலோஷன குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட முடியும். பூரணமான விற்பனையை விட பரந்த அடிப்படை; 1990களில் லேக் ஹவுஸ் தொழிற்சங்கங்களின் விஸ்தாரமான சலுகை என்பதுடன், இது எவ்வாறு இன்று கோட்பாட்டுரீதியில் அல்லது நடைமுறையில் ஆதரிக்கப்பட முடியும் என்பதையிட்டு எனக்கு நிச்சயமில்லை. பொதுவுடைமையிலான செய்திப்பத்திரிகை நிறுவனங்களுக்கு ஏதேனும் நியாயப்படுத்தல் இருப்பதற்கான செயற்படுகின்ற சமகால ஜனநாயகம் இருக்கவில்லை. எனினும், ஊடகச் சந்தையிடத்தில் தோதான பன்மைத்தன்மையையும், போட்டியையும் உறுதிப்படுத்துகின்ற ஊடக ஆணைக்குழுவுக்கான வகிபங்கொன்றாக அனேகமாக மீண்டும் ஒன்று சேர்ந்துள்ள வரைச்சட்ட விதிகளுடன் ஒன்று சேர சட்டபூர்வமானதும், ஒளிவுமறைவற்றதுமான தன்மையொன்றில் ANCLஇன் தனியார்மயப்படுத்தல் செய்யப்பட வேண்டும். பதிப்பக மற்றும் இதழியல்ரீதியிலான சுதந்திரத்தை அழிக்கின்ற ஆதரவு காட்டப்படுகின்ற மிகவும் நெருக்கமானவர்களுக்கு குறைத்து மதிப்பிடப்படும் அரசாங்கப் பொருட்களைச் சூறையாடும் ராஜபக்ஷ வின் அல்லது அவர்களுக்கு முன்னர் பதவிவகித்தவர்களின் குறையை ஏற்றுக்கொள்வது இதன் கருத்தல்ல. ஒத்ததன்மை அச்சொட்டானதல்ல என்ற போதிலும், ஒரு காலத்தில் பாரியதாக விளங்கிய த சண்டே லீடர் பத்திரிகைக்கு சம்பவித்துள்ள துயரம் இங்கு எம்மை வழிகாட்ட வேண்டும் (ஆனால், ஜனவரி 8 அன்றிலாவது, நன்கறியப்பட்ட அன்பான லசந்த கல்லறைக்கு அப்பால் இருந்து களிப்படைந்திருப்பார்).

இவை யாவற்றுக்கும் அப்பால், தகவலுக்கான உரிமைச் சட்டமொன்றை இயற்றுவதற்கான திட்டமான அர்ப்பணிப்பொன்றைப் பொது எதிரணி விஞ்ஞாபனம் உள்ளடக்கியுள்ளது. இது தொடர்பில் பலதரப்பட்ட முன்மொழிவுகள் அண்மைய கடந்த காலத்தில் சுற்றிவந்தன. இவை சிறந்த நோக்கினைக் கொண்டிருந்த போதிலும், இந்த வரைவுகளில் சில மிகவும் மோசமான தரத்தைக் கொண்டிருந்தன. பெரிதுமே உறுப்புரை XIX (கருத்துச் சுதந்திரம் மீது பணியாற்றும் லண்டனைத் தளமாகக் கொண்ட சர்வதேச அரச சார்பற்ற தாபனம்) போன்ற மாதிரிச் சட்டங்களிலிருந்து வெட்டி, ஒட்டுதல் பணிகளையே பிரதிநிதித்துவம் செய்தன. இவை இலங்கையினுள் அத்தகையதொரு சட்டம் கையாள வேண்டிய உண்மையான நடைமுறையிலான மற்றும் கொள்கையிலான சவால்களுக்கு சிறிதளவு தொடர்பினைக் கொண்டிருந்தன அல்லது தொடர்பினைக் கொண்டிருக்கவில்லை. இதற்கு மாறாக, தகவலின் சுதந்திர தொடர்பான சட்டமூலம் (உத்தியோகபூர்வரீதியில், உத்தியோகபூர்வ தகவலுக்கான அடைதல் சட்டமூலம்; என அழைக்கப்பட்டது) இருந்தது. இது 2003இன் போது அப்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் (சட்ட மா அதிபர், அப்போதைய நீதி அமைச்சின் செயலாளர், அப்போதைய உதவி சட்ட வரைஞர்), பத்திரிகை ஆசிரியர் சங்கம், FMM மற்றும் CPA ஆகியவற்றைச் சம்பந்தப்படுத்தும் உயர்நிலையிலான உசாவுகை மற்றும் வாதப் பிரதிவாத நடைமுறையொன்றின் ஊடாக மிகுந்த அக்கறையுடன் கலந்தாயப்பட்டு, கவனமாக வரையப்பட்டது. வரைவு மீது கருத்துரைப்பதற்காக அழைக்கப்பட்ட சர்வதேச நிபுணர்கள் இது ஆகக்கூடுதலான சர்வதேச நியமங்களை மட்டுமல்ல, ஆனால் சில விடயங்கள் தொடர்பில் அவற்றை விஞ்சியிருந்ததாக தமது அவதானத்தை வெளிப்படுத்தினர் (உதாரணமாக, புறநீங்கலின் ஒடுக்கமான விரிவெல்லை, பொதுசன அக்கறைச் சோதனையின் உபயோகம், அதன் சொந்த விருப்பிலான வாசகங்கள் மற்றும் ஆகுசெலவு அற்ற அடைதல் உட்பட அடைதலுக்கான





vernoncorea.wordpress.com



**அரசியலமைப்புப் பேரவையில் பரிந்துரையின் மீது சுதந்திரமான ஊடக ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன், பிறவற்றுள், செயல்படும் இதழியலாளர்கள், சம்பந்தப்பட்ட துறைகளில் உள்ள நூற்கல்வியாளர்கள், உரிமையாளர்கள் மற்றும் தற்போது, புதிய ஊடக; தொழில்புரிவோர் ஆகியோரின் பிரதிநிதித்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.**

*அரச ஊடக நிறுவனமான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்*

வசதிகள்; கடப்பாடுரீதியிலான பாதுகாப்பின் குறுகிய கால மட்டுப்படுத்தல்கள்; வெளிப்படுத்தலின் நோக்கங்களுக்காக பதிவேடுகளின் சட்டபூர்வமான வேறாக்கல் வெளியிடுவதற்கான வேண்டுகோள் இல்லையென்றால் பாதுகாக்கப்பட்ட தகவலைக் கூட கிடைக்கச் செய்தல்; தகவல் அலுவலர்களிலிருந்து அமைச்சர் வரை அலுவலர்களின் விஸ்தாரமான அறிக்கையிடுதல் கடப்பாடுகள்; அத்துடன் பதினேழாவது திருத்த வரைச்சட்டத்தின் கீழ் அரசியல் ரீதியில் தாபிக்கப்பட்ட தகவல் ஆணைக்குழு உட்பட வினைப்படுத்தல் பொறிமுறை). சட்ட வரைஞர் திணைக்களத்தினால் சட்டமூல அமைப்பினுள் இடப்பட்டு, இது 2004 பெப்ரவரியில், விக்ரமசிங்க அமைச்சரவையினதும், அத்துடன் ஜனாதிபதி குமாரதுங்கவினதும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக அதன் பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இது நிறைவேற்றப்படவில்லை. இது வரைவுச் சட்டமூலம் என்பதுடன், புதிய அரசாங்கத்தினால் சட்டவாக்கத்திற்கான அடிப்படையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், மிகவும் சிறிய திருத்தங்களுடன் (உதாரணமாக, அவ்வேளையில் சமாதான நடைமுறை தொடர்பிலான தகவல், இது தற்போது சம்பந்தத்தைக் கொண்டிருக்கவில்லை), ஒரு புதிய ஜனநாயகப் பாதையை எமது நாடு ஆரம்பித்துள்ளதால் அது மிகவும் பொருத்தமான தகவலின் சுதந்திர சட்டமொன்றாக விளங்கும் என்பதை நிரூபிக்கும் என்பதே எனது கருத்தாகும்.

சிறந்த தகவலின் சுதந்திர அதிகாரச்சட்டமொன்றுக்கு மேலதிகமாக, இந்த உரிமை மீள்–வலுவூட்டப்படுவதற்கான இன்னொரு மிகவும் குறிப்பிடத்தக்க வழியுள்ளதுடன், அது அரசியலமைப்பிலான அடித்தளமொன்றில் அதிகாரச்சட்டத்தை பதியவைப்பதாகும். நான் முன்னர் கவனத்திற்கெடுத்தவாறு, பேச்சுக்கும், கருத்துக்கும் மற்றும் வெளியீட்டுக்குமான உரிமையொன்றை மட்டுமே எமது உரிமைகளின் சட்டமூலம் பிரதிபலிப்பதுடன், சில வகைகளைக் கொண்ட தகவலைப் பெறுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட உரிமையொன்றை மீஉயர் நீதிமன்றம் அங்கீகரித்துள்ள போதிலும், தகவலுக்கு அரசியலமைப்பிலான உரிமையொன்றிலிருந்து வெகு தூரத்தில் உள்ளது (உதாரணத்திற்கு, அத்தகையதொரு உரிமையைக் கொண்டுள்ள தென் ஆபிரிக்காவின் வழியில்). மீண்டும் நான் முன்னர் கவனத்திற்கெடுத்தவாறு, உறுப்புரை 14ஆனது வலிதாக்கப்படவில்லை என்பதுடன், எனவே சர்வஜன வாக்குரிமையொன்று இன்றி திருத்தப்படலாம் என்பதுடன், தகவலின் சுதந்திரம் சிறந்த வகையில் பாதுகாக்கப்பட வேண்டுமானால், கருத்துச் சுதந்திரத்தின் விரிவெல்லையினுள் தகவலுக்கான உரிமையை வெளிப்படையாக உள்ளடக்குவதன் மூலம், அல்லது அடிப்படை உரிமைகள் மீதான அத்தியாயத்தில் தனியாக நிற்கும் உரிமையொன்றாக அரசியலமைப்பிலான கீழ்கட்டுமான ஆதரவு வழங்கப்பட வேண்டும் என நான் பலமாக வாதம் புரிவேன்.

முன்னைய முறையாட்சியின் கீழ் இந்த மிகவும் புண்படுத்தப்பட்டதும், தாக்கப்பட்டதுமான உரிமைகளைக் கவனத்திற்கெடுப்பது பற்றி புதிய நிருவாகம் அக்கறையைக் கொண்டிருந்தால், மேலே நான் முன்மொழிந்துள்ளவை நான் அவசியமானவை என நினைக்கும் மிகவும் அடிப்படையிலான நிறுவனரீதியிலான சீர்திருத்தங்களின் சிலவற்றை மட்டுமே உள்ளடக்குகின்றன. இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தை மீள்–தாபிப்பதற்கும், மீள்வலுவூட்டுவதற்கும் அதிகளவு செய்யப்படலாம் என்பதுடன், செய்யப்படவும் வேண்டும். இதனால் உலகத்துடனான திறந்த ஈடுபாட்டின் எமது மாபெரும் பாரம்பரியம் ஆரம்பிக்கப்பட முடியும். ஆனால், இவற்றுடன் நாம் ஆரம்பமொன்றைச் செய்வோமாக. இதனால் கடந்த வாரம் இலங்கையர்கள் வாக்களித்த ஜனநாயகப் புதுப்பித்தல் மாற்ற முடியாததாக விளங்குவதுடன், அதன் சகல வடிவங்களிலான சுதந்திரமான கருத்தும், தெளிவான வெளிப்பாடுகளும் வளம் பெறுவதை ஆரம்பிக்க முடியும். எமது தாற்பரியத்தையும், வாக்குறுதியையும் பாழாக்குவதற்காக அனுமதிக்கப்படுவதற்காக நீண்ட காலத்திற்கு எமது பொது வாழ்வையும், கருத்தாடலையும் ஆட்சிபுரிந்த அச்சம், அறியாமை, அந்நிய நாட்டினர்பால் காட்டப்படும் வெறுப்பு மற்றும் உண்மையில் மூட நம்பிக்கை ஆகியவற்றை நாம் ஒருபோதுமே அனுமதிக்கக் கூடாது.


article.wn.com

சிரேஷ்ட
ஊடகவியலாளர்
**காமினி வியங்கொட**

# மஹிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்கும் போராட்டத்திற்கு ஒப்பாக தற்போதைய போராட்டம் மிகப் பாரதூரமானது.

**ஆட்சியில் இருந்த அரசை நீக்கி இலங்கையில் மீண்டும் ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதற்காக, அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்ட சிவில் சமூகங்களுக்கிடையில் பிரஜைகளின் சக்தி என்ற அமைப்பு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்த அமைப்பின் முக்கிய செயற்பாட்டாளரான தேர்ச்சிபெற்ற இலக்கியத் திறனாய்வாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் செயற்பட்ட திரு. காமினி வியங்கொட அவர்களுடன் நடத்திய நேர்காணல் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

**பிரஜைகளின் சக்தி என்ற அமைப்பின் முக்கிய குறிக்கோள் இலங்கையில் மீண்டும் ஜனநாயகத்தை ஸ்தாபித்து நல்லாட்சியை உருவாக்குவதற்கு பதவியில் இருந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதாகும். தற்போது முதலாவது குறிக்கோள் நிறைவேறியுள்ளது. எனவே பிரஜைகள் சக்தி மேற்கொள்ள வேண்டிய கடமைகள் யாவை?**

நாம் எதிர்பார்த்த எஞ்சியுள்ள நடவடிக்கைகளை வெற்றிகரமாக அமுலாக்கும் பணியை இங்கிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. தற்போது 100 நாள் வேலைத்திட்டம் எமக்கிருக்கின்றது. இதனை நாம் முன் கூட்டியே அறிந்திருந்தோம். இந்த நிகழ்ச்சித் திட்டம் மீது எமக்கு நம்பிக்கை இருந்தது. இந்த நம்பிக்கையை நாம் தொடர்ந்து பேண வேண்டும். ஆகவே 100 நாள் நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக அமுலாக்குவதாயின் சகல வழி வகைகளிலும் நாம் பங்களிப்புச் செய்ய வேண்டும். ஏன் அவ்வாறு கூறுகிறோம். 100 நாள் வேலைத்திட்டம் நீண்டகால, நிலைபேறான, காலத்துக்கு உகந்த அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படையாக






www.colombogazette.com

**100 நாள் வேலைத்திட்டம் நீண்டகால, நிலைபேறான, காலத்துக்கு உகந்த அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படையாக அமைகிறது. ராஜபக்ஷ அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்தது போலவே 100 நாள் நிகழ்ச்சித் திட்டத்தையும் நாம் வெற்றிகரமாக அமுலாக்க வேண்டும். பிரஜைகளினுடைய சக்தி இவற்றை அமுல்படுத்துவதற்கே எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க எண்ணியுள்ளது.**

*நீதியான சமூகத்திற்காக*

அமைகிறது. ராஜபக்ஷ அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்தது போலவே 100 நாள் நிகழ்ச்சித் திட்டத்தையும் நாம் வெற்றிகரமாக அமுலாக்க வேண்டும். பிரஜைகளினுடைய சக்தி இவற்றை அமுல்படுத்துவதற்கே எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க எண்ணியுள்ளது.

**ஒரு மாற்றத்தை மேற்கொள்வதற்கு கட்டமைப்பில் அடிப்படை மாற்றத்திற்குத் தேவையான விடயங்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபித்து 100 நாட்கள் கடந்த பின்னர் சிவில் சமூகத்தின் கடமைகள் பூர்த்தியாகுமா?**

இல்லை, இதற்கு முன்னரும் இந்த ஆணைக்குழுக்கள் இருந்ததை நாம் அறிவோம். அந்த ஆணைக்குழுக்கள் திசை திருப்பப்பட்டதையும் நாம் மறந்துவிடவில்லை. 1978 இல் அரசியலமைப்பு இருந்ததை நாம் அறிவோம். அரசியலமைப்பிற்கான 18வது திருத்தத்தின் மூலம் அவை திசை திருப்பப்பட்டன. அதாவது இருந்த நிலமையை விட மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டது. இந்த அபாய வாய்ப்பு சகல சந்தர்ப்பங்களிலும் இருக்கின்றன. எனவே ஒரு சிவில் சமூக இயக்கம் என்ற வகையில், சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டாலும், நாம் எப்போதும் விழிப்பாகவே செயற்பட வேண்டியிருக்கிறது. அதாவது ஓர் அறிவுபூர்வமான இயக்கமாகவே நாம் செயற்பட வேண்டும். ஏற்படக்கூடிய சகல மாற்றங்களையும் நாம் கவனமாக அவதானிக்க வேண்டும். நாம் எதிர்பார்க்கும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் வரை எமக்கு விழிப்புணர்வு இன்றியமையாதது. இந்த கலாசாரமே முக்கியமானது. நிறுவனங்களை அமைத்த ஒரே காரணத்திற்காக கலாசாரம் உருவாக்கப்படுவதில்லை. அந்த நிறுவனங்கள் ஏதோ ஒரு வகையில் நிலைபேறானதாக அமைய வேண்டும். வெறுமனே பெயரளவில் நிறுவனங்களை அமைப்பது மூலம் மாத்திரம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. இவற்றில் ஏற்கனவே குறிப்பிட்ட பொதுவான அரசியல் கலாசாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்கு ஓர் அரசியல் சூழமைவு தேவைப்படுகிறது. அந்த சூழமைவை பல்வேறு வகையில் கட்டியெழுப்ப முடியும். மக்களுக்கு அறிவூட்டுதல், நாம் கலந்துரையாடிய விடயங்களைப் பற்றி மக்கள் மத்தியில் ஓர் உரையாடலை ஆரம்பித்தல். உதாரணமாக நல்லாட்சி என்றால் என்ன ? ஜனநாயகம் என்றால் என்ன? தேர்தல் என்றால் என்ன? சுயாதிபத்தியம் என்றால் என்ன? போன்ற விடயங்களை பற்றிய ஒரு பொதுக் கலந்துரையாடல் அவசியம். ஆகவே இந்தக் கலந்துரையாடலோடு மேற்கூறிய நிறுவனங்களை ஒன்றிணைக்க வேண்டும். இது ஓர் அம்சம் மறுபுறம் அரசியலமைப்பிற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும். அப்போது பல்வேறு அச்சுறுத்தல்கள் நீங்கும். மறுபுறம் சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். சமூகத்தில் அமைதியான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட வேண்டும். பிரஜைகளின் சக்தி என்ற இந்தக் கலந்துரையாடலை நேரடியாகத் தொடர வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் தேவைப்படும். அது 100 நாட்களாகவோ ஓராண்டாகவோ அல்லது இரண்டு ஆண்டுகளாகவோ மட்டுப்படுத்த முடியாது.

எனது நம்பிக்கையின்படி ஜனநாயக ரீதியான நடைமுறை ஏற்பட வேண்டுமாயின் குறைந்தபட்சம் 20 ஆண்டுகளாவது இப்பயிற்சியை நாம் தொடர வேண்டும். இது தான் எமக்கு முன்னே உள்ள சவால். அப்போது தான் நான் ஏற்படுத்திய மாற்றம். பொருள் பொதிந்ததாக அமையும். ஆகவே எதிர்வரும் இரண்டு தசாப்த காலத்திலாவது ஒரு சமூகம் என்ற ரீதியில் நான் அறிவூட்டப்பட்டு நேரடியாகவே இச்செயற்பாட்டில் நாம் பங்கேற்க வேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பிரஜைகளின் சக்தியைப் போலவே வேறு சிவில் சமூக அமைப்புக்களும் விசேட பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆகவே அவர்கள் விடுமுறை எடுக்க முடியாது. சிவில் சமூக இயக்கம் அவ்வாறாக விடுமுறை பெறவும் முடியாது. பொதுமக்கள் விடுமுறை எடுக்கவும் முடியாது. இந்த இரு பகுதியினரும் விடுமுறை பெற்றால் மீளவும் அச்சுறுத்தல் ஏற்படலாம். அதாவது முன்னர் அமுலில் இருந்த பழைய முறைமைக்கு நாங்கள் மீண்டும் செல்ல வேண்டி வரும். ஏனெனில் எமது அரசியல்வாதிகள் மீது மாத்திரம் நாம் முழு நம்பிக்கையையும் வைக்க முடியாது. அரசியல்வாதிகள் தமது நிர்வாக அரச ஆட்சி என்பவற்றை முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கும் அதேவேளை அவை சரியான முறையில் செயற்படுகின்றதா என்பதை காவல் நாய்களின் பாத்திரமேற்று நாமே நடைமுறைப்படுத்த வேண்டும். சிவில் சமூகங்களின் ஊடாகவே இதனைச் செயற்படுத்த முடியும். தற்போது நிலவும் பொது அபிலாஷை இதுவாகும்.

**ஊழல் இலஞ்சம் மோசடி மற்றும் குற்றச் செயல்களை தேடிக் கண்டறியும் போது, அவற்றோடு தொடர்புடைய அரசியல்வாதிகள், இது தானா நல்லாட்சி என்று வினவுகின்றனர். மறுசீரமைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாயின் மோசடிகளைத் தேடுதல் அதற்கு ஈடுசெய்ய வேண்டும் என்ற கருத்தாகும் ?**

www.icis.com



**பிரஜைகளின் சக்தி என்ற இந்தக் கலந்துரையாடலை ...ாடியாகத் தொடர வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். ...கு ஒரு குறிப்பிட்ட காலம் தேவைப்படும். அது ...களாகவோ ஓராண்டாகவோ அல்லது இரண்டு ...களாகவோ மட்டுப்படுத்த முடியாது.**

# பிரஜைகள் சக்தி

கடந்த சுமார் 20 ஆண்டுகளாக இந்த நாட்டில் பாரிய அளவில் இடம்பெற்ற இலஞ்ச ஊழல் மோசடிகளை கண்டறிவதற்காகவே பிரஜைகளின் சக்தி நிபந்தனையின்றி ஒத்துழைப்பு வழங்கியது. இக்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் சட்டத்தின் முன் ஆஜர்படுத்தப்பட வேண்டும். இலங்கையின் அரசியல் கலாசாரத்திற்கு அமைய நாம் அனைத்துக் குற்றவாளிகளையும் புலனாய்வு செய்தால், இன்று இலங்கை அரசியலில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகளில் 95 சதவீதமானவரை சிறைகளில் அடைக்க வேண்டி வரும். எனவே, அத்தகைய ஒரு நடவடிக்கை நடைமுறைச் சாத்தியமானது என நான் நினைக்கவில்லை. எனவே ஓர் முன்னுதாரணமாக இருக்கக் கூடிய முக்கிய சம்பவங்களை ஞாபகமூட்டுவதற்கும் ஒரு சில நபர்களை அம்பலப்படுத்தியும், அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தியும் நாம் செயற்பட வேண்டும். உதாரணமாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நியமிக்கப்பட்டவுடன் ஓர் தலைமை ஆசிரியருக்கு தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு பிள்ளையை பாடசாலையில் சேர்ப்பதற்கு சில பீங்கான்களைப் பரிசாகப் பெற்றதே அவர் செய்த தவறாகும். எனவே நாம் மறுபக்கத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். நாம் நெத்தலிகளுக்கு தண்டனை விதிப்பதிலிருந்து ஆரம்பிக்காமல் சுறாக்களுக்கு தண்டனை விதிப்பதிலிருந்தே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இப்படியான 10 பண்ணிரண்டு சுறாக்களையேனும் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும். இவ்வாறாகத் தான் நாம் முன்னுதாரணமாக நடந்துகொள்ள முடியும்.

எனவே, மாறும் நிலைமைகளின் கீழ் இவற்றை எவ்வளவு தூரம் வெற்றிகரமாக செயற்படுத்த முடியும் எனக் கூற முடியாது. இது ஓரளவு வெற்றிகரமானதாக அமையவும் முடியும். ஏனெனில் இந்த விடயங்களை அமுல்படுத்தாமல் இந்த ஆட்சி முன்னகர முடியாது. எனவே ஓரளவேனும். இது வெற்றிகரமாக அமையும். மக்களின் பாராட்டைப் பெறக்கூடிய நடவடிக்கைகளை இந்த நூறு நாட்களில் செய்யாவிட்டால் 100 நாட்களின் பின்னர் நாம் எவ்வாறு தேர்தலை எதிர்நோக்க முடியும். அடுத்த பாராளுமன்றத் தேர்தலை எதிர்நோக்குவதாயின், மக்களைத் திருப்திப்படுத்தக்கூடிய விடயங்களை செய்துகாட்ட வேண்டும். ஒரு புறம் மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கும் அதேவேளை மறுபுறம் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் வேண்டி நின்ற முக்கிய விடயத்தை, அதாவது நாகரீகமான, வகைப்பொறுப்புக் கூறக்கூடிய சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டக்கூடிய நீதித் துறையின் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்யக்கூடிய விடயங்களை அமுலாக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் இன்றைய அரசாங்கம் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது. மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி பீடம் ஏறுவதை தடுக்க வேண்டும்.

எனவே, ஊழலுக்கும் வீண் விரயங்களுக்கும் அநீதிக்கும் எதிராக அரசியல் மற்றும் சமூக இயக்கம் இருக்க வேண்டும் என்பது எனது நம்பிக்கையாகும். இக்கோரிக்கைக்கு செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆட்சியாளருக்கு உண்டு. எனவே இந்த 100 நாட்களுக்குள் குறிப்பிட்டதொரு முன்னுதாரணத்தை இந்த ஆட்சியினர் வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். குற்றம் செய்த அனைவரையும் சிறையில் தள்ளுவதன் மூலம் நடைமுறையில் அதனைச் செய்யவும் முடியாது. குறிப்பாக இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் இது சாத்தியம் இல்லை. கடந்த 40 வருடங்களாக சீரழிந்த நிலைமையே எமது நாட்டில் தொடர்கிறது. எனவே உடனடியாக முழுத் தூய்மையை அமுல்படுத்த முடியாது. பலர் சட்டத்தின் ஓட்டைகளில் இருந்து தப்பிச் செல்வார்கள். ஆனால் நுழைய முடியாத பல கள்ளச் சுறாக்கள் இருக்கின்றன. அந்தச் சுறாக்களைச் சுற்றி வளைக்க வேண்டும். இதனை சட்டத்தின் மூலமே அமுல்படுத்த வேண்டும். அதனை பொதுமக்களுக்கு ஒப்படைக்க வேண்டும். உதாரணமாக சஜித் வாஸ் குணரத்னவின் வீட்டுக்குச் சென்று வீட்டைச் சேதமாக்கியுள்ளனர். இப்படியான நடவடிக்கைகளைச் ..................

குற்றம் செய்திருப்பின் அவரை அந்நபரை சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் சொத்துக்களை அழிப்பதோ அந்நபரை இம்சிப்பதோ எமது முக்கிய குறிக்கோளை நிறைவேற்றமாட்டாது. புதிய அரசியல் கலாசாரத்தின் மூலம் நாம் இப்படியான நடவடிக்கைகளை எதிர்பார்க்கவில்லை.

**எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது பிரஜைகள் சக்தி அமைப்பின் வகிபாகம் யாது ?**

இந்த நூறு நாட்களில் இவர்கள் எவ்வாறு செயற்படப் போகின்றனர் என்பதிலேயே இது தீர்மானிக்கப்படுகின்றது. இந்த நூறு நாட்களில் ஏற்கனவே உறுதியளித்தபடி அவர்கள் நிறைவேற்றினால் கட்டாயமாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரஜைகள் சக்தி அமைப்பு அவர்களுக்கு ஆதரவு நல்கும். அவ்வாறு இல்லாவிட்டால் பிரஜைகள் சக்தி பாராளுமன்றத் தேர்தலில் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் மீளச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் எவ்வாறாயினும் கடந்த அரசாங்கத்தின் கள்வர்களை மீண்டும் அதிகாரத்திற்குக் கொண்டு வர பிரஜைகள் சக்தி செயற்படமாட்டாது. ஏனெனில் 3 மாத காலத்திற்குள் அவர்கள் ஒரு போதும் திருந்தமாட்டார்கள். அதே சமயம் ஒரு மனிதன் தவறு இழைத்த ஒரே





/www.rivira.lk



**ஆனால் எவ்வாறாயினும் கடந்த அரசாங்கத்தின் கள்வர்களை மீண்டும் அதிகாரத்திற்குக் கொண்டு வர பிரஜைகள் சக்தி செயற்படமாட்டாது. ஏனெனில் 3 மாத காலத்திற்குள் அவர்கள் ஒரு போதும் திருந்தமாட்டார்கள்.**

*ஊழலுக்கு எதிரான ஊடகங்கள்*

குற்றத்திற்காக அவனது வாழ்நாள் முழுவதும் முத்திரை குத்தப்பட வேண்டும் என நாம் கருதவில்லை. ஆனால் மனிதர்கள் செய்த குற்றத்தை திருத்தி புதிய நிலைமைகளின் கீழ் வாழ்வதற்கு குறிப்பிட்ட காலம் தேவைப்படும். 3 மாத காலத்திற்குள் ஒரு போதும் திருந்த முடியாது. ஆகவே மஹிந்த ராஜபக்ஷ உட்பட அந்த இனவாதிகள், மதவாதிகள் மற்றும் கோத்திரவாதிகளை மீண்டும் அதிகாரத்தில் அமர்த்துவதற்கு பிரஜைகள் சக்தி ஒரு போதும் இடமளிக்காது. எனவே தற்போதைய ஆட்சியாளர்களைப் பற்றி விமர்சன ரீதியான ஒரு நிலைப்பாட்டை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இந்த 100 நாள் வேலைத்திட்டத்தின் மூலமே எமது ஒத்துழைப்பு எவ்வாறு அமையும் என்பது தீர்மானிக்கப்படும்.

**குறிப்பாக அரசியல் கலாசாரம் சீரழிந்துள்ள இன்றைய காலகட்டத்தில் ஊடகத்திற்கு உள்ள பொறுப்பு யாது ?**

இங்கு ஊடகங்களுக்கு விசேட கடமை உண்டு. எனவே அவர்கள் நிரந்தரமாக இவ்விடயங்களில் இடையீடு செய்ய வேண்டும். இந்த விடயங்களை நடைமுறை மூலமே நிரூபித்துக் காட்ட வேண்டும். கடந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களுக்கு ஊடகங்கள் பொறுப்புக் கூற வேண்டும். குறிப்பாக இன்று உருவாகியிருக்கும் ஒழுக்க நெறிமுறையற்ற நடவடிக்கைகளுக்கு ஊடகங்களும் பங்களிப்புச் செய்துள்ளன. மேர்வின் சில்வாவை ஒரு வீரனாக்கியது ஊடகங்களே. மேர்வின் சில்வா எவ்வளவு தீமைகளைச் செய்யும் அளவிற்கு ஊடகங்கள் அந்நபரை உயர்த்தியது. காலியின் முத்துஹெட்டிகம போன்ற ஒரு நபர் ஒரு குண்டன் அலைந்து திரியும் சண்டியன். கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபடும் அளவிற்கு அந்நபர்கள் ஊடகங்களினால் வீரர்களாக கருதப்பட்டனர். ஊடகங்களினாலேயே இவை ஏற்பட்டன. ஒரு தீய சம்பவம் இடம்பெறும் வரை ஊடகங்கள் அவதானித்துக் கொண்டிருக்கும். அந்த இடத்திற்குச் சென்று அவர்கள் மக்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். நல்ல நடவடிக்கைகள் ஊடகங்களில் அறிக்கையிடப்படுவதில்லை. தீயவர்களின் முகங்களையே பத்திரிகைகளில் காண முடிந்தது. தொலைக்காட்சியில் கூடுதலான பார்வையாளர்களை இவர்கள் தான் கவர்ந்திலுத்தார்கள். அடுத்து இச்சம்பவங்களை அறிக்கையிடுவது மாத்திரமல்ல. அதன் பின்பு அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஊடகங்கள் சந்தர்ப்பம் வழங்கும். அவர்கள் தம்மை தயாரிப்பதற்கும் அவர்களின் குற்றமற்ற தன்மையை ஊடகங்கள் வாயிலாக எடுத்துக் கூறுவதற்கும். அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இதன் காரணமாகவே இத்தகைய தீய மனிதர்கள் இலங்கை அரசியலில் முன்னணிப் பாத்திரம் வகித்தனர். இற்றைக்கு 7 ஆண்டுகளுக்கு முன்னர் முத்துஹெட்டிகம என்ற நபரை நாம் அறிந்திருக்கவில்லை. அந்நபர் வெறுமனே பிரதேச மட்டத்தின் ஓர் அரசியல்வாதி மாத்திரமே தற்போது இத்தீய நபர் தேசிய அரசியலில் ஒரு பெரும்புள்ளியாவார். அது மாத்திரமல்லாமல் அமைச்சரவைக்கும் வந்து போகின்றார். பிரதி அமைச்சர் என்ற அந்தஸ்திலேயே வருகிறார். ஊடகங்களே இத்தீய நபரை இந்நிலைக்கு முன் தள்ளியது.

எனவே இந்த ஊடகக் கலாசாரம் முழுமையாக மாற்றப்பட வேண்டும். ஊடகங்களை வெறும் விற்பனைப் பண்டங்களாக மாத்திரம் நாம் கருத முடியாது. ஒரு செய்தி அறிக்கையிடப்படும் போது குறிப்பிட்ட தர நியமங்களுக்கு அமையவே அவை அறிக்கையிடல் வேண்டும். தமது பத்திரிகையை அல்லது வேறொரு பொருளை விற்பனை செய்வதற்கு மேலதிகமாக சாதாரண பிரஜைகளுக்கு இச்செய்தியின் மூலம் எத்தகைய முன்னுதாரணம் கிடைக்கின்றது என்பதும் முக்கியத்துவம் வாய்ந்தது. உதாரணமாக ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டால் அவளின் உருவப்படத்தைக் காட்டுவது ஊடக தர்மமாகமாட்டாது. ஆனால் முத்துஹெட்டிகமவின் பொதுச் சொத்துக்களை அழிக்கும் போது முதலாவது பக்கத்தில் அந்நபரின் படம் பிரசுரிக்கப்படுகிறது. அந்நபருடைய கூற்றுக்கள் பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்படுகின்றன. ஆகவே பாதிக்கப்பட்ட ஒரு பெண் தொடர்பாக ஒழுக்க நெறிமுறைகளை கடைப்பிடிக்கும் ஊடகம், இங்கு அரசியல்வாதி தொடர்பாக இத்தகைய ஒழுக்க நெறிமுறைகளின் தர நியமங்களை பின்பற்ற வேண்டும். ஆகவே ஊடகங்களின் இத்தவறான வழிமுறையை மாற்றியமைக்க வேண்டும். இத்தகைய சமூக விரோதிகளுக்கு பிரசித்தம் கொடுக்கக் கூடாது. இவர்களுடைய தவறுகளை விமர்சிக்க வேண்டும். ஆனால் பிரசித்தம் வழங்கக் கூடாது. அதே சமயம் இச்சமூக விரோதிகளை குற்றமற்றவர்களாக்குவதற்கு நாம் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது. இந்த ஊடக இடைவெளி மாற்றியமைக்கப்பட வேண்டும்.

எனவே, முன்னர் கேட்ட கேள்வி அதாவது அரசியல் கலாசாரம் என்பது ஒரு நாளிலோ ஒரு மாதத்திலோ உருவாக்கப்படமாட்டாது. அது ஒரு நடைமுறை விடயம். மனிர்களுடைய நடத்தை அது மனிதர்களின் மனப்பாங்கின் வெளிப்பாடு. எனவே இக்கண்ணோட்டங்கள் சாதகமான முறையில் மேம்படுத்தப்பட வேண்டும். அநீதியை சகிக்கமாட்டாத நிலைக்கு மனித சமூகத்தை பயிற்றுவிக்க வேண்டும். நான் ஒரு நல்ல ஒரு உதாரணத்தைக் கூறுகின்றேன். பிரெஞ்சுப் பத்திரிகை ஒன்றின் நான்கு கேலிச்

www.col3negshiran.info



**கடந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களுக்கு ஊடகங்கள் பொறுப்புக் கூற வேண்டும். குறிப்பாக இன்று உருவாகியிருக்கும் ஒழுக்க நெறிமுறையற்ற நடவடிக்கைகளுக்கு ஊடகங்களும் பங்களிப்புச் செய்துள்ளன. மேர்வின் சில்வாவை ஒரு வீரனாக்கியது ஊடகங்களே. மேர்வின் சில்வா எவ்வளவு தீமைகளைச் செய்யும் அளவிற்கு ஊடகங்கள் அந்நபரை உயர்த்தியது.**

*முன்னை நாள் அமைச்சர் திரு. மர்வின் சில்வா*

சித்திரம் வரைவோர் அல்கைடா அமைப்பினால் படுகொலை செய்யப்பட்டதை நாம் அறிவோம். முகமது நபி அவர்களின் கேலிச் சித்திரங்களை வரைந்தமை இப்படுகொலையின் போது மேற்படி ஊடகவியலாளர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றமாகும். இந்த 4பேர் உட்பட மேலும் ஒரு சிலர் அதன் பின்னர் இக்குற்றச்சாட்டிற்கு இன்னும் ஒரு சிலர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இதனை எதிர்த்து 13 இலட்சம் மக்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்தனர். பரிஸ் நகரத்தில் மாத்திரம் 30 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பிரான்ஸின் பல்வேறு நகரங்களில் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். அரச தலைவர்கள் பலர் இந்த ஊடகவியலாளர்களின் இறுதிக் கிரியைகளின் போது பங்குபற்றினர். பிரித்தானிய பிரதமர், ஜேர்மனியின் அரசத் தலைவர் போன்ற பன்னாட்டுத் தலைவர்கள் பங்குபற்றினார்கள். எமது நாட்டில் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட போது எத்தனை பேர் வீதியில் இறங்கி மறியற் போராட்டம் செய்தனர். கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் 100 அல்லது 200 பேர் மரியற் போராட்டம் செய்திருப்பார்கள். அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் கோட்டைப் புகையிரத நிலையம் முன்னே ஆர்ப்பாட்டம் நடந்தது. இதோ பாருங்கள் இரண்டு ஊடக கலாசாரங்களின் வேறுபாட்டை முன்னைய கலாசாரத்தின் படி மக்கள் இத்தகைய கொடுமைகளை சகிக்கமாட்டார்கள். அவர்கள் இலட்சக் கணக்கில் தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் போது, எமது நாட்டில் 50 அல்லது 100 பேர் கோட்டை புகையிரத நிலையம் முன்னே லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். அங்கு கலாசாரம் ஒன்று பஸ் வண்டிகளில் மக்கள் அழைத்து வரப்படமாட்டார்கள். கலாசாரம் என்பது அத்தகைய ஒன்று. அந்தக் கலாசாரத்தை நாம் உருவாக்கிக் கொள்ளவேண்டும். ஓர் ஊடகவியலாளர் தாக்கப்படும் போது இலட்சக் கணக்கில் மக்கள் தெருவில் இறங்க வேண்டும். இதுவே ஜனநாயகக் கலாசாரமாகும். அதனை உபதேசம் செய்வது மூலம் மாத்திரம் மாற்றியமைக்க முடியாது. அது மக்கள் மனதில் இயல்பாகவே ஏற்பட வேண்டும். தனிநபர் முன்னேற வேண்டும். தனிநபர் அறிவுபூர்வமாக செயற்பட வேண்டும். அநீதியிலிருந்து நீதியை வேறுபடுத்திக் காண வேண்டும். அநீதிக்கு எதிராக நீதிக்குச் சார்பாக தோற்றும் பண்பாடு இருத்தல் வேண்டும். இது ஒரு மனோபாவம். சமூகத்தில் மக்கள் மத்தியில் இது இருத்தல் வேண்டும். நீண்டகால செயற்பாட்டின் மூலமே இது உருவாக்கப்படும். இந்த மனோபாவம் ஏற்படுவதற்கு குறைந்தபட்சம் இரண்டு தசாப்தங்களாவது தேவை ஒரு முறைமையை நான் உருவாக்கியதன் பின்பு அந்த வழிமுறையை நாம் பின்பற்ற வேண்டும். நாம் இது வரை காலம் ஒரு முறையின்றியே செயற்பட்டோம். வேறு வகையில் கூறுவதாயின் ஒரு வழிமுறையின்றி இதுபற்றி ஆர்வம் செலுத்தும் ஒரு சிலர் மாத்திரம் கலந்துரையாடினர். இதன் பெறுபேறு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டது. இப்போது ஒரு வழிமுறையை தயாரிப்பதற்கு எமக்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. ஆகவே இந்த வழிமுறைகளைத் தயாரித்த பின்னர் முன்னரை விட தற்போது சிறந்த முறையில் செயற்பட முடியும் என நான் கருதுகின்றேன். இத்தகைய முன்னுதாரணத்தை உருவாக்குவதே பிரஜைகள் சக்தியின் அடிப்படை குறிக்கோளாகும்.

**இது தொடர்பாக கல்வித் துறையிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்புக்கள் யாவை ?**

வெறுமனே பாடசாலைகளில் பரீட்சைகளில் சித்தியடைவது கல்வி எனக் கருத முடியாது. அல்லது பல்கலைக் கழகங்கள் மூலம் பட்டதாரிச் சான்றிதழ்களை வழங்கி வெளியேற்றுவது அல்ல. அதற்கு அப்பால் செல்ல வேண்டும். அதன் மூலமும் பிரஜைகளினுடைய வகிபாத்திரமும் மாணவ மாணவியரிடையே உருவாக்க வேண்டும். உதாரணமாக பல்கலைக் கழக மாணவர்கள் தமது பிரச்சினைகளுக்கு அப்பால் பொதுப் பிரச்சினைகளின் போது வெளியே வந்து போராட்டங்களில் ஈடுபடுவது இல்லை. பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி வசதிகளில் குறைபாடுகள் ஏற்படும் போது ஆர்ப்பாட்டம் செய்வார்கள். அல்லது அவர்களின் பரீட்சைகள் தொடர்பான ஒரு பிரச்சினையின் போது ஆர்ப்பாட்டம் செய்வார்கள். அவர்களுடைய வசதிகளில் குறைபாடு கண்டால் தெருவில் இறங்கி போராட்டம் நடத்துவார்கள். ஆகால் சமூகத்தில் வேறு சம்பவங்கள் இடம்பெறும் போது அவர்கள் தெருவில் இறங்கிப் பேராட மாட்டார்கள். வைத்தியர்களின் பிரச்சினைகளுக்காக மாத்திரமே வீதியில் இறங்கிப் போராடுவார்கள். சட்டத் தரணிகள் சட்டத் தரணிகளின் பிரச்சனைகளுக்காக மாத்திரமே போராடுவார்கள் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட வேண்டும். ஒட்டுமொத்தமான சமூகம் என்ற வகையில் இதனைக் கிரகித்து சமூகம் என்ற வகையில் சமூகத்தின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் போராடுவதற்குத் தயாராகவுள்ளனர். உதாரணமாக ஒரு ஊடகவியலாளரின் படுகொலை ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் உரித்தானது அல்ல என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். இந்த நாட்டில் வாழும் வைத்தியர்கள், சட்டத்தரணிகள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அனைவரும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே இது ஊடகவியலாளர்களின் பிரச்சினை மாத்திரம் அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். எனவே பிரஜைகளின் பொறுப்புப் பற்றி பிரஜைகளின் சிந்தனையை ஸ்தாபித்தலே அத்தியாவசியமாகும்.





www.thenextweb.com




**எனவே இந்த ஊடகக் கலாசாரம் முழுமையாக மாற்றப்பட வேண்டும். ஊடகங்களை வெறும் விற்பனைப் பண்டங்களாக மாத்திரம் நாம் கருத முடியாது. ஒரு செய்தி அறிக்கையிடப்படும் போது குறிப்பிட்ட தர நியமங்களுக்கு அமையவே அவை அறிக்கையிடல் வேண்டும்.**

*பக்கச் சார்பற்ற ஊடகச் செயற்பணியின் சின்னம் பீ.பீ.சீ*

எனவே பிரஜைகளின் பொறுப்புப் பற்றிய மேற்படி சிந்தனையை ஸ்தாபித்தல் அத்தியாவசியமாகும். இந்தக் கலாசாரத்தை நாம் உருவாக்க வேண்டும். கல்வி இங்கு முக்கிய பாத்திரத்தை வகிக்கிறது. கல்வியின் மூலம் பரீட்சைகளில் சித்தியடையும் மணனம் செய்த கிளிகளை மாத்திரம் உருவாக்காமல் சமூகப் பொறுப்பு பற்றி உணர்வு பூர்வமான ஓர் பரம்பரையை நாம் உருவாக்க வேண்டும். ஆகவே முன்னைய பரம்பரையை விட எதிர்நோக்கக்கூடிய சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவர்களையே நாம் உருவாக்க வேண்டும். எனவே கல்வி மாத்திரமல்ல. சகல துறைகளிலும் இந்த மறுசீரமைப்பு உருவாக்கப்பட வேண்டும். பௌதீக மாற்றம் மாத்திரமல்ல உளவியல் ரீதியாகவும் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். எனவே இது படிப்படியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த நிறுவனங்களை ஏற்படுத்துவதன் மூலம் அதற்கு ஒரு பாரிய சக்தி பிறக்கும்.

**நிறுவனங்களை அமைத்த பின்னர் அவற்றை உறுதிப்படுத்துவதற்கு பொறுத்தமான மனித முதலீடுகள் ஓர் பிரச்சினை அல்லவா?**

இந்த நாட்டில் மனித வளங்கள் இருக்கின்றன. மிகவும் கௌரவமான ஒரு பிரிவினர் அங்குள்ளனர். இந்தச் சமூக அமைப்பின் ஊழல்கள் காரணமாக நல்ல மனிதர்கள் முன்வரத் தயங்குகின்றனர். எனவே அவர்கள் பின்வாங்குகின்றனர். இந்த ஊழல் தன்மையை இல்லாதொழித்தால், அந்த மனிதர்களின் பங்களிப்பை இவற்றிற்குப் பெற முடியும். இன்று அந்த ஊழல் தன்மை காரணமாக அவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வராமல் இருக்கின்றார்கள். ஊழல்வாதிகள் தோன்றி அந்த இடைவெளியை நிரப்புகின்றார்கள். இவ்வாறே சம்பவங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவற்றிற்கு உடனடியான தீர்வுகள் இல்லை. எனவே தான் மேற்படி ஆணைக்குழுக்கள் உள்ளடங்கிய கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என நான் கூறுகின்றேன். இந்த 100 நாட்களின் இறுதியில் இதன் செல்நெறியை அடையாளம் காண முடியும். துரதிஷ்டவசமாக அது சாதகமான திசையில் செல்லாவிட்டால் மீண்டும் ஒரு நிலைப்பாட்டில் இருந்து இந்தப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டி வரும். அதாவது இந்தப் பயணத்தின் தொடர்ச்சியாக இல்லாமல் புதிய பயணத்தை ஆரம்பிக்க நேரிடலாம். ஆனால் இதன் தொடர்ச்சியாக பயணிக்க முடியும் என இப்போதைக்கு நம்புகிறேன்.

**இந்தச் சீரழிவிற்கு எமது நீதித் துறையும் பொறுப்புக்கூற வேண்டும் அல்லவா ?**

நீதிச் சேவை ஆணைக்குழுவை வலுவூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது அதன் போது உயர் நீதிமன்ற – முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஜனாதிபதியினால் நியமனம் பெறமாட்டார்கள் அவர்கள் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமனம் பெறுவர். இவ்வாறு நடைபெறும் போது அது சுயாதீன ஆணைக்குழுவாக அமையும். நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமனம் பெறுவோர் எவருக்கும் கடப்பாடு கொண்டவர்களாக செயற்பட வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கோ, ஜனாதிபதிக்கோ, ஏதாவது அரசியற் கட்சிக்கோ அவர்கள் கடப்பாடு கொள்ளாமல் சுயாதீனமாக இயங்க முடியும். இத்தகைய நீதித் துறையே எமக்குத் தேவை. அப்போது அவர்கள் சட்டத்திற்கு மாத்திரம் வகைப்பொறுப்புக் கூறுவர். இத்தகைய நீதித்துறையே எமக்கு அவசியமாகிறது. தற்போதைய நீதித்துறையை நாம் சுத்திகரிக்க வேண்டும். முன்னர் பிரதம நீதியரசராக பதவி வகித்த மொஹான் பீரிஸ் பல ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான சான்றாதாரங்கள் உண்டு. இந்த மனிதனுக்கு சாதாரண ஒரு பிரஜைக்குள்ள வெட்கமும் கிடையாது. வருடப் பிறப்பின் போது பால் சோறு உண்பதற்கு இந்த மனிதன் ஜனாதிபதியின் வீட்டிற்குச் சென்றார். ஜனாதிபதியின் பிள்ளைகளின் பிறந்த நாள் விழாக்களுக்கும் இவர் சென்றார். இப்படியான ஒரு மனிதன் ஒரு நாட்டில் எவ்வாறு பிரதம நீதியரசராகக் கடமையாற்ற முடியும். எவ்வாறு இத்தகைய நபர் ஒரு நாட்டில் நீதியை நிலைநாட்ட முடியும். எனவே இப்படியான நபர்கள் உடனடியாக பதவியிலிருந்து நீக்கப்படுவது நியாயமே. இந்த நபர் சட்டத்திற்கு முரணான முறையிலேயே நியமிக்கப்பட்டார். எனவே சட்டத்திற்கு முரணான வகையில் இந்நபரை பதவி நீக்கம் செய்யவும் முடியும். இப்படியான நபர்களை பதவியிலிருந்து நீக்குவதன் மூலமே நாட்டிற்கு ஓர் முன்னுதாரணத்தை வழங்க முடியும். அது மாத்திரமல்ல உயர் நீதிமன்றத்தில் கடந்த காலங்களில் இந்நபரின் நடத்தை பற்றி தனியான ஓர் புலனாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். சட்டத்திற்கு முரணாக இந்நபர் வழங்கிய தீர்ப்புக்கள் நாகரீகமான நாடுகளிலாயின் இவர் சிறை செல்வதற்கு போதிய ஆதாரங்களாகும். இப்படியான பாரதூரமான மாற்றம் எல்லாத்துறைகளிலும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பிரஜைகளின் பணிகள் முன்பு இருந்ததை விட தற்போது மிகப் பாரதூரமானவை மஹிந்த ராஜபக்ஷ வை தோல்வியுறச் செய்த போராட்டத்தை விட மஹிந்த ராஜபக்ஷ வினால் உருவாக்கப்பட்ட கலாசாரத்தை மாற்றுவது மிகக் கடினம்.

நேர்காணல் – **மஹிந்த ரத்னாயக்க**



சட்டத்தரணி
**பவாணி ஃபொன்சேக்கா**



en.wikipedia.org

*உயர் நீதிமன்றத் தொகுதி - கொழும்பு*

# இலங்கையில் உண்மை மற்றும் நீதிக்கான வரைபடத்திற்கு **ஒருசில கருத்துக்கள்....**

புதிய ஆண்டு இலங்கையில் குறிப்பிட்ட மாற்றங்களை ஏற்படுத்திய வருடம் எனக் கூறலாம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது அரசாங்கமும் பல சவால்களையும், வாய்ப்புக்களையும் எதிர்நோக்கி உள்ளது. பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை எதிர்ப்பார்ப்புக்களும் அதிகமாகவே உள்ளன. ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்த கையோடு கிறிஸ்தவர்களின் புனிதரான பாப்பரசர் உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளோர் பின்வரும் பாப்பரசரின் வசனங்கள்மீது தமது கவனத்தைச் செலுத்துவது நல்லது. “பழைய காயங்களை மீண்டும் புண்படுத்தாமல் செய்யாமல் நீதி, சுகவாழ்வு, ஐக்கியம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு அத்தியாவசிய மார்க்கமாக குணப்படுத்தும் செயல்முறைக்கான உண்மை தேடலில் ஈடுபடுவது அவசியமாகும்.” இத்தகைய மனோபாவங்கள் மைத்திரி அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ ஆவணங்களிலும், பிரகடனங்களிலும் காணமுடியவில்லை.
நாம் இலங்கையர் என்ற வகையில் உண்மையானதும், நீடித்து நிலைக்கக் கூடியதுமான ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதாயின் நியாயத்தை விழிப்பது ஏன் தீர்மானகரமானது என்பதை சுருக்கமாக குறிப்பிட விரும்புகிறேன்.



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி-மார்ச்

www.lankaegossip.com



**சுயாதீனமான விசாரணைகளும் குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்துவதற்குமான அரசியல் திடசங்கற்பத்தின் குறைபாடு இலங்கையில் தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாசாரதத்திற்கு பங்களிப்புச் செய்யும் பிரதான காரணியாகும்.**

*திஸ்ஸ அத்தநாயக்க கைது செய்யப்பட்டபோது*

**தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாசாரத்தை விடுவிப்பதற்கான ஓர் முயற்சி**

சுயாதீனமான விசாரணைகளும் குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்துவதற்குமான அரசியல் திடசங்கற்பத்தின் குறைபாடு இலங்கையில் தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாசாரதத்திற்கு பங்களிப்புச் செய்யும் பிரதான காரணியாகும். குறைபாடு கொண்ட சட்டரீதியான சட்டகத்தின் உரிமையாளர்களானமை மற்றுமோர் குறைபாடாகும். பாரிய மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டியவர்களின் ஆற்றலும் குறைந்து காணப்படுகின்றது. உதாரணமாக ஜனாதிபதி ஆணைக்குழுக்களுக்கு நியமனம் பெற சந்தர்ப்பம் ஏற்படுத்தும் விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் விசாரணை செய்யும் நியமங்கள் அவற்றின் பெறுபேறுகளைத் தீர்மானிப்பதற்கான நிறைவேற்று துறைக்குள்ள பரந்துபட்ட அதிகாரங்களை வழங்குகிறது. சாட்சி கூறுவதற்கு முன்வரும் மக்களுக்கு எதிராக அச்சுறுத்தல், தாக்குதல் என்பன வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து அறிக்கையிட்டு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிக்காரர்களைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய ஒரு பொறிமுறை இல்லாமையும் விசாரணைக்கு தடையாக அமைந்துள்ளது. எதிர்வரும் வாரங்களில் மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்தும்போது புதிய அரசாங்கம் கவனத்திற்கொள்ள வேண்டிய ஒருசில துறைகள் பின்வருமாறு. இவ்விடயங்கள் தொடர்பாக ஊமையாக இருப்பதோ, செயற்படாமல் இருப்பதோ அல்லது வெறும் உறுதிமொழிகளை வழங்குவதோ ராஜபக்ஷ அரசாங்கத்தின் மரபுரிமையை மெருகூட்டுவதாகும். இலங்கை மக்களின் கணிசமானோர் மேற்படி நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர். எனவே மேற்படி தவறுகளில் இருந்து கற்றுக்கொள்வதும், உண்மை, நீதி, வகைப்பொறுப்பு என்பவற்றையிட்டுக் கவனம்செலுத்த வேண்டிய காலமும் வந்துவிட்டது. தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாசாரத்தை இல்லாதொழிப்பதற்கான காலம் நெருங்கிவிட்டது.

உண்மைக்கும், நீதிக்கும் குரல்கொடுத்தல், போருடன் அல்லது தென்னிலங்கையின் கிளர்ச்சியுடன் அல்லது போருக்குப் பின்னரான சூழமைவில் அல்லது தொடர்புகளில் அவற்றின் எண்ணிக்கை பன்மைத்துவம் வாய்ந்தது. காணாமற்போனோரின் குடும்பங்கள் அவர்களது காணாமற்போன அன்பிற்கும் பாசத்திற்குமான உறவுகளைத் தேடுவதில் பல்லாண்டுகளாக பொலிஸ் நிலையங்களிலும், இராணுவ முகாம்களிலும், விசாரணை ஆணைக்குழுக்கள் முன்னிலையிலும், தமது பொன்னான நேரத்தை மண்ணாக்கி உள்ளனர். பலர் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். இலங்கை முழுவதும் மிக அமைதியான முறையில் மதவழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த முயற்சிகள் இருக்கத்தக்கதாக பல்லாயிரக் கணக்கானோர் தமது அன்புக்குரியவர்களை இழந்து தவிக்கின்றனர். இது குறித்து அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வ அங்கீகாரத்தைப் பெறவேண்டி உள்ளது. 2013 இல் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்த காணாமற் போனோர் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு, 20,000 மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சிவில் சமூகத்தினதும், ஊடகங்களினதும் முறைப்பாடுகள் பற்றி உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். பாதிக்கப்பட்டோரையும், சாட்சி கூறுவோரையும் பேணிப் பாதுகாக்கக் கூடிய மற்றும் காணாமற் போனோர்பற்றி அவற்றின் பூர்வாங்க தரவுகளை சர்வதேச மனிதநேயச் சட்டத்தை மீறுதல் உட்பட அவற்றை வேறு சட்டங்களுக்கு மாற்றுதல் காரணமாக இந்த ஆணைக்குழுக்கள் விமர்சனத்திற்கு ஆளாக்கப்பட்டன. ஆணைக்குழுக்களில் பல்வேறு பலவீனங்கள் இருந்த போதிலும் ஆயிரக்கணக்கானோர் காணாமற் போதலுக்கும் அவை பிரஜைகள்மீது ஏற்படுத்திய விளைவுகளையும் பாரதூரமாக கவனத்திற்கொண்டு காணாமற்போனோர் பற்றி கண்டறிவதை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுதல் சிறந்த சாட்சியமாகும்.

அதேசமயம் அரசு உறுதிமொழி கூறியுள்ள குற்றவாளிகள் நீதியின் முன்னால் கொண்டு வருவதற்கு வழிசமைக்கும் இம்சைகளும், உரிமை மீறல்களும் ஏனைய அனேகமான சம்பவங்கள் பற்றியும் விசாரணை செய்ய வேண்டி உள்ளது. கடந்தகால 16 உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு விசாரணை ஆணைக்குழு (உதலாகம ஆணைக்குழு என்ற பெயரில் பிரபல்யமான) ஆணைக்குழுவை நோக்குகையில் 2009 இல் ஆணையாளர்களின் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்ட



www.dailynews.lk

**ஆணைக்குழுக்களில் பல்வேறு பலவீனங்கள் இருந்த போதிலும் ஆயிரக்கணக்கானோர் காணாமற் போதலுக்கும் அவை பிரஜைகள்மீது ஏற்படுத்திய விளைவுகளையும் பாரதூரமாக கவனத்திற்கொண்டு காணாமற்போனோர் பற்றி கண்டறிவதை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுதல் சிறந்த சாட்சியமாகும்.**

*ஆணைக்குழு முன்னிலையில் சான்றாதாரங்கள் பதிவுசெய்யப்படுகின்றன*

விடயங்களை நிறைவேற்றுத் துறையிடம் சமர்ப்பித்த போதிலும் இச் சம்பவங்கள் பற்றிய நிலைமையையிட்டு எதுவிதமான பகிரங்க தகவலையும் பெறமுடியவில்லை. அன்று ஜனாதிபதி ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்ட மற்றுமொரு ஆணைக்குழுவான கற்ற பாடங்களூம் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு (எல்எல்ஆர்சீ) உதலாகம ஆணைக்குழு முன்னிலையில் இடம்பெற்ற இரண்டு சம்பவங்கள் அதாவது 2006 இல் திருகோணமலையில் 5 மாணவர்களின் படுகொலை மற்றும் பிரெஞ்சு நாட்டு அரச சார்பற்ற நிறுவனமான பட்டினிக்கு எதிரான நடவடிக்கை (Action Contre la Faim – ACF) அமைப்பின் 17 ஊழியர்களின் படுகொலை மேலும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்ற அவசியம் சுட்டிக்காட்டப்பட்டது. படுகொலைகள் தொடர்பாக 9 ஆண்டுகளில் அன்று அரசாங்கத்தில் இருந்து கிடைத்த அனேகமான உறுதிமொழிகளின் பின்னர் தம் உயிர்களைக் காப்பாற்றிக்கொண்டு மற்றும் குடும்பங்களைச் சார்ந்தோர் நம்பகமான ஒரு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அறியத் தொடர்ந்தும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றனர்.

உண்மை மற்றும் நீதிக்கான ஆரம்ப நடவடிக்கைகளுக்கு அமைய உள்நாட்டு விசாரணைகள் பல சந்தர்ப்பங்களில் உள்நாட்டின் மக்களின் கோபத்திற்கான பிரதிபலிப்பாகவும், சர்வதேச அழுத்தத்திற்கான பிரதிபலிப்பாகவும் இடம்பெற்றது என்றே கூறவேண்டி உள்ளது. கற்ற பாடங்களூம் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு மற்றும் உதலாகம ஆணைக்குழு ஆகிய இரண்டும் அன்றைய ஜனாதிபதி ராஜபக்ஷவினால், உரிமை மீறல்களுக்கும் தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாசாரத்திற்கும் எதிரான சர்வதேச அழுத்தம் காரணமாக ஏற்பட்ட நேரடி பெறுபேறாகவே அவை ஸ்தாபிக்கப்பட்டன. சுதந்திர வர்த்தக வலயத்திலும், சிலாபத்திலும் ஆர்ப்பாட்டங்களின்போது எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் படுகொலை செய்யப்பட்டதை விசாரணை செய்வதற்காக வழங்கப்பட்ட உறுதிமொழிகள், அதிகாரத்தை முறைகேடான முறையில் பயன்படுத்தியமைக்கு எதிராக ஏற்பட்ட பொதுமக்கள் கண்டனங்களின் விளைவாக அவை ஏற்பட்டாலும், குற்றவாளிகள் நீதியின் முன்னே சமர்ப்பிப்பதற்கான நம்பகத் தன்மை வாய்ந்த செயற்பாடு தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டி உள்ளது. அதேசமயம் ஊடக செயற்பாட்டாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, கடத்திச் செல்லப்பட்டமை தொடர்பாக இதே வகையான பெறுபேறுகளே உண்டு. பிரித்தானியரான குராம் ஷேக் படுகொலை வழக்கு போன்ற பல்வேறு சம்பவங்களில் குற்றமிழைத்தோருக்கு, தேசிய சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவே தண்டனை விதிக்கப்பட்டது. அவ்வாறாயினும் குற்றமிழைத்தோருக்கு தண்டனை வழங்கப்பட்ட இத்தகைய வெற்றிகரமான வழக்குகள் மிக அரிதாகும். அனேகமான சந்தர்ப்பங்களில் தமது உயிரைக் காப்பாற்றிக் கொண்டோ அல்லது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் நீதியை நாடி பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

**மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரல்**

மைத்திரி அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு வார காலத்திற்குள் தேசிய நிறைவேற்றுச்சபை ஸ்தாபிக்கப்பட்டமையும் மதிப்பிற்குரிய முன்னைநாள் சிவில் அதிகாரி ஒருவர் வடமாகாணத்தின் ஆளூநராக நியமித்தமையும் பாராட்டுக்குரியது. அவ்வாறாயினும் மறுசீரமைப்புக்கள் மிக ஆழமான மட்டத்தில் இடம்பெற வேண்டும். மைத்திரி அரசாங்கம் கடந்த காலத்திலும் தற்போதும் இடம்பெறும் உரிமை மீறல்களை ஏற்றுக்கொண்டு தனது கொள்கைகளில் ஒரு திருப்பு முனையைக் காட்ட வேண்டும். இலங்கை பூராகவும் வாழும் சமூகத்தின் ஏனைய மனக்குறைகளுக்கு சிறிய அளவில் கவனம் செலுத்தி பொருளாதார அபிவிருத்தியை அனைத்து நிவாரணியாக எடுத்துக் காட்டவே ராஜபக்ஷ அரசாங்கம் முயற்சித்தது. மைத்திரி அரசாங்கம் அத்தகைய நடவடிக்கைகளின் குற்றங்களை கவனத்தில் கொள்ள வேண்டிய அதே நேரத்தில் இலங்கையின் வடக்கு கிழக்கு மற்றும் தெற்கில் வாழும் சமூகத்தின் சட்டபூர்வமான மனக்குறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். வாக்காளர்களைப் பயமுறுத்துதல், அவர்களை ஏமாற்றுதல் போன்ற முயற்சிகளை பொருட்படுத்தாமல் தேர்தல் தினத்தில் வடக்கில் பாரிய எண்ணிக்கையிலான வாக்காளர்கள், முன்னைய அரசாங்கத்தின் கொள்கைகளை நிராகரித்ததோடு மாற்றத்திற்கான தமது விருப்பத்தை சுட்டிக் காட்டியது







www.velichaveedu.com

**எமது செயற்பாடு சகல ஏற்புடைய பங்குதாரர் தரப்பினரை தொடர்புகொண்டு செயற்பட வேண்டும். அவை வெளிப்படைத் தன்மையுடனும் அமுலாக்க வேண்டும். அதேசமயம் ஆரம்பித்தலும், நடவடிக்கைகளும், பாதுகாப்பும் பற்றிய அச்சுறுத்தலை எதிர்நோக்கி தொடர்ந்தும் தனி குடியிருப்புக்கள், குடும்பங்கள் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்பட பால்நிலை சமத்துவத்திற்கு கூருணர்ச்சி கொண்ட எதிர்கால தத்துவங்களை உள்ளடக்குவதை உறுதிசெய்தல் வேண்டும்.**

*மனக்குறைகள்*

சிறந்த சான்றாதாரமாகும். ஊடகங்களில் அறிக்கையிடப்பட்டவாறு, வடக்கு குடிமகனின் மேற்கோளாக “நாம் எமது மரியாதையை மீளப்பெறுவதற்கு வாக்களித்தோம்” என்ற பிரச்சினை இதயத்தின்பால் பயணிக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக இடம்பெற்ற அபிவிருத்தி, நகரமயமாக்கல், அலங்காரங்கள் என்பவற்றிற்காக மக்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அல்லது அவர்களின் காணிகளில் மீளக் குடியேறுவது தடுக்கப்பட்டது. இதனால் மக்கள் உரிமைகள் சமாந்திரமாக மீறப்பட்டமைக்கு ஈடு செய்ய முடியாது. நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதற்கு மக்களின் உரிமைகளுக்கும், கௌரவத்திற்கும் மதிப்பளிக்க வேண்டியது மிகமிக முக்கியமாகும். தற்போதைய அரசாங்கத்தின் 100 நாள் திட்டத்தையும், நீண்டகால நிகழ்ச்சி நிரலையும் முன்னெடுத்துச் செல்கையில் இந்த அடிப்படை விடயங்களை கவனத்தில்கொள்ள வேண்டும். ராஜபக்ஷ அரசாங்கத்தின் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்க கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு அடையாளம் கண்ட நடவடிக்கைகள் கால அட்டவணை, அவை உள்ளடங்கிய மனிதஉரிமைகள் நடவடிக்கைத் திட்டம் மற்றும் கற்ற பாடங்களூம் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான தேசிய செயற்திட்டம் ஆகிய இரண்டின் மூலமும் இவற்றை நாம் வாசிக்க முடியம். இவ்வாறு இருந்த போதிலும் முன்னேற்றம் மற்றும் தாக்கம் தொடர்பான பல பிரச்சினைகள் எஞ்சியுள்ளன. இத்தகைய முன்னோடி நடவடிக்கைகள் – மக்கள்மீது குறைந்த தாக்கத்தையே ஏற்படுத்துகிறது. முன்னோக்கிச் செல்கையில் புதிய அரசாங்கம் உரிமைகளைக் காப்பதற்கும் உண்மை, நீதி, வகைப்பொறுப்பு மற்றும் நல்லிணக்கம் தொடர்பாகவும் அதன் நிலைப்பாடு குறித்தும் பிரகடனப்படுத்த வேண்டும். 100 நாள் திட்டம் கூடிய அதிகாரம் கொண்டதாகவும் மறுசீரமைப்புக்கான துறைகளை அடையாளம் காண்பதற்காகவும் இங்கு காணாமல்போன பகுதிகள் உண்மையும் நீதியுமாகும். இம்சைகள் மீள ஏற்படுவதை தவிர்ப்பதற்கும் சமூகத்தில் ஏற்பட்டுள்ள காயங்களையும், பிளவுகளையும் குணப்படுத்துவதற்கு முன்னோடியாகச் செயற்படுவதும் அரசாங்கம் கடந்த காலத்தை பரீட்சித்துப் பார்க்க வேண்டும். அங்கீகாரத்தையும், விளக்கத்தையும் புரிந்துகொள்வது காலத்திற்கு உசிதமாகும். இதுபற்றி நோக்குகையில் நீண்டகாலம் நீடித்து நிலைக்கக் கூடிய நல்லிணக்கத்தின் இலக்குடன் உண்மைக்கும் நீதிக்கும் செயற்படுவதை எமது அளவுகோலாகவும், காலவரையறையாகவும் கொண்ட வரைபடம் மீது நாம் கவனம் செலுத்த வேண்டி உள்ளது. எமது செயற்பாடு சகல ஏற்புடைய பங்குதாரர் தரப்பினரை தொடர்புகொண்டு செயற்பட வேண்டும். அவை வெளிப்படைத் தன்மையுடனும் அமுலாக்க வேண்டும். அதேசமயம் ஆரம்பித்தலும், நடவடிக்கைகளும், பாதுகாப்பும் பற்றிய அச்சுறுத்தலை எதிர்நோக்கி தொடர்ந்தும் தனி குடியிருப்புக்கள், குடும்பங்கள் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்பட பால்நிலை சமத்துவத்திற்கு கூருணர்ச்சி கொண்ட எதிர்கால தத்துவங்களை உள்ளடக்குவதை உறுதிசெய்தல் வேண்டும்.

**மார்க்க வரைபடமும் எதிர்கால நடவடிக்கைகளும்**

அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும், முன்னுரிமைகளையும் தெளிவாக வெளிப்படுத்துவதற்கான ஆற்றல் முக்கியத்துவம் வாய்ந்தது. மார்க்க வரைபடத்தின் மூலம் இப்பிரச்சினைக்கு விடைகாண வேண்டும். அதேசமயம் கடந்த காலத்தை ஏற்றுக்கொள்ளவும் விருப்பம் தெரிவிக்க வேண்டும். மக்களின் மனக்குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் நம்பகத் தன்மை வாய்ந்த உள்நாட்டு நடவடிக்கைகளை உறுதிசெய்யும் அரசாங்கம் பற்றி மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். ஆரம்பத்தில் உண்மை, நீதி, வகைப்பொறுப்பு, நல்லிணக்கம் என்பவை குறித்த நிலைப்பாடுகளைப் பற்றி மீண்டும் ஓர் சட்டகத்தை உருவாக்கி அதனைப் பற்றி மீளச் சிந்திக்க வேண்டும். கடந்தகால உரிமை மீறல்களைப் பற்றிய வகைப்பொறுப்பைக் கோரி பாரதூ ரமான மனிதஉரிமை மீறல்களையும், ஆக்கிரமிப்பு குறித்தும் ஒரு குறிப்பிட்ட சாரார் தொடர்பாக முழுமையாகப் புறக்கணிக்கும் போக்கு மாறவேண்டும். ஏற்கனவே ஐக்கிய நாடுகளின் மனிதஉரிமைகள் பற்றிய ஆணையாளரின் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் உட்பட நீதி மற்றும் வகைப்பொறுப்பு தொடர்பான செயற்பாட்டாளர்களுடன் செயற்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள கொள்கைக்கு மாறும் இயல்பை ஏற்கனவே அரசு தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ளக்

www.theguardian.com



**கடந்தகால உரிமை மீறல்களைப் பற்றிய வகைப்பொறுப்பைக் கோரி பாரதூரமான மனிதஉரிமை மீறல்களையும், ஆக்கிரமிப்பு குறித்தும் ஒரு குறிப்பிட்ட சாரார் தொடர்பாக முழுமையாகப் புறக்கணிக்கும் போக்கு மாறவேண்டும்.**

*போரினால் பாதிக்கப்பட்ட மக்கள்*

கூடியதாகும். ஆனால் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு அமைய மேலும் பல விடயங்கள் முக்கியமானவை. இதுபற்றி ஒரு வரைபடம் உதவக்கூடும். தண்டனையில் இருந்து விலக்களிப்பதற்குப் போராடும் ஜொயின் / ஒரெற் கிளிச்சர் (Joinet / Oretlicher) கோட்பாடுகள் மற்றும் அவற்றை முன்னெடுத்துச் செல்லும் நான்கு தூண்கள் இது தொடர்பாக பிரயோசனப்படும்: அவையாவன உண்மையை கண்டறிவதற்கான உரிமை, நீதிக்கான உரிமை, நஷ்டஈடு பெறுவதற்கான உரிமை, வகைப் பொறுப்பு சான்றிதழ். கீழே கலந்துரையாடப்படும் பிரதான நான்கு துறைகள் இல்லாவிடினும் இலங்கைச் சூழமைவில் முக்கிய துறைகளை தோற்றுவித்துக் காட்டுவதோடு கூடிய முன்னோடி அரங்கு உருவாக்கப்படுகிறது.

## உண்மை பேசும் முக்கியத்துவம்

மோதலினால் பாதிப்புக்குள்ளான அனேகர் இலங்கையர் தொடர்பாக உண்மையைக் கண்டறிவதில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தாலும், தற்போதைய செயற்பாடுகள் அதற்கு விடையளிப்பதில் தோல்வி கண்டுள்ளன. இத்துறை உடனடி சீர்திருத்தங்கள் அவசியமான ஒரு அம்சமாகும். புதிய அரசியலமைப்பு திருத்தங்கள் எதிர்கால விசாரணை ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக செயற்படுகின்றனவா? அவற்றின் கண்டுபிடிப்புகள் பகிரங்கப்படுத்தப்படுமா இல்லையா? என்பதுபற்றி பரிசீலனை செய்வதற்கு, விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். அதேசமயம் அரசியலமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களின்படி அவர்கள் செயற்றிறன் கொண்ட பாதுகாப்பு பொறிமுறையை வழங்கும். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிக்காரர்களை பாதுகாக்கக் கூடிய சட்டத்தை அமுல்படுத்தும் ஆற்றலை மீள கலந்துரையாட வேண்டும்.

அதேசமயம் மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரல் உண்மை கண்டறியும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு அமைவாக புதிய நிறுவனங்கள் உட்பட உண்மைக்கும் நீதிக்கும் வழிவகுக்கும் புதிய அணுகு முறைகளை (Modalities) பரிசீலனை செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு, உயிரைப் பாதுகாத்தோருக்கு, பாதிக்கப்பட்ட சமூகங்கள் கூறுபவற்றை செவிசாய்க்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

எனவே, கடந்த காலத்தில் இடம்பெற்றது யாது என்பது பற்றி பகிரங்க அங்கீகாரம் வழங்கக்கூடிய வகையில் உணமையைக் கூறும் ஓர் செயல்முறை முக்கியமாகும். அதேசமயம் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு, மனித உரிமைகள் மீறல்பற்றிய நிலைமைகளை உறுதிப்படுத்த வேண்டும். அனைத்து பிரஜைகளினதும் உரிமைகளுக்கு மதிப்பளித்தலை உத்தரவாதம் செய்வதை அறிமுகம் செய்து உள்ளடக்கும் நஷ்டஈடு வழங்குதல், வழக்கு விசாரணை மற்றும் அரச மறுசீரமைப்புக்கள் என்பவை தொடர்பாக அடுத்த நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட முடியும்.

முன்னர் உண்மையைக் கூறியமைக்கான நடைமுறை பற்றி தென்னாபிரிக்க மாதிரியிலான உண்மை மற்றும் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழு (SATRC) கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டது. தென்னாபிரிக்காவின் உண்மைக்கும், நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு மிகப் பிரசித்தம் பெற்றது. எனினும் இலங்கைக்கு உசிதமான நடைமுறையைத் தயாரிக்கும்போது கொள்கை வகுப்பாளர்கள் ஆர்ஜன்டீனா, சிலி மற்றும் சியாரோ லியோன் போன்ற நாடுகளில் ஏனைய பூர்வாங்க நடவடிக்கைகளும் தனது விசாரணைகளை அண்மையில் முடித்துக்கொண்ட பிரேசில் நாட்டின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும். தனிநபர்கள் காணாமற்போதல் பற்றி ஆர்ஜன்டீனாவின் தேசிய ஆணைக்குழு (CONADEP) நுண்கா மாஸ் (Nunca Mas – இனி ஒருபோதும் வேண்டாம்) என்ற பெயரில் விபரமான அறிக்கை வழங்கப்பட்டுள்ளதோடு அன்று ஆட்சியில் இருந்த ஆர்ஜன்டீனா அரசாங்கம் இராணுவ ஜூன்டாவிற்கு ஏற்பாடு செய்திருந்த மன்னிப்பை நீக்கி, குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு வழிசமைத்த உள்நாட்டு வழக்கு விசாரணையை நடத்த முன்வந்தது. அதேசமயம் பிரேசில் ஆணைக்குழுவும் பொது மன்னிப்பு தொடர்பான விடயத்தின்கீழ் முன்வைத்த பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக குற்றவாளிகள் நீதிமன்றம் முன் கொண்டுவருவதற்கு அவற்றை நீக்க வேண்டுமென பரிந்துரைக்கிறது. இலங்கைக்கு சாலச் சிறந்தது எது என்ற சூத்திரம் கிடையாது. அரசாங்கம் பல்வேறு செல்நெறிகளையும் அனுகி நோக்க வேண்டும். இலங்கையின்



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்

www.globalbritannica.com




**தென்னாபிரிக்காவின் உண்மைக்கும், நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு மிகப் பிரசித்தம் பெற்றது. எனினும் இலங்கைக்கு உசிதமான நடைமுறையைத் தயாரிக்கும்போது கொள்கை வகுப்பாளர்கள் ஆர்ஜன்டீனா, சிலி மற்றும் சியாரோ லியோன் போன்ற நாடுகளில் ஏனைய பூர்வாங்க நடவடிக்கைகளும் தனது விசாரணைகளை அண்மையில் முடித்துக்கொண்ட பிரேசில் நாட்டின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

*உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு*

சூழமைவிற்கு மிகச் சிறப்பான முன்னோடியைத் திட்டமிட வேண்டும். இதன்போது சுயாதீபத்தியத்தையும், கட்சி பக்கசார்பின்மையையும், வெளிப்படைத் தன்மையையும், பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சிக்காரர்களையும் பாதுகாப்பதற்கான அளவுகோல்களை அடையாளம் காண வேண்டும்.

உண்மையைக் கூறும் வழிமுறைகளுக்கான செல்நெறியை கலந்துரையாடுவோர் கடந்தகால ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். குறுகியகால, மத்தியகால, நீண்டகால அடிப்படையில் செயற்பாட்டு மையப்புள்ளிகளை அடையாளம் காணவேண்டும். அனேகமான அறிக்கைகள் பொதுவான விடயப் பரப்பினுள் காணமுடியாவிட்டாலும் கற்றபாடங்களும் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழுவைப் போன்ற, நாம் பெறக்கூடிய ஒருசில அறிக்கைகளையேனும் செயற்திறன் கொண்ட மையப்புள்ளிகளை சுட்டிக்காட்டுவதோடு மறுசீரமைப்புகள் தொடர்பான கலந்துரையாடல்களின்போது பிரயோசனமான வழிகாட்டல்களை பயன்படுத்த முடியும். அதேசமயம் கடந்தகால விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவதும் மிக முக்கியமாகும்.

### தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவருதல்

மறுசீரமைப்பு உண்மையைக் கண்டறிவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படக் கூடாது. நீதி, நியாயத்திற்கும் நாம் கவனம் செலுத்த வேண்டும். பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள் பற்றிய குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தண்டனை வழங்கும் மந்தகதியைக் கவனத்தில் கொண்டு துரித மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்தகால உரிமை மீறல்கள் பற்றிய வழக்குகளில் பெரும்பான்மையானவை தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ள ஆற்றல் கேள்விக்குரியது. விசேடமான வழக்குகளை விசாரணை செய்வதற்கு குறிப்பிட்ட காலஎல்லைகளை நிர்ணயித்து விசேட கருமபீடம் ஒன்று ஸ்தாபிக்கப்படுவதன்மூலம் இச் சுமையில் இருந்து விடுபட பேருபகாரமாக அமையும்.

இத்தகைய பணியகம் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான சம்பவங்களை விசாரித்து குற்றப் பகர்வு பத்திரங்கள் கையளிக்கப்பட்டு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான பணிப்பாணை வழங்கப்பட வேண்டும். பாரதூரமான மீறல்களை விசாரிப்பதற்கு விசேட அலுவலகம் அமைக்கப்படும்போதும், வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்போதும் வகைப்பொறுப்பு நிலைநாட்டப்பட வேண்டும். அதேசமயம் இது தொடர்பான முன்னுரிமைகள் பற்றிய செய்திகளையும் அனுப்பி வைக்க முடியும். அவ்வாறாயினும் பணிக்குழுவினர் மற்றும் வளங்கள்மீது தங்கி இருக்கும் ஒரு பொறிமுறை அவசியம். இதற்கு மேலதிகமாக சட்ட நடவடிக்கைகள் வெற்றிடத்தில் ஏற்பட மாட்டாது என்பது தெளிவு. மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துகையில் சுயாதீனமான நீதிமன்றத்திற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் வகையில் அரசியலமைப்பு ரீதியிலான மறுசீரமைப்புக்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அதேசமயம் நீதவான்களினதும், நீதித்துறை பணிக்குழுவினரதும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கு தொழிநுட்ப ஒத்துழைப்பும் வழங்கப்பட வேண்டும்.

அதேசமயம் அரசு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத பட்சத்தில் அரசியலமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளை ஆரம்பித்து முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் பிரஜைகளின் ஆற்றலை வலுப்படுத்த வேண்டும். தற்போது அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தில் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகள் பற்றிய மீறல்கள் அல்லது அத்தகைய மீறல்களை அண்மித்துள்ள போது உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பை இயற்றுவோர் தமது பிரஜைகளுக்கு நீதியை வழங்குவதற்கு மிகச் சிறந்த பிரவேசத்தை வழங்கக் கூடிய வழிமுறை பற்றிய முன்னுதாரணங்களை கண்டுபிடிப்பதற்கு ஏனைய நாடுகளில் இத்தகைய வழிமுறைகளை ஆராய்ந்து செயற்பட வேண்டும். உதாரணமாக ஆர்ஜன்டீனாவில் அரசு இயந்திரம் மீது தங்கியிராமல், பாரதூரமான மனித உரிமைகள் மீறப்படும்போது தவறு செய்தோர் தனிப்பட்ட முறையில் வழக்கு தொடர்ந்து நீதியின் முன்னால்



www.supremecourt.lk

**விசேடமான வழக்குகளை விசாரணை செய்வதற்கு குறிப்பிட்ட காலஎல்லைகளை நிர்ணயித்து விசேட கருமபீடம் ஒன்று ஸ்தாபிக்கப்படுவதன்மூலம் இச் சுமையில் இருந்து விடுபட பேருபகாரமாக அமையும். இத்தகைய பணியகம் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான சம்பவங்களை விசாரித்து குற்றப் பகர்வு பத்திரங்கள் கையளிக்கப்பட்டு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான பணிப்பாணை வழங்கப்பட வேண்டும்.**

*நீதியை நிலைநாட்ட*

கொண்டுவரப்படுகின்றனர். அவசிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு பிரஜைகளின் ஆற்றல் ஆர்ஜன்டீனாவில் கூடிய வகைப்பொறுப்புக்கும் தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாசாரத்தை மாற்றி அமைப்பதற்கும் பங்களிப்புச் செய்துள்ளது. பாதிக்கப்பட்டவருக்கு நீதிவழங்க முடியாதிருக்கும் இன்றைய கட்டமைப்பைக் கவனத்தில் கொண்டு அரசாங்கம் இத்தகைய வழிமுறையையிட்டு கவனத்தில்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் இது சாத்தியமான மாற்றுத் திட்டமாக மாற்றியமைப்பதாயின் அரசியலமைப்பு ரீதியிலான சீரமைப்புக்களும் உரிய தொழிநுட்ப ஒத்துழைப்பும் பெற வேண்டும்.

தண்டனையில் இருந்து விலக்களிப்பதை முடிவுக்கு கொண்டு வருவதையும், பாரதூரமான மனித உரிமைகள் மீறல் தொடர்பான மன்னிப்பளித்தல் பற்றிய நிலைப்பாடும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. விசேட நிலைமைகளைப் பூர்த்தி செய்யும்போது தென்னாபிரிக்க உண்மையைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழு மன்னிப்பை வழங்கிய போதிலும், ஏனைய சூழமைவுகளின்கீழ் ஆர்ஜன்டீனா, சிலி மற்றும் உறுகுவே ஆகிய நாடுகளில் அண்மைக்கால நடவடிக்கை போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித படுகொலைகள் என்பன பற்றிய பாரதூரமான உரிமை மீறல்களின்போது, மன்னிப்பளிக்கும் சட்டங்கள் தலைகீழாக மாற்றப்பட்டுள்ளதை காணமுடியும். பாரதூரமான மனித உரிமைகள் மீறல் தொடர்பான குற்றவாளிகள் அவர்களின் பதவி மற்றும் அந்தஸ்து என்பவற்றை கருத்திற்கொள்ளாது, அவர்களை நீதியின் முன்னே கொண்டு சென்ற ஒரு தெளிவான செய்தி வெளிப்படுத்தப்பட்டது. இம்சைகள் மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்கும், தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் முடிந்துள்ளது. இது தொடர்பாக நோக்குகையில் நிறுவன ரீதியானதும், கட்டமைப்பு ரீதியானதுமான சீரமைப்புக்களுக்கு நீதிமன்றமும் பாதுகாப்புத் துறையும் உரிமை மீறல்களின்போது உரியமுறையில் செயற்பட வேண்டும். இறுதியில் அரசும் சிவில் சமூகமும் கடந்த காலத்தைப் பற்றி அறிவூட்டல் கொண்டும் வசதிபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் வளங்கல்களைப் படிப்படியாக பதிவு செய்வதில் ஈடுபட வேண்டும்.

அதேசமயம் அவர்களும் கடந்த காலத்தை நினைவு கூரவும் உரிமை மீறல்கள் மீண்டும் எற்படுவதை தடுப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டுமாகையால், எதிர்கால சந்ததியினருக்கு அவசியமான தகவல்களை சேகரித்து வைக்க வேண்டும்.

### நினைவுகூரல்

கடந்த காலத்தை நினைவுகூருகையில் பாதிக்கப்பட்டோர், தம் உயிரைக் காப்பாற்றிக் கொண்டோர், விபத்துக்களை எதிர்நோக்கியோர் ஆகியோர் இறந்தவர்களின் சார்பில் துக்கம் கொண்டாடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகையில் முக்கிய பாத்திரத்தை ஏற்க முடியும். இலங்கையின் போருக்குப் பின்னரான சூழமைவில் நினைவுச் சின்னங்களை கட்டியெழுப்புவதற்கு ஒரு தரப்பினருக்கு மாத்திரமே வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அதாவது போரில் வெற்றியீட்டியோருக்கு மாத்திரமே அச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தமது உயிரைக் காப்பாற்றிக் கொண்டவர்கள் போன்றோருக்கு அத்தகைய சந்தர்ப்பம் கிட்டவில்லை. இலங்கை முழுவதும் வாழ்கின்ற மக்களுக்கு அவர்களின் கவலையையும், மனக்குறைகளையும் பிரதிபலிக்கக் கூடிய வகையிலே பல்வேறு காலகட்டங்களில் தமது இழந்த உறவுகளை நினைவுகூருவதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அத்தியாவசியமாகும். இது தொடர்பாக அரசாங்கத்தோடு தொடர்புடைய தரப்பினருடன் தொடர்பு கொண்டு உயிரைக் காத்துக்கொண்ட, குடும்பங்கள் பாதிக்கப்பட்ட சமூகங்கள், சிவில் சமூகங்கள், கலைஞர்கள் மற்றும் அறிவு ஜீவிகளுடன் இணைந்து நினைவஞ்சலி செலுத்துவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ளும்போது, அடையாளம் காணும்போது இவ்விடயங்களை சரியாக அடையாளம் காணவேண்டும்.

வன்முறை நடவடிக்கைகளை எதிர்கொண்ட ஏனைய நாடுகளில் அரசு, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் நினைவுகூருவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. இவ் விடயத்தில் ஒரு சூத்திரம் மாத்திரம் கிடையாது. அனைத்தையும் கருத்திற்கொண்டு அவசியமான வழிமுறைகளை கண்டறிய வேண்டும். தென்னாபிரிக்காவின் பழைய கோட்டைச் சிறைச்சாலை தொகுதியில்








www.onlanka.com

**நஷ்டஈடு வழங்குதல் நல்லிணக்கத்திற்கான மிக முக்கியமான அங்கமாகும். தனிநபரின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாகும். கடந்தகால தவறுகள் தொடர்பான மாற்று நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.**

*கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கை*

அமைந்துள்ள அரசியலமைப்பு நீதிமன்றம் தற்போது கடந்தகால சம்பவங்களை காணக்கூடிய நினைவிடமாக மாற்றமடைந்துள்ளது. ஆர்ஜன்டீனாவில் முன்னர் சட்டவிரோத தடுப்பு நிலையமாக பயன்படுத்தப்பட்ட ESMA என்ற பெயரில் அழைக்கப்பட்ட கடற்படை சிறு உத்தியோகத்தர்களின் இயந்திர தொழிநுட்ப பாடசாலை தற்போது அரச அனுசரணையின்கீழ் ஓர் சுவடிக் காப்பமாக மாற்றப்பட்டுள்ள நினைவுச் சின்னமாகும். அதேசமயம் கறொல்டோ கொன்டி கலாசார மையம் என்று பெயரிடப்பட்ட இராணுவ ஜுன்தாவினால் ஊடகவியலாளர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட இடமே இது. இலங்கையின் தேவைகளைக் கவனத்திற்கொள்வோர் பூகோளம் முழுவதும் இத்தகைய ஏராளமான உதாரணங்களைக் காணமுடியும்.

புதிய அரசாங்கம் இறந்தவர்களின் சார்பில் நினைவுகூருவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். கடந்த ஆண்டுகளில் போரின் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்த மரணங்கள் தொடர்பாக துக்கம்கொண்டாடுவதற்கு முயற்சித்த நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டன. இவ்வொடுக்குமுறை மதம்சார் விழாக்களையும் நிறுத்தியது. அதேசமயம் சமூகத்தின் நினைவஞ்சலிக் கூட்டங்களும் சீர்குலைக்கப்பட்டன. இத்தகைய தான்தோன்றித்தனமான மட்டுப்பாடுகளை உடனடியாக நிறுத்தி அரசாங்கம் சமூகத்தை கௌரவமாக மதித்து அவர்களின் இழந்த உறவுகளை நினைவுகூருவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

### நஷ்டஈடு வழங்குதல்

நஷ்டஈடு வழங்குதல் நல்லிணக்கத்திற்கான மிக முக்கியமான அங்கமாகும். தனிநபரின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாகும். கடந்தகால தவறுகள் தொடர்பான மாற்று நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். புனர்வாழ்வையும், மீள்கட்டியெழுப்புதலையும் இவ்விடயத்தில் உள்ளடக்கலாம். நிதி அல்லாத வழிமுறைகளையும் நஷ்டஈடு வழங்கும்போது கையாள முடியும். உதாரணமாக காணிகளையும் சொத்துக்களையும் இழந்தவர்களுக்க ஆரம்ப நடவடிக்கையாக அவர்களுடைய சொந்தக் காணிகளுக்கு வருகைதர உதவ முடியும். ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்கலாம். சுயாதீனமான விசாரணைகளின் பின்பு காணாமல் போனோருக்கான மரணச் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கலாம். காணிகளில் குடியமர்தல், சொத்துக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு, வாழ்வாதாரம், காணாமல் போதல் மற்றும் தடுத்து வைக்கப்படல் பற்றிய விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடுநிலையான அதிகாரிகளை அரசு நியமிக்க முடியும். காணி அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் காலம் தாமதியாது, படையினரும் ஏனைய அரச நிறுவனங்களும் சுவீகரித்த பொதுமக்களின் காணிகளின் அளவை மதிப்பாய்வு செய்ய வேண்டும். காணிகளின் சட்டரீதியான உரிமையாளர்களுக்கு அவற்றை மீள வழங்க வேண்டும். காணிகளை கையகப்படுத்தும் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமையவே அரசின் பொதுநடவடிக்கைகளுக்கு அவசியமான காணிகளைக் கையகப்படுத்த வேண்டும்.

இலங்கையின் மறுசீரமைப்புகளுக்கான விவாதத்தில் உண்மைக்கும் நீதிக்கும் முன்னுரிமை வழங்குவதற்கான பூர்வாங்க யோசனைகள் சிலவற்றை மேலே குறிப்பிட்டுள்ளோம். எதிர்வரும் மாதங்களில் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரி அவருடைய அரசாங்கத்தின்மூலம் இவற்றை வரைவிலக்கணம் செய்ய வேண்டும். இதன்மூலம் மாத்திரமே இலங்கையில் வாழும் அனைத்து பிரஜைகளினதும் மனக்குறைகளை நீக்கி நீதியை நிலைநாட்ட முடியும். பேசாமடந்தையாக இராமல் பிரஜைகளின் மனக்குறைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பது இன்றியமையாததாகும்.




வடமாகாணத்தின் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் முன்னைநாள் இராணுவ ஆளுநர் சந்திரசிறியும்



பேராசிரியர்
**ஜயந்த செனெவிரத்ன**

# இராணுவக் கரத்தின் நல்லாட்சி

இம்முறை ஜனாதிபதித் தேர்தலின்போது ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை விரட்டியடிப்பதற்கு எமக்கு கிடைத்த வாய்ப்பு, 1988 இல் சிலி நாட்டின் இராணுவ சர்வாதிகாரி ஜெனரல் ஒகஸ்டோ ∴பினொச்சே (Augusto Pinchet) அதிகாரத்தில் இருந்து வீழ்த்துவதற்கு அந்நாட்டு மக்கள் பெற்ற அரிய சந்தர்ப்பத்தைப் போன்றது.

1970 இல் ஜனநாயக ரீதியாக இடம்பெற்ற சுதந்திரமான தேர்தலில் மார்க்ஸிசத் தலைவரான சல்வதோர் அலன்டே (Salvador Allende) இன் அரசு 1973 இல் இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சியின் பின்னர் வீழ்த்தப்பட்டு, 1973 இல், பினொச்சே அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். மேற்படி சதிப்புரட்சியில் அலன்டே உட்பட பல தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இறுதியில் 15 ஆண்டுகளாக மிகக் கொடூரமான ஒரு இராணுவ ஆட்சி அமுலாக்கப்பட்டது. ∴பினொச்சே சர்வாதிகாரி சுமார் 3,000க்கும் மேற்பட்ட தனது அரசியல் எதிரிகளை படுகொலை செய்தான். மேலும் 3,000 மேற்பட்ட பகுதியினரை காணாமற்போகச் செய்தான். அதேபோல சுமார் 50,000க்கும் மேற்பட்டோர் பல்வேறு இம்சைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். இத்தகைய இம்சைகள் காரணமாக வாழ்நாள் பூராவும் ஊனமுற்றவர்களாக வாழ பலர் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவ்வாறாக இராணுவ இம்சைகளுக்கும், படுகொலைகளுக்கும் எதிர்க்கட்சி



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்




**இம்சைகள் காரணமாக வாழ்நாள் பூராவும் ஊனமுற்றவர்களாக வாழ பலர் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவ்வாறாக இராணுவ இம்சைகளுக்கும், படுகொலைகளுக்கும் எதிர்க்கட்சி அரசியல் செயற்பாட்டாளர்கள் மாத்திரமல்லாது கலைஞர்கள், அறிவுஜீவிகள், மதகுருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட பாரிய எண்ணிக்கையினர் ஆளாக்கப்பட்டனர்.**

*குடிநீர் கோரிய ரத்துபஸ்வெல மக்கள் மீது இராணுவ அடக்குமுறை*

அரசியல் செயற்பாட்டாளர்கள் மாத்திரமல்லாது கலைஞர்கள், அறிவுஜீவிகள், மதகுருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட பாரிய எண்ணிக்கையினர் ஆளாக்கப்பட்டனர்.

எவ்வாறாயினும் 15 ஆண்டுகால இராணுவ ஆட்சியின் பின்னர் ∴பினொச்சே பொதுமக்களின் கருத்துக் கணிப்பைப் பெற விரும்பினார். அரசுக்கு எதிரான செயற்பாட்டாளர்கள் (∴பினொச்சேயின் கருத்துப்படி மார்க்ஸியவாதிகள்) அழித்தொழித்து சுதந்திர சந்தைப் பொருளாதாரம் காரணமாக மக்கள் பாராட்டுதல்கள் ∴பினொச்சேக்கு உண்டென அவர் எதிர்பார்த்தார். எனவே தொடர்ந்தும் எட்டு ஆண்டுகள் தனது ஆட்சியை நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்வதற்கு ∴பினொச்சே திட்டமிட்டார். மேற்படி சர்வஜன வாக்கெடுப்பின்போது மேலும் ஒரு தவணை ∴பினொச்சே ஆட்சி செய்ய அங்கீகாரம் வழங்கப்படுமா இல்லையா என்ற கேள்வியே மக்களிடம் முன்வைக்கப்பட்டது. ஆம் (Yes) அல்லது இல்லை (No) என்ற ஒன்றை அடையாமிடுவதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. தான் நியாயமான ஆட்சியாளன் என உணர்த்துவதற்கு இல்லை (No) என்ற இயக்கத்தைக் கொண்டு நடத்துவோருக்கு தொலைக்காட்சியில் 15 நிமிடங்கள் தினசரி இரவு நேரத்தில் வழங்குவதற்கும் ∴பினொச்சே இணக்கம் தெரிவித்திருந்தான்.

இத்தருணத்தை எதிர்கட்சியினர் பயன்படுத்தினார்கள். இதுவரை இரகசியமாக செயற்பட்டுக் கொண்டிருந்த அரசியல் செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், மதகுருமார், தொழிற்சங்கத் தலைவர்கள், அறிவுஜீவிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவக் குழுக்கள் மிகத் துரிதமாக இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர். அவர்கள் அனைவருமே ஒரு குறிக்கோளுக்காக ஒன்றிணைந்தனர். ∴பினொச்சேயை தோல்வியுறச் செய்வது அவர்களின் ஒரே குறிக்கோளாக இருந்தது. தொலைக்காட்சியில் ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களை மிகக் கவர்ச்சிகரமான முறையில் அவர்கள் பயன்படுத்தினார்கள். அதேசமயம் மிகச் சக்திவாய்ந்த விளம்பரங்கள் “No Campaign” (இயக்கத்தை உயிரூட்டுவதற்காகச் செயற்பட்டார்கள்.) இந்த விளம்பர அறிவித்தல் இயக்கத்தின் பணிப்பாளராக அன்று சிலி நாட்டின் பிரபல விளம்பரக் கலைஞரான இயுஜினோ கார்ஷியா (Engenio Garcia) No இல்லை அல்லது வேண்டாம் என்ற எதிர்மறை சொற்பதமாயினும் அதை நியாயப்படுத்தி சமூகமயமாக்குவதற்கு அதைச் சாதகமான முறையில் சமூகமயப்படுத்துவதில் அவர் வெற்றி பெற்றார். “சிலி நாட்டிற்கு சந்தோஷம் வருகிறது. (Chelie joy is coming) என்ற சுலோகத்தை ∴பினொச்சே மீண்டும் ஒருமுறை ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கு இடமளிக்கக் கூடாது என்ற கருத்து மனிதர்களின் இதயத்தில் வேரூன்றப்பட்டது. தொலைக்காட்சி மூலம் மாத்திரமல்லாமல் மக்கள் காணும் இடங்களிலெல்லாம் “No” என்ற சொற்பதத்தை மக்களுடைய கண்கள் சந்தித்தன. 27 இரவுகளாக ஒவ்வொரு 15 நிமிடமும் No இயக்கத்தின் அபூர்வமான விளம்பர அறிவித்தல்கள் தொலைக்காட்சியில் காணக்கூடியதாக இருந்தது. மக்கள் மனங்கள் (Psyche) எவ்வளவு தூரம் தயார் நிலையில் இருந்தது எனக் கூறினால் சர்வஜன வாக்கெடுப்பு நாளில் வாக்குச் சாவடிக்குச் சென்ற வாக்காளர்கள் தமது வாக்குப் பத்திரத்தில் No என்ற இரண்டெழுத்துக்களை மாத்திரமே கண்டனர். இறுதியில் ∴பினொச்சே படுதோல்வியடைந்தார். அத்தோடு அதுவரை நிலவிய இராணுவ சர்வாதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டு மக்கள் வெற்றிபெற்றனர்.

இச் செயற்பாட்டிற்கு சமமானதோர் நடவடிக்கை கடந்த எமது ஜனாதிபதி தேர்தலிலும் நாம் காணக்கூடியதாக உள்ளது. ராஜபக்ஷ “மூன்றுமுறை வேண்டாம்” என்ற சொற்றொடர் தலையங்கமாக இருந்தது. ராஜபக்ஷ ஆட்சியின் கொடூரமான கரங்களில் சிக்கியவர்களும், ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் எதிர்பார்த்த அனைவரும் கட்சி, நிறம் போன்ற பேதங்களை மறந்து, ராஜபக்ஷவை தோல்வியுறச் செய்வதற்காக முன்னணிக்கு வந்தனர். மாற்றுக் கலைஞர்கள், பிரஜைகள் சக்தி என்பவற்றை முன்னரங்காகக் கொண்டு அறிஞர்களின் சபைகளும் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி அரசியல் கட்சிகளும், பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதப் பிரிவினரும் ராஜபக்ஷ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒன்றிணைந்தனர். சிலி நாட்டின் ∴பினொச்சேயைப் போலவே மகிந்த ராஜபக்ஷ வும் எதிர்பாராத நேரத்தில் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு மக்கள் அபிப்பிராயத்தை அறிய முனைந்தார். ∴பினொச்சே

www.slnewsonline.net



**இவை அனைத்தும் இவ்வாறாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அரசு எதிர்நோக்கிய பிரதான பிரச்சினையும் எம்முன்னே உள்ளது. அதுவே தேசிய இனப்பிரச்சினையாகும்.**

*இந்தியா - இலங்கை சமாதான உடன்படிக்கை (ரஜீவ் - ஜே.ஆர்)*

சிலி நாட்டின் எதிர்கட்சியை செயலிழக்கச் செய்ததுபோல இலங்கையின் மகிந்த ராஜபக்ஷவும் எதிர்கட்சியை பல கூறுகளாகப் பிளவுபடுத்தியிருந்தார். துரதிர்ஷ்டவசமாக மகிந்த மூன்றாவது தவணையில் வெற்றி பெற்றிருந்தால் இலங்கையின் ஃபினொச்சேயாக மகிந்த இருந்திருப்பார். தான் எப்படியும் வெற்றி பெறுவேன் என்ற முட்டாள்தனமான குருட்டு நம்பிக்கை காரணமாக மகிந்த ராஜபக்ஷ கர்வத்தால் ஆட்கொள்ளப்பட்டு இருந்தார். மகிந்தவைச் சுற்றியிருந்த அவரது கையாட்கள் ஏதோவொரு வகையான உளவியல் தாக்கத்திற்கு மகிந்தவை உட்படுத்தியிருந்தனர். மகிந்த கட்டாயமாக வெற்றி பெறுவார் என்று அவருடைய சோதிடர்கள் சபதம் செய்தனர். பொதுக் கூட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்களை மகிந்த கண்டுகொண்டார். அந்த மக்கள் கூட்டம் பலவந்தமாகவும், பல்வேறு பொருட்களையும் பணத்தையும் வழங்கி தூரப் பிரதேசங்களில் இருந்து கூட்டங்கள் நடந்த இடங்களுக்கு கொண்டு வரப்பட்டமையை மகிந்த அறிந்திருக்கவில்லைபோலும். மகிந்த நார்சிஸ்ட் (Narcissist) உளவியல் ஆக்கிரமிப்பால் நோயுற்றிருந்தார். அரச ஊடகங்களிலும் மகிந்த தன்னை மாத்திரமே காணக்கூடியதாக இருந்தது. தனது அதிகாரத்தை அதனூடாக மகிந்த காணக்கூடியதாக இருந்தது. மகிந்த தன்னைத்தானே காதலித்தார். ஃபினொச்சேயைச் சுற்றி அன்று செயற்பட்ட இராணுவத் தலைவர்களும் இதேமாதிரியாகத்தான் ஃபினொச்சேயை ஏமாற்றினார்கள். மகிந்த எதிர்கட்சிகளை மதிக்கவோ பொருட்படுத்தவோ இல்லை. அன்றைய சர்வஜன வாக்கெடுப்பின்போது ஃபினோச்சேயை எதிர்த்துப் போட்டியிட ஒரு போட்டியாளர் இருக்கவில்லை. ஆனால் மகிந்த ராஜபக்ஷ விற்கு எதிராகப் போட்டியிட்ட போட்டியாளர் மகிந்தவுடன் எந்தவகையிலும் சமப்படுத்த முடியாத ஒருவர் என மகிந்த தனக்குத் தானே பறைசாற்றிக் கொண்டார். மகிந்தவுக்கு எதிரான போட்டியாளர் அரச ஊடகங்கள் வாயிலாகப் பரிகசிக்கப்பட்டார். அரச தலைவர் பற்றிய நிலப்பிரபுத்துவ வாசிப்பிற்கு அமைய மகிந்த ராஜபக்ஷ ஓர் அரசனாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இருந்தார். அரசனுக்கே உரித்தான உயரம், மொத்தம், மீசை, குரல், போலியான கம்பீரம் ஆகிய இங்கு கூறப்பட்ட, கூறப்படாத அனைத்தும் மகிந்தவிற்கு உரித்தாக்கப்பட்டு இருந்தது. இத்தனை வாசிப்புகளுக்கு ஊடாக மகிந்த தனது போட்டியாளரை ஒரு நோஞ்சானாகவே சித்தரிக்க முயன்றார். தனது சகபாடிகளால் தனக்குச் சூட்டப்பட்ட அனைத்துப் பட்டங்களும் போலியானவை என மகிந்த தோல்வியுற்ற பின்னரே கற்றுக்கொண்டிருப்பார். நார்சிஸிட் மோசடிகளுக்கு மேலதிகமாக மகிந்த மேலும் மூவகை வியாதிகளால் பீடிக்கப்பட்டு இருந்தார். அவையாவன முட்டாள்தனம், மாயை, மற்றும் விகாரம் முட்டாள்தனம் என்பது தவறான நம்பிக்கைகள் காரணமாக வழிதவறப்பட்டமை. மாயை என்பது யதார்த்த உண்மை போலியாகத் தோன்றியது. விகாரம் என்பது இல்லாததும் உள்ளதுபோலத் தோற்றியமை. அதிகாரம் பற்றிய அதீத மதிப்பீடு இறுதிப் பிரகடனமாக இந்த மூவகை ஆக்கிரமிப்புக்களுக்கு இரையாவதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. உலகின் ஏனைய சர்வாதிகாரிகளும் இந்த சகலவிதமான உளநோய்களுக்கு உரிமையாளர்களாக இருந்தது உண்மை.

எவ்வாறாயினும் சகலவிதமான புலக்காட்சிகள் ஊடாகத் தற்போது ராஜபக்ஷவின் ஆட்சி நிறைவுபெற்றுள்ளது. தற்போது எமக்குப் புதிய ஜனாதிபதி ஒருவரும், புதிய அரசாங்கமும் கிடைத்துள்ளது. இப்புதிய நிலைமை பலருக்கு புரிந்துகொள்ள முடியாதுள்ளது. எமது புதிய ஜனாதிபதி ஒரு சாதாரண மனிதன். தான் அரசன் அல்ல என்பதை அவர் பலமுறை வலியுறுத்திக் கூறியுள்ளார். அதிமேதகு, உத்தமர், அதிஉத்தமர் ஆகிய சொற்றொடர்களை தன்னை விழிப்பதற்குப் பயன்படுத்த வேண்டாமென அவர் உறுதியாகக் கூறியுள்ளார். பிரதமர் டை, கோட் சூட் அணிபவர். ஆனால் கடந்தகாலம் முழுவதும் அரசுக்கு அணிவிக்கப்பட்ட குறுந்தேசியவாத ஆடைகளை பிரதமர் அணியவில்லை. அரசாங்கத்தின் இணக்கப்பாடு எண்ணிப்பார்க்க முடியாது. சகல தேசியவாத சக்திகளின் ஒருமைப்பாட்டை இங்கு காணமுடியும். இப்புதிய நிலைமையைப் புரிந்துகொள்வதற்கு எமது சிந்தனைக் கோலத்திலும் ஒரு பாய்ச்சலைப் பாயவேண்டி இருக்கிறது. அதாவது மாற்றம் தேவைப்படுகிறது. ஒரே வழிமுறைக்கு பழக்கப்பட்ட சிந்தனைமுறை மாற்றத்திற்கு உட்படுத்துவது இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இது வெறுமனே இடம்பெறுவதில்லை. மாற்று முகவர்களின் நடத்தையைப் புரிந்துகொள்வதன்மூலம் இது இடம்பெற வேண்டும். இது சமூக நிலைமாற்றமாகும். இந்த சக்திகள் அனைத்துமே பொது குறிக்கோளை மையமாகக் கொண்டே அணிதிரண்டன. அதாவது அரசுக்கு நல்லாட்சி மற்றும் ஜனநாயக



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்

www.asianews.it



**வெளிநாட்டு தூதுவர் சேவை இராணுவத் தலைவர்களின் பாலைவனத்தின் பசுந் தரைகளாக மாறியிருந்தன. இனங்களுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு சிவில் சமூகம் மேற்கொண்ட இந் நிகழ்ச்சித்திட்டங்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டன. சிவில் சமூகத்தை ராஜபக்ஷ ஆட்சி வெறுத்து ஒதுக்கியது.**

*சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள்*

ஆடைகளை அணிவிப்பதன்மூலம் மாத்திரம் பிரச்சினைகள் தீர மாட்டாது. அனைத்து தேசிய இனங்களையும் அரசுடன் ஒன்றிணைக்க வேண்டியுள்ளது. சட்டத்தின் ஆதிபத்தியத்தை அரசுக்கான வலுவூட்டலைச் செய்ய வேண்டும். தண்டனைகளில் இருந்து விலக்களித்தலுக்குப் பதிலாக குற்றவாளிகளை நீதிமன்றம் முன்னே ஆஜர்படுத்தப்பட வேண்டும். இவை அனைத்தும் இவ்வாறாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அரசு எதிர்நோக்கிய பிரதான பிரச்சினையும் எம்முன்னே உள்ளது. அதுவே தேசிய இனப்பிரச்சினையாகும். இத் தருணத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக இதனைச் செய்ய முடியும் என நாம் நம்புகின்றோம். அத்தகைய தீர்வு வழிமுறைக்கு அவசியமான பின்னணியை இச் சந்தர்ப்பத்தில் பூமியில் தயாரிக்கப்படுகிறது. இது மிகவும் சாதகமான நிலைமை என புதிதாகக் கூறவேண்டிய அவசியமில்லை.

ராஜபக்ஷ ஆட்சி நிலவிய காலகட்டத்தில் அரசின் சகல மூலைமுடுக்குகளிலும் கணவாயைப் போல ஒரு இராணுவ கட்டுப்பாடு உள்ளடங்கி இருந்தது. அரசியலை சமூக பொருளாதார, உளவியல் மற்றும் கலாசாரம் ஆகிய சகல துறைகள்மீதும் இராணுவத் தாக்கம் நிலவியது. வடக்கின் சிவில் சமூகம் செயலிழந்து இருந்தது. தென்னிலங்கையில் இராணுவ மயமாக்கல் மக்கள் போராட்டங்களை அடக்கியொடுக்குவதற்கு மாத்திரமல்லாது மக்களுடைய எண்ணங்களை செம்மையாக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டு இருந்தது. தேசத்திற்கு மகுடம் (தயட்ட கிருள) அத்தகைய ஒரு நிகழ்ச்சியாகும். பாடசாலை அதிபர்களுக்கு இராணுவப் பதவிப் பெயர்களையும், பட்டங்களையும் வழங்கி மற்றுமோர் நாடகம் ஆடப்பட்டது. பல்கலைக்கழக மாணவ சமூகத்தின் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட நிர்வாகிகளின் இராணுவமயமாக்கப்பட்ட மனோநிலையை பல்கலைக்கழகங்களில் கசிய வைப்பதற்கு தோல்வியுற்ற மற்றும் விகட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாட்டு தூதுவர் சேவை இராணுவத் தலைவர்களின் பாலைவனத்தின் பசுந் தரைகளாக மாறியிருந்தன. இனங்களுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு சிவில் சமூகம் மேற்கொண்ட இந் நிகழ்ச்சித்திட்டங்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டன. சிவில் சமூகத்தை ராஜபக்ஷ ஆட்சி வெறுத்து ஒதுக்கியது.

சிவில் சமூகங்கள் அதிதீவிர பொதுபல சேனாவின் தாக்குதல்களுக்கும் ஆளாகியது. உருவாக்கப்பட வேண்டிய நல்லிணக்கமானது அச்சம், சந்தேகமின்றி சமூகத்தில் நிலவிய திருப்தியின்மை இதில் இருந்து புலனாகிறது அல்லவா? ஏற்கனவே ஆயுதங்கள் இரகசியமான முறையில் ஒளித்து வைக்கப்பட்ட பல இடங்கள் தொடர்பான விஷயங்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன. இவை என்ன நோக்கத்திற்காக இவ்வாறு மறைக்கப்பட்டு இருந்தன என இதுவரை சரியான விளக்கம் வழங்கப்படவில்லை. அது பரமரகசியமாகவே இருக்கிறது. தேர்தல் நடைபெற்ற தினத்திற்கு மறுநாள் விடியற்காலை நடைபெற இருந்ததாகக் கூறப்படும் இராணுவச் சதி தொடர்பாகவும், இயல்பு நிலைக்கு மாறான சந்திப்புக்கள் இடம்பெற்றதாக உண்மைகள் வெளிவரத் தொடங்கி உள்ளன. இவை அனைத்தும் தொடர்பாக நோக்குகையில் புதிய அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள் இருப்பதை புதிதாகக் கூறவேண்டிய அவசியமில்லை. இந்த ஆபத்தான நிலைமை தற்போது மறைக்கப்பட்டு இருந்தாலும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகள் முன்வைக்கும் தருணத்தில் இருந்து இவற்றில் இவ் ஆபத்தான நிலைமைகள் இருப்பதை அம்பலப்படுத்தக் கூடியதாக உள்ளது. எனவே இக் கணப்பொழுதில் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டிய காலகட்டம் இதுவாகும் என்பதில் எதுவிதமான சந்தேகங்களும் கிடையாது. அரசாங்க அதிகாரம் கிடைத்தமையால் பெறும் திருப்தி மாத்திரமல்ல அதைத் தவறற்ற திசையில் வழிதவறி அழைத்துச் செல்வதாயின் சரியான திசையில் அது இட்டுச்செல்லப்பட வேண்டும். அதேசமயம் மக்கள் மத்தியில் புத்துணர்வையும், புத்துணர்ச்சியையும் தட்டியெழுப்பி இலாப நோக்கின்றி ராஜபக்ஷ ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவருமே இதைச் செய்ய முடியும். புதிய அரசாங்கத்திற்கான நியமனத்தின் பின்னர் தலைமைத்துவத்திற்கு வாழ்த்துப்பா எழுதும் முட்டாள் அறிஞர்களால் செய்ய முடியாது.






பேராசிரியர்
**சுமனசிறி லியனகே**

*பிரதமர் ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதி மைத்ரீபால சிறிசேன, மற்றும் முன்னைநாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க*

# பிரமுகர்களின் ஜனநாயகமும் பிரமுகர் அல்லாதவர்களின் ஜனநாயகமும்

ஜனாதிபதி தேர்தலுடனும், தேர்தலுக்குப் பின்னரும் குறிப்பிடத்தக்க அளவு ஜனநாயகத்திற்கான வாய்ப்பு மக்களால் பயன்படுத்தப்படுவது எமக்குத் தெரிகிறது. குறிப்பாக தேர்தலின் பின்னர் அது வெளிப்படுத்தப்படும் முறை சரியான முறையாக அமையாமல் இருக்கலாம். ஆனால், களவுகளுக்கும், படுகொலைகளுக்கும் எதிரான ஆர்ப்பாட்டங்களின்போது இதனை நாம் தெளிவாகக் காணமுடிகிறது.

அடுத்து அரசியல் தளத்திலேயே பிரச்சினை இருக்கிறது. அனைவரும் தற்போது மைத்திரிபால சிறிசேனவைச் சுற்றியும், 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தைச் சுற்றிவளைத்தும் குவிமையப்படுத்தப்படுகின்றனர். ஆனால், அடிமட்டத்தில் இந் நிலைமை வேறு வகையிலேயே அமைந்துள்ளது. அடிமட்டத்தில் தேர்தல் காலங்களில் முன்வைக்கப்பட்ட பல பிரச்சினைகள் உண்டு. அது ஓரளவு ஜேவீபி, மாதுலுவாவே சோபித்த தேரர் போன்றவர்களின் வழிகாட்டல்களின்கீழ் செயற்படுத்தப்பட்டன. எனவே நாம் இரண்டு மட்டங்களில் இந்தச் செயற்பாட்டை காண முடிகிறது. மேல் மட்டத்தில் அதாவது பாராளுமன்ற மட்டத்தில் ஓர் இணக்கப்பாடும், மற்றைய தளத்தில் விசேடமாக எதிர்க் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவயும் காண முடிகிறது.





www.lawandsocietytrust.blogspot.com



**100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் முன்வைக்கப்பட்டு இருப்பது மிக முக்கியமானதாகும். இதில் ஒரு விடயம், அதாவது முதலாவது விடயம் அரசு எவ்வாறு மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற பிரச்சினையாகும்.**

*பிரதமர் சத்தியப் பிரமாணம் செய்தல்*

திகதி குறிப்பிடப்பட்டு சிற்சில யோசனைகள் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் முன்வைக்கப்பட்டு இருப்பது மிக முக்கியமானதாகும். இதில் ஒரு விடயம், அதாவது முதலாவது விடயம் அரசு எவ்வாறு மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற பிரச்சினையாகும். எனது யோசனைப்படி, அரசியலமைப்பை மாற்றியமைக்கும் விடயத்தை நாம் தவிர்க்க முடியாது. அடிப்படையில் 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு முன்னர் நிலவிய நிலைமை, அதாவது சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் அதற்கு மேலதிகமாக ஜனாதிபதியின் சில அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற இரு விடயங்கள் இதற்கு உரித்தாகும். குறிப்பாக தேர்தல் முறையை மாற்றியமைக்கும் வழிமுறை நடைமுறைப்படுத்தப்படும் எனத் தோற்றவில்லை. இதற்கு சுயாதீன அரசியலமைப்புத் திருத்தங்கள் அதேசமயம் அரசாங்க சேவை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு இதன்மூலம் பொதுமக்கள் திருப்தியடைகின்றனர் எனக் கூறமுடியாது.

### குறைநிரப்பி

இங்கும் ஒரு புதிய பிரச்சினையாகும், சுயாதீன ஆணைக்குழுக்கள் பற்றிய கருத்து. இத்தகைய ஆணைக்குழுக்கள் 1972 க்கு முன்னர் சோல்பரி அரசியலமைப்பின் கீழும் நிறுவப்பட்டன. அச் சந்தர்ப்பத்தில் சுயாதீன ஆணைக்குழுக்கள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட முன்வைக்கப்பட்ட பிரச்சினை அதிகாரிகளின் அதிகாரத்தைப் பற்றியதாகும். ஒரு வகையில் பொலிசாரும் அரசசேவையில் மிக உயர்மட்டத்தில் அதிகாரம் செலுத்துவோரின் அதிகாரமும் என அதனை அறிமுகப்படுத்த முடியும். அடிப்படையில் ஆணைக்குழுக்கள் மூலம் அமுல்படுத்தப்பட்ட ஆட்சி அதிகாரம் பரந்துபட்ட மக்கள் பகுதியினருக்கு அடையாளப்படுத்த முடியும். அடிப்படையில் ஆணைக்குழுக்களால் நிர்வகிக்கப்பட்ட, பரந்துபட்ட மக்கள் பிரிவினருக்கு அதிக அளவில் நிவாரணம் வழங்கப்படவில்லை. அவற்றின் அதிகாரம் காரணமாகவே இலங்கை சமசமாஜக் கட்சி போன்றதொரு கட்சி ஆரம்பக் காலத்தில் இருந்து ஆர்ப்பாட்டம் செய்தது. இந்த அதிகாரித்துவ அதிகாரம், அதாவது கச்சேரி முறைமையின் காரணமாக மேற்படி அதிகாரிகள் மூலம் மக்களுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்கள், இடையூறுகள் என்பவற்றில் இருந்து அம் மக்களை விடுவிக்க வேண்டும் என்ற கருத்து இதற்குள் இருந்தது. எனவே சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்கும் பிரேரணையும் அந்த மக்களின் அழுத்தங்களை வகைப்படுத்துவது எப்படி என்ற விடயமும் முக்கியமானது. ஏனெனில் நாம் அறிந்த மட்டில் இந்த அதிகார சக்திக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் கடந்த ஆண்டுகளில் அரசியல்வாதிகளின் அதிகாரத்திற்கு கட்டுப்பட நேர்ந்தது. இதன் காரணமாக புதிய ஆணைக்குழுக்களில் மக்களின் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துவது என்பது மீளச் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் பழைய ஆணைக்குழுக்களுக்கு ஒரு துறையிலேனும் பலவீனம் இருந்திருந்தால் அதேபோல உத்தேச ஆணைக்குழுக்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்திருக்கலாம்.

இதன் மூலம் அனேகமாக சாதாரண மக்களே துன்பங்களுக்கு ஆளாகின்றனர். உதாரணமாக அரசியல்வாதியின் நம்பிக்கைக்குரியவர்கள் கைதுசெய்யப்பட்டால் அவர்கள் சுதந்திரமாக விடுவிக்கப்படுவதோடு, எதிர்தரப்பினர் கைதுசெய்யப்படல் அதிக அளவில் இடம்பெற்றன. அரச சேவையிலும் இத்தகைய அநீதிகள் இடம்பெறுகின்றன. அப்போது இவ்விரண்டையும் இல்லாதொழிக்கும் பொலிஸ் ஆணைக்குழுக்கள் மற்றும் அரச ஆணைக்குழு ஒன்று எவ்வாறு நியமிக்கப்பட வேண்டும் என்பதே பிரச்சினையாகும். மேற்படி ஆணைக்குழுக்களுக்கு மக்களின் பங்களிப்பும், தனிநபர்களின் பங்களிப்பும், தொழிற்சங்கங்களின் பங்களிப்பும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அடிப்படையில் அரசியலமைப்பு திருத்தம் கலந்துரையாடலுக்கு உள்ளடக்கப்பட வேண்டும்.

### அடிப்படைப் பிரச்சினைகள்

அரசியலமைப்பின் திருத்தத்தினுள் கரிசனை காட்டுவதற்கு முன்மொழியாவிட்டாலும், கரிசனை காட்ட வேண்டிய முக்கிய பிரச்சினையை நாம் இப்போதே அடையாளம் காணமுடியும். குறிப்பாக தேர்தல் இயக்கத்தின்போது தமிழ் மக்களின் ஜனநாயக அபிலாஷைகளை வெளிப்படுத்தியதன் காரணமாக, தோன்றிய தவிர்க்க முடியாத பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினை இன்று சுட்டிக்காட்ட வேண்டிய ஒரு பிரச்சினையாக முன்வந்துள்ளது. எனவேதான் ஐக்கிய அரசு என்ற சட்டகத்துக்குள் இப்பிரச்சினைக்கு நாம் தீர்வுகாண முயலவேண்டும் என்ற ஒரு திருத்தத்தை அரசாங்கம் எதிர்பார்ப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். அதேசமயம் வடக்கு இராணுவ மயமாக்கலுக்கு கட்டாயமாக மட்டுப்படுத்துகின்றனர் என்ற கருத்தை வெளிநாட்டு அமைச்சர் இந்தியாவின் பிரதமரான நரேந்திரமோடியை சந்தித்தபோது குறிப்பிட்டார். தற்போது வடக்கு கிழக்கு மாகாணங்களின் இராணுவ ஆளுநர்களை நீக்கி சிவில் ஆளுநர்களை நியமிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்போது இந்த அரசியலமைப்பு திருத்த நடவடிக்கையில் அத்தகைய விடயங்கள் எவ்வாறு உள்ளடக்கப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்ள



photo by Lahiru (CPA)

அறிஞர்களின் கலந்துரையாடல்

**மேற்படி ஆணைக்குழுக்களுக்கு மக்களின் பங்களிப்பும், தனிநபர்களின் பங்களிப்பும், தொழிற்சங்கங்களின் பங்களிப்பும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அடிப்படையில் அரசியலமைப்பு திருத்தம் கலந்துரையாடலுக்கு உள்ளடக்கப்பட வேண்டும்.**

வேண்டும். 100 நாள் வேலைத்திட்டத்தில் பாரிய அரசியலமைப்பு திருத்தங்களுக்கு உள்ளடக்கப்பட வேண்டிய தேசிய பிரச்சினை தொடர்பாக செயற்படுவதற்கு பல இடையூறுகள் இருக்கலாம். அது அவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டுமென உத்தேசிக்கப்படவில்லை. ஆனால், இந்த 100 நாள் நிகழ்ச்சித்திட்டம் எமது தேர்தல் பெறுபேறுகளை ஞாபகமூட்டி மீளவும் மாற்றியமைத்தல் வேண்டும். ஏனெனில், உண்மையான மக்கள் அபிலாஷைகளே தேர்தல் பெறுபேறுகள்மூலம் காணக்கூடியதாக உள்ளது. இந்த அடிப்படையில் 100 நாள் மறுசீரமைப்புக்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்கையில் கட்டாயமாக தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவும் ஏதோவொரு வகையிலான தீர்வை நோக்கிய ஒரு நிகழ்ச்சித்திட்டம் அவசியமாகிறது. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் ஒற்றை ஆட்சி என்ற பதத்தை இச் சந்தர்ப்பத்தில் மாற்றியமைக்க முடியாமல் இருக்கலாம். அவ்வாறாயினும் எத்தகைய மறுசீரமைப்புக்களை எவ்வாறு செய்வது என்பது பிரச்சினையாகும். இந்தச் சட்டகத்தின் உள்ளே இருந்துகொண்டு இரண்டாவது சட்டவாக்கச் சபை பற்றிய கருத்தைக் கொண்டுவர முடியுமென எனக்குத் தோன்றுகிறது. குறிப்பாக ஜி.ஜி.பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இரண்டாவது சட்டசபை உருவாக்கப்பட முடியும். இதன்மூலம் ஒற்றை ஆட்சி முறையின்கீழ் பௌதீகமல்லாத அதிகாரப் பங்களிப்பை ஏற்படுத்த முடியும். ஆனால், இதன் பிரதிநிதித்துவம் எவ்வாறு இடம்பெறுகிறது என்பது மிக ஆழமான கலந்துரையாடல்மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த விடயங்கள் அரசியலமைப்புத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். அரசை ஜனநாயக மயமாக்குவது எப்படி என்ற விடயத்தில் இது அடிப்படை பிரச்சினையாகும்.

### நல்லாட்சி

அடுத்த விடயம் நல்லாட்சி பற்றிய பிரச்சினையாகும். தேர்தல் வழிமுறையில் மிகவும் கவரப்பட்ட பிரேரணை நல்லாட்சி பற்றிய விடயம் என்பது எனது கருத்தாகும். ஜனநாயகம் பற்றிய பிரச்சினையை விட உண்மையில் பரந்துபட்ட மக்கள் பிரிவினர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக ஊழல்கள் பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கே அடிப்படையில் வாக்களித்தனர். கண்ணெதிரே தோன்றிய ஊழல் நிலைமைகளின்கீழ் இத் தேர்தல் நடந்தது என்பதை யாவரும் அறிவர். உண்மையில் ஜனநாயகத்தின் அடிப்படை மைத்திரிபால சிறிசேனவிற்கு பிரச்சினை வடக்கிலும் கிழக்கிலும் குறிப்பிட்ட ஓரளவு சிறுபான்மையினர் வாழும் பிரதேசங்களிலுமேயே ஒரு பிரச்சினையாக இருந்தது.

நல்லாட்சி பற்றிய பிரச்சினை முக்கியமானது. ஆனால் இதனை விழிக்கும்போது குறைந்த வடிவத்திலேயே அணுகப்பட்டது. குறிப்பாக அரசாங்கத்தின் பிரதான பகுதியினர் இது விடயமாக ஒடுங்கிக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மைத்திரிபால சிறிசேனவிற்கு எனவே, தற்போது ஒன்றில் தற்போதைய பொறிமுறையை வலுவூட்ட வேண்டும் அல்லது இப் பிரச்சினைக்கு குறிப்பிட்ட பொறிமுறையை வலுவூட்ட வேண்டும் அல்லது இப் பிரச்சினையை ஒழுங்குமுறையில் அணுகக் கூடிய வகையில் புதிய பொறிமுறையை சிருஷ்டிக்க வேண்டும்.

### வர்க்கப் பிரச்சினை

மூன்றாவது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை பொருளாதாரமாகும். மூன்றாவது என்று கருதும்போது குறிப்பிட்ட வினாக்களைவிட முக்கியத்துவத்தில் குறைந்தது எனக் கருதப்படவில்லை. பொருளாதார பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இருக்கும் பலவீனமான பகுதியைக் காணமுடியும். 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முக்கியமானதும், விசேடமானதுமான கனிம எண்ணெய் மற்றும் மின்சாரம் உட்பட அத்தியாவசியமான பத்துப் பொருட்களின் வரிக் குறைப்பை உதாரணமாக எடுக்கலாம். இந்த வரிக் குறைப்புடன் குறித்துரைக்கப்பட்ட வருமான வரி யோசனைகளை முன்வைக்காவிட்டால் கட்டாயமாக வரவுசெலவுத் திட்டத்தின் குறைப்பு தேசிய வருமானத்தில் நூற்றுக்கு இரண்டு சதவீதம் அதிகரிக்க இடமுண்டு. அதாவது இன்று இருக்கக் கூடிய நூற்றுக்கு ஐந்து அல்லது ஆறின் அளவு சுமார் 8 வரை உயர்வதற்கான சந்தர்ப்பம் உண்டு. எனவே, இவ்வாறு ஏற்பட்டால் அடுத்த பாரதூரமான பிரச்சினை உருவாகும். குறிப்பாக பணவீக்கம் பற்றிய பிரச்சினையை எடுப்போம் இந்தப் பற்றாக்குறையை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்ற பிரச்சினை, அதாவது கடன் எடுப்பதா இல்லை வேறு வகையில் உண்டா என்ற பிரச்சினை தோன்றுகிறது.

அடுத்ததாக வட்டி விகிதாசாரம் உயரும் பிரச்சினை மற்றும் வெளிநாட்டு செலவு வீதாசாரம் வீழ்ச்சியடையும் பிரச்சினையும் உண்டு. இப் பிரச்சினைகளை விழிப்பதாயின் அரசாங்கம் சக்திவாய்ந்த வரவுசெலவைக் கருத்திற்கொண்டு வருமானத்தையொட்டி கவனத்திற்கொள்ள வேண்டும். இப் பிரச்சினைக்கு அரசாங்கம் சமர்ப்பித்த யோசனைகளிடையே ஒரேயொரு யோசனை மாத்திரமே உண்டு. அதுதான் ஊழலையும்,







/www.gettyimages.com

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இடைக்கால வரவு - செலவு அறிக்கையை சமர்ப்பிக்கின்றார்.

**பொருளாதார பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இருக்கும் பலவீனமான பகுதியைக் காணமுடியும். 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முக்கியமானதும், விசேடமானதுமான கனிம எண்ணெய் மற்றும் மின்சாரம் உட்பட அத்தியாவசியமான பத்துப் பொருட்களின் வரிக் குறைப்பை உதாரணமாக எடுக்கலாம்.**

வீண்விரயத்தையும் தடுப்பதற்கான யோசனை. அது சிறந்ததொரு யோசனையாகும் அதேவேளை ஊழலையும் வீண்விரயத்தையும் தடுக்கும் பெறுபேறுகளை ஒருமுறை மாத்திரம் கிடைக்கச் செய்யும் வழிமுறையுமாகும். இவை தொடர்ச்சியாக பெறும் பெறுபேறு அல்ல. ஊழலையும், மோசடிகளையும் நிறுத்தியவுடன் அதன் பெறுபேறுகளை பெறமுடியுமாயினும் அதன் பின்பு அது கிடைக்க மாட்டாது. ஊழலையும், வீண்விரயத்தையும் இல்லாதொழித்தல்மூலம் அவ்வளவு பாரியளவு நிதியை ஈடுசெய்ய முடியாது என்பதும் ஓர் மேலதிக விடயமாகும். நிவாரணங்களை தொடர்ச்சியாக வழங்குவதாயின் வருமான வரிக் கொள்கையில் எந்த மாற்றத்தைச் செய்வது என்பதனை அரசாங்கம் முன்மொழிய வேண்டும். இவ்விடத்தில் வருமான வரிக் கொள்கையை மாற்றுதல், இலங்கையின் வருமானவரிக் கொள்கை, அடிப்படையில் மறைமுக வரிகளுக்குக் கூடிய கவனம் செலுத்துவதாகும். முக்கியமான பொருட்களின் விலை குறைக்கப்பட்டதோடு, கட்டாயமாக மறைமுகமான வரி முக்கிய விடயமாகும். ஆகவே அதற்கு ஏற்றவகையில் குறிப்பாக வருமானம் பெறுவோரின் உயர்மட்ட வருமானத்தைப் பெறுவோரின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். அவர்களின் வர்த்தக கணக்குகளை அறிமுகம் செய்வது அத்தியாவசியமாகும். இது வர்க்கப் பிரச்சினையோடு பின்னிப் பிணைந்துள்ளது.

### பிரமுகர்களின் அரசியல்

100 நாள் வேலைத்திட்டத்துடனும் அதனுடன் ஒன்றிணைந்த ஆர்ப்பாட்டங்களிலும் நீதியை நிலைநாட்டுவது பற்றிய கருத்தே இவ் ஒப்பந்தங்களிலும் ஏனைய மிரட்டல்களுக்கும் எதிராக ஒரு போராட்டத்தை நடத்தியே நீதியை நிலைநாட்டிக் கொண்டனர். பிரமுகர்களின் நியாயம் பற்றிய பிரச்சினையே அடிப்படையாக எழுந்துள்ளது. பிரசித்தியடைந்த பிரபல்யம் வாய்ந்த நபர்கள் காரணமாக சரத் பொன்சேக்காவின் சிவில் உரிமைகளை வழங்கும் பிரச்சினை உடனடியாகத் தோன்றிய நியாயமான பிரச்சினையாகும். திருமதி சிராணி பண்டாரநாயக்காவின் சட்டத்தரணிகளிடம் இருந்து தோன்றும் பிரச்சினை இத்தகையதே. மூன்றாவதாக ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைபற்றிய கண்டறிதலாகும். இப்பிரச்சினைகள் அனைத்துமே ஜனநாயகத்துடன் தோன்றிய பிரச்சினைகள் என்பதில் எதுவிதச் சந்தேகமும் கிடையாது. அந்தந்தப் பதவிகளுக்கு இவர்கள் தகுதியானவர்களா என்பது மற்றுமொரு பிரச்சினையாகும். ஆனால், அது வேறொரு பிரச்சினையாகும். உதாரணமாக சிராணி பண்டாரநாயக்க அவர்களே 18 ஆவது அரசியல் திருத்தத்திற்கு சட்டபூர்வமான மார்க்கத்தைத் திறந்து வைத்தார். கடந்த காலத்தில் நாம் அறிந்த அநீதிக்கு உட்பட்ட பல பிரமுகர்கள் இருக்கின்றமை இங்கு அடிப்படை பிரச்சினையாகும். உதாரணமாக சில மாணவர்கள் கொலையுண்டனர். தமிழர் போராட்டத்தில், போரின்போது மேற்கொள்ள முடியாத செயற்பாட்டாளர்கள் காணாமற்போகச் செய்யப்பட்டுள்ளனர். தமிழ் மற்றும் வேறு சிறைக் கைதிகள் குற்றச்சாட்டுக்கள் இன்றி 10, 15 வருடங்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

அடுத்ததாக ஜனநாயகத்திற்கு பாரிய தாக்கமான பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கின்றது. இந்த 100 நாட்களுக்குள் ஜனநாயக அபிலாஷைகளை அமுலாக்குவதாயின் கடந்த அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்ட பிரமுகர்கள் அல்லாத பகுதியினருக்கு நியாயத்தை வழங்குவது பற்றிய ஒரு பிரச்சினை மிகத்தெளிவாக முன்னெடுத்தல் அவசியமாகும். அது கைதுசெய்யப்பட்டோருக்கு என்ன நடந்தது? கைது செய்யப்பட்டோர் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் உள்ளனரா? அல்லது கொலை செய்யப்பட்டனரா? அல்லது விடுவிக்கப்பட்டுள்ளனரா? சிறைக்கூடங்களில் ஏன் கொலை செய்யப்பட்டனர்? அவற்றிற்குப் பின்னால் இயங்கியவர்கள் யார்? என்பன பற்றி பாரதூரமாக கவனத்திற்கொள்ள வேண்டி உள்ளது.

ஒருவர் குறிப்பிட்டதுபோல உலகம் ஒரு வங்கியாயின் தற்போது அரசு இடையீடு செய்து உலகை காப்பாற்றி இருக்கும். குறிப்பாக சுற்றாடல் போன்ற ஒரு பிரச்சினையைப் பற்றி இத்தகைய ஒரு கதை உண்டு. எமது நாட்டில் ஊழலுக்கு எதிரான நல்லாட்சி என்ற பிரச்சினை மிகச் சிறந்த பிரச்சினையாகும். ஆனால் எம் முன்னே உள்ள பிரச்சினைதான் வேறுவகையில் கூறுவதாயின் சொத்துக்களை கொள்ளையிடுதல் பற்றிய பிரச்சினை கடந்தகாலம் முழுவதிலும் இருந்தது. தற்போது அப் பிரச்சினையை கூடுதலாக எவரும் முன்வைப்பதில்லை. இப் பிரச்சினைகளை எழுப்புவதும், பிரமுகர்களுக்கு ஏற்படும் அநீதியோடு தொடர்புபடுத்துவதற்கேயாகும்.

எனவே மிகவும் தெளிவாக 100 நாட்களுக்குள், ஜனநாயகத்திற்கு அமைய ஒரு திருத்தம் அமுலாக்கப்படுமேயாயின் இனப் பிரச்சினையோடு குற்றச்சாட்டுக்கள் இன்றி இருக்கும் சிறைக் கைதிகளை விடுவித்தல், அதேபோல பல்வேறு வகைகளில் காணாமற்போனோருக்கு என்ன நடந்தது என்ற பிரச்சினை உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இதில் உள்ளடக்க வேண்டியுள்ளது. எனது யோசனைப்படி ஜனநாயகம் பற்றிய பரந்த

www.twitter.com



**100 நாள் வேலைத்திட்டத்துடனும் அதனுடன் ஒன்றிணைந்த ஆர்ப்பாட்டங்களிலும் நீதியை நிலைநாட்டுவது பற்றிய கருத்தே இவ் ஒப்பந்தங்களிலும் ஏனைய மிரட்டல்களுக்கும் எதிராக ஒரு போராட்டத்தை நடத்தியே நீதியை நிலைநாட்டிக் கொண்டனர். பிரமுகர்களின் நியாயம் பற்றிய பிரச்சினையே அடிப்படையாக எழுந்துள்ளது.**

*ஜனாதிபதி மைத்ரீபால சிறிசேன முன்னிலையில் புதிய பிரதம நீதியரசர் சத்தியப் பிரமாணம் செய்கிறார்.*

ஒரு இடைவெளி தற்காலிகமானதல்ல. அது நீண்டகால விடயமாகும் என்பதை நாம் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாம் அறிந்த மட்டில் புதிதாக ஓர் அரசு அதிகாரத்திற்கு வரும்போது ஏதோவொரு வகை நிவாரணம் ஏற்படுத்தப்படுகிறது. அத்தோடு ஒரு நிலைமாறும் காலத்திலேயே நாம் தற்போது நகர்ந்து கொண்டிருகிறோம். நிலைமாறும் காலம் நீடிக்கப்பட முடியாதென்பதை இதன் மூலம் உணர்த்தப்பட முடியாது.

### நவ தாராளவாதமும் ஜனநாயகமும்

ஓய்வுகாலம் நீடிக்கப்படுமா என்பது பொருளாதாரம் தொடர்பான நவ தாராளவாதக் கொள்கைகளில் இருந்து இந்த அரசாங்கம் விடுபடத் தயாரா என்ற விடயத்திலேயே ஓய்வுகாலம் நீடிக்கப்படுமா என்பது தீர்மானிக்கப்படுகிறது. அதேசமயம் ஜனநாயகத்தினதும் குறிப்பாக பிரமுகர்கள் அல்லாத ஜனநாயகம் தொடர்பான பிரச்சினைகள் முன்வைக்கப்படுமா என்ற பிரச்சினை இங்கு முக்கியமானது. பிரமுகர்கள் அல்லாத பகுதியினர்மீது சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமையை பிரமுகர்கள் பிரிவிற்கு மாற்றுவதற்கும் இந்த அரசாங்கம் தயாரா என்ற அடிப்படைப் பிரச்சினை இங்கு எழுகிறது. இது வருமானத்துறையில் பாரியதொரு பிரச்சினையாகும்.

இந்த அரசாங்கம் அடிப்படையில், குறிப்பாக ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திற்கு முதலாளித்துவ தாக்கம் கொண்டிருக்கக் கூடும் என்பது தர்க்கரீதியானது. குறிப்பாக பிரதமர் திட்டஅமுலாக்கல் அமைச்சையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கின்றார். கலாநிதி ஹர்ஷத சில்வா அதன் துணை அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார். பேராசிரியர் கே.லியனகே செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனை நாம் தெளிவாகக் காணமுடிகிறது. ஷரித்த ரத்வத்த போன்றவர்கள் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் அத் தாக்கங்கள் உறுதிப்படுத்தப்படுகின்றன. இதற்கமைய நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைகளையே இந்த அரசாங்கம் பின்பற்றுகிறது என்பது தெளிவு.


இங்கு கூறப்படும் நிவாரணங்கள் இத்தகைய கொள்கைகளின்கீழ் நீண்டகாலமாக செயற்படுத்த முடியாதென்பதை நான் எண்ணவில்லை. நிவாரணங்கள் வழங்கப்பட மாட்டாதென இதன்மூலம் கருதப்படவில்லை. எனினும் அவ்வாறு வழங்கப்படும் நிவாரணங்கள் நீண்டகாலம் பராமரிக்க முடியாதென நான் கூறுகிறேன். குறிப்பாக உலகச் சந்தையில் எண்ணெய் விலையில் மாற்றம் ஏற்பட்டால் அதனை எவ்வாறு தாக்குப் பிடிப்பது என்ற பிரச்சினை பாரதூரமாக இடம்பெறுகிறது. நவதாராளவாத பொருளாதாரக் கொள்கையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்கையில் தோன்றும் பிரச்சினைதான் கடந்த அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பட்டதுபோல பொதுமக்களின் எதிர்ப்பு தோன்றுவது.

அப்போது உண்மையிலேயே ஜனநாயகம் பற்றிய பிரச்சினை மீண்டும் இவ்விடத்தில் தொடர்புபடுத்தப்படுகிறது. குறிப்பிட்டதொரு நாட்டில் ஜனநாயகம் குறுக்கமடையும்போது ஒடுக்கும் முறையும், அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு பொதுமக்கள் எவ்வளவு தூ ரம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்ற பிரச்சினையிலேயே அடிப்படையில் தங்கியுள்ளது. உதாரணமாக றொஷான் சாணக்க போன்றோர் சுதந்திர வர்த்தக வலயத்தில் எதிர்ப்பியக்கத்தை ஆரம்பித்திருக்காவிட்டால் அவர்கள் இவ்வளவு துரிதமாக இந்த உலகைவிட்டு சென்றிருக்க மாட்டார்கள். ரத்துபஸ்வெல மக்கள் குடிநீர் கோரி நடத்திய போராட்டத்தை முன்னெடுத்திருக்காவிட்டால் ரத்துபஸ்வெல பிரதேசத்தின் மூன்று இளைஞர்கள் கொலையுண்டிருக்க மாட்டார்கள். மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்காவிட்டால் மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்க மாட்டார்கள். அதேசமயம் அம் மாணவர்கள் கொலையுண்டு இருக்கவும் மாட்டார்கள். எனவே ஜனநாயகம் பற்றிய பிரச்சினையின் காவற்கல் வெறுமனே அரசாங்கத்தின் இயல்புநிலை மாத்திரமல்ல. பொருளாதாரக் கொள்கைகள், சமூகக் கொள்கைகள், இனப் பிரச்சினைக்கு ஏற்படும் எதிர்ப்பு அரசாங்கம் அதனை எவ்வாறு எதிர்க்கின்றது என்ற பிரச்சினையோடு பின்னிப்பிணைந்துள்ளது. பொருளாதாரத் தளத்தில் இச்சீரமைப்புக்கள் பயனுறுதிவாய்ந்த முறையில் ஈடுபடுத்தப்படுவதாக தோன்றவில்லை. பாரிய எதிர்ப்புக்களின் மத்தியில் குறிப்பாக மைத்திரிபால சிறிசேன அவர்களின் கொள்கைகளின்படி கல்வி தொடர்பான யோசனைகள் தீர்க்கமானவை. அரச பல்லைக்கழகங்களிலும் பணம் அறவிடுவதற்கு மீண்டும் இறுக்கமாக யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இதனால் மாணவர்கள் அவற்றை எதிர்த்து பாரிய கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த மாணவர் போராட்டங்களை எதிர்த்து செயற்படுவது? அடுத்து தனியார் பல்கலைக்கழகப் பிரச்சினைகளின்போது அரசாங்கம் எவ்வாறு செயற்படப் போகிறது? சுகாதார சேவையில் உள்ள தனியார்மயமாக்கல் பற்றிய பிரச்சினையையொட்டி அரசாங்கம் எவ்வாறு சதித்திட்டங்களைத் தீட்டுகிறது? குறிப்பாக இக்கொள்கை நவதாராளவாதத்திற்கு மிகச் சிறந்தமுறையில் இணைக்கப்படுவதனால் ஜனநாயகம் பற்றிய இப்பிரச்சினை மீண்டும் புதிதாகத் தோன்றுவதற்கான வாய்ப்புக்கள்






**2015.01.30 ஆந் திகதி தொழில்சார் வாண்மையாளர்களின் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற சுயாதீன ஆணைக்குழுக்களை சிறப்பாக வலுவூட்டுவது பற்றிய பொதுமக்கள் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்**



# தேர்தல் ஆணைக்குழுவை வலுவூட்டுவோம்

– சட்டத்தரணி **எல்மோ பெரேரா**

2001 இல் அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தத்தின்மூலம் எதிர்பார்க்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுதல், அரசியலமைப்பிற்கான 18 ஆவது திருத்தத்தின்மூலம் இல்லாதொழிக்கப்பட்டது. அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தத்திற்கு அமைய அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய ஜனாதிபதி தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும். அதன் ஆயுள்காலம் 5 ஆண்டுகளாகும். மேற்படி ஆணைக்குழுவினால் தேர்தல் ஆணையாளர் நியமிக்கப்படுகின்றார். சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு பொலிசாரின் நெறிப்படுத்தும் அதிகாரம் இந்த தேர்தல் ஆணைக்குழுவிற்கு உண்டு. தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை 5. நானும் சிலகாலம் மேற்படி தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராக கடமையாற்றி உள்ளேன்.

எனினும், ஆணைக்குழுவின் தவிசாளர் பதவிக்காக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குற்றம் சுமத்தினார். இவ்வாறாக நானாவித காரணங்களை முன்னிட்டு தேர்தல் ஆணைக்குழு பரந்துபட்ட அதிகாரம் கொண்ட ஆணைக்குழுவாக நிலைமாற்றம் பெறவில்லை.

அலரி மாளிகை என்பது அரச சொத்தாகும். அதன் பாதுகாப்புக்கு எனக் கூறி ஆயிரம் பொலிசார் சேவையில் ஈடுபடுத்தப்படுவது சட்டத்திற்கு உடன்பாடானதா? ஆனால் அக் காலகட்டத்தில் பதவி வகித்த தேர்தல் ஆணையாளருக்கு இருந்த பயம் காரணமாக சட்டம் அமுலாக்கப்படவில்லை. ஆணைக்குழுவை வலுவாக்கம் பெறச் செய்வதற்கு அரசியலமைப்பிற்கான 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்படுவதற்கான தயாரிப்பு நிலை உள்ளதென அறிகிறோம்.


ஆணைக்குழுவில் 9 உறுப்பினர்கள் பதவி வகிக்கவேண்டும் என நான் பிரேரிக்கின்றேன். ஆனால் உறுப்பினர்களுக்கான நியமனங்கள் ஒரு தலைபட்சமாக இடம்பெறும்போது அதன் சுயாதீனம்பற்றி பல பிரச்சினைகள் எழுகின்றன. நியமனம் பெற்ற நபர்கள் கட்சிசார்பற்றவர்களாக மாறுவதைத் தடுப்பதற்கு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை நியமனம் செய்கையில் இப் பிரச்சினை எழுகிறது.

பல்வேறு துறைகளில் பணியாற்றும் கட்சிசார்பற்ற மூத்த அதிகாரிகளின் ஒத்துழைப்பு இதற்குப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆணைக்குழு நிறைவேற்றுத் துறையின் இறப்பர் முத்திரையாக மாறுவதைத் தடுப்பது அத்தியாவசியமாகும்.



photo by Lahiru (CPA)



# மனித உரிமைகள் ஆணைக்குழுவை வலுவூட்டுதல்

– சட்டத்தரணி **எஸ்.ஜீ.புஞ்சிஹேவா**

மனித உரிமைகள் ஆணைக்குழு பல ஆண்டுகளாக செயற்படுகின்றது.

அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது அது தொடர்பாக எந்தவொரு பிரஜையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன் சென்று முறைப்பாடு செய்யலாம். ஆனால் அதன் செயற்பாட்டிற்கு அமைய, அதன்மூலம் பிரஜைகளுக்கான நீதியை நிறைவேற்றிக் கொள்வது கஷ்டமான நடவடிக்கையாக மாறியுள்ளது.

தமது உரிமைகள் மீறப்பட்டுள்ளமை குறித்து உயர்நீதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்யும் ஆற்றல் பிரஜைக்கு இல்லை. ஏனெனில் அது செலவு மிகுந்த ஒரு நடவடிக்கையாகும்.

இலங்கைப் பிரஜைகளின் மொழி உரிமை மீறப்பட்டபோது அது தொடர்பாக மாற்றுக் கொள்கைளுக்கான நிலையத்தின் இடையீடு காரணமாக கடந்த காலத்தில் சுமார் 300 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால் ஒருசில முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைக்கு எடுக்கப்பட்டன. கடந்த காலங்களில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பாரிய எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றை விசாரணை செய்யும் நடவடிக்கைகள் எத்தகையன என்பதுபற்றி விளக்கம் இல்லை. ஒருமுறை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வினைத்திறன் பிரிவை ஏற்படுத்தி அத்துறையினருக்கு சிறந்த பயிற்சியும் வழங்கப்பட்டது.

ஆனால் மேற்படி பயிற்சியைப் பெற்றோர் தற்போது எங்கிருக்கிறார்கள் என எம்மில் எவருக்குமே தெரியாது. இவ்வாறாக பல்வேறு காரணங்களினால் முறைப்பாடுகள் ஒன்றுசேர்ந்த வண்ணம் உள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிக்குழுவினரும் அதன் வகைப்பொறுப்பை நிறைவேற்றும் இயல்புக்கு அமைய துரித மாற்றம் தேவைப்பட்டுள்ளது தெளிவாகின்றது.

ரத்துபஸ்வெல, நீர்கொழும்பு, சிலாபம் போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற மக்கள் போராட்டங்களில் நிகழ்ந்த மனிதக் கொலைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு திருப்திகரமான முறையில் இடையீடு செய்யவில்லை.

எமது நாட்டின் பிரஜைகளும் மற்றும் நிறுவனக் கட்டமைப்பும் நீண்டகாலமாக பழக்கப்பட்டுள்ள வழிமுறை இதனால் சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் ஆணையாளரும், தேர்தல் திணைக்களத்தின் தமக்கு உரித்தான அதிகாரங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்க முயற்சித்தபோது, இங்கு ஒப்புநோக்கிப் பார்ப்பது பொருத்தமானது. அரசியலமைப்பின் 16, 17, 18 உறுப்புரைகளுக்கு அமைய ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய அவர் செயற்பட்டுள்ள வழிமுறை இங்கு தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. தேர்தல் ஆணைக்குழுவொன்று இல்லாவிட்டாலும், அரசியலமைப்பின்மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டால், பிரஜைகளின் அதிகாரங்கள் உறுதிப்படுத்தக்கூடிய வகையில் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகளை பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் இராணுவ அதிகாரத்தைப் பயன்படுத்தி, பெறுபேறுகளை விகாரமடையச் செய்யும் முயற்சியை தேர்தல் ஆணையாளர் தோல்வியுறச் செய்தார். தேர்தல் ஆணையாளர் தமக்குரித்தான அதிகாரங்களுக்கு அமைய பொலிசார் உட்பட பொறுப்புடைய தரப்பினருக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள் உரிய முறையில் செயற்படத் தொடங்கின. தேர்தல் முடிவுகள் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் குறிப்பாக தேர்தல் இடம்பெறும் திகதியில் இருந்து பெறுபேறுகள் வெளியிடும் காலம் வரை ஆணையாளருக்குக் கிடைக்கும் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு அமைய அவரை மீறிச் செல்லக்கூடிய அதிகாரம் வேறெவருக்கும் கிடையாது. மேற்படி அதிகாரங்களை சிறந்த முறையில் அடையாளம் கண்டு பயன்படுத்தப்பட்டமை இம்முறை இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடமைகளை இத்தோடு ஒப்புநோக்க முடியும். தமக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்து ஏற்புடைய நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும் ஆற்றல் ஆணைக்குழுவிற்கு உண்டு. ஆனால், பரிந்துரைகள் அமுலாக்கப்படாவிட்டால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கிடையாது. சுருங்கக் கூறின் இது பற்கள் இல்லாத ஒரு ஆணைக்குழுவாகும்.







– photo by Lahiru (CPA)



# சரிபார்த்தலும் சமநிலைப்படுத்தலும் பற்றிய கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்படுதல்

– கலாநிதி **பாக்கியசோதி சரவணமுத்து**

ஜனாதிபதி தேர்தல் நிலவிய காலத்தில் தேர்தல் ஆணையாளர், நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்காக தமது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகளைக் கண்கூடாகக் காண முடிந்தது. தேர்தல் பெறுபேறுகள் வெளியிடுவதை இடைநிறுத்தி, சதித் திட்டத்தின் அடிப்படையில் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வி கண்டது. இங்கு தேர்தல் ஆணையாளர் தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திய காரணத்தினால் சட்டத்தை அமுலாக்கும் நிறுவனங்கள் வலுப்பெற்றன.

இங்கு சட்டம் சரியான முறையில் அமுலாக்கப்பட்டதா என்பது முக்கியமாகும். தேர்தல் திணைக்களம் ஒரு நிறுவனம் என்ற வகையில் சரியான முறையில் சட்டரீதியாக கிடைக்கப்பெற்றுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பது தெளிவு. ஆணைக்குழுக்களை ஸ்தாபித்தல் மற்றும் புதிய சட்டங்களை இயற்றுவதன் முக்கியத்துவம், அவற்றை நிலையான முறையில் அமுலாக்கம் செய்து பராமரித்தல் என்பன முக்கியத்துவம் வாய்ந்தவை.

உதாரணமாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்களின் செயற்பாட்டை எடுத்துக் கூறலாம். அவற்றின் மட்டுப்பாடுகள் பற்றிக் கலந்துரையாடப்படுகின்றன.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முறைப்பாடுகளை விசாரணை செய்வதில் செயலிழந்தமைக்கு அதிகாரிகளினதும் குறைபாடும், வளங்களின் பற்றாக்குறையுமே காரணமென அடிக்கடி கூறப்படுகின்றன.

தற்போதைய அரசு 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் எதிர்காலத்திலும் நல்லாட்சி தொடர்பான நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொள்ளும் என நாம் நம்பிக்கை வைத்து செயற்பட முடியாது. அதற்கான மக்கள் தேவை இருத்தல் வேண்டும். 17 ஆவது திருத்தத்தின்கீழ் ஏற்பட்ட மாற்றங்கள் குறுகிய காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டமை மீது நிறைவேற்றுத் துறையின் இடையீடும் அதுபற்றிய பொதுமக்களின் அவசியமும் தாக்கத்தை ஏற்படுத்தியதை நாம் காணமுடிந்தது.

நல்லாட்சிக்கான செயற்பாட்டில் அமுலாக்கப்பட வேண்டிய விடயங்கள் ஒரு கிறிக்கெட் போட்டியைப் போலப் படிப்படியாக செயற்படுத்தப்பட முடியாது. சரிபார்த்தல் மற்றும் சமநிலைப்படுத்தல் கோட்பாட்டின் அவசியத்திற்கு அமையவே நோக்க முடியும்.

அரசின் தேவைகளுக்கு அமைய ஆணைக்குழுக்கள் செயற்படுவதை விடுத்து பொதுமக்களின் தேவைகளுக்கு அமையவே அவை செயற்படுத்தப்பட வேண்டும். அரசியலமைப்பிற்கான திருத்தங்கள் பரஸ்பரம் முரண்படாத வகையில் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். குறிப்பாக தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கையில் இது முக்கியத்துவம் வாய்ந்தது. 17 ஆவது திருத்தத்திற்கும் 13 ஆவது திருத்தத்திற்கும் இடையிலே ஒரு மோதல் ஏற்படக்கூடும் என்ற அபிப்பிராயம் இருந்ததை நாம் நினைவுகூர வேண்டும்.

100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படும் விடயங்களை கவனிக்கையில் இந்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியான நிலைமைகளையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.



– photo by Lahiru (CPA)



# தகவல்களை அறியும் உரிமை

– ராவய பத்திரிகையின் பிரதம ஆசிரியர்,
**சட்டத்தரணி கே.டபிள்யூ.ஜனரஞ்ஜன**

ஜனவரி 09 ஆந் திகதிதான் மரண பயத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட உணர்வை இலங்கைப் பிரஜைகள் உணர்ந்துகொண்டனர். அதன் பின்பு சுதந்திரமான முகம் உருவாகியது என நாம் உணர்கிறோம். ஆனால் இச் சுதந்திரத்தை நாம் தொடர்ந்து பராமரிக்க வேண்டி உள்ளது. 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தில் உறுதியளிக்கப்பட்டவாறு மேற்படி சுதந்திரத்தை அடைவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஜனவரி 08 ஆந் திகதி வரை பிரஜைகளின் சக்தியை அடக்கியொடுக்கிய அரசாங்கத்தை மையப்படுத்திய ஓர் அதிகாரமே ஜனவரி 08 ஆந் திகதி வரை இந் நாட்டில் நிலவியது. ஆனால் ஜனவரி 09 ஆந் திகதியாகும்போது அது ஒருவகையில் பிரஜைகளின் சக்தியை வெற்றிகொள்ளச் செய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக அது மாறியது. இதன் விளைவாக தற்காலிகமாக ஏற்பட்ட சுதந்திரத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது எமது பொறுப்பாகும்.

இங்கு ஊடகவியலாளர்களைப் போலவே சிவில் பிரஜைகளும் வெற்றிகொள்ள வேண்டிய உரிமை தகவல்களை அறிவதற்கான உரிமையாகும்.

இது தொடர்பான சட்டவரைவை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் நிகழ்வு 100 நாள் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தகவல்களை அறியும் உரிமை ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது என்ற நம்பிக்கையை முதலில் நீக்க வேண்டியுள்ளது.

100 நாள் வேலைத்திட்டத்திற்கு அமைய பெப்ருவரி 21 ஆந் திகதி தகவல்களை அறியும் உரிமை தொடர்பான சட்டவரைபை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் இச் சட்டவரைவின் உள்ளடக்கம் எவ்வாறு அமைந்துள்ளது எனச் சரியான விளக்கம் இல்லை. இவ்விடயம் பொதுமக்களின் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படவில்லை. தகவல்களை அறியும் உரிமை பிரஜைகளுக்கு உரித்தானது. அது ஊடகவியலாளர்களுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை.

இது மட்டுப்படுத்தப்பட்ட பொருள்கோடலாகும். தகவல்களை அறியும் உரிமை பற்றிய சட்டவரைவைத் தயாரிப்பதற்கு 15 பேர் உள்ளடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டதென ஊடக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். அதற்கு எனது பிரதிநிதித்துவமும் தேவையென இற்றைக்கு பல வாரங்களுக்கு முன் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால், அத்தகையதொரு கமிட்டி நியமிக்கப்பட்டதாக நான் அறியேன்.

தகவல்களை அறியும் உரிமை தொடர்பாக பிரஜைகளின் குரலை எழுப்புவதற்கு கடந்த காலகட்டத்தில் நாம் பங்களிப்புச் செய்தோம். பதவிகளை எதிர்பார்த்து நாம் அவ்வாறு செய்யவில்லை. அச்சத்தின் ஆட்சியை தோல்வியுறச் செய்து சட்டத்தின் ஆதிக்கத்தையும் நல்லாட்சியையும் உருவாக்கும் குறிக்கோளுடன் நாம் செயற்பட்டோம். தகவல்களை அறியும் உரிமை இதன் அடிப்படையாகும். பிரஜைகளுக்கான தகவல்களை மூடிமறைப்பது ஊழலுக்கும், இலஞ்சத்திற்கும் வழிசமைக்கிறது.

பெப்ருவரி 20 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட உள்ள சட்டவரைவு பற்றி எமக்கு சில பிரச்சினைகள் உண்டு.

- இது ஒரு தனிநபரினால் புதிதாகத் தயாரிக்கப்பட்ட சட்டவரைவா?
- இதற்கு முன்னர் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், ஓர் பத்திரிகை நிறுவனம் மற்றும் பத்திரிகை ஆசிரியர் ஒன்றியம் என்பன ஒன்றிணைந்து தயாரித்த தகவல்களை அறியும் உரிமை பற்றிய சட்டவரைவை இப்புதிய வரைவு தயாரிக்கப்பட்ட போது கவனத்தில் கொள்ளப்பட்டதா?
- இச்சட்ட வரைவு ஏன் பொதுமக்களின் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படவில்லை?

ஒரு பிரஜை குறிப்பிட்டதொரு அரச நிறுவனத்திடம் இருந்து தகவல்களைக் கோரும்பட்சத்தில், தகவல்களை வழங்கும் மட்டுப்பாடு பற்றிய பிரச்சினை ஏற்படுகிறது. தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வேளை வழங்கப்படும் தகவல்கள் என்ற வகையில் ஒரு வரையறை உருவாக்கப்பட்டுள்ளதை 100 நாள் வேலைத்திட்டத்திற்கு அமைய எமக்குத் தோன்றுகிறது. தேசிய பாதுகாப்பு மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு; உறுப்புரையில் மறைந்துகொண்டு சில தகவல்களை மூடி மறைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லையா? என்ற பிரச்சினை பிரஜைகள் தரப்பில் இருந்து முன்வைக்கப்படலாம்.

இதற்கமைய ஏற்படக்கூடிய சிக்கல்கள்

1. தகவல்களைப் பெறும் மட்டுப்பாடு
2. தகவல்களைப் பெறும் பொறிமுறை அரச நிறுவனங்களில் இதுபற்றி குறிப்பிட்டதொரு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவாரா? அதற்கு அவசியமான வளங்களையும், வசதிகளையும் வழங்குவீர்களா?
3. தகவல்களை அறியும் கல்வி மற்றும் கலாசார பின்னணியை கவனத்திற்கொண்டுள்ளனரா?

தகவல்களைப் பெறுவது பற்றிய ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ளும் கலாசாரம் இலங்கையில் தொடர்ந்தும் சிருஷ்டிக்கப்படவில்லை. அதனை சிருஷ்டிப்பது யுகத்தின் தேவையாகும். இந்தியாவிலாயின் இது அடிமட்டத்தில் இருந்து செயற்படுத்தப்படுகிறது. அதாவது கீழ்மட்டத்தில் இருந்து மேல் மட்டம் நோக்கிச் செயற்படுத்தப்படுகிறது. இலங்கையில் இது மேல் மட்டத்தில் இருந்து கீழ்மட்டம் நோக்கிச் செயற்படுத்தப்படுகிறது.



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்



– photo by Lahiru (CPA)



# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கடமைப் பொறுப்பு

– சட்டத்தரணி **சந்திரபால குமாரகே**

பொலிஸ் ஆணைக்குழு சமூகத்தின் தேவையாகும். அதன்மூலம் சுயாதீனமான பொலிஸ் சேவைக்கு அவசியமான பாதை தயாரிக்கப்பட வேண்டும். ஆனால், அதன் உறுப்பினர்கள் என விடுதலைப் புலிகளை நியமிக்க வேண்டிய அவசியமில்லை.

1972 முதல் அரசசேவை அரசியல் மயமாக்கத்திற்கு உட்படத் தொடங்கியது. அநீதிக்கு உட்படுத்தப்பட்ட பாரிய எண்ணிக்கை பொலிசார் இருந்து வருகின்றனர். எனவே அவர்களின் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகாண வேண்டி இருக்கிறது. அரசியலமைப்பின் 17 ஆவது உறுப்புரையின் 155 / 1 அ இன் கீழ் பொலிசாரின் கடமைகள், ஒழுக்கம் மற்றும் பதவி உயர்வு வரை பல பிரச்சினைகள் உண்டு. ஆகவே இந்த அதிகாரம் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு புறத்தே செயற்படுகிறார். ஒழுக்காற்று நடவடிக்கைகளின்போது பொதுமக்கள் தொடர்புகொள்ளுகின்றனர்.

ஆனால் பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் பிரச்சினைக்குரிய நிலைமைகள் உருவாகின்றன. பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை கருத்திற்கொள்ளாமல் நிறைவேற்று ஜனாதிபதிக்குத் தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்தல் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் என்பன ஒரு தவறான நடைமுறையாகும். பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அரசசேவையில் சிறந்த அனுபவம் கொண்ட தனிநபர்களே நியமனம் பெறுகின்றனர். மதகுருமார் நியமனம் பெறுவதில்லை. ஜனாதிபதி சட்டத்தரணி திரு.ரஞ்ஜித் அபயசூரிய பொலிஸ் ஆணைக்குழுவில் சேவை செய்த காலத்தில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கினார். ஆனால் ஆணைக்குழுவில் கடமைபுரிபவர் முழுநேர ஊழியராக செயற்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அவருக்கு இக் கடமையை சரிவரப் பூர்த்தி செய்ய முடியாது. பொலிஸ் ஆணைக்குழு உட்பட ஆணைக்குழுவின் ஏனைய பிரதிநிதிகள் மீது பாராளுமன்றக் குழு ஒன்று நியமனம் பெறல்வேண்டும்.

இந்த உறவு ஓர் ஓடத்தின் பின்னால் செல்லுகின்ற துடுப்பை போன்றதாகும். இந்த இரண்டு விடயங்களும் தனித்தனியாக பயணிப்பதில் பயன் இல்லை. 18 ஆவது திருத்தப் பிரகாரம் மேற்படி விடயங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.



– photo by Lahiru (CPA)



# தேசிய ஔடதக் கொள்கையை அமுலாக்குதல்

– வைத்தியர் **ராஜா விஜயதுங்க**

பேராசிரியர் சேனக்க பிபிலே அவர்களின் மாணவரான எனக்கு தேசிய ஔடதக் கொள்கையை அமுலாக்கம் செய்வதற்கான உரையாடலில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை கடவுளின் செயலாகும். சுமார் 40 ஆண்டுகளாக இழுபட்ட ஒரு பிரச்சினையை நிறைவு செய்வதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம். தேசிய ஔடதக் கொள்கையைத் தயாரிக்கும் செயற்பாடு 100 நாள் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2012 பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்திற்கு என்ன நடந்தது என அண்மைக் கால வரலாற்றில் மக்களுடனான கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டது.

தேசிய ஔடதக் கொள்கையை அமுல்படுத்துவதற்கு மகிந்த ராஜபக்ஷ சிந்தனை நேரடியாகவே உட்படுத்தப்பட்டது. ஆனால் அவசர நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட ஔடதச் சட்டத்திற்கு என்ன நடந்தது? இதனை அமுல்படுத்துவதைத் தடுப்பதற்கு ஓர் மறைமுகமான சக்தி செயற்பட்டுள்ளது எனத் தெளிவாகக் காண முடிகிறது.

பேராசிரியர் சேனக்க பிபிலே அவர்கள் முன்னோடியாக இருந்து ஔடதக் கூட்டுத்தாபனம் அமைத்த பின்னர் உள்நாட்டிற்குத் தேவையான 700 வகையான மருந்து உற்பத்திகள் மாத்திரம் தருவிக்கப்பட்டன. எண்ணிக்கையில் இவை குறைந்திருந்தாலும் தற்போதும் மேற்படி ஔடதக் கூட்டுத்தாபனத்தின் மூலம் மருந்து வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், சுதந்திரமான பொருளாதார கொள்கைகள் அமுலாக்கப்படும் ஒரு நாட்டில் சுதந்திரமான ஔடத வியாபாரம் தேசிய ஔடதக் கொள்கைக்கு ஒரு சவாலாகும். இதனை அமுலாக்குவதற்கு அவசியமான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

ஔடதங்களின் பெயர்களுக்குப் பதிலாக பல வர்த்தகப் பெயர்களில் சந்தைக்கு விநியோகிக்கப்படும் விலைவாசிகளின் முரண்பாடுகள் அனேகமான வைத்தியர்களுக்கு கம்பனிகளில் இருந்து கிடைக்கும் நன்மைகளுக்கு அமைய மேற்படி கம்பனிகளின் ஔடத உற்பத்தி நோயாளர்களுக்குப் பரிந்துரைத்தல் பாரிய பிரச்சினையாகும்.

இரண்டு ரூபாய் முதல் 100 ரூபாய் வரை ஒரே ஔடதம் பல்வேறு வர்த்தகப் பெயர்களில் சந்தைக்கு விநியோகிக்கப்படுகிறது. இது நோயாளிக்கு ஏற்படும் பாரதூரமான அநீதியாகும். எனவே இந்த உற்பத்திகளுக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும். ஔடதச் சந்தையில் உள்ள ஔடதங்கள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தர நியமங்களுக்கு அமைய உற்பத்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதைப் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். தாங்க முடியாத விலைக்கு ஔடதங்களை விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அப்போது உருவாகிறது. ஔடதங்களின் தர நியமங்கள் பற்றி நோயாளிக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது.

ஔடதங்கள் பற்றி பரப்புரை செய்யும்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒழுக்க நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா எனப் பரிசீலனை செய்யும் ஒரு வழிமுறையும் இருத்தல் வேண்டும்.

அதேசமயம் வெளிநாட்டில் ஔடத உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு ஒரு கலாசாரத்தை உருவாக்க வேண்டும்.

பல்வேறு வைத்திய பிரிவுகள் நிலவுவது இப்பிரச்சினையின் மற்றுமோர் அங்கமாகும். மேற்படி பிரிவுகளின் இயல்புக்கு அமையவே நோயாளர்களுக்கு ஔடதங்கள் நியமிக்கப்படுகின்றன.

தேசிய ஔடத வைத்திய உபகரணங்களும், அழகியற் சாதனங்கள் வரைசட்டத்திற்கு அமைய சமர்ப்பிக்கப்படும் ஔடதச் சட்ட வரைவுகளின் உள்ளடக்கம் தொடர்பாக தற்போது பிரச்சினையான ஒரு சூழல் நிலவுகிறது. அதற்குக் காரணம் இது தொடர்பாக இரு தரப்பினரிடையே நிலவும் இழுபறியாகும். ஔடத கம்பனிகளின் நன்மைக்காக செயற்படும் பல்வேறு சக்திகள் இதன்மூலம் வெற்றி கண்டால் அங்கீகரிக்கப்படும் சட்டத்தினால் பொதுமக்களுக்கு உண்மையான சேவை கிடைக்குமா என்பது சந்தேகத்திற்குரியதாகும்.





**லயனல் குருகே**
சிரேஷ்ட ஆய்வாளர்
மாற்றுக்கொள்கைகளுக்கான
நிலையம்



www.lankatruth.com

*பிரதமர் உட்பட தற்போதைய அமைச்சரவையின் ஒரு பகுதி*

# உள்ளக ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதன் மூலமே நல்லாட்சியை ஏற்படுத்த முடியும்.

இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடல் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதாகும். நல்லாட்சி என்பது ஒரு தனித்துவமான புலக்காட்சி அல்ல. அது பல்வேறு விடயங்களோடு தொடர்பு கொண்டுள்ளது. இவற்றுள் ஜனநாயகம் பற்றிய விடயங்கள் எமது முக்கிய கவனத்தை ஈர்த்துள்ளது. ஜனநாயகத்தை உறுதிப்படுத்தாமல் நல்லாட்சியை உருவாக்குவது என்பது வெறும் கனவாகும். நாட்டில் குடிமக்கள் ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பதும், அதனைத் தமது வாழ்நாள் நடைமுறையாக உள்ளடக்கிக் கொள்வதும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதையுமே முதலில் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

www.archive.maginternational.org



**குடிமக்கள் இந்த ஜனநாயக நடைமுறையை ஒரு ஸ்தாபனக் கட்டமைப்புக்குள் பொது நடைமுறையாக அனுசரிப்பதே மற்றைய முக்கிய விடயமாகும். இதனை உள்ளக ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதாகக் கருத முடியும். இந்த உள்ளக ஜனநாயகத்தை அனுசரிப்பது தொடர்பாக குடிமக்கள் என்ற வகையிலும், ஸ்தாபன கட்டமைப்பு என்ற வகையிலும் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தும் ஏராளமான உதாரணங்களை சுட்டிக்காட்ட முடியும்.**

*பிரஜைகள் கலந்துரையாடல்*

**பிரஜைகள் சமூகத்தில் உள்ளக ஜனநாயகம்**

குடிமக்கள் இந்த ஜனநாயக நடைமுறையை ஒரு ஸ்தாபனக் கட்டமைப்புக்குள் பொது நடைமுறையாக அனுசரிப்பதே மற்றைய முக்கிய விடயமாகும். இதனை உள்ளக ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதாகக் கருத முடியும். இந்த உள்ளக ஜனநாயகத்தை அனுசரிப்பது தொடர்பாக குடிமக்கள் என்ற வகையிலும், ஸ்தாபன கட்டமைப்பு என்ற வகையிலும் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தும் ஏராளமான உதாரணங்களை சுட்டிக்காட்ட முடியும். ஆனால், எமது நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஜனநாயகம் பற்றி எவ்வளவுதான் ஜெபம் செய்தாலும், கட்சிகளுக்குள் உட்கட்சி ஜனநாயகத்தை நாம் காண முடியாதுள்ளது. அதுபற்றிய உரையாடலை கட்டியெழுப்புவதில் இருந்தும் வெளியேறுகின்ற ஒரு இயல்பை நாம் அவதானிக்க முடிகிறது.

குடிமக்களின் பங்களிப்போடு உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு அமைப்புக்களின் உள்ளக ஜனநாயகம் குறிப்பிட்ட மட்டத்தில் முன்னேற்றம் கண்டிருப்பது உண்மை. கிராமங்களில் அமைந்துள்ள மரண நன்கொடைச் சங்கங்கள் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். மரண நன்கொடைச் சங்கங்களுக்கு ஒரு யாப்பு உண்டு. மேற்படி அங்கத்துவ சந்தா, நிதியத்தில் இருந்து மரணித்தவரின் சார்பில் வழங்கப்படுகின்ற நிதியுதவியின் அளவு, வருடாந்த வரவுசெலவு அறிக்கையை சமர்ப்பித்தல், அங்கத்துவத்தைப் பெறுவதற்கு அவசியமான தகைமைகள், அங்கத்துவம் இழத்தல் போன்ற விடயங்கள் வெளிப்படைத் தன்மையோடு இடம்பெறுகின்றன. இந்த நடைமுறைக்கு முரணாக செயற்படும் சங்க உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவசியம் ஏற்படின் பதவிகளில் இருந்தும் அங்கத்துவத்தில் இருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சங்கத்தின் நிதி வரவு செலவு என்பன பற்றி சங்க அங்கத்தினர்கள் முழுமையாக அறிவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டுவதையே இங்கு எமது கவனம் ஈர்க்கப்படுகிறது.

ஒரு கிராமிய அமைப்பு புத்தாண்டு விழாவைக் கொண்டாடும்போது அதற்குரிய வரவுசெலவு அறிக்கையை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்துவதன்மூலம் வெளிப்படைத் தன்மையோடு செயற்படுவதற்கான சமூக உடன்பாட்டின் சக்தியையே நாம் காணக்கூடியதாக உள்ளது.

பாடசாலை விளையாட்டுக் கழகம் மற்றும் இலக்கியச் சங்கம் ஆகிய அமைப்புக்கள்மூலம் பிள்ளைகளுக்கு கிடைக்கும் உள்ளக ஜனநாயகம் பற்றிய பயிற்சியை அவர்கள் வளர்ந்தவர்களாகும் போது தமது வாழ்கை நடைமுறையாகக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிட்டுகிறது.

குறித்துரைக்கப்பட்ட ஒரு சங்கத்தில் இருந்து ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட அங்கத்தினர்கள் வெளியேற்றப்படும்போது "கள்வர்கள் அம்பலப்படுத்தப்படுகின்றனர்." இந்த வகையில் கிராமிய சமூகத்தில் அத்தகைய நபர்கள் ஏளனத்திற்கு ஆளாகின்றனர். பல்வேறு சமூகத் தடைகளை எதிர்நோக்கும் காரணத்தால் உள்ளக ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பதற்கு சமூகத்திற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது.

இலங்கையின் கிராமிய சமூகத்தில் குடும்பம் என்ற அலகிலும் உள்ளக ஜனநாயகம் பற்றிய ஒரு பயிற்சி பரம்பரையாக நிலவி வருகிறது. ஒரு குடும்பத்தின் குடும்பத் தலைவன் பெறும் வருமானத்தையும் செலவினத்தையும் பற்றி குடும்பத்தில் ஏனைய உறுப்பினர்களுக்கு ஒரு விளக்கம் உண்டு. கணவனுக்கு கிடைக்கும் மாதாந்த வருமானம் பற்றி மனைவி அறியாவிட்டால் குடும்பத்தின் நல்லாட்சி நெருக்கடியை எதிர்நோக்குகிறது. எனவே குடும்பத்தில் இயல்பாகவே உள்ளக ஜனநாயகம் பற்றிய பயிற்சி இடம்பெறுகிறது.





/www.ft.lk



**அரசியல் கட்சிகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளில் இருந்தும் நிதி உதவி கிடைக்கின்றன. அவை பல்வேறு சந்தர்ப்பங்களில் செலவிடப்படுவதையும் நாம் காண முடியும். ஆனால் இதுபற்றிய வருடாந்த வரவுசெலவு அறிக்கையையோ அல்லது கணக்காய்வு அறிக்கைகளோ சமர்ப்பிக்கப்படுவதில்லை. எனவே கட்சி உறுப்பினர்கள் இந்த நிதியம் தொடர்பான ஒன்றையும் அறியாதவர்களாக இருக்கின்றனர். அவை பரம இரகசியங்களாகப் பேணப்படுகின்றன.**

*மாற்றத்தின் பின்னர் கட்சிகளுக்குள் உள்ளக ஜனநாயகம் ஏற்படுமா? .....*

**இலங்கையின் அரசியல் கட்சிகளுக்குள் உள்ளக ஜனநாயகம்**

நிலைமை இவ்வாறு இருப்பினும் இலங்கையின் அரசியல் கட்சிகளுக்குள் உள்ளக ஜனநாயகம் உண்டு என ஏற்றுக்கொள்வதற்கு போதிய சாட்சிகள் அக் கட்சியின் மூலம் சமூகத்திற்கு மிச்சம் வைக்கப்படவில்லை. வலதுசாரிகள் எனக் கருதக்கூடிய கட்சிகளுக்கும், இடதுசாரிகள் எனக் கருதக்கூடிய கட்சிகளுக்கும் இது பொதுவானது.

ஒரு நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்வது ஓர் அரசியல் கட்சியின் அடிப்படைப் பொறுப்பாகும். அரசியல் கட்சி என்பது செயற்பாடு கொண்ட சிவில் பிரஜைகளின் ஒன்றுகூடலாகும்.

ஒரு குறிப்பிட்ட நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் பொறுப்பு நிறைவேற்றப்பட வேண்டுமாயின் அரசியல் கட்சிகளுக்குள் உள்ளக ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். பெரிய நண்டு கோணலாக நடந்தவண்ணம் ஏனைய சின்னஞ் சிறு நண்டுகளுக்கு நேராக நடக்க வேண்டுமென ஆலோசனை கூறுவது அர்த்தமற்றது என்ற கூற்று மக்கள் மத்தியில் உள்ளது.

இலங்கையின் அரசியல் கட்சிகளைப் பற்றி பொதுமக்களுக்கு இருக்கும் ஆச்சரியமான உணர்வுகளை பொதுத் தேர்தல் இடம்பெறும் காலகட்டத்தில் நாம் அதிக அளவில் காணமுடியும். இங்கு செலவு செய்யப்படும் பணத்தொகையை நோக்குகையில் அவை இங்கிருந்து தோன்றின என்பது ஆச்சரியமாகவே உள்ளது. தேர்தல்களின்போது கருமித்தனமின்றி செலவு செய்வதற்கு கட்சித் தலைவர் ஏற்பாட்டாளர்களுக்கு ஏராளமான பணம் வழங்குவது ஓர் வழக்கமாகும்.

இவ்வாறு வழங்கப்படும் பணத்தின் அளவு மற்றும் அவை செலவு செய்யப்படும் முறையையிட்டு மேற்படி கட்சிகளின் உறுப்பினர்களுக்கு ஒன்றுமே தெரியாது. அவை "பரம இரகசியங்களாகவே" உள்ளன. ஆனால் இதுபற்றி அறிவூட்டப்பட வேண்டியது கட்சி உறுப்பினருடைய உரிமையாகும். இவ் உரிமை தொடர்பாக கட்சி உறுப்பினர்கள் அறிவூட்டப்பட வேண்டியதும் கட்சித் தலைவர்கள் மூலமாகவேயாகும். எல்லா அரசியல் கட்சிகளிலும் மத்திய செயற்குழு, ஆட்சிக்குழு, தலைமைத்துவ சபை என பல உயர்மட்ட குழுக்கள் இருக்கின்றன. மேற்படி குழுக்கள் எடுக்கும் தீர்மானங்களுக்கு தலைவணங்கி நடவடிக்கை எடுப்பதே கட்சி உறுப்பினர்களின் கடமையாக மாறி உள்ளது.

இது ஜனநாயகத்திற்கு முழுமையாக முரண்பட்ட ஒரு போக்காகும். உள்ளூராட்சி மன்றத்தையோ அல்லது பாராளுமன்றத்தையோ பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு போட்டியிடும் வேட்பாளர்கள் மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட குழுக்களினால் அல்லது கட்சித் தலைமையினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அந்தந்தப் பகுதிகளின் பெரும்பான்மை கட்சி அங்கத்தவர்களின் விருப்பத்தின் பேரிலேயே குறிப்பிட்ட பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட வேண்டும். கட்சித் தலைமை தெரிவுசெய்யப்படும் போதும், கட்சியின் மாநாடு நடத்தப்படுவதாகத் தோன்றினாலும் பெரும்பான்மை அங்கத்தவர்களின் விருப்பம் இங்கு பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றதா என்பது சந்தேகமே.

அரசியல் கட்சிகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளில் இருந்தும் நிதி உதவி கிடைக்கின்றன. அவை பல்வேறு சந்தர்ப்பங்களில் செலவிடப்படுவதையும் நாம் காண முடியும். ஆனால் இதுபற்றிய வருடாந்த வரவுசெலவு அறிக்கையையோ அல்லது கணக்காய்வு அறிக்கைகளோ சமர்ப்பிக்கப்படுவதில்லை. எனவே கட்சி உறுப்பினர்கள் இந்த நிதியம் தொடர்பான ஒன்றையும் அறியாதவர்களாக இருக்கின்றனர். அவை பரம இரகசியங்களாகப் பேணப்படுகின்றன.

நடைமுறையில் உள்ள தேர்தல் முறை மற்றும் நாட்டின்

www.demotix.com



**குறிப்பிட்ட காலகட்டங்களில் கட்சி மாநாடு நடத்தப்பட வேண்டும். தேர்தல் தொகுதிகளின் ஏற்பாட்டாளர்களை நியமித்தல் மாவட்ட மாநாட்டின்போது கட்சி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். கட்சி உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளே கட்சித் தலைமைக்கு தெரிவு செய்யப்பட வேண்டும்.**

*அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வேட்பாளராக நியமனம் கோரிய திரு. நாமல் ராஜபக்ஷ வேட்பாளர் தெரிவுச் சபை முன்னிலையில்*

அரசியல் கலாசாரத்தின் இயல்பு என்பவற்றுக்கு அமைய, சமூக அதிகாரமும், நிதி அதிகாரமும் கட்டுப்பாடற்ற வகையில் உரிமை கொண்டாடும் வேட்பாளர்கள் அதிகப்படியான வாக்குகள் மூலம் முன்னேறுகின்றனர். இவ் அதிகாரம் குறைந்த மட்டத்தில் காணப்படும் வேட்பாளர், எவ்வளவு தூரம் தகைமைகள் கொண்டிருந்தாலும் அவர் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவது மிக கஷ்டமான காரியமாகும். இது ஜனநாயகத்திற்கான பாரிய தலையிடியாகும். இதன் காரணமாக கறுப்புப் பணக்காரர்களுக்கும் பல்வேறு ஊழல்களோடு தொடர்புகொண்டவர்களும் பொதுமக்களின் பிரதிநிதிகளாக ஞானஸ்நானம் பெற வாய்ப்புக் கிட்டுகிறது. நல்லாட்சியையும், ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்தும் உண்மை தேவை கொண்ட சமூகக் கூருணர்ச்சி கொண்ட செயற்பாட்டாளர்களுக்கு பொதுமக்களின் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. விசேடமாக ஒருசில அறிஞர்களும் பெரும்பான்மை குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களும் கொண்ட சட்டவாக்கச் சபையில், ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு மர்ம ஸ்தானமாக அது அமைகிறது. சுயாதீனமான ஒரு தேர்தல் ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதில் இவ் விடயங்கள் பற்றி கவனம் செலுத்துவது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. தேர்தலின்போது அந்தந்த வேட்பாளர்களுக்கு பணம் செலவு செய்வதில் சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். அதேசமயம் அரசியல் கட்சிகளின் நிதியை பராமரிக்கையில் வெளிப்படைத் தன்மையைப் பற்றிய வகைப் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவின்மூலம் கண்காணிக்கப்பட வேண்டும்.

### அரசியல் கட்சிகளின் பொறுப்புக்கள்

1. குடிமக்கள் அரசியல் ரீதியில் அறிவூட்டப்பட வேண்டும்.
2. அரசியல், பொருளாதார கலாசார பிரச்சினைகள் மற்றும் அவற்றை தீர்க்கும் நடைமுறைகள் பற்றி சமூகக் கலந்துரையாடல் உருவாக்கப்பட வேண்டும்.
3. கட்சி உறுப்பினர்களின் சாத்தியக்கூறு பற்றியும் தலைமைத்துவப் பண்புகள் பற்றியும் அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்துவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.
4. கட்சி உறுப்பினர்களின் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பைப் பெறவேண்டும்.
5. கட்சி அரசாங்க அதிகாரத்தைப் பெறும்போது, கட்சிக்குள்ளும், நாட்டிலும் குடிமக்களுக்கு சமமானதும், நியாயமானதுமான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

இலங்கையின் அரசியல் கட்சிகள் எவ்வளவு தூரம் இக்கொள்கையை அனுசரிக்கின்றன என சமூகம் கண்காணித்தல் வேண்டும்.

ஆனால் எமது நாட்டின் அரசியல் கட்சிகளின் பண்புகள் மேல் மட்டத்தில் மேற்கொள்ளும் தீர்மானங்கள் கீழ்மட்டத்திற்கு அறிவிக்கும் செயற்பாடு கொண்டவையாகவும் நிதி நடவடிக்கைகள் மிக அந்தரங்கமாக வைத்துக்கொள்வதையும் நடைமுறையாகக் கொண்டுள்ளன.

அரசியல் கட்சிகளின் கீழ்மட்ட உறுப்பினர்கள் முதல் மேல் மட்டம் வரை குடிமக்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொள்வதற்கும், அவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கும் மிக வெற்றிகரமான யாப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். கட்சியின் நிதி நிலைமைகள் அந்தரங்கமான விடயமாக மாற்றிக்கொள்ளாமல் வருடாந்த வரவுசெலவு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதோடு, கட்சி உறுப்பினர்களுக்கு அறிவூட்டும் ஏற்பாடுகள் கட்சியின் யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட காலகட்டங்களில் கட்சி மாநாடு நடத்தப்பட வேண்டும். தேர்தல் தொகுதிகளின் ஏற்பாட்டாளர்களை நியமித்தல் மாவட்ட மாநாட்டின்போது கட்சி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். கட்சி உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளே கட்சித் தலைமைக்கு தெரிவு செய்யப்பட வேண்டும்.





www.unp.org.uk




**கட்சி யாப்பை பொருட்படுத்தாமல் செயற்படும் அரசியல் கட்சிகளுக்கு இந் நாட்டு மக்களின் தேவைகளை புரிந்துகொள்ள முடியுமா? இது மிகவும் மோசமான ஒரு நிலைமையாகும். உட்கட்சி ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பதன் மூலமே, முன்னேற்றம் அடைந்த நாடுகளில் அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன.**

கட்சிகளின் உட்கட்சி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தக் கூடிய மார்க்கம் தேர்தல் ஆணைக்குழுவை வலுவூட்டுவதன்மூலம் அரசியல் கட்சிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் ஆற்றலை அதற்கு வழங்குவதன்மூலமே கட்சிகளின் உட்கட்சி ஜனநாயகத்தை உறுதிப்படுத்த முடியும்.

கட்சி யாப்பை பொருட்படுத்தாமல் செயற்படும் அரசியல் கட்சிகளுக்கு இந் நாட்டு மக்களின் தேவைகளை புரிந்துகொள்ள முடியுமா? இது மிகவும் மோசமான ஒரு நிலைமையாகும். உட்கட்சி ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பதன் மூலமே, முன்னேற்றம் அடைந்த நாடுகளில் அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. 1980 ஆம் ஆண்டில் இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி இந்திராகாந்தி பொதுமக்களின் அபிமானத்தைப் பெற்ற ஒரு தலைவியாகத் திகழ்ந்தார்.

அவருடைய பெயர் கட்சித் தலைமைத்துவத்திற்கு முன்மொழியப்பட்டபோது வேறு பெயர்கள் உண்டா என சபைக்கு தலைமை தாங்கிய தலைவர் சபையோரிடம் வினவினார். ஆனால் வேறு பெயர்கள் முன்மொழியப்படவில்லை. ஒருசமயம் அவுஸ்திரேலியாவின் பிரதமர் அதிகாரத்தில் இருந்தபோதே அவரை கட்சியில் இருந்து நீக்குவதற்கு, அவர் சார்ந்த அரசியல் கட்சி நடவடிக்கை எடுத்தது. அதிகாரத்தில் இருக்கும் அரசியல் கட்சி எதிர்கருத்துக் கொண்ட அரசியல் கட்சிகளைப் பலவீனப்படுத்துவதற்கு சில செயற்பாடுகளில் ஈடுபடுவதை அபிவிருத்தியடையாத அரசியல் கட்சிகளின் பண்பாக குறிப்பிடலாம். எதிர்கட்சி உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்குவதற்கும் வேறு சிறப்புரிமைகளை வழங்குவதற்கும் அச்சுறுத்துவதற்கும் இந் நாடுகளில் காணக்கூடிய ஒரு செயற்பாடாக இருக்கிறது. இது ஜனநாயக விரோதச் செயலாகும்.

எமது நாட்டு அரசியல் கலாசாரத்தில் இந்தத் தவறான போக்கு வேரூன்றி உள்ளது. இதன் காரணமாக ஜனநாயகத்திற்கு பாரிய அச்சுறுத்தல் இருந்து வருகிறது.

அரசாங்க மாற்றத்தின் பின்னர் புதிய அரசியல் கலாசாரத்திற்கான விதைகள் நடப்படும் இன்றைய சூழலில் நல்லாட்சியின் அடிப்படையாக அரசியல் கட்சிகளின் உள்ளக ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கான ஓர் கலந்துரையாடலை உருவாக்குவோம்.



ஜே.வீ.பி யின் நினைவஞ்சலிக் கூட்டம்



கலாநிதி
**நிர்மல் ரஞ்ஜித் தேவசிறி**

# ஆட்சி செய்யும் பிரமுகர்களால் கைவிட முடியாத ஒருசில மறுசீரமைப்புக்கள்

அரசியலில் மனிதர்களின் நெறிமுறைசார் நடத்தை மேலதிக காரணியாக அமைந்தாலும் அவைமீது நம்பிக்கை வைத்து நடவடிக்கை மேற்கொள்வது யதார்த்தமாகாது. உண்மையில் நடைமுறை அரசியலில் மக்களின் பொதுநன்மைக்கு ஏற்றது எனக் கருதும் சிலவிடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அனேகமாக, நல்லது கெட்டது பற்றிய, அல்லது நெறிமுறைசார் அளவீடுகள்மீது செயற்பட முடியாத ஒருநிலை அனேகமாக ஏற்படலாம். நல்லது கெட்டதுபற்றி, அல்லது நெறிமுறைாசார் அளவீடுகள்மீது செயற்பட முடியாததொரு நிலைமை உருவானால் மாத்திரமே அவ்வாறு செயற்படுவர். உதாரணமாக மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது அல்லது திருத்துவதாயின், அவ்வாறு செய்வதைப் புரிந்துகொள்வதாயின் அவர் ஒரு நல்ல மனிதர் என்ற காரணத்தினால் அவ்வாறு செய்ய முற்படவில்லை. தற்போதைய நிலைமைகளின்கீழ் அவ்வாறு செய்வதற்கு ஏன் அவர் நிர்ப்பந்திக்கப்படுகிறார் என்றே நாம் நோக்க வேண்டும்.







www.wsws.org

**1994 இல் சமர்ப்பிக்கப்பட்ட தொழிலாளர் சாசனம் இந்த மாற்றத்தைப் புரிந்துகொள்வதற்கான சிறந்த உதாரணமாகும். அந்த சாசனத்தை ஒரு சட்டமாக்க முடியவில்லை.**

*தொழிலாளர்கள் எப்போதும் போராட்டத்தில் ......*

1994 இல் சமர்ப்பிக்கப்பட்ட தொழிலாளர் சாசனம் இந்த மாற்றத்தைப் புரிந்துகொள்வதற்கான சிறந்த உதாரணமாகும். அந்த சாசனத்தை ஒரு சட்டமாக்க முடியவில்லை. மேற்படி தொழிலாளர் சாசனத்தை ஓர் சட்டமாக்கி இருந்தால் அரசாங்கம் சமூகத்தில் நற்பெயரை எடுத்திருக்கும். ஆனால் அரசாங்கத்துடன் ஒத்துழைத்த முதலாளிமார் சம்மேளனம் போன்ற அமைப்புக்களின் பிரமுகர்கள் அத்தொழிலாளர் சாசனத்தை எதிர்த்தனர். அரசாங்கம் அவர்களுடைய ஒத்துழைப்பிலும் தங்கியிருக்க வேண்டிய நிலைமை காரணமாக மேற்படி தொழிலாளர் சாசனம் கைவிடப்பட்டது. முதலாளிமார் சம்மேளனத்தின் ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் அரசாங்கத்தின் இருப்பு சந்தேகத்திற்கு இடமாக மாறி இருக்கும். எனவே பொதுமக்களின் அபிலாஷைகளைப் புறக்கணிக்க வேண்டிய நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. பொதுமக்களின் நல்லபிப்பிராயம் என்பது அரசாங்கத்தின் இருப்புக்கான ஒரு காரணி மாத்திரமேயாகும். எந்தவொரு அரசாங்கத்திற்கும் பல்வேறு பிரிவினர் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். பல்வேறு அபிலாஷைகளைக் கொண்ட வியாபாரிகள் சமூகமும் இதில் உள்ளடக்கப்படுவர்.

## சமநிலையும் மறுசீரமைப்புக்களும்

எவ்வாறாயினும் எனது யோசனைப்படி இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி தனது அதிகாரங்களைக் குறைக்க நேரிட்டுள்ளது. உறுதிமொழி அளித்தவாறு அது இடம்பெறாவிட்டாலும் அதிகாரங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்பு தற்போதைய ஜனாதிபதி முறை அவ்வாறே அமையும் எனக் கூறமுடியாது. இத் தருணத்தில் நிலவும் அரசியல் சமநிலைப்படுத்தலின் பல்வேறு தரப்பினரின் அழுத்தம் காரணமாக இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இத்தருணத்தில் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இத் தருணத்தில் அரசியல் சமநிலையின் அடிப்படையில் பிரமுகர் அரசியலின் நான்கு விளையாட்டு வீரர்களின் நடவடிக்கைகள், அபிலாஷைகள் மீதே இது தங்கியுள்ளது. அதாவது சந்திரிக்கா, மைத்திரிபால, ரணில் மற்றும் சம்பிக்க ஆகியோர் இந்த விளையாட்டு வீரர்களாக பெயர் குறிப்பிட முடியும். தற்போது ஆட்சிபுரியும் கூட்டமைப்பு இந்த நால்வரின் நடவடிக்கைகளினதும், அபிலாஷைகளினதும் சமநிலையிலேயே தங்கியுள்ளது. 2015 ஜனவரி 09 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சிபீடத்தில் இருந்த அரசாங்கம் ஒரு தனிநபரை மையமாக வைத்த மைய அதிகார அமைப்பிலேயே தங்கியிருந்தது. அது ராஜபக்ஷாக்களை முன்னணியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கூட்டமைப்பாகும். ஆனால் மைத்திரபால சிறிசேனவின் வெற்றியோடு நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பல்வேறு வடிவங்களில் இக் கூட்டமைப்பு மாற்றம் கொண்டுள்ள அதேவேளை சம மட்டத்தில் நிலவும் நான்கு அதிகார மையங்கள் இருக்கின்றன. இந்த நால்வர் மத்தியிலும் அமைந்துள்ள சமநிலை ஆட்டம் கண்டால் கூட்டமைப்பும் வீழ்ச்சியடையக்கூடும்.

இங்கு ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களைக் குறைத்தால்தான் ரணில் விக்கிரமசிங்க தனது இருப்பை தக்கவைத்துக்கொள்ள முடியும். மற்றவர்களைப் பொறுத்தவரை அந்த அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்ற அவசியம் உடனடியாக எழவில்லை. அரசியல் உபாய மார்க்கங்களைப் பொறுத்தவரையில் சந்திரிக்காவிற்கும், மைத்திரிபாலவிற்கும் அவற்றைக் குறைக்க வேண்டும் என்ற அவசியம் கட்டாயமில்லை. நீண்டகாலச் கண்ணோட்டத்தில் இந்த நாட்டின் அரச தலைவராவதை தனது அபிலாஷையாகக் கொண்டுள்ள சம்பிக்கவிற்கும் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்காமை ஒரு பிரச்சினையல்ல. தனக்கு அதிகாரம் கிடைத்த பின்னர் இந்த ஜனாதிபதி முறையை தொடர்ந்து வைத்திருக்க ரணில் விரும்பினாலும், இத் தருணத்தில் நிலவும் அதிகார சமநிலையைப் பொறுத்தவரை பிரதமர் பதவியை தக்கவைத்து அதனை வலுப்படுத்துவதே ரணிலின் அபிலாஷையாகும்.

பிரதமர் பதவியில் தொடர்ந்து இருப்பதாயின் ஜனாதிபதி பதவியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். எனவே அதைச் செய்யாமல் இருக்க ரணில் உடன்படமாட்டார். ஆகவே, நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவது தவிர்க்க முடியாததாகும். இது தொடர்பான தற்போதைய வெளிவாரிக் காரணிகளையும் நாம் புறக்கணிக்க முடியாது. அவசியமான மக்கள் அபிப்பிராயம் இருக்கும் அதேவேளை பாராளுமன்றம் அதனை எதிர்க்கும் என்று எண்ண முடியாது. எனவே, ஜனாதிபதி முறையை நீக்குவது அவ்வளவு கஷ்டமான வேலையென நான் நினைக்கவில்லை. அதேசமயம் சுயாதீன ஆணைக்குழுக்கள் பற்றி அவ்வளவு பாரதூ

**இத் தருணத்தில் அரசியல் சமநிலையின் அடிப்படையில் பிரமுகர் அரசியலின் நான்கு விளையாட்டு வீரர்களின் நடவடிக்கைகள், அபிலாஷைகள் மீதே இது தங்கியுள்ளது. அதாவது சந்திரிக்கா, மைத்திரிபால, ரணில் மற்றும் சம்பிக்க ஆகியோர் இந்த விளையாட்டு வீரர்களாக பெயர் குறிப்பிட முடியும்.**



www.tamildiplomat.com

*நல்லாட்சியின் விளையாட்டு வீரர்கள்*

ரமான பிரச்சினைகள் ஏற்படலாம் என எண்ணுவதற்கான நியாயம் இல்லை. தற்போதைய நிலைமைகளின்கீழ் பொதுமக்களுக்கும், வர்த்தக சமூகத்தினருக்கும் நல்லாட்சி அவசியமாகின்றது. அவர்களும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும்போது கூடிய கமிஷன்களைச் செலுத்துவதற்கும் அரசியல்வாதிகளின் அழுத்தங்களையும் கடந்த காலத்தில் எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நல்லாட்சி என்ற சுலோகத்திற்கு கூடுதலான கோரிக்கை அவர்கள் மத்தியில் இருந்தே எழுந்தது. வாக்களிக்கும் முறையை நோக்கினாலும் அது தெளிவாகியது. ஆகவே சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்குவது ஒரு பிரச்சனையாக அமைய மாட்டாது.

**தேர்தல் முறைமை**

ஆனால் உத்தேச தேர்தல் முறைமையின் திருத்தம் இலகுவானதாக அமைய மாட்டாது. தற்போதைய போட்டி மனப்பான்மை கொண்ட அரசியலில் விகிதாசார தேர்தல் முறையை சீரமைப்பது இலகுவானதாக அமைய மாட்டாது. ஜேவீபி போன்ற அரசியல் கட்சிகளும் அதனை விரும்ப மாட்டாது. எனவே இது சிக்கலான ஒரு பிரச்சினையாகும். விகிதாசார பிரதிநிதித்துவ முறையின்கீழ் விருப்பு வாக்கு முறைமைக்கே அதிக எதிர்ப்பு நிலவுகிறது. விகிதாசார முறையின்றி விருப்பு வாக்கு முறையைத் தொடர்ந்து வைத்திருக்க முடியாது. விகிதாசார முறையை அறிமுகம் செய்யும்போது விருப்பு வாக்குமுறை இருக்கவில்லை. விகிதாசார முறையைத் தக்கவைத்துக் கொண்டு விருப்பு வாக்கு முறையை மாத்திரம் நீக்குவதற்கு எனக்கும் உடன்பாடு கிடையாது. அவ்வாறாயினும் விகிதாசார முறை விருப்பு வாக்குமுறையின்றி அமுலாக்கப்பட்டால் அதன்மூலம் பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும். விருப்பு வாக்கு முறை இல்லாத விகிதாசார பிரதிநிதித்துவ முறை இருக்கும்போது வேட்பாளர்களின் பட்டியல் அகர வரிசைப்படி அமைய மாட்டாது. கட்சிச் செயலாளர் உட்பட கட்சித் தலைமைத்துவத்தின் விருப்பத்திற்கு அமையவே அப் பட்டியல் தயாரிக்கப்படும். பட்டியலில் உள்ள அனைத்து வேட்பாளர்களும் தேர்தலில் தெரிவு செய்யப்பட மாட்டார்கள் என்ற காரணத்தினால், பட்டியலின் அடியில் உள்ளவருக்கு தேர்தல் இயக்கத்தில் செயற்படுவதற்கு தனிப்பட்ட ஆர்வம் ஏற்பட மாட்டாது. அது மாத்திரமல்ல பாரிய முயற்சியின்றி தெரிவு இடம்பெறும் என அறிந்தால் வேட்பாளர் பட்டியலில் மேலே உள்ளவரும் தேர்தல் இயக்கத்தில் ஈடுபடுவதற்கு ஆர்வம் செலுத்துவது கிடையாது.

தற்போது பிரதான கட்சிகளுக்குப் பொருத்தமான முறையில் எடுத்துப் பார்க்கின் கட்சியின் தேர்தல் இயக்கம் என ஒன்றில்லை. அவை தனித்தனி வேட்பாளர்களின் தனிப்பட்ட தேர்தல் இயக்கமாகவே இருந்து வருகிறது. இதன் காரணமாக தான் வெற்றிபெறும் குறிக்கோளுடன் தேர்தல் இயக்கத்தை தனிநபர்கள் ஆரம்பிக்கும்போது முதலில் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். இது கட்டாயமாகும். கட்சியை வெல்ல வைப்பதற்கு இம் முயற்சி தேவை. அது இல்லாவிட்டால் தேர்தல் இயக்கம்மீது பாதகமான தாக்கம் ஏற்பட இடமுண்டு.

உத்தேசிக்கப்பட்டுள்ள கலப்புத் தேர்தல் முறையிலும்கூட ஜேவீபி போன்ற கட்சிகளுக்கு அது மிகவும் பாதகமான விளைவுகளையே பெற்றுத்தரும். தற்போதைய நிலைமையின்படி ஜேவீபி போன்ற கட்சிகளுக்கு குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவம் கிடைப்பதாயின் விகிதாசார முறையின் கீழேயே அவ்வாறு நடக்கும். ஜேவீபிக்கு அனேகமாக ஒரு தேர்தல் தொகுதி கிடைக்குமாயின் சாதாரண மக்களுடைய வழக்கில் இருக்கும் பகுதியிலேயே இது இடம்பெறும். ஆனால் கலப்பு முறையில் குறிப்பிட்ட வேட்பாளர் பெறும் வாக்குகளின் அளவிற்கு விகிதாசார பிரதிநிதித்துவம் கிடைக்காமலும் போகும்.

தற்போதைய விகிதாசார முறை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் 12 சதவீதம் வாக்குகள் பெற்றால் மாத்திரமே தகைமை பெற்றிருக்க முடியும். திரு அஷ்ரப் பிரேமதாச அவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டின் விளைவாகவே இந்த விகிதாசாரம் குறைக்கப்பட்டது. பொதுவாக ஜேவீபி போன்ற ஒரு கட்சி விகிதாசார முறையின் அடிப்படைக் குறிக்கோள் நீக்கப்பட்டு முக்கிய பிரதம இரண்டு கட்சிகளுக்கு மாத்திரம் நன்மை கிடைக்கக்கூடிய வகையில் பல வாய்ப்புக்கள் உண்டு. இதில் ஏதோவொரு வகையில் நன்மை பெறுவதாயின் தமிழ் தேசிய கூட்டணிக்கே பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஒரு கட்சி என்ற வகையில் கூடுதலான சலுகை கிடைக்கக் கூடும்.

இங்கு ஜேவீபி யை பிரதான காரணியாக ஏன் கவனிக்க





**பிரதமர் பதவியில் தொடர்ந்து இருப்பதாயின் ஜனாதிபதி பதவியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். எனவே அதைச் செய்யாமல் இருக்க ரணில் உடன்படமாட்டார்.**



www.dailynews.lk

*எதிர்கால மார்க்கம் எது ?*

வேண்டுமென ஒருவர் வினவலாம். எனது கருத்துப்படி ஜேவீபி இத்தருணத்தில் கவனத்திற்கொள்ள வேண்டிய பிரதம காரணியாகும். இச் சந்தர்ப்பத்தில் ஜேவீபி பாராளுமன்றத்தில் குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவத்தைப் பெறாத ஒரு நிலை ஏற்படுவதற்கு அனேகமாக ஒன்றைப் புறக்கணிக்கும் நிலைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய நல்லாட்சி கண்ணோட்டத்தை மிகவும் சக்திவாய்ந்த முறையில் ஜேவீபி மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஜேவீபி ஒரு சோசலிசக் கட்சியென நான் நோக்கவில்லை. அது ஒரு ஜனநாயகக் கட்சியாகவே செயற்படுகிறது. இத் தருணத்தில் இலங்கை மக்களின் ஜனநாயக அபிலாஷைகளை ஜேவீபி இன் மூலமே பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. இது பல ஆண்டுகளுக்கு முன்பு இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி என்பன பிரதிநிதித்துவப்படுத்திய கடமைகளைத் தற்போது ஜேவீபி செய்கிறது.

**பிரதிநிதித்துவ முறையின் சிக்கலான நிலைமை**

தற்போதைய கலந்துரையாடலின்போது ஜனாதிபதி முறைமைக்கு சார்பாக தேர்தல் முறைமையப் பற்றிய ஆழமான கலந்துரையாடலைக் காணமுடிகிறது. நாம் அறிந்த மட்டில் இந்தியா, இங்கிலாந்து போன்ற தொகுதிவாரியான தேர்தல் பிரிவுகள் கொண்ட நாடுகளில் சாதாரணமாக எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் வெற்றிபெறும் கட்சி அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் வெற்றியீட்டுவதில்லை. இம்முறை இந்திய பொதுத் தேர்தலில் பாரதீய ஜனத்தா கட்சி பாரிய வெற்றியை ஈட்டினாலும் காங்கிரஸ் கட்சி நூற்றிச் சொச்ச தொகுதிகளில் வெற்றியீட்டியது. இலங்கையில் அவ்வாறு இடம்பெறப் போவதில்லை. அதற்குக் காரணம் கட்சிகள்மீது கவர்ச்சிகரமான தன்மை இருப்பதால் ஒவ்வொரு கட்சியும் ஈடுபடும் முறையில் உள்ள கட்டமைப்பின் சமத்துவமின்மை இங்கு குறிப்பிடப்பட வேண்டும். இந்தியா இங்கிலாந்து போன்ற நாடுகளோடு இலங்கையை ஒப்புநோக்குகையில் பிரதான இரண்டு கட்சிகளுக்கும் உள்ள வாக்காளர்களுக்கான கவர்ச்சியில் பல்வேறு விதிவிலக்குகள் உண்டு. இந்நிலைமையின்கீழ் இரண்டு கட்சிகளின் செயற்பாடு நிலவும் ஒட்டுமொத்த பிரதேசம் முழுவதும் வாக்காளர்கள் பரந்துவிரிந்து வாழ்கின்றனர். எனவே ஒரு கட்சிக்கு நன்மை கிடைக்கக் கூடிய வகையில் ஏற்படும் வாக்காளர்களின் கட்சிசார்புத் தன்மை மாற்றமடைவதோ அல்லது சாதாரண நடைமுறையில் குறிப்பிடுவதைப் போல ஓர் அலை காரணமாக ஒரு கட்சியின் பாராளுமன்ற பிரதிநிதிகளின் அளவு மற்றும் அதன் ஒட்டு மொத்த வாக்காளர் கவர்ச்சியின் அளவிற்கிடையே சமத்துவமின்மை ஏற்படுவதற்கும் சாத்தியக்கூறு உண்டு.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் தொகுதிவாரி முறையில் எதிர்கட்சி உறுப்பினர்கள் மிகச் சொற்பமான தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையைப் பெற்ற பல சந்தர்ப்பங்கள் சுலபமானது. 1977 இல் இலங்கை சுதந்திரக் கட்சி எட்டு தேர்தல் தொகுதிகளிலேயே வெற்றியீட்டியது. தொகுதிவாரி முறைமை அமுலாக்கப்பட்டு இருப்பின் கடந்த காலத்தில் இடம்பெற்ற தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி பாரிய எண்ணிக்கையிலான தேர்தல் தொகுதிகளில் வெற்றிபெற்றிருக்க வேண்டும். இந்தியாவிலும், இங்கிலாந்திலும் அந்தந்தப் பிரதேசங்களில் ஒவ்வொரு கட்சிக்கும் வாக்களிக்கும் வாக்காளர்கள் தனித்தனியாக இருக்கின்றனர். இலங்கையின் நிலைமை அப்படியல்ல. ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள வாக்குகள் கட்சிகளின் ஆதரவாளர்கள் மத்தியில் பிளவுபட்டுள்ளது. அதேசமயம் ஒரு கட்சி பாரிய வெற்றிவாகை சூடும்போது மற்றைய கட்சி பாரிய தோல்வியை தழுவுகின்றது.

தமது நடைமுறை வாழ்க்கையில் தனிப்பட்ட தேவைகளை முன்னேற்றுவதற்கு தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வாக்களிக்கும் அதேவேளை பொது நன்மைகளையிட்டு ஆழமாக சிந்திக்கும் போக்கும் மனிதர்களிடையே காணப்படுகிறது. 2004 ஆம் ஆண்டு தேர்தலில் கூட்டணியாக போட்டியிட்ட ஜேவீபி வேட்பாளர்களுக்கு சகல இடங்களிலும் கூடுதலான விருப்பு வாக்குகள் கிடைத்தன. எனவே தினசரி வாழ்க்கையில் நடைமுறைத் தேவைகளுக்காக ஒரு அரசியல்வாதிக்கு விருப்பு வாக்குகளை வழங்கும் அதேநேரத்தில் பொது நன்மைக்கான ஜேவீபிக்கும் ஒரு விருப்பு வாக்கு கிடைத்தது. ஆனால் ஜேவீபி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை விட்டு விலகிய பின்னர் இந்த ஆற்றலை ஜேவீபி இழந்துள்ளது.

கடந்த காலத்தில் சமசமாஜ தலைவர்கள் தொடர்பாகவும் வாக்காளர்களைப் பொறுத்தவரை இத்தகைய ஒரு பிரவேசம் இருந்தது. அன்றாட வாழ்வின் நடைமுறைத் தேவைகளுக்காக




www.anfrel.org

**ஆனால் உத்தேச தேர்தல் முறைமையின் திருத்தம் இலகுவானதாக அமைய மாட்டாது. தற்போதைய போட்டி மனப்பான்மை கொண்ட அரசியலில் விகிதாசார தேர்தல் முறையை சீரமைப்பது இலகுவானதாக அமைய மாட்டாது.**

*தேர்தல்கள் செயலகம் - இராஜகிரிய*

சிறீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற கட்சிகளுக்கு வாக்களித்த அதேவேளை, இடதுசாரி தலைவர்களைப் பொறுத்தவரை சாதகமான கண்ணோட்டங்களும் மக்கள் மத்தியிலே இருந்தது. எனினும் வாக்களிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்தது. ஜேவீபி எதிர்காலத்தில் கூட்டரசாங்க அரசியலில் பிரவேசிப்பதில்லையென தீர்மானித்துள்ளது. அப்போது அவர்கள் தனித்தே போட்டியிடுவார்கள். அவ்வாறாக தனித்துப் போட்டியிடும்போது ஜேவீபிக்கு எப்படி வாக்களிப்பது என்ற பிரச்சினையை வாக்காளர் எதிர்நோக்குகின்றார். இங்கு மக்களின் வாக்களிக்கும் தீர்மானம் ஜேவீபிக்கு பாதகமான முறையில் அமைவதற்கான சாத்தியக்கூறே இருந்து வருகிறது.

அனுரகுமார திசாநாயக்க இன்று ஜனரஞ்சகமான அரசியல்வாதியாக மாறியுள்ளார் என்ற கருத்து நிலவுகிறது. அவர் உண்மையான எதிர்கட்சித் தலைவர் என்றும் ஒருசிலர் கருதுகின்றனர். ஆனால் வாக்காளரின் கவர்ச்சி என்ற வகையில் இந்த ஜனரஞ்சகத் தன்மை அவ்வாறே பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதில்லை. தமது அன்றாட வாழ்க்கையின் நடைமுறைத் தேவைகளை அர்ப்பணிப்பதற்கு திடசங்கற்பம் கொண்டுள்ள வாக்காளர்கள் மாத்திரமே ஜேவீபிக்கு வாக்களிப்பர். உத்தேச கலப்பு முறைகாரணமாக ஜேவீபிக்கு கிடைக்கும் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை மேலும் குறைவதற்கே இடமுண்டு. இக்குறைவு காரணமாக ஜேவீபி அனேகமாக தேர்தல் அரசியலில் இருந்து தூர விலகுவதற்கும் இடமுண்டு. இது அவ்வளவு நல்ல செயல் அல்ல. இது ஜேவீபி தொடர்பாக மாத்திரம் நிலவும் நிலைமை எனக் கூறமுடியாது. இது இலங்கை அரசியலில் கவனத்திற்கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். குறிப்பாக நாம் ஜனநாயக ஆட்சிமுறையைப் பற்றி சிந்திப்போமாயின் இலங்கை சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுமக்களின் அபிலாஷைகளை பிரதிநிதித்துவப்படுத்துவது இல்லை. ஜேவீபி பிரமுகர்களின் மட்டத்திற்கு அண்மித்திருந்தாலும் பிரதான இரண்டு கட்சிகளைவிட பொதுமக்கள் மத்தியில் இருந்து சற்றுத் தூர விலகியே ஜேவீபி இருந்து வருகிறது. எனவே ஜேவீபி பாராளுமன்றத்தில் இருந்து தூ ரவிலகிச் சென்றால் அனேகமாக ஊழல் போக்கு கொண்ட பிரதான இரண்டு கட்சிகளின் அணியினர் மாத்திரம் பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் சந்தர்ப்பம் உண்டு. இது நல்ல நிலைமை எனக் கூறமுடியாது.

### பிரமுகர்களினதும் பிரமுகர்கள் அல்லாதவர்களினதும் அரசியல்

இந்த அரசாங்கத்தின் கீழும் பாரதூரமான பொருளாதார மறுசீரமைப்புக்கள் ஏற்படுவதற்கான ஆற்றல் மிகக் குறைவு. இங்கு வரி அறவிடும் முறைபற்றிய பிரச்சினையை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். இலங்கையின் வரி அறவிடும் முறையை மறுசீரமைப்பது பாரதூரமான ஒரு பிரச்சினையாகும். மறைமுகமான வரிக்குப் பதிலாக நேரடியான வரி விகிதாசாரத்தை உயர்த்தும் அவசியம் இங்கு மையப் பிரச்சினையாகும். எவ்வாறாயினும் இத்தகைய ரடிக்கல் வரி மறுசீரமைப்புக்கள்மீது கவனம் செலுத்துவதற்கு இந்த அரசாங்கத்திற்கு ஆற்றல் உண்டு என நான் நினைக்கவில்லை. அவை இந்த அரசாங்கத்தின் சக்தி சமநிலையை வீழ்த்தும் அல்லது உடைக்கும் ஒரு நடவடிக்கையாக அமையலாம்.


இங்கு இலங்கையில் அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பிரமுகர்களுக்கு இருக்கக்கூடிய சக்தி மிக முக்கியத்துவம் வாய்ந்தது. “பொதுமக்களின் அபிலாஷைகள்” என்ற காரணி மிக முக்கியமானது என தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பொதுமக்களின் அபிலாஷைகளைவிட அரசியல் பிரமுகர்களின் அபிலாஷைகள் தீர்மானகரமானவை. இத் தருணத்தில் இந்த முரண்நிலை மிக பிரபலமாக வளர்ந்து வருகிறது.

இலங்கை அரசியலின் பிரமுகர்களின் பொறிமுறை, இத்தருணத்தில் செயற்படும் முறைக்கு அமைய மூன்று வகையாக பகிரலாம். முதலாவது வகை நீண்டகாலமாக அதிகாரம் இழந்து எதிர்கட்சியில் இருந்த பிரமுகர்கள் ஆவர். அவர்கள் தற்போது தமது சந்தர்ப்பத்தைக் கைப்பற்றி உள்ளனர். 1977 ஆம் ஆண்டிற்கு முன்னர் மாறிமாறி பிரதான கட்சிகள் ஆட்சிக்கு வந்ததையும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அந்தப் பிரமுகர்கள் குழுமம் ஆட்சிபீடம் ஏறுவதற்கும் வழிசமைக்கப்பட்டது. 1977 இன் பின்னர் அச் சந்தர்ப்பம் மிக நீண்டகாலத்திற்கு ஒருமுறையே கிடைத்தது.

அடுத்த இரண்டாவது வகை, அரசாங்க மாற்றம் அண்மிக்கும்போது அதனை முன்கூட்டியே அறிந்துகொண்டு மாற்றத்தின் பின்பு ஆட்சி இயந்திரத்தின் உயர் பதவிகளை கைப்பற்றுவதற்கு அபிலாஷை கொண்டு தமது அரசியல் விசுவாசத்தை மாற்றியமைக்கும்







www.newsfirst.lk

**தற்போதைய விகிதாசார முறை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் 12 சதவீதம் வாக்குகள் பெற்றால் மாத்திரமே தகைமை பெற்றிருக்க முடியும். திரு அஷ்ரப் பிரேமதாச அவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டின் விளைவாகவே இந்த விகிதாசாரம் குறைக்கப்பட்டது.**


*திருவாளர்கள் ஆர். பிரேமதாச மற்றும் அஷ்ரப்*

முறைமையாகும். அத்தகைய நபர்களுக்கு கடந்த முறையைப் போலவே இம்முறையும் அமைச்சுப் பதவிகளும், வேறு பதவிகளும் உரித்தாக்கப்பட்டுள்ளன. மூன்றாவது வகையைச் சேர்ந்தவர்கள் மாற்றம் ஏற்பட்ட பின்னர் பல்வேறு தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு தத்தமது கட்சிசார்பான தன்மையை மாற்றியமைத்து புதிய ஆட்சி இயந்திரத்திற்கு சார்பாக செயற்படுதல் ஆகும். இந்த மூன்று வகையைச் சார்ந்த நபர்களும் பொதுமக்களின் அபிலாஷைகளுக்கு மாறாக தமக்கே உரித்தான அபிலாஷைகளைக் கொண்டுள்ளனர். பொதுமக்களின் அபிலாஷைகளுக்கும் இப்பிரிவினரின் அபிலாஷைகளுக்குமிடையே பல முரண்நிலைகள் உண்டு. இந்த முரண்நிலையினுள் தற்போது அந்த பிரமுகர்களின் இயந்திரம் சக்தி வாய்ந்தது. தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டை நெறிப்படுத்தும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. இது கவனத்திற்கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். ஏனெனில் இத் தீர்மானங்கள் அவர்களின் விருப்பம்போல் மேற்கொள்ளப்படுகின்றன.

ஜனவரி 08 ஆந் திகதி ஏற்பட்ட மாற்றம் குறைந்த தீவிரத்தன்மை கொண்ட புரட்சியாக அடையாளப்படுத்த நான் விரும்புகிறேன். பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி ஆகிய புரட்சிகள் உயர்மட்ட தீவிரத் தன்மை கொண்ட புரட்சிகள் என அடையாளப்படுத்த முடியும். பொதுவாக எந்தவொரு புரட்சியின் பின்னரும் அந்த புரட்சிக்குப் பின்னால் உள்ள மக்களின் அபிலாஷைகளும் புரட்சிக்குப் பின்னரான நிலைமைகளுக்குமிடையே முரண்நிலைகள் ஏற்படலாம். ஜனவரி 08 ஆந்திகதி இலங்கையில் ஏற்பட்டதுபோன்ற குறைந்த தீவிரவாதம் கொண்ட ஒரு புரட்சியின்போது இத்தகைய முரண்நிலைகள் அதிகரிப்பதற்கான ஆற்றல் அதிகம். பொதுவாக உயர் தீவிரவாதம் கொண்ட புரட்சிகளின்போது தோல்வியுற்ற சக்திகள்மீது பாரிய வன்முறை கட்டவிழ்த்து விடப்படும். தீவிரத்தன்மை குறைந்த புரட்சிகளின்போது அவ்வாறு இடம்பெறுவதில்லை. இங்கு தோல்வியுற்ற சக்திகள் மீண்டும் முன்னேறுவதற்கான வாய்ப்பு உண்டு. தற்போது அத்தகைய நிலைமையே காணப்படுகிறது. அதேசமயம் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களும் புதிதாக உருவாகும் புதிய ஆட்சி இயந்திரத்திற்கும் இடையே பரஸ்பரம் முரண்நிலை ஏற்படுகிறது. இந்த நிலைமை இன்று துரிதமாக ஏற்பட்டுள்ளது. ராஜபக்ஷ ஆட்கள் அதிகாரத்தைத் தொடர்ந்து தக்க வைப்பதற்கு ஒரு சதியை மேற்கொண்டு வன்முறை கலந்த ஓர் மக்கட் போராட்டத்தை ஏற்படுத்தியிருந்தால் நிலைமை இதைவிட நன்றாக அமைந்திருக்கக் கூடும். அவ்வாறு இடம்பெற்றிருந்தால் தோல்வியுற்ற சக்திகள் தொடர்ந்தும் பலவீனமடையும் அதேவேளை அவர்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்கான சந்தர்ப்பம் மிகமிகக் குறைவு.

எவ்வாறாயினும் பொதுமக்களின் குரல் தொடர்ந்து எழுப்பப்படுவதை நாம் காண்கின்றோம். பொதுமக்கள் மத்தியில் உயர்மட்ட அரசியல் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. ஒருபுறம் பிரமுகர்களின் வர்க்கம் தம்மை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளதுடன் மறுபுறம் மக்கள் மத்தியிலும் ஒரு செயற்பாட்டைக் காண முடிகிறது. இந்த செயற்பாடு நிலவும்வரை நாம் எதிர்பார்ப்புக்களுடன் வாழமுடியும். இயன்றவரை பொதுமக்களை ஸ்தாபன ரீதியாக அணிதிரட்ட முடியும். அதேசமயம் அவர்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்த வேண்டும். அரசியல் தொடர்பாக ஆழமாகச் சிந்திப்போர் இந்தச் செயற்பாட்டை சரியாக அடையாளம்கண்டு அணிசேர்க்கக் கூடிய சக்திகளை ஒன்றிணைக்க வேண்டும். பிரமுகர்கள் தமது பேரம் பேசும் சக்தியை வெளிப்படுத்தும்போது அதற்கு எதிராக மக்கள் சக்தி அணிதிரட்டப்பட வேண்டும்.

எதிர்வரும் பொதுத்தேர்தல இலங்கை அரசியலில் எமக்கு புதிய அனுபவமாக அமையலாம். இந்தப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் பொதுமக்களின் எதிர்கட்சி ஒன்றைக் கட்டியெழுப்புதல் முக்கியமாகும். பிரமுகர்களின் அபிலாஷைகளுக்கும் மக்களின் அபிலாஷைகளுக்கும் இடையே தெளிவான வேறுபாட்டை ஏற்படுத்த முடியும். இத்தகைய நடவடிக்கையை பொதுமக்களுக்கு சார்பான முறையிலே எதிர்கால அரசியலைக் கருத்திற்கொண்டு மேற்கொள்வது அத்தியாவசியமாகும்.




ஜே.வீ.பீ உறுப்பினர்கள் சிலர் இலஞ்ச ஆணையாளருக்கு ஒரு முறைப்பாட்டை சமர்ப்பிக்கின்றனர்.



சட்டத்தரணி
**டீ.எம். திசாநாயக்க**

# நல்லாட்சியும் சுயாதீன ஆணைக்குழுக்களும்

அரச யந்திரம் அரசியல் மயமாக்கப்படுவதை தடுப்பதற்கும் அனைவரும் சட்டத்தின் முன்னே மற்றும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகையில் சம வாய்ப்பைப் பெறக்கூடிய வகையில் நல்லாட்சியை ஸ்தாபிக்கும் குறிக்கோளுடன் பல சந்தர்ப்பங்களில் நானாவித ஆணைக்குழுக்களை நியமிப்பது அண்மைக்கால இலங்கை அரசியலில் இடம்பெற்றுள்ளது. 1946 இல் அமைக்கப்பட்ட அரச சேவைகள் ஆணைக்குழு 1972இல் நீக்கப்பட்டது, 1978 அரசியல் அமைப்பு மூலம் மீண்டும் அரசாங்க சேவை ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. அரச ஊழியர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் சேவையிலிருந்து நீக்குதல் போன்ற அதிகாரங்கள் ஆரம்பத்தில் இதன் மூலம் அமுலாக்கப்பட்டது. 1994 இல் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கம் முழு அரசிலும் வியாபித்திருந்த இலஞ்சம், ஊழல் என்பவற்றை குறைக்கும் நோக்கில், இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வு ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு 1996 இல் மனித உரிமைகள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் இந்த ஆணைக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட குறிக்கோள்களிலிருந்து மாற்றுத் திசையில் பயணித்தது. அல்லது மீண்டும் அரசியல்








குற்றஞ்சாட்டப்பட்ட சிராணி

**1994 இல் ஸ்தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வு ஆணைக்குழு எதிர்பார்த்த பெறுபேறுகளை நோக்கிச் செல்வதற்கு அல்லது அரசத் துறையில் இலஞ்சம் மற்றும் ஊழல்களை குறைப்பதற்கு போதிய அளவு அதிகாரம் இருக்கவில்லை. அதே சமயம் நல்லாட்சியை உருவாக்குவதற்கு சுயாதீனமான ஆளும் சபைகளிடமிருந்து அவ்வாறு கட்டுப்படுத்த வேண்டிய மேலும் பல துறைகளை இக் கால எல்லையுள் அடையாளமும் காணப்பட்டது.**

அதிகாரத்திற்கு அடிபணிதல் பொதுவான குணாம்சங்களாக மாறியது. அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் சேவையில் இருந்து நீக்குதல் போன்ற அதிகாரங்கள் அமைச்சர்களின் அதிகாரத்திற்குக் கீழ்படுத்துதல். மற்றும் அதன் தீர்மானங்களை மாற்றியமைப்பதற்கு அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம் அமைச்சரவையிடம் வைத்திருத்தல் இதற்கு ஓர் உதாரணமாகும். 1994 இல் ஸ்தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வு ஆணைக்குழு எதிர்பார்த்த பெறுபேறுகளை நோக்கிச் செல்வதற்கு அல்லது அரசத் துறையில் இலஞ்சம் மற்றும் ஊழல்களை குறைப்பதற்கு போதிய அளவு அதிகாரம் இருக்கவில்லை. அதே சமயம் நல்லாட்சியை உருவாக்குவதற்கு சுயாதீனமான ஆளும் சபைகளிடமிருந்து அவ்வாறு கட்டுப்படுத்த வேண்டிய மேலும் பல துறைகளை இக் கால எல்லையுள் அடையாளமும் காணப்பட்டது.

இந்நிலமையை கருத்திற்கொண்டு மேலும் விரிவான மட்டத்தில் அமைந்த சுயாதீன ஆணைக்குழுக்களும் ஸ்தாபிக்கப்பட்டன. அது வரை நிலவிய ஆணைக்குழுக்களுக்கான நியமனங்கள் அரசியல் சார்புத் தன்மையில் இருந்து தூர விலக்கி முறைசார் 17வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டன. அன்று ஜே.வீ.பீ. யின் ஒத்துழைப்பைப் பெற்ற, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை முதன்மையாகக் கொண்ட கூட்டரசாங்கம் 17வது அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டு வந்ததோடு பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சிகளினதும் ஒத்துழைப்பு மேற்படித் திருத்தத்திற்கு வழங்கப்பட்டது. இது இந்த நாட்டு அரசியலின் விசேட சந்தர்ப்பமாகும். 17வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் மூலம் அது வரை நிலவிய ஆணைக்குழுக்கள் உட்பட 7 ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கு வசதிகள் வழங்கப்பட்டன.

1. தேர்தல் ஆணைக்குழு
2. அரசாங்க சேவை ஆணைக்குழு
3. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
4. மனித உரிமைகள் ஆணைக்குழு
5. இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வு ஆணைக்குழு
6. நிதி ஆணைக்குழு
7. எல்லைகளை நிர்ணயிக்கும் ஆணைக்குழு

### சாதகமான ஒரு மாற்றம்

இந்த ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும் போது ஒரு பொது வழிமுறையை அறிமுகம் செய்வதற்கு இது விசேட தன்மை கொண்டதாக அமைந்தது. அது வரை நிலவிய வழிமுறை ஜனாதிபதியினால் அரசாங்கத்தின் உயர் பதவிகளுக்கு நியமனங்களை மேற்கொள்ளும் போது மேற்படி ஆணைக்குழுக்களுக்கு ஆட்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு அரசியல் அமைப்புப் பேரவையும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது 17வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. அரசாங்க சேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுக்கள் ஏற்கனவே வேறு சட்டங்கள் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததோடு மேற்படி ஆணைக்குழுக்களை நியமித்தல் இதற்கான நியமனங்கள் நிறைவேற்றுத் துறையின் தற்றுணிபுக்கு ஏற்ப இடம்பெற்றது. 1978 அரசியலமைப்பின் உறுப்புரை 56 (1) இற்கு அமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் தவிசாளர் ஆகியோர் ஜனாதிபதியினால் நியமனம் பெறுவர். மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களை நியமித்தல். அரசியல் அமைப்பு பேரவையின் ஆலோசனையின் கீழ் ஜனாதிபதி இந்த நியமனங்களை மேற்கொள்வார் என்றும் மேற்படி சட்டங்கள் குறிப்பிடுகின்றன. அரசியல் அமைப்புப் பேரவை இல்லாத பின்னணியில் அது ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நல்லாட்சியை ஸ்தாபிப்பதற்கு பொறுத்தமற்ற அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தாமல்,

www.freedomoutpost.com




**நல்லாட்சியை ஸ்தாபிப்பதற்கு பொறுத்தமற்ற அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தாமல், அரச நிர்வாகத்தை வலுவுடன் ஸ்தாபிப்பதற்கு பங்களிப்புச் செய்வதை அடையாளம் கண்ட ஏழு ஆணைக்குழுக்கள் நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஏற்றுக்கொண்டு அதன் பகுதியாக நியமித்தல். 17வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அடையாளம் கண்டதை விட சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.**

அரச நிர்வாகத்தை வலுவுடன் ஸ்தாபிப்பதற்கு பங்களிப்புச் செய்வதை அடையாளம் கண்ட ஏழு ஆணைக்குழுக்கள் நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஏற்றுக்கொண்டு அதன் பகுதியாக நியமித்தல். 17வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அடையாளம் கண்டதை விட சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 17வது அரசியலமைப்பிற்கான திருத்தத்திற்கு அமைய அரசியலமைப்புப் பேரவையை நியமித்த பின்னர் மேற்கூறிய ஆணைக்குழுக்களுக்கான நியமனங்கள் இடம்பெற வேண்டும். இதற்கமைய 2001ம் ஆண்டில் அரசாங்க சேவை பற்றிய அரசியலமைப்பில் அதுவரை நிலவிய ஏற்பாடுகள் திருத்தப்பட்டு புதிய ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்டன. அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைகள் மீது 9 உறுப்புரைகளை உள்ளடக்கிய அரசாங்க சேவை ஆணைக்குழு நியமனம் பெற வேண்டும். மேற்படி குழுவின் ஓர் உறுப்பினர் தவிசாளராக நியமனம் பெறுவார். இத்திருத்தத்தின் மூலம் அது வரை நிலவிய அரசாங்க சேவை ஆணைக்குழு பாரிய மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டதோடு, அரசாங்க சேவையின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள், சேவை நீக்கம் என்பன பற்றிய முழு அதிகாரமும் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசியலின் பாரிய தாக்கத்திற்கு உள்ளாகியிருந்த அரச சேவையின் சுயாதீனமாக செயற்படும் வாய்ப்புக்கள் திறந்து விடப்பட்ட அதே நேரத்தில் மேற்படிப் பொறுப்பு வாய்ந்த ஆணைக்குழு பாராளுமன்றத்திற்கு வகைப்பொறுப்புக் கூறும் நிறுவனமாக மாறியது.

### பலவீனங்கள்

2002ம் ஆண்டில் 9 உறுப்பினர்களால் அமைந்த தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டதோடு ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரிய அதன் தவிசாளராக நியமனம் பெற்றார். பொலிஸ் சேவையின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரங்கள் பொலிஸ் ஆணைக்குழுவிடம் உரித்தாக்கப்பட்டன. மிகவும் பயனுறுதி வாய்ந்த பொலிஸ் சேவையைப் பராமரிப்பதற்கு இது உதவியாக அமைந்தது. 2004 பாராளுமன்றத் தேர்தலின் போது மிகவும் கட்சி சார்பற்ற பொலிஸ் சேவையைக் காண முடிந்தது. வன்முறை ஆகக் குறைந்த தேர்தலாக அதனை மாற்றியமைக்கவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் பற்றியே பொலிஸ் ஆணைக்குழு கவனம் செலுத்தியிருந்தது. பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகளைப் பெறுவதில் அநாவசியமான தாமதங்கள் இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர்களாக நியமனம் பெற்றோர் முழு நேரத்தையும் தமது பதவிகளுக்கு ஒதுக்கவில்லை. போதியளவு ஒத்துழைப்பு நிர்வாகத்தின் போதும் ஆளணி முகாமைத்துவத்தின் போது கிடைக்காமையும் இதற்குக் காரணமாயின. சில பிரச்சினைக்குரிய நிலமைகள் ஏற்படுவதை அவதானித்த போதும் பல சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு மேற்கொண்ட தீர்மானங்களுக்கு எதிராக பொலிஸ் உத்தியோகத்தர்கள் மனித உரிமைகள் வழக்குகளை தொடர்ந்ததை காணக்கூடியதாக இருந்தது.

1996ம் ஆண்டின் 21ம் இலக்கச் சட்டத்தின் மூலம் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிமுகப்படுத்தப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 2003ம் ஆண்டு வரை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டனர். 2003 இன் பின்னர் அரசியல் அமைப்புப்பேரவையின் பரிந்துரைகளின் கீழ் ஜனாதிபதியினால் பரிந்துரைகளுக்கு அமைய ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டன. உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்குகளைத் தொடர முடியாதவர்களுக்கு சட்டத்தின் முன்னே சமத்துவத்தை உறுதி செய்வதற்கும் அடிப்படை உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சட்ட பூர்வமான நிர்வாக ரீதியான ஒழுங்கு முறைகளை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்குவதற்கு மனித உரிமைகள் பற்றிய கல்வியை வழங்குவதும் ஆணைக்குழுவின் முக்கிய குறிக்கோளாகும். இத்துரையின் ஆணைக்குழு





www.therepublicsquare.com



**இலஞ்சத்திற்கும் ஊழலுக்கும் எதிராக செயற்படுதல் 1994 இல் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கத்தின் முக்கிய சுலோகமாக அமைந்ததோடு, புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தவுடன் அது குறித்து இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்யும் நிரந்தர ஆணைக்குழு சட்டத்தை அமுலாக்கியது.**

*சந்திரிகா பண்டாரநாயக்க குமாரனதுங்க அவர்கள்*

எதுவித முறைப்பாடு இன்றியும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்வரும்ம் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உண்டு. ஒவ்வொரு நாடுகளிலும் மனித உரிமைகள் பற்றிய நிலைமைகளைவிட்டு மீளாய்வு செய்யும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மீளாய்வுக் கூட்டங்களின் போதும், இலங்கையினக் மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகளைப் rபற்றி அறிக்கை சமர்ப்பிக்கும் பாரி பொறுப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு உண்டு.

இலஞ்சத்திற்கும் ஊழலுக்கும் எதிராக செயற்படுதல் 1994 இல் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கத்தின் முக்கிய சுலோகமாக அமைந்ததோடு, புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தவுடன் அது குறித்து இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்யும் நிரந்தர ஆணைக்குழு சட்டத்தை அமுலாக்கியது. ஏற்கனவே இலஞ்சம் தொடர்பான சட்டம். இலங்கையின் சட்டத்துறையில் 1954 ன் இலஞ்சச் சட்டமும் தேசிய அரச பேரவையில் 1975 இலக்கம் (1) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின் மூலமும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அதனை அமுல்படுத்துவது முறைசார் நிறுவனங்கள் இல்லாமை பாரிய குறைபாடாகும். இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்யும் நிரந்தர ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் ஓய்வ பெற்ற உயர் நீதிமன்ற அல்லது மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் இருவர் மற்றும் குற்றப் புலனாய்வு மற்றும் சட்ட அமுலாக்கம் தொடர்பான அனுபவம் பெற்ற ஒரு நபர் உட்பட்ட 3 உறுப்பினர்கள் உள்ளடங்கிய ஆணைக்குழு ஐந்து ஆண்டு காலத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இலஞ்ச குற்றச் சாட்டுக்களை புலனாய்வு செய்வதற்கும், தவறிழைத்தோரை கைது செய்வதற்கும் விசேட பயிற்சி பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டனர். இந்த ஆணைக்குழுவிற்கான நியமனங்கள் முதல் சந்தர்ப்பத்திலும் இரண்டாம் சந்தர்ப்பத்திலும் அரசியலமைப்பிற்கான 17வது திருத்தத்திற்கு முன்னர் இடம்பெற்றமையால் அது அன்றைய ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவினால் மேற்கொள்ளப்பட்டது. 3வது ஆணைக்குழுவிற்கான நியமனங்கள் அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைக்கு அமைய இடம்பெற்றது. எவ்வாறாயினும் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டபோது எதிர்பார்த்த மட்டத்தில் இடையீடு ஊழல்களை தடுத்தல் மற்றும் தவறிழைத்தோர் சட்டத்தின் பிடியில் எடுத்தல் இடம்பெறவில்லை. என்பன ஆணைக்குழுவிற்கு சுமத்தப்படும் பாரதூரமான குற்றங்களாகும். இலஞ்சம் அல்லது ஊழல் ஆகிய பரந்துபட்ட எல்லை சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்தாலும் அதனை இலஞ்சத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தலும் எழுத்து மூலம் முறைப்பாடு இன்றி புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபடாமையும் கடந்த காலம் முழுவதும், தமது துறையை சுருக்கிக் கொள்வது இடம்பெற்றுள்ளது. நிறைவேற்றுத் துறை போராட்டத்தில் அரசியல் அமைப்பிற்கான 17வது திருத்தத்தின் மூலம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஒன்று நியமனம் பெறவேண்டும் என முன்மொழியப்பட்டாலும், இதுவரை அந்நியமனம் மேற்கொள்ளப்படவில்லை. ஒரு தனிநபர் ஒட்டுமொத்த தேர்தல் நடவடிக்கைகளே நெறிப்படுத்துவது அபாய வாய்ப்புக்குரியது. என பல்வேறு கட்டங்களில் கலந்துரையாடப்பட்டாலும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்கும் விருப்பம் பதவியில் இருந்த ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படவில்லை. இது கவலைக்குரிய நிலைமையாகும். அரசியலமைப்புப் பேரவை தேர்தல் ஆணைக்குழுவை நியமிப்பதற்கு தனது பரிந்துரைகளை வழங்கிய போதிலும் அன்று பதவியில் இருந்த ஜனாதிபதியும் அந்த யோசனையை நிராகரித்தமையால் ஆணைக்குழு நியமனம் பெறவில்லை. இதனால் இப்பதவியை வகித்த தேர்தல் ஆணையாளர் தனது ஓய்வூதியக் கால எல்லைக்குப் பின்னரும் ஒரு சில வருடங்கள் பதவி வகிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்.

மேற்கூறிய ஆணைக்குழுக்களுக்கு மேலதிகமாக நல்லாட்சியை உறுதி செய்வதற்காக பங்களிப்புச் செய்யும் மேலும் பல ஆணைக்குழுக்கள் உண்டு. அரசியலமைப்பிற்கான 17வது திருத்தத்தின் பின்னர் மேற்படி ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பது அரசியல் அமைப்புப் பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய ஏற்படுவதாக சட்டங்கள்


www.theguardian.com

**ஆணைக்குழுவிற்குரிய அதிகாரத்தை குறைப்பதை விட ஆணைக்குழுவிற்கான நியமனங்களை இருக்கமான அரசியல் சார்புத் தன்மை மூலம் மேற்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவற்றின் சுயாதீனம் முழுமையாக நீக்கப்பட்டதோடு நிறைவேற்றுத் துறையை மகிழ்விப்பதற்காக செயற்படும் நிறுவனத் தொகுதியாக இது மாறியது.**

திருத்தப்பட்டன. மத்திய வங்கியின் நிதி ஆணைக்குழு, தேர்தல்கள் இடம்பெறுவதற்கு ஏற்புடைய எல்லை நிர்ணய ஆணைக்குழுவும், சுயாதீன நீதிச் சேவை ஆணைக்குழுவும் இவற்றுள் முக்கியமானது. நீதிச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் உத்தியோகபூர்வமாக பிரதம நீதியரசர் ஆவார். அரசியல் அமைப்புப் பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் கடந்த காலத்தில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு போன்ற நிறுவனங்களும் அரசியல் அமைப்புப் பேரவையின் பரிசீலனைக்கு ஆளாகியிருக்க வேண்டும் என்பதற்கும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், நல்லாட்சியை ஸ்தாபித்ததன் பின்னர் பொருத்தமற்ற அரசியல் அழுத்தங்கள் இன்றி அரச சேவை, நீதி நிர்வாகம் மற்றும் சட்டத்தை அமுலாக்குவதற்கு ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் சுயாதீன ஆணைக்குழுக்களின் அடிப்படை அபிலாஷைகளும் 18வது அரசியலமைப்பிற்கான திருத்தத்தின் மூலம் வீழ்ச்சியடைந்தது. அது வரை நிலவிய அரசியலமைப்புப் பேரவைக்கான நியமனங்களின் போது ஏற்பட்ட மோதல் நிலைமைகளை ஆயுதமாகக் கொண்டு, நேரடியாகவே அரசியலுக்கு பக்கச் சார்பாகச் செயற்பட்டு நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு அடிபணிந்த பாராளுமன்றச் சபையை ஸ்தாபித்ததோடு ஜனாதிபதி முன்வைக்கும் பேர்களுக்கு கருத்துக்களைக் கூறுவதற்கான உரிமை மாத்திரம் வழங்கப்பட்டது. எனவே ஆணைக்குழுக்களுக்கு ஜனாதிபதிக்கு சார்பான நபர்கள் நியமிக்கப்பட்ட அதே நேரம் சகல ஆணைக்குழுக்களும் அவற்றை அமைத்த அடிப்படை குறிக்கோள்களிலிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டது. அரசியல் அமைப்பிற்கான 18வது திருத்தம் கொண்டுவரும் சந்தர்ப்பத்தில் நிறைவேற்றுத் துறை அடிக்கடி சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு தாக்கங்களை ஏற்படுத்தினர். 2006 ஏப்ரல் மாதத்தில் ஜனாதிபதி அரசியலமைப்பிற்கு முறனான வகையில் பொலிஸ் ஆணைக்குழுவை நியமித்ததோடு அரசியல் அமைப்புப் பேரவையின் கருத்தை ஆராயாமல், சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர்கள் இருவர் நியமிக்கப்பட்டனர். அரசியல் அமைப்பிற்கான 18வது திருத்தத்தின் மூலம் ஆணைக்குழுவின் நியமனங்கள் இடமாற்றங்கள் மற்றும் பதவியுயர்வுகள் தொடர்பான அதிகாரங்கள் மீளவும் அரச சேவை ஆணைக்குழுவிடம் வழங்கி ஒழுக்க நெறிமுறை தொடர்பான அதிகாரம் மாத்திரம் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டது. அதே சமயம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு தேர்தல்களின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த பல அதிகாரங்கள் அரசியல் அமைப்பிற்கான 18வது திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டது.

ஆணைக்குழுவிற்குரிய அதிகாரத்தை குறைப்பதை விட ஆணைக்குழுவிற்கான நியமனங்களை இருக்கமான அரசியல் சார்புத் தன்மை மூலம் மேற்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவற்றின் சுயாதீனம் முழுமையாக நீக்கப்பட்டதோடு நிறைவேற்றுத் துறையை மகிழ்விப்பதற்காக செயற்படும் நிறுவனத் தொகுதியாக இது மாறியது. எந்தவொரு ஆணைக்குழுவினதும் புலனாய்வுக்குட்பட்ட விடயமாக ஜனாதிபதியின் அல்லது அவரைச்சுற்றியுள்ள நபர்களின் ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் நிறுத்தக்கூடிய வகையில் ஆணைக்குழுவின் கௌரவம் சீரழிந்தது.

நல்லாட்சியை ஸ்தாபிக்கும் குறிக்கோளுடன் ஒட்டுமொத்த சமூகமும் ஒன்றிணைந்து இச்சந்தர்ப்பத்தில், நல்லாட்சியை மேல் கீழாகப் பிரட்டிய அரசியலமைப்பிற்கான 18வது திருத்தத்தை நீக்குவதற்கு செயற்படும் போது அரசியலமைப்பிற்கான 17வது திருத்தத்தில் அமைந்த பலவீனங்களை கற்ற பாடமாக கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. நல்லாட்சியை உருவாக்குவதற்கு முன்வைக்கப்படும் அரசியல் அமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தம் எதிர்காலத்தில் உருவாகும் மற்றுமோர் தான்தோன்றித்தனமான ஆட்சியாளர். தான் விரும்பியபடி மாற்ற முடியாததாக இருத்தல் வேண்டும்.






தேர்ச்சிபெற்ற சினிமா நெறியாளர்
கலாநிதி
**தர்மசேன பதிராஜ**

www.gallery.gossipelankanews.org

முன்னைநாள் ஜனாதிபதி திரு. மஹிந்த ராஜபக்ஷவை கலைஞர்கள் சந்தித்த போது .....

# அரசாங்கம் எதுவாயினும் கலைஞர்களை அடிவருடிகளாக்குவது தவறு

சமூகத்தின் ஓர் உறுப்பினரான மனிதனை ஆத்மீக ரீதியில் உயர்த்தும் கலை உருவாவதாயின் நல்ல சமூகம் இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால், ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை கலையை அவதானிக்கும் போது சமாதானமான சமூகங்களில் மாத்திரம் கலை பிறப்பதில்லை. அதே சமயம் சமாதானமற்ற சமூகங்களில் பல்வேறு வகையான கலைப்போக்குகள் உருவானதையும் நாம் கண்டுள்ளோம். உதாரணமாக இன்றைய கலையையும் இலக்கியத்தையும் பற்றி எமக்கு இருக்கக்கூடிய போக்குகள் அடிப்படையில் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உருவாகிய கலைகளுடன் தொடர்புகொண்டவை. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் சமூகத்தின் பல்வேறு புலக்காட்சிகள் மற்றும் பொதுவாக அந்தச் சமூக யதார்த்தத்துடனேயே எமது கலை பற்றிய உறவுகள் கட்டியெழுப்பப் படுகின்றன. சமூகத்தில் ஏற்பட்ட பல்வேறு வளர்ச்சிகளிடையே குறிப்பாக யதார்த்தவாத எண்ணக்கரு, அதன் பின்பு அதி யதார்த்த வாதம் பின்னர் பின் நவீனத்துவம் பாரிய வளர்ச்சி இந்தப் பரிணாமத்தில் உள்ளடக்கியுள்ளது.

கலை சிருஷ்டி என்று கூறும் போது ஒரு தனிமனிதனின் மனதில் தனிப்பட்ட முறையில் உருவாகும்



www.archives.dailynews.lk

**நடைமுறை அரசியலும், கலாசாரமும் சமகால சமூக விஞ்ஞானம், தத்துவம் மற்றும் மதத்தின் ஊடாக மேற்படி கருத்தியலை அரவணைத்துக்கொள்ள முடியும். ஆனால், கலை என்பது குறிப்பாக அத்தகைய கருத்தியல் மீது சிக்குண்டு அந்தக் கருத்தியலை சிருஷ்டிக்கும் நடவடிக்கைகளுக்கு அவ்விடயத்தை கருத்திற் கொண்டு பார்க்க வேண்டும்.**

விடயம் பற்றி நாம் கவனத்திற் கொள்கின்றோம். ஒரு தனிநபர் என்ற வகையில் ஓர் களைஞன் தனது சமூகத்தில் எவ்வாறு கொடுக்கல் வாங்கல் செய்கின்றான். சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு, சமூக அனுபவங்கள் அல்லது சமூகத்தின் ஆத்மீகத்தைப் பின்னணியாகக் கொண்டு சிருஷ்டிக்கப்படும் ஒன்றாயின் அவர் சமீகரணம் செய்வது எவ்வாறு ? தமது கலைப் படைப்புக்களுக்கு ஏதுவான விடயங்கள் யாவை ? தொனிப்பொருள்கள் யாவை?

இங்கு ஓர் கலைஞராக அடையாளம் கண்ட குறிப்பிட்டதொரு கருத்தியல் தம்முள் போஷிக்கப்பட்டு, அவ்வாறு போஷிக்கப்படும் கருத்தியல் கலையினூடாக சிருஷ்டிக்கப்படும் என்ற பிரச்சினை வருகிறது. அப்போது கலைக்கும் கருத்தியலுக்கும் இடையே உள்ள உறவு யாது என அனேகமாக நாம் சிந்திக்க நேரிடுகிறது. நடைமுறை அரசியலும், கலாசாரமும் சமகால சமூக விஞ்ஞானம், தத்துவம் மற்றும்  மதத்தின் ஊடாக மேற்படி கருத்தியலை அரவணைத்துக்கொள்ள முடியும். ஆனால், கலை என்பது குறிப்பாக அத்தகைய கருத்தியல் மீது சிக்குண்டு அந்தக் கருத்தியலை சிருஷ்டிக்கும் நடவடிக்கைகளுக்கு அவ்விடயத்தை கருத்திற் கொண்டு பார்க்க வேண்டும்.

1917 புரட்சியின் பின்னர் ரஷ்யாவில் உதித்த கலை இதற்குச் சிறந்த உதாரணமாகும். சமூக யதார்த்தவாதம் என்று இக்கலை அறிமுகப்படுத்தப்படுகிறது. கலையின் குறிக்கோள் ஏற்கனவே இருந்த சமூகத்தை மறுசீரமைப்பது அல்லது சமூகம் என்பது வர்க்க சமூகம் என்றே கருதப்படுகிறது. குறிப்பாக பாட்டாளி வர்க்கத்தின் அல்லது உழைக்கும் வர்க்கத்தின் குறிக்கோள்களை வெற்றியீட்டுவதற்கு கலை சிருஷ்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்து சோசலிசத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இங்கு நிலவும் ஏகபோக அதிகாரிகளின் கருத்தியல் கலையின் கருத்தியலாக மாறுவது தெரிகிறது. இங்கு அரச அதிகாரமும் கலையும் ஒரு கருத்தியலாக தோன்றுகிறது. ஆனால் அதன் நிலையாமையும் கலையும் அதுவல்ல என அடையாளம் காண்பதற்கு அவ்வளவு காலம் எடுப்பதில்லை. சோவியத் அரசின் வீழ்ச்சிக்கு முன்னே இது அடையாளம் காணப்படுகிறது. சொல்சினிட்சின் போன்ற சிற்சில போக்குகள் சிற்சில எழுத்தாளர்கள் இவற்றினூடே தோன்றுகின்றனர்.

சோவியத் புரட்சிக்குத் தலைமை தாங்கிய தலைவர்களிடையே கூட குறிக்கோள்கள் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. லெனின் ட்ரொற்ஸ்கி போன்றே ஏங்கல்சும் கலையின் குறிக்கோள் என்னவென்பதும் கலை இவ்வாறு தான் பராமரிக்க வேண்டும் என்றோ குறிப்பிட்டதொரு வகையில் விளக்க மாதிரி தயாரிக்கவோ அல்லது முன்வைக்கவோ இல்லை. அசையும் வகையான ஒன்றென அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே எந்தவகையில் கலையை அறிமுகம் செய்வது என்ற பிரச்சினையை கலைஞர்கள் எதிர்நோக்குகின்றனர்.

எமது கலையின் வரலாற்றை நாம் எடுக்கும் போது அதன் வளர்ச்சி மிக மந்தமாகவே இருக்கிறது. எனது அறிவுக்கு எட்டிய வரை மிக விசேடமான முறையில் இந்த விடயத்தை அடையாளம் கண்ட ஒரே திறனாய்வாளர் மற்றும் தத்துவவாதி பேராசிரியர் சுச்சரித்த கம்லத் ஆவார். அவர் இவ்விடயங்களை மெருகூட்டி எடுத்தார். குறிப்பாக ட்ரொட்ஸ்கியவாத நிலைப்பாட்டில் இருந்துகொண்டே அவர் கலையை நோக்கினார். ட்ரொட்ஸ்கியவாத கலைத் திறனாய்வு பார்வையற்றவரின் பிரதி செய்தலை அவர் மேற்கொள்ளவில்லை.

பேராதனை இலக்கியத்திற்கே பேராசிரியர் சுச்சரித்த கம்லத் சவால் விடுத்தார். அது கலையில் அமைந்த கருத்து முதல் வாதத்திற்கு எதிரான போராட்டமாகவே அமைந்தது. ஏதோ ஒரு வகையில் சமூகத்தில் பிரிந்திருந்த தமது மனோ உலகத்தில் ஏற்படும் சிற்சில கூருணர்வு எண்ணக் கரு மீலுருவாக்கம் செய்பவரே கலைஞர் என பேராதனை இலக்கியம் கூறியது. எனவே கலை என்பது கலைஞனின் உளவியல் உலகத்தின் மறு சிருஷ்டியாகக் கூறப்பட்டது.

அதற்கு அப்பால் சென்ற பேராசிரியர் கம்லத் கலை என்பது தற்போதைய சமூகத்தின் முரண் நிலைகளிலிருந்து தோன்றும் மிக ஆழமான விடயங்களாகும். கலையின் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சிருஷ்டிகளே இவை என சுட்டிக்காட்டினார். ரசணைக்காக படைக்கும் இக்கலை தாம் வாழும் யுகத்தையும், தமது பரம்பரையையும், அதே போல தாம் இருக்கும் பூமியையும் விடயமாகக் கொண்ட ஒன்றாக அமைதல் வேண்டும். ஒரு வகையில் இத்தகைய திறனாய்வை உருவாக்கிய பேராசிரியர் கம்லத் பிற்காலத்தில் வளர்க்கப்பட்ட திறனாய்வு எண்ணக்கருக்கள் மீது அவ்வளவு கவனத்தைச் செலுத்தவில்லை. சர்வதேச ரீதியாக உருவாக்கப்படும் போக்குகளை ஒன்றிணைத்து, தற்போதைய யுகத்தின் உண்மையான கலை யாது என்ற



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்



www.chineseposters.net

**சோவியத் புரட்சிக்குத் தலைமை தாங்கிய தலைவர்களிடையே கூட குறிக்கோள்கள் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. லெனின் ட்ரொற்ஸ்கி போன்றே ஏங்கல்சும் கலையின் குறிக்கோள் என்னவென்பதும் கலை இவ்வாறு தான் பராமரிக்க வேண்டும் என்றோ குறிப்பிட்டதொரு வகையில் விளக்க மாதிரி தயாரிக்கவோ அல்லது முன்வைக்கவோ இல்லை.**

கருத்தியலை சிருஷ்டிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள பாரிய சவால்களை இன்றைய கலைஞர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் பல்வேறு கலைத்திறனாய்வாளர்களின் கருத்துக்களை எடுத்து அவற்றை ஒன்றாக இணைத்து அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதால் திறனாய்வின் போது எமக்கு பல்வேறு மூலப் பொருட்கள் இருக்கின்றன. அதற்கமைய அவற்றிலிருந்து தோன்றும் உண்மையான கலை யாது எனப் புரிந்துகொள்வது சாத்தியம். ஆனால், சிருஷ்டிகரமான நூல்களில் ரசனைக்காக எவ்வாறு சிருஷ்டிப்பது என்ற பிரச்சினை ஒரு சவாலாக எமது நாட்டில் இருக்கின்றது.

### போரும் கலையும்

கடந்த 30, 40 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்களை சரியாகக் கிரகித்துக் கொண்ட இரண்டு நூல்கள் உண்டு. ஆனால், எமது நாட்டில் நிலவிய யுத்தத்தை ஒரு நாவல் மூலமோ, கவிதை மூலமோ ஒரு சிறுகதை மூலமோ அல்லது ஒரு சினிமா படத்தின் மூலமோ சரியான முறையில் கிரகித்து கொண்டார்கள் எனக் கூற முடியாது. எமக்கு பல எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். போரைப் பற்றி எழுதப்பட்ட விடயங்களை எடுத்துப் பார்க்கையில், அவை கருத்து முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு, அல்லது தமது கற்பனை உலகில் படைக்கப்பட்ட விடயங்களாக உள்ளன. அவ்வாறின்றி யுத்தத்தில் பிரவேசித்த ஒரு சமீகரணமாக அவை அமையவில்லை. இதனுள் அவற்றிற்குக் காரணமான கருத்தியல் விடயங்கள் பல உண்டு. வேறு வகையில் கூறுவதாயின் இதில் பிரவேசிப்பதற்கான ஒரு சுயாதீனம் அவர்களுக்குக் கிடையாது. சிங்கள குடிமக்கள் கஷ்டத்தை எதிர்நோக்கினார்கள் என்றே இந்த சிருஷ்டிகள் எடுத்துக் கூறுகின்றன. குண்டு வெடிக்கும் போது தெருவில் பயணிக்க முடியாது. அச்சமும் சந்தேகமும் நிலவும். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாது. புலக் காட்சிகளை இவ்வாறாக மிகக் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கலைப் படைப்பை சிருஷ்டிப்பதற்கு இந்த அனுபவங்கள் போதாது இந்த அனுபவங்களை இதனை விட ஆழமாக ஏன் கிரகித்துக் கொள்வதில்லை. அவ்வாறு கிரகிக்காத வரை ஒரு சரியான படைப்பு உருவாக்கப்பட மாட்டாது. உயர்ந்த தரம் கொண்டது எனக் கூறமுடியாவிட்டாலும் சில வேலைகளில் இடையிடையே எழுதப்பட்ட கவனம் செலுத்தப்பட்ட கலைப் படைப்புக்கள் உண்டு. அவ்வாறு இருப்பினும் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஒட்டுமொத்தமான சமூகம் யுத்தத்தைப் பற்றி ஒரு படைப்பை நிர்மாணிக்கும் நிலை இல்லை.  யுத்தம் எவ்வாறு சமூகத்தின் கீழ் மட்டத்திற்கு கசிந்துள்ளது. ஏன் யுத்தம் உரிய முறையில் கீழ்நோக்கி கசிவதில்லை என்ற விடயம் பற்றி நாம் ஆராய வேண்டும். ஒரு முனை வாதத்திற்கு அப்பால் இருந்து போரின் அனுபவங்களைப் பெறுவதற்கு இலங்கைக் கலைஞர்கள் வெற்றிபெறவில்லை.

தென்னிலங்கையில் யுத்தம் இல்லாமை அதற்குக் காரணமா ? என்று எனக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது. குறிப்பாக தென்னிலங்கையில் சிங்கள மொழியில் எழுதப்படும் நாவலாசிரியர்களுக்கு சிறுகதை ஆசிரியர்களுக்கு, அல்லது வேறு கலைப் படைப்பாளர்களுக்கு அவற்றை உள்வாங்கிக்கொள்ள முடியாமைக்குக் காரணம் இதுவாக இருக்கலாம். போரின் அனுபவங்கள் ஊடகங்கள் வாயிலாகவே எமக்கு வழங்கப்பட்டன. அரச கருத்தியலே எமக்குக் கூறப்பட்டது. குறிப்பாக சிங்கள பௌத்த கருத்தியல் மூலமே அது வெளிப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக தென்னிலங்கையின் நாம் அதை ஒரு வெளிவாரிப் பிரச்சினையாகவே கண்டோம். அவ்வாறே இது எமக்கு கூறப்பட்டது. எனவே யுத்தம் ஏற்பட்ட யதார்த்தம் மிகவும் நுட்பமாக அடையாளம் காணக்கூடிய வகையிலே நாம் புரிந்துகொண்டோம். அதை அவ்வாறு உணர்வதற்கும் எம்மால் முடியவில்லை. நிகழ்காலத்தில் இதனையே நாம் காணக்கூடியதாக உள்ளது.

பல நூற்றுக் கணக்கான கவிதை நூல்களை எழுதியவர்கள் எம்மத்தியில் இல்லை. ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் இளம் தமிழ் கவிஞர்கள் இடையிடையே எழுதிய கவிதைகள் மூலம் யுத்தத்தின் உண்மையான சுய ரூபத்தை வெளிக்காட்டியமையையே மொழி பெயர்ப்பு மூலம் நான் அறிந்துள்ளேன். துரோகி (ற்ரேட்டர்) என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட நூலை ஓர் உதாரணமாகக் கொள்ள முடியும். நான் அறிந்த மட்டில் அது பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டு, பின்னர் பிரெஞ்சிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

யுத்தம் என்பது எத்தகையது ? யுத்தம் எவ்வாறு ஏற்பட்டது? யுத்தம் காரணமாக எத்தகைய சமூக அழிவு பயங்கரம் என்பன



www.peaceinsrilanka.lk

**எமக்கு பல எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். போரைப் பற்றி எழுதப்பட்ட விடயங்களை எடுத்துப் பார்க்கையில், அவை கருத்து முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு, அல்லது தமது கற்பனை உலகில் படைக்கப்பட்ட விடயங்களாக உள்ளன. அவ்வாறின்றி யுத்தத்தில் பிரவேசித்த ஒரு சமீகரணமாக அவை அமையவில்லை.**

*போரின் சமீகரணம் ....*

ஏற்பட்டன. என இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது மாத்திரம் அல்ல கலாசாரம் சமூகம் மற்றும் பொருளாதாரம் என்ற வகையில் எவ்வளவு தூரம் அவர்கள் ஒடுக்கு முறைக்கு ஆளானார்கள் என்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. யுத்தத்தின் பயங்கரத் தன்மையை இந்நூல் வெளிப்படுத்துவதோடு யுத்தத்தின் யதார்த்தத்தை கிரகித்துக்கொண்ட ஒரு நூலாகவும் இப்புத்தகத்தை நாம் அறிமுகப்படுத்த முடியும்.

எனது In Search of a Road என்ற திரைப்படத்தை தயாரிக்கும் போது ஓமந்தைக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் அரசே இருந்தது. அங்கு அவர்களின் கலைஞர்கள், சினிமாக்காரர்கள் பலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. மறுபுறம் விடுதலைப் புலிகள் எனது படைப்பைத் தயாரிப்பதற்கு உதவினர். அல்லது தென்னிலங்கையிலிருந்து போய் இத்தகைய ஒரு சினிமாவை தயாரிப்பதற்கு வாய்ப்புக் கிட்டமாட்டாது. கொடூரமான விடுதலைப் புலிகளின் அரசு என்று அறிமுகப்படுத்திய அந்தப் பிரதேசத்திலும் சுதந்திரம் இருந்தது என்பதை சுட்டிக்காட்டவே நான் முயல்கின்றேன். நான் விரும்பியதை எதுவித அழுத்தமும் இன்றி நான் தயாரித்தது மாத்திரம் அல்ல அதன் ஒரு பிரதியை தயா மாஸ்டருக்கு அனுப்பினாலும் எனக்கு அது பற்றிய எதுவித பிரதிபலிப்பும் கிடைக்கவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

## அரச கருத்தியலும் கலையும்

அரசு என்பது கலைஞர்கள் மீதும் களைச் சிருஷ்டிகள் மீதும் ஆச்சரியப் படத் தக்க வகையில் உட்பிரவேசித்துள்ளன. பகிரங்க அரங்குக் கட்டுப்பாட்டுச் சபை மேற்கொள்ளும் தணிக்கை பற்றி நான் இங்கு பேசவில்லை. அரச அதிகாரத்தை மிக உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் கலைப் படைப்புக்களுக்கு கிடைக்கும் அனுசரணை பற்றியே நான் இங்கு குறிப்பிடுகிறேன். அது மூன்று திசைகளில் இடம்பெறுகிறது. பல கலைஞர்களை தமது அரசியலுக்காக தமது அடிவருடிகளாக தம்மைச் சுற்றி வைத்துக்கொண்டு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முதலாவது வகையைச் சார்ந்தது. எந்த அரசாங்கம் அதிகாரத்தில் இருந்தாலும் இது மிகப் பயங்கரமானது. அரச அனுசரணை பெறும் கலைஞர்கள் அரச அதிகாரத்தின் மூலம் நெறிப்படுத்தும் அரச கருத்தியலை முன்னெடுத்தல் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அப்போது குறிப்பிட்டதொரு ஆற்றல் கொண்ட, சிருஷ்டிகரமான தேர்ச்சியுள்ள அத்தகைய கலைஞர்கள் வாடகைக்குப் பெற்ற பின்னர், அரசின் மேலாண்மைக் கருத்தியலுக்காக அவர்கள் சேவை செய்கின்றனர். அவர்கள் நடிகர்களாகவோ எழுத்தாளர்களாகவோ இருக்கலாம். இசையமைப்பாளர்களாக இருக்கலாம் கலைத்துறையின் எந்தவொரு துறையையும் சார்ந்தவர்களாக இருக்கலாம். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் இது தொடர்ந்து இடம்பெற்றது. இவர்கள் ஊடகங்களை ஆக்கிரமித்திருந்தனர். உதாரணமாக ஜெக்சன் அந்தனி, சோமரத்ன திசாநாயக்க, ரோஹண வீரசிங்க, ரவீந்திர ரந்தெனிய, மாலினி ஃபொன்சேக்கா ஆகியோரும் ஏனையோரும் இதில் உள்ளடங்குவார்கள். அவர்கள் தாம் இருந்த இடத்திற்கு அப்பால் செல்லவில்லை. மகா வம்சம் போன்ற ஒரு உன்னத நூலை திறனாய்வு கண் கொண்டு நோக்காமல் அது மன்னனின் அதிகாரத்திற்காக பயன்படுத்தினர். சிங்கள பௌத்த கருத்தியல் ஓர் அலையாக முன்னோக்கி வந்தது. “அபா” முதல் “சிரிசங்கபோ” ஊடாக மாமன்னன் “கெமுனு” வரை இவை நீடித்தன. துட்டகைமுனு சகிதம் “மாமன்னன் கெமுனு” என்ற பெயரில் மிக உயர்ந்த மட்டத்தில் வர்ணிக்கப்படுகிறது. இந்நிலைமை இன வெறி கருத்தியல் காரணமாகவே ஏற்பட்டுள்ளது. மக்கள் இவற்றை பார்க்கின்றனர். இவற்றை கலைப் படைப்புக்களை பார்ப்பது போல பார்க்காமல் ஒரு புனித வஸ்துக்களைப் பார்ப்பது போல பார்க்கின்றனர்.

இது அவ்வளவு சுலபமாக இல்லாவிடினும் இது புதியதொன்றல்ல. கடந்த காலத்தில் “அஜாசத்த” என்ற திரைப்படத்தை நாம் பார்த்திருக்கின்றோம். நான்கு பெரும் புதையல்கள் (ஹத்தர மஹா நிதானய) என்ற பெயரில் எல். எம். பெரேரா ஒரு திரைப்படத்தை தயாரித்தார். அந்த நாட்களில் பௌத்த தாய்மார் மலர் தட்டுக்களுடன் சினிமா மண்டபங்களுக்குச் சென்றார்கள் அத்தகைய ஒரு மனோ நிலை தான் இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது. அரசு மனிதர்களின் தலையில் பௌத்த வெறியை இவ்வாறாகத் தான் தூண்டினர். இன வெறியும் அரசின் ஊடாகவே வெளிப்படுத்தப்படுகிறது. போரில் வெற்றியீட்டியதோடு இனவெறியும் பெரும்பான்மை மக்களின் தலைகளில் புகுத்தப்பட்டன. இந்த யுத்தத்தை எமது நாட்டில் ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியாக நாம் நோக்காமல் வெளிநாடு ஒன்றை வெற்றி கொண்டது போலவே செயற்பட்டோம்.

ஜனநாயக சமூகத்தில் ஆட்சியாளனை ஒரு அரசனாக







www.nytimes.com

**போரில் வெற்றியீட்டியதோடு இனவெறியும் பெரும்பான்மை மக்களின் தலைகளில் புகுத்தப்பட்டன. இந்த யுத்தத்தை எமது நாட்டில் ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியாக நாம் நோக்காமல் வெளிநாடு ஒன்றை வெற்றி கொண்டது போலவே செயற்பட்டோம்.**

*யுத்த வெற்றியின் பின்னர்*

வர்ணித்து மூன்றாவது மஹிந்தனை சுனில் ஆரியரத்ன அரங்கத்திற்கு கொண்டு வந்தார். துட்டகைமுனு நடத்திய போர் தமிழ் மக்களுக்கு எதிரான போராட்டத்தில் அடைந்த வெற்றியாக வட புலத்திற்கு எதிரான யுத்தம் எடுத்துக் கூறப்பட்டது. அசோக சக்கரவர்த்தியின் வெற்றியைப் போல இதனை எடுத்துக்காட்ட முற்பட்டனர். யுத்தம் காரணமாக விரக்தி அடைந்த தர்ம அசோகனைப் போல மஹிந்த ராஜபக்ஷவிற்கு தர்ம ராஜ்யத்தை உருவாக்க முடியவில்லை. ஆனால், இதனை நுட்பமாக நோக்குகையில் இனவாதக் கருத்தியல் பட்டிதொட்டி தோறும் துரிதமாக பரப்பப்பட்டது. ராஜபக்ஷவின் வாக்கு வங்கி இதன் மூலம் வலுவூட்டப்பட்டது. அது மாத்திரமல்ல விருப்பு வாக்கு மூலம் அத்தகைய வேட்பாளர்கள் மேலே உயர்த்தப்பட்டனர். உணவு போக்குவரத்துச் செலவு என்பவற்றை விட விருப்பு வாக்குகளைப் பெறுவதற்கு பௌத்த மதமும் சிங்கள இனமும் அவசியப்படுகிறது.

இந்த விடயங்கள் காரணமாக ஒரு வகையில் கலை துரிதமாக சீரழிந்தது. சினிமாப் படங்கள் மாத்திரமல்ல ராஜபக்ஷ மன்னனைப் பற்றிய கவிதைகளும் பாடல்களும் ஒலிக்கத் தொடங்கின. வெரலியத்த என்ற சிங்களப் பாடகர் மன்னனே மாமன்னனே எனப் பாடி ராஜபக்ஷ மன்னனை உருவாக்கினார்கள். ஓர் மன்னன் தோன்றினான் என்ற பாடலை ஒரு சிறுமி பாடினார். அடுத்தபடியாக வடக்கில் இருந்து வாருங்கள் தெற்கில் இருந்து வாருங்கள் என்ற பாடல் வரிகள் ஒலிக்கத் தொடங்கின.

இங்கு அரச ஊடகங்கள் மாத்திரமின்றி ஏனைய ஊடகங்களும் குறிப்பாக சுவர்ணவாஹினி போன்ற நிறுவனங்களும் பச்சை இனவாத நிலைப்பாட்டை மேற்கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஒளிபரப்பினார்கள். தொலைக்காட்சி அலைவரிசைகள், வானொலி அலைவரிசைகள் மூலம் இவ்வாறாக மக்கள் அபிப்பிராயம் உருவாக்கப்பட்டது. இவ்வாறாகத் தான் எமது கலைஞர்கள் கோஷ்டி கோஷ்டியாக அரச கருத்தியலுக்கு வக்காளத்து வாங்கினார்கள். இந்தக் கலைஞர்கள் அரச மேலாண்மை கருத்தியல் மூலம் போஷிக்கப்பட்டனர். இது தனிக்கை மூலம் மேற்கொள்ளப்படவில்லை. அரச அதிகாரம் கலைப் படைப்புக்களை நோக்கி எவ்வாறு கசிகின்றது என இதன் மூலம் தெளிவாகக் காண முடியும்.

## கலைத் தணிக்கை

கலைத் தணிக்கை அடுத்த அம்சமாகும். அது குறிப்பாக திரைப்படக் கலையில் இதனைக் காண முடியும். அசோக்க ஹந்தகமவின் “அக்ஷரய” சினிமாவை உதாரணமாக எடுக்கலாம். நீதவான்களினுடைய நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கப்படுகிறது என்றே இத்திரைப்படம் தணிக்கை செய்யப்படுகிறது. பிரசன்ன விதானகேவின் படைப்பான “புரஹந்த கலுவர” (பூரணச் சந்திரன் இருட்டில்) தடைசெய்யப்பட்டது. பின்னர் வழக்காடி தணிக்கையை நீக்க முடிந்தது. புரஹந்த கலுவர திரைப்படத்தின் மூலம் போர் வீரர்களின் துணிவு அழிக்கப்படுகின்றது எனக் கூறி இத் திரைப்படம் தணிக்கை செய்யப்பட்டது. இவ்வாறெல்லாம் கூறிய ராஜபக்ஷ அரசாங்கம் தனது நற்பெயரைக் கெடுத்துக்கொண்ட ஒரு நபரை பிரதம நீதியரசராக நியமித்தது.

மதத்திற்கு ஏதாவது பங்கம் ஏற்படுகின்றதா எனப் பார்வையிட மதத் தலைவர்களும் அரசுக்கு பங்கம் ஏற்படுகிறதா எனப் பார்வையிடுவதற்கு ஒரு கோஷ்டியும் தணிக்கை சபைகளில் கடமையாற்றுகின்றனர். தற்போது தணிக்கைச் சபைகளில் பொலிஸ் காரர்களும் இராணுவத்தினரும் இருந்து வருகின்றனர். இத்துறைகளில் மிக மோசமான ஊழல் பேர்வழிகள் உள்ள ஒரு நாட்டிலேயே இத்தணிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் மூலம் ஒரு கலைஞன் சுயாதீனமாக சமூகத்தை நோக்க முடியாது உள்ளது. இவ்வாறாக மூன்று போக்குகள் மூலம் கலை தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## கலையும் ஜனநாயகமும்

மூன்று பகுதிகளிலான இந்தத் தணிக்கை ஜனநாயகத்தோடு ஒன்றிணைந்துள்ளது. எனவே அனேகமாக தமது கலையைக் கைவிட்டு ஜனநாயகத்தை வென்றெடுக்கும் போராட்டத்தில் கலைஞர்கள் பிரவேசிக்க நேரிடுகிறது. இம்முறை பிரஜைகளின் சக்தியைச் சார்ந்த கலைஞர்கள் என்ற வகையில் நாம் இவ்வாறாகவே வெளியே இறங்கினோம். மறுபுறம் இதனைச் செய்யாது புதிய பரம்பரையின் இளம் கலைஞர்கள் கலையை மேற்கொள்ள முடியாது என்று உணர்ந்த காரணத்தினால் அவர்கள் வெளியே வந்தனர். இந்த அனுபவங்களுக்கு அமைய மேற்படித் தடைகளை நீக்குமாறு நாம் அரசாங்கத்தை கோருகிறோம்.

www.utsandiego.com



**கடந்த 10 ஆண்டுகளில் தாம் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் வடக்கின் அனேக பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக சில ஆட்சியாளர்கள் கூறினர். ஆனால் 30 வருட கால யுத்தத்தில் ஒடுக்கு முறைக்கு ஆளான இந்த மனிதர்கள் ஏன் வாக்களித்தார்கள் என ஆராய வேண்டியுள்ளது.**

*வடக்கின் வாக்காளர்கள் தமது வாக்கைப் பயன்படுத்துகின்றனர்.*

ஜனநாயகத்தை நிலைநாட்டுவது களைஞர்களை சுயாதீனமாக்கும் கருத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். சில சமயங்களில் அதன் மூலம் 30 வருட யுத்தத்தை சரியாக நோக்கக் கூடிய கலைஞர்களை உருவாக்கலாம். கடந்த காலத்தில் நாம் அரச ஒடுக்கு முறை, காணாமல் போகச் செய்தல், கொலைகள், படுகொலைகள், பெண்களுக்கெதிரான பாலியல் வல்லுறவுகள், இடம்பெயர்வு என்பவற்றைத் தான் கண்டோம். 30 வருட காலமாக நிலவிய அநேகமான தடைகளை நீக்குவதன் மூலம் இவற்றை நாம் காண முடியும்.

கடந்த 10 ஆண்டுகளில் தாம் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் வடக்கின் அனேக பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக சில ஆட்சியாளர்கள் கூறினர். ஆனால் 30 வருட கால யுத்தத்தில் ஒடுக்கு முறைக்கு ஆளான இந்த மனிதர்கள் ஏன் வாக்களித்தார்கள் என ஆராய வேண்டியுள்ளது. எனது சிந்தனைப்படி சிறந்த ஒரு கலைப் படைப்பிடிப்பிற்கு இது தொனிப்பொருளாக அமையலாம். போர்க் காலத்தின் போது யாழ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர் முகம் கொடுத்த ஒரு சம்பவத்தை நான் கேள்விப்பட்டேன். எனது தமிழ் சினிமாப் படத்தின் தந்தையின் பாத்திரத்தை அவரே ஏற்று நடித்திருந்தார்.

வாடகைக்கு எடுத்த பழைய ஒரு வீட்டில் வாழும் அப்பேராசிரியரின் தாயார் ஓர் அறையில் இருப்பதை எனக்குக் காட்டினார். அந்தத் தாய் எப்போதும் ஒரு பைத்தியக்காரியைப் போல வீட்டில் இருந்த மேல் மாடியையும் கொரிடோவையும் பற்றி அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்த காரணத்தினால் அவாவை திருப்திப்படுத்துவதற்கு அந்த வீட்டுக்கு ஓரளவு சமமான வீட்டை அப்பேராசிரியர் வாடகைக்கு எடுத்துள்ளார். அவர் கூறுவதற்கு அமைய அவரது தாயார் தற்போது மேற்படி உளவியல் தாக்கத்தில் இருந்து ஓரளவு விடுபட்டுள்ளார்.

**கலையும் சுயாதீனமும்**

சினிமாவைப் பொருத்தவரை கடந்த காலத்தில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஏனைய கலைகளை விட சினிமாத் துறை வேகமாக வளர்ச்சியடைகிறது. சினிமாத் துறை ஏனைய அனைத்துக் கலைகளையும் உறிஞ்சிவிடுகிறது. கவிதை, நாவல், சிறுகதைகள் சினிமா வடிவத்தில் படைக்கப்படலாம். அறிவு என்பது வெறுமனே ஏற்படுவது அல்ல. அவற்றிற்கு நிறுவனங்கள் இருத்தல் வேண்டும். கடந்த காலத்தில் அவை ஒன்றும் இருக்கவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் ரன்மினிதென்ன என்ற பெயரில் தொலைக்காட்சிக் கிராமம் ஒன்று அம்பாந்தோட்டையில் உருவாக்கப்பட்டது. ஹொலிவுட் மற்றும் (b)பொலிவுட் ஆகியவற்றுக்கிடையே இது ப்ளைவுட் எனக் கிண்டலாகக் கூறப் பட்டது. இந்திய நடிகர்கள் இங்கு வருகை தந்து இரவுப் பொழுதை அங்கு களித்தனர் எனக் கூறுவதன் மூலமோ, அவர்களின் கருவிகளை இங்கு வைத்துவிட்டுச் சென்றனர் என்று கூறுவதன் மூலமோ ரன்மினிதென்ன வெற்றிகரமான ஒரு தொலைக்காட்சி அரங்காக மாறமாட்டாது. எதுவிதமான தொலைநோக்கும் அற்ற இத்தகைய பிரசார ரீதியான வேலைத்திட்டங்கள் மூலம் கலையை விருத்தி செய்ய முடியாது.

மறுபுறம் தொழிநுட்பம் ஒட்டுமொத்தமாக தலைகீழாக மாறியுள்ளது. சினிமா முழுமையாக டிஜிட்டல் முறைக்கு மாற்றப்பட்டுள்ளது. சினிமாவில் முன்னர் இருந்த அடிப்படைப் பொறிமுறையும் தொழில்நுட்பமும் முழுமையாக மாற்றமடைந்துள்ளது. தற்போது சினிமாச் சுருள் என்று ஒன்றும் கிடையாது. எனவே திரைப்படம் காட்டும் பொறிமுறைகளிலும் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. டிஜிட்டல் சினிமா படம் காட்டும் பொறிமுறைகளுக்கு அமைய சினிமா மண்டபங்கள் தயாரிக்கப்பட வேண்டும். டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு அமைய சினிமாப் படங்கள் தயாரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். உலகத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம், குறைந்த பட்சம் இத்தகைய மாற்றம் ஏற்பட்டதாக கொள்கை அளவிலேனும் ஏற்று அங்கீகரிக்க வேண்டியுள்ளது. கடந்த காலத்தில் சினிமா ஒரு கலையாக மாத்திரமல்லாமல் தொழில்நுட்ப ரீதியிலும் கூட முன்னோக்கிச் செல்லும் பயணம் முழுமையாக செயலிழந்துள்ளது.

நாம் கல்வி கற்கும் காலகட்டத்தில் சுயாதீன கலைப் படைப்புக்களில் ஈடுபடக்கூடிய ஒரு சூழல் பல்கலைக் கழகங்களில் இருந்தது. காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து மாலை 4 மணிக்கு நிறைவுபெறும் அலுவலகங்களைப் போல அன்று பல்கலைக் கழகங்கள் 4 மணிக்கு மூடப்படவில்லை. அக்கால கட்டத்தில் குறிப்பாக பல்கலைக்கழகங்கள் 24 மணி நேரமும் திறந்திருந்தன. இன்று எந்த வகையிலும் கல்விக்கு அப்பால் மாணவர்களுக்கு ஒரு வாழ்க்கை கிடையாது. தற்போது அரசியல் மயமாக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகங்கள் சீரழிவை நோக்கிச் செல்கின்றன.





www.tellyreviews.com



**சில வேளைகளில் மாலை 7.30 மணிக்குப் பின்னர் மிகவும் தரம் குறைந்த தொலைக்காட்சி நாடகங்கள் சகல அலைவரிசைகளிலும் பரப்புரை செய்யப்படுகின்றன. உண்மையில் மக்கள் அவற்றை பார்ப்பதில்லை என்பது அந்த அலைவரிசைகள் மூலம் புரிந்துகொள்ள முடியும். சில அலைவரிசைகளில் அந்த நிகழ்ச்சிகளைப் பார்ப்போருக்கு பணம் கொடுக்கும் வகையிலேயே அவை தயாரிக்கப்பட்டுள்ளன.**

நாம் பல்கலைக் கழகத்தில் படித்த காலகட்டத்தில் கலை எம்மால் போஷிக்கப்பட்டது. கல்வி பெற வேண்டிய காலத்திற்கு கலை தடையாக இருக்கவில்லை. அந்தக் காலகட்டத்தில் நகர்ப்புற நிறுவனங்களிலும் இந்நிலமை தொடர்ந்தது. 4.30 மணிக்கு வேலை முடிந்த பின்பு எழுதுவினைஞர்கள் உடனடியாக தமது வீடுகளை நோக்கிச் செல்லவில்லை. அவர்கள் நாடகங்களில் நடிக்கப் பயிற்சி பெற்றனர். அல்லது இசை நிகழ்வுகளில் பங்குகொண்டனர். பேராதனைப் பல்கலைக் கழகத்தை நாம் உதாரணமாக எடுத்தோமாயின், “மனமே” மற்றும் சிங்ஹபாஹ நாடகங்கள் பேராசிரியர் சரத் சந்ரவை முதன்மையாகக் கொண்டு குறிப்பிட்டதொரு எழுச்சியைக் கண்டது. அதே சமயம் எம்மவர் (அப்பே கட்டிய) என்ற பெயரில் நாடகக் குழுக்கள் உருவாகின. இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு மேலதிக நேரம் இருந்தது. சுகத்தபால சில்வா, ற்ரொனி ரனசிங்க, சிரில் சீ. பெரேரா போன்ற திறனாய்வாளர்கள் புதிய அறிவை தமதாக்கிக் கொண்டனர். இதற்கு நான் ஆரம்பத்தில் கூறிய ஜனநாயகம் காரணமாக அமைந்தது.


அதே சமயம் வெளியே நிலவிய சுதந்திரம் காரணமாக விசேட நாடகங்களும் நிர்மாணிக்கப்பட்டன. கலைப் பேரவை புதிய படைப்புக்களுக்கு சக்தியை வழங்கியது. அதன் யாப்பை பரிசீலித்தால் அது மிகவும் ஜனநாயகத் தன்மை கொண்டது என்பதை புரிந்துகொள்ள முடியும். அக்காலகட்டத்தில் கலாசாரத் திணைக்களம் என்று ஒன்று இருக்கவில்லை. கலாசாரத் திணைக்களம் உருவாக்கப்பட்ட பின்னர் கலைப் பேரவை முழுமையாக கலாசாரத் திணைக்களத்திற்கு கீழ் செயற்பட்டது. அதன் பின்னர் கலாசாரத் திணைக்களம் செய்வதற்கு ஒன்றும் இருக்கவில்லை. எனவே கலைப் பேரவை செய்த நடவடிக்கைகளை கலாசாரத் திணைக்களம் மேற்கொண்டது. அரச இலக்கிய விழா என்பன இதற்கு உதாரணமாகும். கலைப் பேரவை பணியாற்றுவதற்கான ஒரு சூழலை உருவாக்காமல், கலாசார திணைக்களத்தின் பராமரிப்பிற்காக சிறு பணத்தொகையை வழங்கி அதனைச் செயற்படாத ஓர் இடமாக மாறியது. கலைப் பேரவைகள் நியமிக்கப்பட்டன. கலாபவனம் தாமரைத் தடாகம் (நெலும் பொக்குன) உருவாவதற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டது. தமது அடையாளத்தை நிலைநாட்டிய பல படைப்பாளர்கள் அரச நடன ஓவிய கலையரங்கத்தில் இருந்து உருவாக்கப்பட்டனர். அதே சமயம் கண்டிய நடனங்களும் கரையோர கீழைத்தேய நடனங்களும் அங்கு வளர்ச்சியடைந்தன. இவை அனைத்துமே முன்னர் குறிப்பிட்ட ஜனநாயகத்திற்கான இடைவெளியின் போதே வந்து சேர்ந்தன. அவை அனைத்தும் சுதந்திரமாக இயங்குவதற்கு இடமளிக்காமல் அரச அதிகாரத்தின் கீழ் மையப்படுத்தப்பட்டது

முன்னர் இருந்தவாரே அவற்றிற்கு சுயாதீனம் வழங்குவதையே அரசு செய்ய வேண்டும். ஊடகங்களைப் பொருத்த வரையிலும் இதே மோசமான நிலை ஏற்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்களின் ஊடகப் பிரிவு மிகவும் சீரழிந்த ஒரு துறையாகும். பேராசிரியர் பதவி பெற்ற சிலர் தமது கட்டுரைகளாக மிகவும் தரக் குறைவான விடயங்களையே எழுதியுள்ளனர். இவ்வாறாக கல்வியின் மிக உயர் மட்டம் சீரழிந்துள்ளது. இவ்வாறாக உயர் மட்டம் சீரழிந்த பின்னர் மாணவர்களுக்கு பாதகமான முறையிலேயே கசிவு ஏற்படும்.

## நவ தாராளவாதமும் கலையும்

இதற்கு மேலதிகமாக 77 இன் பின்னர் நவ தாராளவாத மறுசீரமைப்புக்கென பொழுதுபோக்கிற்காக மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் இலாபம் பெறும் பண்டங்களாக மாறியுள்ளன. பாவனையாளர் சமூகம் என்பது ஒரு பைத்தியக்காரத் தன்மையை சுட்டிக் காட்டியது. சந்தைப் பிரசாரம் இன்றி ஊடகங்கள் இன்று தம்மைத் தக்கவைக்க முடியாது. வார இறுதியில் காட்டப்படும் நிகழ்ச்சிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவை என்று கூட சிந்திக்க முடியாதுள்ளது. வெளிநாடுகளில் காட்டப்படுபவை கூடாது என இதன் மூலம் சொல்லவில்லை. தெரிவுசெய்யப்பட்ட விடயங்கள் நல்லவையாக அமையவில்லை. பாவனையாளர் வாதத்திற்கு மனிதர்களைத் தள்ளும் மிகத் தரம் குறைந்த சிருஷ்டிகளாகும். அதே சமயம் எமது நாட்டில் படைக்கப்படுபவையும் அவர்கள் இதே மாதிரி விற்பனை செய்ய முற்படுகின்றனர். ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அரசுக்கு ஆற்றல் இருத்தல் வேண்டும். உலகில் எல்லா நாடுகளிலும் ஊடகங்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அலை வரிசை இருக்கும் காரணத்தினால் தாம் விரும்பும் அனைத்தையும் பரப்புரை செய்ய முடியாது. சில வேளைகளில் மாலை 7.30 மணிக்குப் பின்னர்

88ம் பக்கம் பார்க்க .....



சிரேஷ்ட ஊடகவியலாளர்
**திம்பிரியாகம பண்டார**
thimbiri@gmail.com




படுகொலை செய்யப்பட்ட திரு. பாரத லக்ஷ்மன் அவர்களுக்கு முன்னைநாள் ஜனாதிபதி இறுதி அஞ்சலி செலுத்துகிறார்.

# புதிய அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் சவால்கள்

இலங்கை அரசியல் வரலாற்றில் அபூர்வமான அனுபவமாக மாறிய சர்வகட்சி அரசாங்கம் தனது குழந்தைப் பருவத்தில் இருந்து பிள்ளைப் பிராயம் நோக்கி வளர்ந்து வருகிறது. அது ஏப்பிரல் மாதம் 23 ஆந் திகதிக்குப் பின்னர் இடம்பெறும் பொதுத் தேர்தலில் இளமைப் பருவத்தை அடையும். குழந்தைப் பருவத்தில் அகால மரணமடையாமல் இளமைப் பருவத்தையடைந்து நடுத்தர வயதைக் கடந்து முதுமையை அடைவதற்கு அதற்கு அதிர்ஷ்டம் கிட்டவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

ஊழல் அற்ற நல்லாட்சியைக் கட்டியெழுப்புவதும் அதிகாரத்திதை எட்டிப் பிடித்த கட்சிகளும், அமைப்புக்களும் ஒன்றிணைந்து தேர்தல் இயக்கத்தின்போது முன்வைத்த பிரதான சுலோகம் ஊழலற்ற நல்லாட்சியாகும். இது இலங்கை அரசியல் கலாசாரத்தின் ஒரு புதிய சந்தர்ப்பமாகலாம். புதிய அரசாங்கத்தின் பயணப்பாதை எத்திசையை நோக்கிச் செல்லும் என்பதைப் பொறுத்தே இது தீர்மானிக்கப்படும்.



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்



**நல்லாட்சிக்காக தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நிகழ்ச்சித் திட்டத்தை பரிகசித்து பிரகடனங்களை வெளியிட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இடதுசாரிக் கட்சிகள் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியை மேற்கு நாடுகளின் அடிவருடியான தரகு முதலாளி வர்க்கக் கட்சியாகவே நோக்குகின்றன.**

*டட்லி, ரணில், ஜே.ஆர்.*

இலங்கையின் பிரதான இரண்டு அரசியற் கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், நல்லாட்சியைக் கட்டியெழுப்பும் வரலாற்றின் வழிகாட்டிகளாக மாறியுள்ளனர். நேரடியாகவும், மறைமுகமாகவும் இதற்கு ஒத்துழைப்பு நல்கும் அரசியல் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும் ஏராளம். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதியாகவும், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் பிரதமராகவும் ஏனைய பல கட்சிகளின் தலைவர்கள் அமைச்சர்களாகவும் பதவி வகிக்கின்றனர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் அரசியல் வரலாற்றில் இரண்டு பகைமை சக்திகளாக நடந்துகொண்டுள்ளன. பழைய மாக்சிஸ்ட்டுக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை தரகு முதலாளி வர்க்கம் என்றே அழைத்தனர். மேற்கு நாடுகளுக்குச் சார்பான முதலாளித்துவ கட்சியாகவே அதனை அடையாளம் கண்டனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியை தேசிய முதலாளி வர்க்கத்தின் கட்சியாகவே அடையாளப்படுத்தினர்.

இடதுசாரி இயக்கம் வரலாற்றில் ஒருபொழுதுமே ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணி உறவை வைத்திருக்கவில்லை. ஆனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியை தோல்வியுறச்செய்து பலமுறை அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.

நல்லாட்சிக்காக தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நிகழ்ச்சித் திட்டத்தை பரிகசித்து பிரகடனங்களை வெளியிட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இடதுசாரிக் கட்சிகள் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியை மேற்கு நாடுகளின் அடிவருடியான தரகு முதலாளி வர்க்கக் கட்சியாகவே நோக்குகின்றன. அதேசமயம் மேற்கு நாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் தேவைகளுக்கு அமைய செயற்படும் கட்சியாகவே அடையாளப்படுத்துகின்றனர்.

முன்னைநாள் அமைச்சரான திஸ்ஸ விதாரண ஜனாதிபதி வேட்பாளர் திரு.மைத்திரிபால சிறிசேன மேற்கு நாடுகளின் தேவைகளுக்காக செயற்படும் ஒருவராகவே அடையாளம் கண்டார். நிலைமை இவ்வாறு இருக்கையில் நல்லாட்சியின் எதிர்பார்ப்பிற்காக தலைமைத்துவம் வழங்கி செயற்பட்ட தரப்பினர் நிறைவேற்று அதிகாரத்தையும், அரசாங்க அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டனர்.

100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னர் ஒரு தேர்தலை நடத்தி அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதே அவர்களின் அபிலாஷையாகும்.

இக் குறிக்கோளை அடைவதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளை இலங்கை சுதந்திரக் கட்சியின் ஒரு தரப்பு இதற்குச் சார்பாக செயற்படுகிறது. மற்றுமொரு தரப்பினர் இந் நிகழ்ச்சித்திட்டத்தை காரசாரமாக எதிர்த்து வருகின்றனர். இறுக்கமான மகிந்த கொள்கையை அனுசரிக்கும் விமல் வீரவங்சவை முதன்மையாகக் கொண்ட சிறுபான்மைக் குழு இதன் ஒரு தரப்பாகும். மற்றைய தரப்பை பல ஊழல்களுக்கும், குற்றச் செயல்களுக்கும் பொறுப்பான நபர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

குழந்தைப் பருவத்தை தாண்டிக் கொண்டிருக்கும் அரசாங்கத்தை வீழ்த்தி பழைய அரசாங்கத்தை மீண்டும் உருவாக்குவதே அவர்களின் குறிக்கோளாகும். அமைச்சுப் பதவிகளை இழந்த இடதுசாரி தரப்பினர் தமது அமைச்சு பதவிகளையும், சிறப்புரிமைகளையும் மீளப்பெறுவதை நோக்கமாகவே கொண்டே இவ்வாறு செயற்படுகின்றனர். இறுக்கமான மகிந்த சார்பு விமல் வீரவங்ச கோஷ்டியை இரண்டு முக்கிய கட்சிகளும் பொருட்படுத்தாத ஒரு நிலையின்கீழ், தமக்கு அங்கீகாரம் உள்ள அரசாங்கத்தை உருவாக்கிக் கொள்வதற்கு தொடர்ந்தும் முயலாம். வீழ்ச்சியடைந்துள்ள மகிந்த ராஜபக்ஷவிற்கு அரச உடைகளை அணிவித்து பொதுத் தேர்தலின்போது அரங்கிற்குக் கொண்டுவரும் அபிலாஷையுடன் விமல் கோஷ்டி தமது அபிலாஷையாகக் கொண்டுள்ளது.

இந்த அனைத்துப் பிரச்சினைகளையும் திருத்திக்கொண்டு ஒரு தேர்தலை நோக்கிச் செல்லும் பயணத்தில் புதிய அரசாங்கமும் ஜனாதிபதியைப் புறக்கணிக்காமல் இருப்பது அதைவிட பாரதூரமான ஒரு சவால் உண்டு. அதாவது புதிய அரசியல் கலாசாரத்தில் பொதுமக்களுக்கு பயிற்றுவிக்கும் சவாலாகும்.

www.dailynews.lk



**“இந்த அரசாங்கத்தை உருவாக்க இடதுசாரிகளும் கூட்டுச்சேர்ந்தனர். இறுதியில் இவ்விருச் சக்திகளை வென்று, அரசாங்கத்தின் முற்போக்கு அணி பலவீனமடைந்தது“**

*டியூ, வாசு, திஸ்ஸ*

வன்முறை அரசியல் இலங்கைக்கு இயல்பாகவே உருவாக்கப்படவில்லை. முன்னைநாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும சிந்திப்பதைப் போல விருப்பு வாக்குகள் காரணமாக ஏற்படவும் இல்லை. இந்த நாட்டின் வர்க்க அடிப்படையில் மாற்றம் ஏற்பட்டதும் பிரச்சினை மேலும் சிக்கலாகி உள்ளது.

தற்போது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளிடையே புளங்கும் கறுப்புப் பணக்காரர்கள் எத்தனைபேர் என அறிந்தோர் அறிவர். சந்திரிக்க பண்டாரநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒருசில ஆண்டுகளுக்குப் பின்னர் மிக எளிமையான சிந்தனையாளரான திஸ்ஸ அபேயசேகர பத்திரிகை நேர்காணல் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

“இந்த அரசாங்கத்தை உருவாக்க இடதுசாரிகளும் கூட்டுச்சேர்ந்தனர். இறுதியில் இவ்விருச் சக்திகளை வென்று, அரசாங்கத்தின் முற்போக்கு அணி பலவீனமடைந்தது“ அவருடைய வரைவிலக்கணம் மெத்தச் சரியானது. தற்போதைய மக்கள் பிரதிநிதிகளின் வர்க்க அடிப்படை இறந்த காலத்தைப் போலவே தரகு முதலாளி வர்க்கம் அல்லது தேசிய முதலாளி வர்க்கம் என்ற வகையில் சரளமான முறையில் பிரிக்க முடியாது. அதைவிட சிக்கலானது.

பிரித்தானிய காலனித்துவ காலகட்டத்தில் பெருந்தோட்ட தொழில், கோப்பிப் பயிர்ச்செய்கை, காரீயக் கைத்தொழில், சாராயம் மற்றும் கள்ளு, நிர்மாணக் கைத்தொழில் என்பன துறைசார் முறையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய முதலாளித்துவ பிரதிநிதிகள் செயற்குழு அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தின. அவர்கள் ஆங்கிலம் கற்ற வர்க்கத்தைச் சார்ந்தவர்கள்.

1948 சுதந்திரத்திற்குப் பின்னர் இலவசக் கல்வியின் விளைவாக கற்ற நடுத்தரவர்க்கப் பிரதிநிதிகளுக்கும் சட்டவாக்க துறையில் பாதை திறக்கப்பட்டது.

1980 தசாப்தத்திற்கு அப்பாலுள்ள நிலைமையை நோக்குகையில் அங்கு சட்டவிரோத கள்ள வியாபாரிகளும் சட்டவாக்கத் துறையில் பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆட்சி அதிகாரத்திற்கு வரும் அரசியல் கட்சிக்கு செலவு செய்ய முடிந்தால் கள்ள வியாபாரிகளும் சட்டபூர்வமான அந்தஸ்தைப் பெறுவர்.

போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எதிர்கட்சியைத் சார்ந்த மாகாணசபையின் உறுப்பினராக இருந்தபோது அவருக்கு முன்வைக்கப்பட்ட குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இணைந்துகொண்டார். எத்தனோல் கள்ள வியாபாரத்திற்கு குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அம்பலத்திற்கு வந்த தருணத்தில் அரசாங்க கட்சியில் இணைந்து கொண்டார்.

இதற்கமைய கறுப்புச் சந்தைக்கார வர்க்கம் அரசாங்க அதிகாரத்தை நெறிப்படுத்தும் சக்தியையும் பெற்றுக் கொண்டனர்.

இவர்கள் தரகு முதலாளி வர்க்கத்தையும், தேசிய முதலாளி வர்க்கத்தையும்விட வித்தியாசமான அலைந்துதிரியும் உதிரி வர்க்கமாகும். இந்த உதிரி வர்க்கம் அரச ஆட்சியின் மர்ம ஸ்தானங்களில் ஒரு புற்றுநோயைப் போல இருந்து வருகின்றது.

கொழும்பில் உள்ள தோல் வியாபாரத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் பரிசோதகர் டக்ளஸ் பீரிஸின் கொலை, திறமையும், நேர்மையும் கொண்ட சுங்க உத்தியோகத்தரான சுஜித் பிரசன்ன பெரேரா படுகொலை மற்றும் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர படுகொலை போன்ற படுகொலைகளுக்குப் பின்னால் இந்த உதிரி வர்க்கங்களே செயற்படுகின்றன. சட்டவாக்கத் துறையிலும் ஒரு புற்று நோயாக இந்த உதிரிச் சக்திகள் திகழ்கின்றன. இவர்களை இந்த உதிரி சக்திகளை தோல்வியுறச் செய்தது இலேசான காரியமல்ல. கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இந்த உதிரிச் சக்திகளுக்கு அரச பாதுகாப்பும் கிடைத்தது.

1950, 1960, 1970 தசாப்தங்களில் இலங்கையின் அரச அதிகாரத்தை வெளிப்படுத்திய நிர்வாக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், இலிகிதர்கள் உட்பட மத்தியதர வர்க்க குறிப்பிட்ட





www.facebook.com



**போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எதிர்கட்சியைத் சார்ந்த மாகாணசபையின் உறுப்பினராக இருந்தபோது அவருக்கு முன்வைக்கப்பட்ட குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இணைந்துகொண்டார்.**

ஒழுக்க நெறிமுறை கொண்ட திறனாய்வு கொண்ட ஒரு வர்க்கமும் உருவாகியது. அன்று நாட்டின் அரசியல் சிந்தனை உருவாக்கத்தின்போது இவர்கள் பாரிய செல்வாக்குச் செலுத்தின. ஆனால் அண்மைக் காலத்தில் அந்த வர்க்கத்தை மேலோங்கச் செய்து எழுச்சியுறும் பல வர்க்கங்கள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. பல்வேறு கள்ளக்கூட்டு வியாபாரங்கள், சட்டவிரோத நடவடிக்கைகள், கமிஷன்கள் போன்ற மார்க்கங்களின் ஊடே குறுகிய காலத்தில் சுபீட்சமான நிலையை அடைந்த இப்புதிய முதலாளி வர்க்கத்தின் துணை அண்மித்த அரசியலின் செல்நெறியை தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளது.

கல்விமான்களால் உருவாக்கப்பட்ட பழைய மத்தியதர வர்க்கத்தின் முதுகெலும்புகள் நொறுக்கப்பட்டுள்ளன. அவர்களும் அண்மைக்கால சமூக வளர்ச்சியின் ஒரு அங்கமாக உள்ளனர். குறுகிய மார்க்கங்களின்மூலம் முதலாளி வர்க்கமாக மாறிய பல வர்க்கங்கள் உள்ளன. அவர்களும் எதுவித ஆய்வுமற்ற ஒரு சமூக பிரிவினராகவே உள்ளனர்.

ஆனால் அவர்களுக்கு மிகப்பெரிய சமூக சக்தி இருக்கின்றது. பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பது முதல் சட்டவாக்கத் துறைக்கு தமது பிரதிநிதிகளை தள்ளிவிடுவதுவரை அவர்களுக்கு ஒரு சமூக அரசியல் சக்தி உண்டு. தமது மோசடிகளை மூடி மறைப்பதற்கான போர்வைகளாகவும், இந்த தேசப்பற்றே அவர்களுடைய கோஷங்களாக மாறியுள்ளன. முன்னைநாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அவரது சகபாடிகள் மூலமும் இத்தகைய தேசப்பற்றே பிரதிபலிக்கப்பட்டது. அரசியல் அதிகாரத்தை ஒருக் கணப்பொழுதிற்கு அவர்கள் இழந்துவிட்டதுபோலத் தோன்றினாலும் இந்த போலி தேசப்பற்றுமிக்க சக்திகள் தொடர்ந்தும் சமூகத்தில் தமது செல்வாக்கைச் செலுத்தி வருகின்றனர்.

மைத்திரி ஆட்சியின் முக்கிய குணாம்சம் போலி தேசப்பற்றை கைவிட்ட பதாகைகளையே காணப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவை பிரதிநிதித்துவப்படுத்தும் அனுபவம்மிக்க அரசியல் கலாசாரத்தில் போலி தேசப்பற்றுக்கு எவ்வகையிலும் இடமில்லை. இந்த போலி தேசப்பற்றுக் கொண்ட பதாகையின் கீழ் உள்ள உதிரி அரசியலைப்பற்றி ரணில் விக்கிரமசிங்க நன்கு அறிவார்.

நாட்டின் ஜனாதிபதி பதவிக்கு மேலதிகமாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவி மைத்திரிபால சிறிசேனவிற்கு கிடைத்துள்ளது. பொதுவாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டமைப்பை எடுத்து நோக்குகையில் போலி தேசப்பற்றின் பதாகை அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் அதனை முற்றாக கைவிடவில்லை. அடுத்த பொதுத் தேர்தலில் அவர்கள் என்ன செய்வார்கள்?

உண்மையில் நல்லாட்சியும், புதிய அரசியல் கலாசாரமும் உருவாக்கம் பெறுகையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை முதன்மையாகக் கொண்ட ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணிக்கு பாரிய பொறுப்பொன்று உண்டு. இலங்கை அரசியலில் நிலப்பிரபுத்துவ பல மிச்சசொச்சங்கள் தொடர்ந்தும் பராமரிக்கப்படுகின்றன. இக்கட்சியே இவற்றை வழிநடத்துகிறது. ரணிலின் தலைமைத்துவத்தில் இயங்கும் ஐக்கிய தேசிய கட்சி அரசியலின் அதிகாரத்தின் முன்னே சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களை நிமிர்த்த முடியாவிட்டால் அது எமது நாட்டு அரசியல் கலாசாரத்தின் முதிர்ச்சியை நிமிர்த்த முடியாத வரலாற்று சந்தர்ப்பமாக அமையும்.





# சர்வகட்சி அரசாங்கம் ஏன் அவசியப்படுகிறது ?

ஜனாதிபதி **மைத்திரிபால சிரிசேன**

**நாம் 100 நாள் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தி அதன் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்காக சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்கினோம். பொதுத் தேர்தலின் பின்பு உருவாக்கப்படும் தேசிய அரசாங்கத்தினுள் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளாவது நாம் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.**

சர்வகட்சி அரசாங்கத்தை அல்லது தேசிய அரசாங்கத்தை நாம் உருவாக்குவோம் என தேர்தல் இயக்கத்தின் ஆரம்பத்தில் இருந்தே கூறப்பட்டது. அத்தகைய அரசாங்கத்தை நாட்டின் பிரதான இரண்டு அரசியற் கட்சிகளூம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும். இச்செய்தியை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்கையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வீ.பீ உட்பட பல கட்சிகள் பரந்துபட்ட ஒத்துழைப்பை வழங்கின. 100 நாள் வேலைத்திட்டத்தையும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட உறுதி மொழிகளையும் அமுலாக்குவதற்கே அதிகாரம் வழங்கப்பட்டது. பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை அதிகாரம் இல்லாமல் அரசியல் அமைப்பில் திருத்தங்களைக் கொண்டு வர முடியாது. தற்போதைய பாராளுமன்றத்தில் கூடிய அதிகாரம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கே இருக்கிறது. 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 127 பேர் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியைச் சார்ந்தவர்கள் அவர்களுடைய ஒத்துழைப்பு இன்றி 100 நாள் வேலைத்திட்டத்தை அமுல்படுத்த முடியாது. பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்தில் எத்தகைய கட்டமைப்பு உருவாகும் எனக் கூற





**கள்வர்களை இன்னும் கைது செய்யவில்லை என ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது, ஆனால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்திற்கு அமைய செயற்பட முடியுமே ஒழிய காட்டுச் சட்டத்திற்கு அமைய செயற்பட முடியாது.**

முடியாது. அது பொது மக்களின் தீர்மானத்திற்கு அமையவே இடம்பெறும். 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தையும் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் செயலிழக்கச் செய்து அரசியல் நெருக்கடியை உருவாக்குவதைத் தடுக்க வேண்டும்.

கட்சியின் தலைவர் பதவியை எனக்கு வழங்குவதற்கு கட்சி உறுப்பினர்கள் திரு. மஹிந்த ராஜபக்ஷவின் விருப்பத்தைப் பெற்றுக்கொண்டனர். தேர்தலின் பின்னர் அவர்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைக்கு அவர்களில் எவரும் விருப்பம் தெரிவிக்கவில்லை. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகத் தான் ஒத்துழைப்பதாக அவர்கள் என்னிடம் பிரகடனப்படுத்தினர்.

நாம் 100 நாள் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தி அதன் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்காக சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்கினோம். பொதுத் தேர்தலின் பின்பு உருவாக்கப்படும் தேசிய அரசாங்கத்தினுள் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளாவது நாம் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். இதன் பெறுபேறாக புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது. அதை ஒரு நாளில் செயற்படுத்த முடியாது. இந்த அரசியல் கலாசாரத்தில் வன்முறை இடம்பெற முடியாது. வன்முறையையும் இம்சைகளையும் கைவிட்டு சகோதரத்துவத்துடன் முன்னேற வேண்டும். அஹிம்சை சட்டமாக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்றேன். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு இடமளிக்காமல் இதனைச் செய்ய முடியாது. இதற்கமைய எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைவீழ்த்துவதற்கு அவர்களின் தேர்தல் இயக்கத்திற்கு தடை ஏற்படுத்துவேன் ஆயின் அது தவறு. அது மனிதத் தன்மைக்குச் செய்யும் இழிவான செயல். ஆனால் நான் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியையும் காட்டிக் கொடுக்க முடியாது.

இங்கிலாந்து அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற முன்னேற்றமடைந்த நாடுகளில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஆனால் எமது நாட்டைப் போல வன்முறை இடம்பெறுவதில்லை. அரசாங்கமும் எதிர்க்கட்சியும் தமது நாட்டுக்காக செயற்படுகின்றன. எனவே மூன்று மாத வேலைத்திட்டத்தை நாம் புரிந்துணர்வோடு செயற்படுத்த வேண்டும்.

அனேகமானோருக்கு இது பழக்கப்படாத ஓர் அனுபவம். இரு பக்கத்திற்கும் இழுத்து உடைத்தெறியவே முயற்சிக்கின்றனர். இந்த ஒற்றுமையை முறித்தால் நாம் தோல்வியடைவோம். அதாவது முழு நாடும் தோல்வியையே காண நேரிடும். எனவே கட்சிகளின் நிகழ்ச்சி நிரலை விட மக்களின் நிகழ்ச்சி நிரல் முக்கியமானது.

கள்வர்களை இன்னும் கைது செய்யவில்லை என ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது, ஆனால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்திற்கு அமைய செயற்பட முடியுமே ஒழிய காட்டுச் சட்டத்திற்கு அமைய செயற்பட முடியாது.

நாம் குற்றம் சுமத்தப்பட்டவர்களோடு செயற்படவில்லை. ஏனையோருடனேயே செயற்படுகின்றோம். நாட்டு மக்கள் நல்லாட்சி மீது நம்பிக்கை வைத்துள்ள காரணத்தினால் நாம் அதற்கு அமைய செயற்படுகிறோம்

இனங்கள், மதங்கள், அரசியற் கட்சிகள் என்பவற்றுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதையே தேசிய அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. எமது நாட்டு மக்களுக்கு ஜனநாயகம் பற்றிய ஒரு சவால் உண்டு. ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு அரசியல் அமைப்பைத் திருத்த வேண்டும்.

**2015 ஜனவரி 31ம் திகதி இரவு ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்ட மைத்திரியுடன் உரையாடல். என்ற நேர்காணலில் இருந்து**



www.unppolicyforum.com

# ஆளும் கட்சி – எதிர்க்கட்சி ஆகிய இரு தரப்பினரும் புதிய அரசியல் கலாசாரத்தை விரும்புகின்றனர்.

பிரதமர் **ரணில் விக்கிரமசிங்க**

> **சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்தல், சட்டவிரோதமான கள்ள வியாபாரங்களை நிறுத்துதல்., மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல். நாட்டை நவீனமயப்படுத்தி மக்களின் வருமான மட்டத்தை உயர்த்துதல் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் என்பன எமது குறிக்கோள்களில் பிரதானமானதாகும்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை காரணமாக ஜனாதிபதியும் அரசாங்கமும் அக்கட்சியை சார்ந்தவர்கள் எனக் கூறுவோர் புதிய அரசியல் கலாசாரத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. மஹிந்த ராஜபக்ஷவின் பழைய அரசியல் கலாசாரத்தையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

இந்த நியமனம் எந்த வகையிலும் ஐக்கிய தேசியக் கட்சியையோ அல்லது கட்சி உறுப்பினர்கள் மீதோ தாக்கத்தை ஏற்படுத்தமாட்டாது.

தேர்தல் இயக்கத்தின் ஆரம்பத்தில் இருந்தே, இங்கிலாந்து, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைப் போல நாகரீகமான அரசியல் எமக்கு அவசியம் என்பதையே ஜனாதிபதித் தேர்தலின் ஆரம்பத்திலிருந்தே நான் கூறி வந்தேன். அரசியற் கட்சிகள் தமக்குள் வன்முறையைப் பயன்படுத்தி அரச சொத்துக்களை கைப்பற்றும் அரசியலை நாம் அங்கீகரிக்கவில்லை. இந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கே 100 நாள்





நிகழ்ச்சித் திட்டத்தை நாம் அமுல்படுத்துகிறோம். பொதுத் தேர்தலின் பின்பு அமைக்கப்படும் தேசிய அரசாங்கம் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து நிலைக்கும். அந்த அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருக்க வேண்டும் எனப் பொது மக்கள் கோரினால் நாம் அதனை நடைமுறைப்படுத்த முடியும்.

மைத்திரிபால சிரிசேன அவர்கள் வெற்றியீட்டிய பின்னர். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க விருப்பம் தெரிவித்த போதிலும், இன்னும் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் நேருக்கு நேர் மோத வேண்டும் என்ற கருத்தையே முன் வைத்தனர். இந்த இரண்டு குழுக்களினதும் செல்நெறி பற்றி பூர்வாங்க முடிவுகளை மேற்கொள்வது கடினம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாக போட்டியிடும். ஆனால் எவரும் வன்முறையில் ஈடுபடவேண்டிய அவசியம் கிடையாது.

சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்தல், சட்டவிரோதமான கள்ள வியாபாரங்களை நிறுத்துதல்., மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல். நாட்டை நவீனமயப்படுத்தி மக்களின் வருமான மட்டத்தை உயர்த்துதல் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் என்பன எமது குறிக்கோள்களில் பிரதானமானதாகும்.

இந்த அரசாங்கத்தின் கீழ், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள்.

இது ஒரு முக்கிய வழிமுறை என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பா.உ. க்களும் என்னிடம் கூறுகின்றனர். ஊழல் பேர்வழிகளே இதனை எதிர்ப்பார்கள். இதை சரியான முறையில் அமுல்படுத்தினால் நாமும் மக்களும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை ஐந்து ஆண்டுகளில் தீர்க்க முடியும். **(பிரதமரின் உரையிலிருந்து)**

**80ம் பக்கத் தொடர்ச்சி....**

மிகவும் தரம் குறைந்த தொலைக்காட்சி நாடகங்கள் சகல அலைவரிசைகளிலும் பரப்புரை செய்யப்படுகின்றன. உண்மையில் மக்கள் அவற்றை பார்ப்பதில்லை என்பது அந்த அலைவரிசைகள் மூலம் புரிந்துகொள்ள முடியும். சில அலைவரிசைகளில் அந்த நிகழ்ச்சிகளைப் பார்ப்போருக்கு பணம் கொடுக்கும் வகையிலேயே அவை தயாரிக்கப்பட்டுள்ளன.

மறுபுறம் பாவனையாளர் என்ற நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பொருட்களை அடையாளம் காணுதல் பொருட்களுக்கிடையே அநாவசியமான போட்டிகளை ஏற்படுத்துதல் என்பவை மூலமே இவை இடம்பெற்றுள்ளன. இப்போட்டி மனிதர்களிடையே ஒரு கவர்ச்சியை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைகிறது. ஏற்றுமதி இறக்குமதி சுதந்திரமாகச் செயற்படுவதற்கு இடமளிப்பது மூலம் கிடைத்த பயன் தான் என்ன? என ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது. மறுபுறம் பொதுமக்களுக்கு இவற்றைப் பற்றி அறிவுறுத்தும் வகையில் கருத்திட்டங்கள் கிடையாது. பொருளாதாரம் திறக்கப்பட்ட காரணத்தினால் கலாசாரத்தில் அழிவு ஏற்பட்டுள்ளது. தணிக்கை செய்யாமல் அரசு இவற்றை கண்காணித்தல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக புதிய பணக்காரர்கள் தோன்றியுள்ளனர். அவர்கள் மிகவும் சுலபமான விடயங்களினூடாக பணக்காரர்களாக மாறியுள்ளனர். குறிப்பாக போதை வஸ்து வியாபாரம் போன்ற கள்ளக் கடத்தல்கள் மூலம் உற்சாகமற்ற மக்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். இம்மனிதர்கள் தமது கனவு உலகங்களை உருவாக்கி அவற்றில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையினர் எதுவித நிரந்தர வருமானமும் இன்றி பாரிய எதிர்பார்ப்புக்களுடன் வாழ்கின்றனர். இந்தப் பாவனையாளர் மனப்பாங்கில் முழு நாட்டிலும் மனிதர்கள் இரையாகியுள்ளனர். இவற்றிலிருந்து மக்களை விடுவிப்பதற்கு சினிமாவையும் ஊடகங்களையும் பயன்படுத்த வேண்டும். அதே சமயம் சிவில் சமூக இயக்கங்களையும் ஆரம்பித்தல் வேண்டும்.

குறிப்பாக கல்வியில் நிலவும் போட்டிப் பரீட்சைகளை நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் பெற்றோர் இவ்வளவு தூரம் கஷ்டப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஒரு அரசாங்கத்தை மாற்றிய பின்னர் கலையின் பொருட்டு அடிப்படையாகச் செய்ய வேண்டிய வேலைகள் இவையே. கடந்த காலத்தில் ஒரு குடும்பம் முழுமையாக அரச அதிகாரத்தை அனைத்து விடயங்களுக்காகவும் பயன்படுத்தியதே ஒழிய இவை தொடர்பாக தனது கவனத்தைச் செலுத்தவில்லை. நாடு வெறுமனே செயற்பட்டது. குடும்பத்தவர்களுக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் ஒரு பொழுதுபோக்கு இருந்தது.




# இந்தச் சுயாதீனம் தான் என்ன?

எதிர்க்கட்சித் தலைவர் **நிமல் சிரிபால டி சில்வா**

**எதிர்க் கட்சி என்ற வகையில் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க ஏன் தீர்மானித்தீர்கள் ?**

100 நாள் வேலைத்திட்டத்தில் பல சாதகமான அம்சங்கள் இருக்கின்றன. அது இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒன்று பொதுமக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள். சமுர்த்தி நிவாரணங்களை அதிகரித்தல். ஓய்வூதியக்காரர்களின் கொடுப்பனவை அதிகரித்தல். அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரித்தல். பொது மக்களுக்கு பயன் கிடைக்கக்கூடிய பல விடயங்கள் இருக்கின்றன. எனவே இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் இதனை எதிர்த்து நாம் செயற்பட்டால் பொதுமக்கள் எமக்கெதிராகவே குற்றம் சுமத்துவர். எமக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளையும் எதிர்க்கட்சியினர் எதிர்த்துவிட்டார்கள் என்று எமக்கெதிராகக் குற்றம் சுமத்தப்படும். இதன் காரணமாகவே இதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்தோம்.

இரண்டாவது விடயம் இலங்கையின் அரசியல் அமைப்பிற்குத் திருத்தம் ஒன்று அவசியம். அதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். தேர்தல் முறையை மாற்றியமைக்க வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை மாற்றியமைக்க வேண்டும். என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கிறோம். ஆனால் இதனை அமுல்படுத்துவதற்கான வழிமுறை எவ்வளவு தூரம் அதிகாரத்தை குறைக்கப் போகின்றோம். ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பிற்கான திருத்தங்கள் மூலம் நாட்டின் ஒற்றையாட்சி முறையை பாதுகாத்துக்கொண்டு பிரிவினைவாதத்தை தோல்வியுறச் செய்ய முடியுமா எனவும் சிந்திக்க வேண்டும்.

> **ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பிற்கான திருத்தங்கள் மூலம் நாட்டின் ஒற்றையாட்சி முறையை பாதுகாத்துக்கொண்டு பிரிவினைவாதத்தை தோல்வியுறச் செய்ய முடியுமா எனவும் சிந்திக்க வேண்டும்.**

அடுத்தது ஔடதச் சட்டம். ஔடதச் சட்டத்திற்கு நாம் சார்பாகவே இருக்கிறோம். இது நாட்டிற்கு அவசியமான ஒரு சட்டம். மற்றையது இது 100 நாள் வேலைத்திட்டம் மாத்திரமே. அதன் பின்பு பொதுத் தேர்தலை எதிர்நோக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இக் குறுகிய காலத்தில் நாட்டிற்கு பயனுள்ள ஒரு வேலைத் திட்டம் அமுலாக்கப்படுமேயாயின் ஏன் அதனை நாம் தடுக்க வேண்டும். எதிர்க்கட்சியென்றால் எப்போதும் எதிர்க்க வேண்டுமா ? ஆனால் இவற்றிற்கு நாம் விமர்சன ரீதியாகவே ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாம் வரவு செலவுத் திட்டத்திலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டினோம். உதாரணமாக ஒரு பிரசவத்தின் போது, ஒரு கர்ப்பிணித் தாய்க்கு 20,000 ரூபா வழங்குவதாக வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டது. தற்போது இலங்கையிலுள்ள தரவுகளுக்கு அமைய 360, 000 இலிருந்து 400,000 வரை வருடம் ஒன்றிற்கு பிள்ளைகள் பிறக்கின்றனர். எனவே வருடம் ஒன்றிற்கு கர்ப்பினித் தாய்மார்க்கு இந்த நன்மையை வழங்குவதற்கு 8 பிலியன் ரூபா தேவைப்படுகிறது. ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் ஒரு பில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. இக்குறையை நாம் சுட்டிக் காட்டினோம். அடுத்ததாக நாம் கெசினோ பற்றி சுட்டிக் காட்டினோம்.

> **எனவே நல்லாட்சி என்ற எண்ணக்கரு செயற்படுத்தப்படுவதாக எமக்குத் தோன்றவில்லை. இதற்கு மேலதிகமாக தேர்தலுக்குப் பின்னர் பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.**

ஆரம்பத்தில் கெசினோ முழுமையாக இல்லாதொழிக்கப்படும் எனக் கூறப்பட்டது, எமது பௌத்த மதக் குருமாரும் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்தவர்களும் கெசினோவை முழுமையாக இலங்கையிலிருந்து நீக்குவதாக கூளுரைத்தனர். ஆனால் இந்தக் கெசினோவின் சார்பில் 5 பிலியன் ரூபா வரியாக அறவிடப்படும் எனக் கூறப்பட்டது. இதன் மூலம் என்ன கருதப்படுகின்றது. கெசினோ தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றே அறிகிறோம். இவ்வாறாக வரி அறவிடப்பட்டு கெசினோ தொடர்ந்து இருக்கப் போகிறது. இதன் மூலம் கொள்கை ரீதியான ஒரு முரண் நிலை எமக்குத் தோன்றுகிறது. முன்னர் கூளுரைத்த கொள்கைக்கும் தற்போது திரு. ரவி கருணாநாயக்க நிதியமைச்சர் என்ற வகையில் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கும் இடையே பரஸ்பரம் முரண்பாடு காணப்படுகிறது. இதனை நாம் மக்களுக்குச் சுட்டிக்காட்டினோம். மக்கள் இதனையா எதிர்பார்த்தனர். வரி செலுத்தி கெசினோவை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள் வாக்களித்தனரா ? அல்லது கெஷினோ இயக்கத்தை முழுமையாக நிறுத்தி விடுவதா?

எனவே நடைமுறைச் சாத்தியமான வகையில் இவ்விடயங்களை அமுல்படுத்தும் போது அரசு பாரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பாரிய கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும். இங்கு கூறப்படும் விடயங்களின் மட்டத்தை நோக்கிச் செல்கின்றனவா ? எனவே எதிர்க்கட்சி என்ற வகையில் இக்குறைபாடுகளையே நாம் சுட்டிக்காட்டுகின்றோம். அதே சமயம் குறிப்பாக விமர்சன ரீதியான ஒத்துழைப்பை வழங்குகிறோம். அரசியலமைப்பு பற்றிய யோசனைகள் கொண்ட ஒரு வரைபு எமக்கு வழங்கப்பட்டுள்ளது. நான் எதிர்க்கட்சியில் உள்ள அனைவருக்கும் அதனை விநியோகித்தேன். எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவற்றை வழங்கியுள்ளேன். இந்த அரசியல் அமைப்புப் பற்றிய வரைபை நாம் ஆராய்ந்து அவசியமான திருத்தங்களைச் சேர்ப்போம். மிகச் சிறந்த தேர்தல் முறையையும் நிறைவேற்று ஜனாதிபதியின் பதவியின் அதிகாரங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளைக் குறைக்கும்.

**நீங்கள் 100 நாட்களில் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய பொருளாதார நன்மைகள் பற்றிய விடயங்கள் பற்றியே கூடுதலாகப் பேசுகின்றீர்கள். ஆனால் ஜனாதிபதித் தேர்தலின் போது அடிப்படையில் அரசை ஜனநாயக மயமாக்கல் பற்றியும் நல்லாட்சி பற்றியும் கூடுதலாக பேசப்பட்டது அல்லவா ?**

நல்லாட்சி என்பது சட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட முடியாது. சட்டங்கள் இயற்றுவதன் மூலம் மாத்திரம் நல்லாட்சியை உருவாக்க முடியும் என நான் நம்பவில்லை. பாருங்கள் நல்லாட்சி பற்றிய உறுதி மொழிகளைக் கூறி அதிகாரத்திற்கு வந்துள்ளனர். நல்லாட்சிக்குப் பொறுப்பான அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்க ஆவார். அவரே சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் பொறுப்பான அமைச்சர் இந்த அமைச்சரின் கீழேயே பொலிஸ் திணைக்களமும் அதனோடு தொடர்பான நிறுவனங்களும் செயற்படுகின்றன. அவருடைய தேர்தல் தொகுதியான வத்தளை பிரதேச சபை கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் பிரதேச சபையின் தவிசாளர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்களைத் தாக்கி துன்புறுத்தப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இங்கிருக்கக் கூடிய நல்லாட்சி தான் என்ன ? பொலிஸார் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். எமது அரசாங்கம் மீது நல்லாட்சி இருக்கவில்லை என குறை கூறுகின்றனர். தற்போது நல்லாட்சி நிலவுகிறதா? எனவே நல்லாட்சி பற்றிய எண்ணக்கருவிற்கு அமைய சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள், அவற்றை அமுல்படுத்துதல் என்பவற்றிற்குப் பொறுப்பான ஆட்கள் அவற்றை நடுநிலை நின்று செயற்படுத்துவது முக்கியம் இதனையே நாம் அரசிடம் சுட்டிக்காட்டுகின்றோம்.

சில அரச உத்தியோகத்தர்கள் பாரிய எண்ணிக்கையில் இடமாற்றம் பெற்று அனுப்பப்பட்டுள்ளார்கள். இடமாற்றம் செய்வதாயின் அரசின் இடமாற்றக் கொள்கைக்கு அமையவே அது மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த இடமாற்றக் கொள்கைக்கு அமைய விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட வேண்டும். எனவே நல்லாட்சி என்ற எண்ணக்கரு செயற்படுத்தப்படுவதாக எமக்குத் தோன்றவில்லை. இதற்கு மேலதிகமாக தேர்தலுக்குப் பின்னர் பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எங்கே நல்லாட்சி ?

**நீங்கள் கூறுவது போல ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவியுயர்வு என்பன உட்பட சோல்பரி அரசியலமைப்பில் சுயாதீன அரசாங்க சேவை ஆணைக்குழு ஒன்று இருந்தது. எனினும் இந்த நிறுவனங்கள் படிப்படியாக இல்லாதொழிக்கப்பட்டதன் பெறுபேறே இது.**

தற்போதும் ஆணைக்குழுக்கள் இருக்கின்றனவே.  இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தற்போதும் இருக்கிறது அல்லவா ?

**இருக்கும் ஆணைக்குழுக்களை நீக்குவதும் பேரளவில் அவற்றின் சுயாதீனத் தன்மை பற்றிய பிரச்சினை தானே இருக்கிறது.**

சுயாதீனம் என்றால் என்ன ?

ஒரு தனிநபரின் அல்லது ஜனாதிபதியின் தேவைகளுக்கு அமைய நியமிக்கப்படும் அவர் விரும்பிய போது நீக்க முடியாத, பாராளுமன்றத்திற்கு மாத்திரம் பொறுப்புக் கூறும் ஆணைக்குழுக்கள் பற்றியே நான் கூறுகின்றேன். வேறு வகையில் கூறுவதாயின் 18வது திருத்தத்தின் மூலம் இல்லாதொழிக்கப்பட்ட 17வது திருத்தத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள்.

நல்லது நியமித்துப் பார்ப்போம். ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக செயற்படும் . நான் இதனை நம்பமாட்டேன். நியமனம் செய்பவர் எவ்வாறு நடந்து கொள்வார் என்பதைப் பொறுத்தே சுயாதீனம் தங்கியுள்ளது.

**இந்தத் திருத்தங்களுக்குத் தானே நீங்கள் ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறினீர்கள்**

நியமிக்கும் நபர்கள் சுயாதீனமானவர்களாக இருக்க வேண்டும். நல்லது நீங்கள் கூறுவது போல நியமிக்கப்பட்டாலும்அவர்கள் சுயாதீனமாக செயற்படுவபர்கள்என்பதற்கான உறுதி மொழி யாது ? நாம் தைப் பார்ப்போம்.

**நீங்கள் உட்பட எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறுவது இத்தத்**



**நல்லாட்சி என்ற எண்ணக்கரு செயற்படுத்தப்படுவதாக எமக்குத் தோன்றவில்லை. இதற்கு மேலதிகமாக தேர்தலுக்குப் பின்னர் பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எங்கே நல்லாட்சி ?**

தேசிய இனப் பிரச்சினையைப் பற்றி தனியாகச் சிந்திக்க வேண்டும். அதனை அந்த சந்தர்ப்பம் வரும் போது பார்ப்போம். அது பற்றி இப்போது சாத்திரம் கூற முடியாது.

சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்

**திருத்தங்களுக்குத் தானே. கட்டாயமாக**

அவ்வாறாயின் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து இவ்வாறான நிறுவனத் தொகுதியைத் ஸ்தாபிப்பது அவசியம் என நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?

**100 நாள் வேலைத் திட்டத்தின் பின்னர்  எதிர்வரும் பொதுத் தேர்தலில் நீங்கள் ஸ்ரீ.ல.சு. கட்சியின் சார்பில் போட்டியிடுகிறீர்களா ? ஐ.ம. சுதந்திர முன்னனியின் சார்பில் போட்டியிடுவீர்களா ?**

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான அனைத்து சக்திகளுடனும் ஒன்றிணைந்து நாம் போட்டியிடுவோம். எமக்குக் கடந்த கால அனுபவங்கள் உண்டு. நாம் பிரிந்தால் வெற்றியீட்டுவது கடினம். எனவே சக்தியுடன் எதிர்நோக்குவோம்.

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சில தரப்பினர் இத்திருத்தங்களைப் பற்றி கிண்டலாக நோக்குகின்றனர் . எதிர்வரும் பொதுத் தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்றால் இந்தத் திருத்தங்களை மேலும் வலுப்படுத்துவீர்களாக  ?**

வேறு என்ன வலுவூட்டப்பட வேண்டும் ? வலுவூட்ட வேண்டிய அவசியம் கிடையாது. இந்தத் திருத்தங்களைச் செய்த பின்னர். அவசியமான வலுவூட்டலை மேற்கொள்ள வேண்டும்.

ஜே.ஆர். இன் 1978 அரசியலமைப்பிற்கு மேற்கொள்ளப்படும். திருத்தம் மாத்திரமே இங்கு செய்யப்படுகிறது. குறிப்பாக சிறுபான்மையினரின் பிரச்சினையையும் தீர்க்கக்கூடிய வகையில் புதிய அரசியலமைப்பைத் தயாரிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

தேசிய இனப் பிரச்சினையைப் பற்றி தனியாகச் சிந்திக்க வேண்டும். அதனை அந்த சந்தர்ப்பம் வரும் போது பார்ப்போம். அது பற்றி இப்போது சாத்திரம் கூற முடியாது. ஆனால், குறைந்த பட்சம் முடிந்தததைச் செய்வோம். இது வரை ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நீக்குவதற்கு எந்தவொரு அரசாங்கத்தாலும் முடியவில்லை தற்போது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதை நாம் செய்வோம். எனவே இவை அனைத்தையும் மிகத் துரிதமாகச் செய்ய முடியாவிட்டாலும் குறிப்பிட்டளவு வேலைகளை இந்த 100 நாட்களில் செய்து அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ள முடியுமாயின் அது சாதகமான முடிவாகும்.

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிக் கூட்டமைப்புகளின் தொனிப்பொருள் யாது ?**

அதற்கு இன்னும் காலம் இருக்கிறது. அந்த சந்தர்ப்பத்தில் ஏற்படும் அரசியல் நிலைமைக்கு ஏற்ப தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**100 நாட்கள் என்பது மிகக் குறுகிய காலம் இப்போது அதுபற்றிய ஒரு அண்ணளவான கருத்தும் எதிர்க்கட்சிக்கு இல்லையா?**

இப்போதைக்கு இல்லை. அரசாங்கத்தின் பயணப் பாதையை நாம் நோக்குவோம். எவ்வளவு தூரம் இந்த நிகழ்ச்சித் திட்டமும் நல்லாட்சியும் காட்சிப்படுத்தப்படுகின்றது எனப் பார்ப்போம். அப்போது வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை எவ்வளவு தூரம் தீர்க்கப்பட்டுள்ளது எனவும் பார்ப்போம். அதற்கமைய நாம் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்துக்கொள்வோம்.



ஜே.வீ.பீ. தலைவர் **அநுரகுமார திசாநாயக்க**

# உற்பத்திப் பொருளாதாரமே எமது குறிக்கோள்

மக்கள் ஆணையை அளவீடு செய்வதாக இருந்தால் அது கிடைக்கப்பெற்ற வாக்குகளின் அளவினால் அளவிடப்பட முடியாது. மக்கள் அபிலாஷை மூலமே அது அளவிடப்படும். எனவே மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் பாரிய பொறுப்பு புதிய ஜனாதிபதிக்கு உண்டு.

100 நாள் வேலைத் திட்டம் பற்றி அதிகப்படியான எதிர்பார்ப்புக்களை வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும், இக்காலகட்டத்தில் பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டிய பல சட்டங்கள் இருக்கின்றன. அவற்றை அங்கீகரிப்பதன் மூலம் நிலையான ஒரு அரசாங்கத்தை உருவாக்க முடியும்.

ஜே.வீ.பீ. இவ்வேலைத் திட்டத்திற்கு விமர்சன ரீதியான ஒத்துழைப்பை வழங்கும். இதற்கமைய தகவல்களை அறியும் சட்டத்தையும் ஔடதச் சட்டத்தையும் அமுல்படுத்த வேண்டும். ஊழல்களையும் மோசடிகளையும் புலனாய்வு செய்யும். செயல்முறையை வலுவூட்டுவதற்கு பூர்வாங்கக் கணக்காய்வினைச் செய்யக்கூடிய புதிய சட்டங்களை இயற்றுவது அவசியமாகிறது. பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒழுக்க நெறிமுறைத் தொகுதியொன்று அவசியப்படுகிறது. இப்பொறுப்பு ஜே.வீ.பீ இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை அங்கீகரிப்பது கடினமாயினும் நாம் எப்படியோ இதனைச் செய்வோம்.

கடந்த காலத்தில் இலஞ்ச ஊழல் மோசடி பற்றி எவ்வளவு கதைத்தாலும் அவை பற்றி சட்டத்தை அமுலாக்குவதில் ஒரு மந்த கதியே காணப்படுகிறது. எனவே ஒரு சில கள்வர்கள் தப்பியோடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. இலஞ்ச ஊழல் மோசடி ஆணைக்குழுவிற்கு ஏற்கனவே பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகைப்பொறுப்பை அமுல்படுத்துவதற்கு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு நடவடிக்கை எடுப்போம். இது ஜே.வீ.பீ யின் அபிலாஷையாகும்.

பாராளுமன்றத்தினுள் எமது கட்சி ஒரு சிறு குழுவாக இருப்பினும் ஊழல்களுக்கும் மோசடிகளுக்கும் எதிராகப் பாரிய குரல் எழுப்பியவர்கள் நாமே ஆவோம். முன்னாள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிராக நியமிக்கப்பட்ட தெரிவிக்குழுவிலிருந்து எழுந்து வந்து எதிர்ப்புத் தெரிவித்த ஒரே கட்சி எமது கட்சி மாத்திரமே.

இதன் காரணமாக அடுத்த பொதுத் தேர்தலின்போது அரசாங்கத்திலிருந்து மக்களுக்கு அதிஉயர் நிவாரணங்களை வழங்குவதற்கு பொதுமக்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்புகையில் கற்ற அறிஞர்களுக்கே முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பாராளுமன்றத்திற்கு பொது மக்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்கையில் கற்ற அறிஞர்களைத் தெரிவு செய்வதற்கு கவனம் செலுத்த வேண்டும்.

பாராளுமன்றத்திற்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் மூலம் மாத்திரம். அனைத்தும் முற்றுப் பெறுவதில்லை. இது மிகக் கடினமான ஒரு பணி. பொருளாதார நன்மைகள் மக்கள் மத்தியில் பகிரப்படும். பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். அது நீண்டகால வேலைத் திட்டமாகும். அதற்கு பொது மக்களை அணி திரட்டுவது எமது குறிக்கோளாகும்.

(அதிகார மாற்றமும் மக்களின் சவால்களும் என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் நிகழ்த்திய உரையில் இருந்து)



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்



சட்டத்தரணி
**வாசுதேவ நாணயக்கார பா.உ.**

## மக்கள் தமது அபிலாஷைகளுக்கு அமைய வாக்களித்தனர்

# இது ஜனநாயகத்தின் நேரடியான பெறுபேறு

**ஜனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் முன்னரைப் போல் அல்லாது மக்கள் தமது நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. குறிப்பாக அரச மறுசீரமைப்புக்களை அமுலாக்குவதற்கு அவர்களுக்குள்ள ஆர்வத்தை நீங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள் ?**

இது நேரடி ஜனநாயகத்தின் பெறுபேறு. ஜனநாயகம் உயிரோட்டம் கொண்டது அது தான் இந்த நாட்டின் பாரிய மகிழ்ச்சி. மக்கள் எல்லோரும் ஒன்று கூடி தமது அபிலாஷைகளுக்கு ஏற்ப வாக்களித்தனர். அதே சமயம் மக்கள் தமது அரசியல் கருத்துக்களுக்கு அமைய வாக்களித்தனர். இதற்கமைய தேர்தலின் பெறுபேறுகளுக்கு அமைய மைத்திரிபால சிரிசேன ஜனாதிபதியாக நியமனம் பெற்றார். இந்த நியமனம் ஜனநாயகம் உயிரோட்டமானது என்பதற்கு மிகச் சிறந்த சான்றாதாரமாகும். அதே சமயம் மிகக் குறைந்த

www.ft.lk



**இந்த நாட்டில் நிலவிய ஜனநாயகத் தூய்மையை இல்லாதொழிப்பதற்கு ஏதாவது சதிப்புரட்சி செய்யும் முயற்சி இருந்திருப்பின் அதனை விசாரணைக்குட்படுத்தி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.**

*திரு. மொஹான் பீரிஸ் மற்றும் திரு. உதய கம்மன் பிலவும்*

வன்முறையுடன் இடம்பெற்ற ஒரு தேர்தலாக இதனை அறிமுகப்படுத்த முடியும். அதற்கமைய ஜனநாயகத்தின் வெளிப்பாடாகவே இத் தேர்தல் அமைகிறது.

தேர்தலின் போது வடக்கில் இராணுவத் தலையீடு ஏற்படும் என்ற ஓர் அச்சம் இருந்தது. ஆனால் அத்தகைய ஒரு சம்பவமும் இடம்பெறவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பிரிவினர் தேர்தலைப் பகிஷ்கரிக்க முயற்சித்தனர். ஆனால் கூட்டமைப்பின் அதிக எண்ணிக்கையினர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்குமாறு மக்களை ஊக்குவித்தனர். எனவே, இத் தேர்தலின் போது மிக அதிகப்படியான வாக்குகள் பயன்படுத்தப்பட்டன. முன்னாள் ஜனாதிபதிக்கும் இம்முறை வடக்கிலிருந்து கடந்த தேர்தலை விட 70,000 வாக்குகள் அதிகப்படியாகக் கிடைத்தன. சகல மக்கள் பிரிவினரும் ஒன்று சேர்ந்த ஒரு சந்தர்ப்பமாக இத் தேர்தலை அடையாளம் காண முடியும். இதுவும் ஜனநாயகத்தின் உயிரோட்டப் பண்பைக் குறிக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கும் மைத்திரிபால சிரிசேனவின் வெற்றிக்கும் வட புல தமிழ் மக்களினதும்.  கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களினதும் வாக்குகள் காரணமாக அமைந்தன. என்ற கருத்தை நான் ஏற்கமாட்டேன். அது மாத்திரமல்ல அத்தகைய இனவாதக் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும் கூற்றுக்களை நாம் கண்டிக்கின்றோம். மறுபுறம் நீங்கள் குறிப்பிட்டது போல மக்கள் தமது எதிர்ப்பார்ப்புக்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக அரசாங்கத்துடன் ஒரு கொடுக்கல் வாங்கலை மேற்கொண்டுள்ளனர். இது மிகச் சிறந்த நிலமையாகும். இந்த நிலமை தொடர்ந்தால் எவ்வளவு நல்லது.

ஆனால் எமது கோட்பாட்டு ரீதியான புரிதலுக்கும் எதிர்வுகூறலுக்கும் அமைய இது ஒரு ஆரம்பக் கட்டம் மாத்திரமே. அதன் பின்னர் தர்மிடோரியான்.* காலத்தை எதிர்நோக்குகின்றோம். இந்த சொற்பதத்திற்குப் பொருத்தமான சொல்லை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பம் உதயமாகும் போது அதனை எதிர்கொள்வதற்கு மக்கள் தயாராக அணிதிரட்டப்பட வேண்டும்.

**தேர்தல் பெறுபேறுகள் வெளியாகிக் கொண்டிருக்கையில் ஜனநாயகத்தை இடைநிறுத்துவதற்கு முன்னைநாள் ஜனாதிபதி உட்பட ஒரு குழுவினர் மேற்கொண்ட சதி வெற்றியீட்டியிருந்தால் இந்த ஜனநாயக இடைவெளி சிருஷ்டித்திருக்க முடியாது அல்லவா?**

இந்த நாட்டில் நிலவிய ஜனநாயகத் தூய்மையை இல்லாதொழிப்பதற்கு ஏதாவது சதிப்புரட்சி செய்யும் முயற்சி இருந்திருப்பின் அதனை விசாரணைக்குட்படுத்தி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால், அப்படியான ஒரு சம்பவம் இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்வதற்கு இதுவரை எனக்குப் போதிய சான்றாதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், இத்தகைய சம்பவம் ஒன்று நிகழ்ந்திருக்குமானால் நான் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டவாறு மிகத் துரிதமான விசாரணையை மேற்கொண்டு அது பற்றி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். இச்சம்பவத்திற்கான சான்றாதாரங்கள் என் முன்னே இல்லாத காரணத்தினால் இத்தகைய ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. ஆனால் அவ்வாறு நிகழ்ந்திருப்பின் மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பாரிய இலஞ்ச ஊழல் மோசடி இடம்பெற்றதாக ராஜபக்ஷ ஆட்சியினர் மீது பாரதூரமான குற்றங்கள் சுமத்தப்பட்டன. இக்குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக அன்றைய ஆட்சியாளர்கள் எதுவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் குற்றச் சாட்டுக்கள் உண்டு. மைத்திரி ஆட்சியின் கீழ் இலஞ்ச ஊழல் மோசடிகளை புலனாய்வு செய்வதற்கு விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் மந்த கதி குறித்து மக்கள் மத்தியில் ஒரு திருப்தியின்மை காணப்படுகிறது. இக்குற்றச்சாட்டுக்கள் பற்றி உங்கள் கருத்து என்ன ?**

இலஞ்ச ஊழல் மோசடிகள் மற்றும் சொத்துக்களின் துஷ்பிரயோகம், தனிநபர்களின் சொத்துக்களை அபகரித்தல், அரச சொத்துக்களை கபடத் தனமாகப் பெற்றுக்கொள்ளல் போன்ற பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது வெறுமனே சொத்துக்களின் பரிமாற்றம் மாத்திரமோ அல்லது நிதிப் பரிமாற்றம் மாத்திரமோ அல்ல. சில சமயங்களில்





www.srilankaguardian.org



**ஆனால் எனக்கொரு சந்தேகம் உண்டு. இவற்றை கண்டறிவதற்கு ஒரு சிறந்த பொறிமுறை கிடையாது. இவற்றைக் கண்டறிவதற்கு மிகப்பாரிய இயந்திரம் தேவை பொலிஸ் திணைக்களத்தின் மோசடிகள் விசாரணைப் பிரிவு, இலஞ்ச ஊழல் மோசடிகள் ஆணைக்குழுவிற்கு ஒரு பரந்துபட்ட பொறிமுறை தேவை.**

குறைந்த பெறுமதியான பொருட்களுக்கு கூடுதல் பெறுமதியைத் தீர்மானித்து பொருட்கள் விற்பனை செய்தற்கான குற்றச் சாட்டுக்கள் இதில் உள்ளடக்கப்படும். இது பாரதூரமான குற்றச் சாட்டாகும். இதன் மூலம் இவற்றிற்கு சலுகைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன என்றும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. இவை பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். நான் அமைச்சரவையில் அங்கத்துவம் வகித்த போது சிற்சில சொத்துக்கள் தொடர்பாக சில அவதானிப்புக்களை வழங்கியுள்ளேன். அரச சொத்துக்கள் வாடகைக்கு விடப்படும் பொழுது அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கு அமைய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அரச மதிப்பீட்டாளரின் விலை சந்தை விலைக்கு அமைய தீர்மானிக்கப்பட்டதா ? அமைச்சரவை உப குழுவின் சரியான பெறுமதி அவற்றிற்கு வழங்கப்பட்டதா ? அவற்றிலிருந்து அறவிடப்படும் வரி அரசின் நன்மைக்கு உரிய மட்டத்தில் கிடைத்ததா? எனக் கண்டறிய வேண்டும்.

ஆனால், எனக்கொரு சந்தேகம் உண்டு. இவற்றை கண்டறிவதற்கு ஒரு சிறந்த பொறிமுறை கிடையாது. இவற்றைக் கண்டறிவதற்கு மிகப்பாரிய இயந்திரம் தேவை பொலிஸ் திணைக்களத்தின் மோசடிகள் விசாரணைப் பிரிவு, இலஞ்ச ஊழல் மோசடிகள் ஆணக்குழுவிற்கு ஒரு பரந்துபட்ட பொறிமுறை தேவை. இவை பற்றிய முறைப்பாடுகளையும் குற்றச்சாட்டுக்களையும் கண்டறிவதற்கு அவசியமாயின் இருக்கும் பொறிமுறைகளை மேலும் விரிவாக்க வேண்டும். ஒன்று இலஞ்ச ஊழல் மோசடி பற்றிய பொறிமுறை. மற்றையது பொலிஸ் திணைக்களத்தில் இதற்கென தனியானதொரு பணியகம்  அவசியம் என நான் நினைக்கின்றேன்.

பொலிஸ் திணைக்களத்தின் மோசடிப் புலனாய்வுப் பிரிவு தனிப்பட்ட மோசடிகளையிட்டே அதிக கவனம் செலுத்துகிறது. அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல் அரச சொத்துக்களை உரிய முறையில் பயன்படுத்தாமை என்பன தண்டனைச் சட்டக்கோவையின்  குற்றங்களாகவே கருதப்படும். எனவே பொலிஸ் திணைக்களம் இவை பற்றிய செயற்பட முடியும். மறுபுறம் இலஞ்ச  ஊழல் பற்றிய ஆணைக்குழு. இவை இரண்டையும் விரிவாக்க வேண்டும். இங்குள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு அவரவரின் தராதரங்களை கருத்திற்கொள்ளாது. நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் வெறுமனே போலியாக பத்திரிகைகளில் பெயர்களைக் குறிப்படுவது நிறுத்தப்பட வேண்டும். உண்மைத் தகவல்கள் இன்றி, ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் அறிக்கை வெளியயிடுவதைத் தவிர்க்க வேண்டும். தகவல்களைக் கண்டறிந்து விசாரணைகளை மேற்கொண்டு அந்த விசாரணைகளின் அடிப்படையில் அவர்கள் குற்றம் இழைத்திருப்பின் அந்நபர் நீதி மன்றத்திற்கோ அல்லது ஆணைக்குழுவிற்கோ உடனடியாக ஆஜர்படுத்தப்பட வேண்டும். அதே சமயம் அவரது குற்றமற்ற தன்மையை எடுத்துக் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறாக உண்மையான தகவல்கள் திரட்டப்பட்டு குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிக்கப்படும் வரை தனிநபர்களின் பெயர்களைப் பயன்படுத்தி குற்றம் சுமத்துவதை நிறுத்த வேண்டும்.

**அரசை ஜனநாயக மயப்படுத்துவதற்காக பல மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கு இன்றைய ஆட்சியாளர்கள் தயாராக உள்ளனர். குறிப்பாக ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல் பல சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தல் மற்றும் தேர்தல் ஆணையத்தை நியமித்தல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த மறுசீரமைப்புக்களைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

அவற்றிற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க நான் தயாராக இருக்கின்றேன். ஒத்துழைப்பு என்று கூறினால் அது தவறு. இவை எனது கோரிக்கைகள். இவற்றை வெற்றி கொள்வதற்கு நான் முழு மூச்சாக ஒத்துழைப்பேன்.

**இந்த மறுசீரமைப்புக்களைப் பற்றிய ஏதாவது குறைபாடுகளை காண்கின்றீர்களா?**

இவற்றைப் பற்றி நன்கு அலசி ஆராய்ந்து கருத்துக்களை முன் வைக்க வேண்டும். என்னைப் பொருத்தவரை இந்த மறுசீரமைப்புக்கள் ஒன்றையும் கைவிட முடியாது. தேர்தல் முறையை மாற்றியமைப்பதும் இந்த 100 நாள்



www.srilankaguardian.org

**மீண்டும் எல்லை நிர்ணயம் அவசியமில்லை. தற்போதைய தேர்தல் தொகுதிகளுக்கு அமைய இதனை அமுல்படுத்த முடியும். தற்போது இருக்கக் கூடிய தேர்தல் தொகுதிகளை அவ்வாறே கவனத்திற்கொண்டு அந்த ஆசனங்களை தேர்தல் தொகுதிகளாக ஏற்றுக்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யலாம்.**

வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். இதனைச் செய்ய முடியும். இவற்றை கைவிடுவதற்கு பல்வேறு அழுத்தங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த அழுத்தங்களுக்கு நாம் பிடிகொடுக்கக் கூடாது. தேர்தல் தொகுதி வாரியாக வெற்றி பெற முடியாத பாராளுமன்ற உறுப்பினர்கள் இத்தாக்கங்களில் அதிகப் படியானவற்றை மேற்கொள்கின்றார்கள்.
மாவட்டம் முழுவதும் தமக்காக தேர்தல் இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பதாயின் பாரிய அளவு நிதியை செலவிடக்கூடியவர்கள் மாத்திரமே அதனைக் கையாள முடியும். அப்போது உண்மையான மக்கள் பிரதிநிதி என்பவர் கைவிடப்பட்டு பணக்காரர்கள் மாத்திரமே பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெறுவார்கள். ஊழல்களும் மோசடிகளும் ஏற்படுவதற்கு மாவட்ட முறை உதவுகிறது என்பதை தேர்தல் தொகுதிகளில் தமக்கென வாக்காளர்கள் இல்லாதவர்களே விகிதாசாரத் தேர்தல் முறை மூலம் வெற்றிபெற கங்கணம் கண்டியுள்ளனர். எனவே ஒரு போதும் விகிதாசாரத் தேர்தல் முறைமைக்கு நாம் அடி பணியக் கூடாது.

**தேர்தல் நிர்ணய முறையின்றி இதனைச் செய்ய முடியாது என்று ஒரு கருத்து நிலவுகின்றது. இது சரியா ?**

மீண்டும் எல்லை நிர்ணயம் அவசியமில்லை. தற்போதைய தேர்தல் தொகுதிகளுக்கு அமைய இதனை அமுல்படுத்த முடியும். தற்போது இருக்கக் கூடிய தேர்தல் தொகுதிகளை அவ்வாறே கவனத்திற்கொண்டு அந்த ஆசனங்களை தேர்தல் தொகுதிகளாக ஏற்றுக்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யலாம்.

**இடதுசாரிக் கட்சி என்ற வகையில் எதிர்காலத்தில் எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வீர்கள் ?**

இன்னும் அது பற்றிக் கூறுவது கடினம். இன்று மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களித்த சக்திகளை எம்முடன் வைத்திருப்பதையே நாம் இன்று செய்ய வேண்டியுள்ளது. அவர்களுடைய குறிக்கோள் தேசிய சுதந்திரம் மக்களுக்குச் சார்பான பொருளாதாரக் கொள்கை, ஜனநாயக மறுசீரமைப்புக்கள், தேசிய இனங்களின் ஐக்கியம், தேசத்தின் ஐக்கியம் இவற்றை ஒன்றிணைத்து செயற்பட வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

நீண்டகாலமாக இவற்றை செய்ய வேண்டும் என நாம் பிரார்த்தித்தோம். சில வேளைகளில் நம்பிக்கை இழந்ததும் உண்டு. ஆனால் இந்த சக்திகள் திசை மாறிப் போகவில்லை. இச்சக்திகள் மத்தியில் முரண் நிலை காணப்பட்டாலும் ஒன்றாகவே செயற்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியை முன்னணியாகக் கொண்ட எதிர்க்கட்சியினரை நாம் தொடர்ச்சியாக எதிர்த்தோம். அவர்கள் தொடர்ந்தும் அவ்வாறே இருக்கின்றனர். அவர்களோடு கலந்துரையாடுவதன் மூலம் எதிர்கால நடவடிக்கைகளையிட்டு நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் நாம் சாதகமான ஒரு இடையீட்டைச் செய்ய வேண்டும். அதாவது இந்த நாட்டில் ஏற்படும் சிறந்த மாற்றத்திற்கு நாம் எம்மையும் உள்ளடக்க வேண்டும்.

**நீங்கள் கூறும் ஐக்கியத்தை விட தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக பாரிய பிளவுகள் எதிர்க்கட்சியில் இருக்கின்றதல்லவா ?**

இந்தப் பிளவு கடந்த பாராளுமன்ற அமர்வின் போது ஏற்பட்டது. குறிப்பாக விமல் வீரவங்சவிற்கும் எனக்குமிடையே இந்தக் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. உதாரணமாக வட மாகாணத்தின் ஆளுநர் இராணுவத்தைச் சேர்ந்தவராகவே இருக்க வேண்டும் என விமல் வீரவங்ச கூறுகிறார். நான் அதனை எதிர்க்கின்றேன். மிகச் சிறந்த சிவில் உத்தியோகத்தரான திரு. பளிஹக்கார நியமனம் பெற்றது நல்ல ஒரு அறிகுறி.

**இந்த நாட்டின் மையப் பிரச்சினையாக தேசிய இனப் பிரச்சினை இருந்து வருகிறது. வாக்களிக்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்பை நோக்கும் போது இது தெளிவாகிறது. தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கம் ஒரு சாதகமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாயின் எதிர்க்கட்சியிலுள்ள இந்த வேறுபாடு தீவிரமடையுமல்லவா?**

திரு விமல் வீரவங்ச அதிகாரப் பகிர்வை எதிர்க்கின்றார். இது புதிய விடயம் அல்ல. வட மாகாணத்தில் மாகாண சபைத்



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்



www.colombogazette.com

**திரு விமல் வீரவங்ச அதிகாரப் பகிர்வை எதிர்க்கின்றார். இது புதிய விடயம் அல்ல. வட மாகாணத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் அவர் எதிர்ப்புத் தெரிவித்தார்.**

தேர்தலை நடத்துவதற்கும் அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். முன்னைநாள் ஜனாதிபதி அவரின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி அங்குள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு வாய்ப்பளித்தார். அதற்கும் இவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். வட மாகாண சபைக்கு இதை விட எதுவிதமான அதிகாரங்களையும் கொடுக்க வேண்டாம் என இவர்கள் கூறுகின்றார்கள். வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி, இந்த நாட்டின் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் அங்கீகாரத்திற்கான ஒன்றிணைப்பினூடாக இப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டையே நாம் கொண்டிருக்கின்றோம். இந்த நிலைப்பாட்டை எதிர்ப்பவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள். இந்த பரந்துபட்ட மக்களுக்கு போரின் முகத்தைக் காட்டினாலும், யுத்த வெற்றியை உறுதிப்படுத்தும் சினிமாப் படங்களைக் காட்டினாலும் யுத்தம் வெற்றிகொண்ட ஒரே காரணத்தினால் மாத்திரம் பெரும்பான்மை மக்கள் மஹிந்தவிற்கு வாக்களிக்கவில்லை. யுத்தத்தை வெற்றிகொண்டது ஒரு காரணம் மாத்திரமே.

இம்மக்களுக்கு வாழையடி வாழையாக உரித்தான ஒரு அரசியல் உண்டு. அது 1956 முதல் இடம்பெற்று வருகிறது. அதற்கு முன்னரும் அது இருந்தது. அந்த உரித்தாளர்களின் பயனிகள் என்ற வகையில் அவர்கள் மஹிந்தவை அரவணைத்துக் கொண்டிருந்தனர். உர மானியம், நெல்லுக்கான உத்தரவாத விலை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் போன்ற அரச விநியோகத் துறைகளை மீளத் திறந்து குறைந்த விலைக்கு பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். இவை தான் அரசின் இடையீடுகள் அவசியமான இடங்கள். அரசின் இடையீட்டுடன் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல். இந்த நடவடிக்கைகள் மஹிந்த ஆட்சியின் கீழ் மக்களுக்கு ஒரு நிம்மதியை ஏற்படுத்தியது. இந்த நிம்மதிக்கு மேலதிகமாக கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கும் தெருக்களின் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது. கிராமங்கள் மேம்படுத்தப்பட்டன. கிராமங்களை இணைக்கம் பாலங்களை உருவாக்குவதன் மூலம் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இவற்றை மனிதர்கள் தமது வாழ்க்கையில் உணர்ந்தனர். 57 இலட்சம் வாக்காளர்கள் இவை காரணமாகவே மஹிந்தவிற்கு வாக்களித்தனர். அந்த சக்திகளை நாம் ஒன்றிணைத்துக்கொள்ள வேண்டும்.

**தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்திற்கு எதிராக இனவாத இயக்கங்கள் தோன்றுமேயாயின், நீங்கள் எத்தகைய இடையீட்டை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றீர்கள் ?**

நாம் எப்போதும் இனவாதத்தை எதிர்த்தே செயற்பட்டுள்ளோம். தேசிய இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு அவசியம் ஐக்கியத்தை உருவாக்குவது அவசியம். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வழங்கப்படுவதை யாராவது எதிர்ப்பார்களாயின் 1989 காலகட்டத்தில் மேற்படி தீர்வுகளை பாதுகாப்பதற்கு முன்வந்தது போல நான் அவற்றை பேணிப்பாதுகாக்க தயங்கப் போவதில்லை.

(நேர்காணல் குறிப்புக்கள் மஹிந்த ரத்னாயக்க)

* பெற்ற வெற்றியை முன்னெடுத்துச் செல்வதை விடுத்து, அம்மக்களின் அபிலாஷைகள் மீது முன்னகர தயாரானவர்களை நீக்கி அரசியலதிகாரத்தை தமது கைகளில் தக்க வைப்பதற்கு முயற்சிக்கும் பிற்போக்கு ஆட்சி தர்மிடோர் என அறிமுகப்படுத்தப்படுகிறது.



# வடக்கு கிழக்கு மக்களுக்கு சிவில் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்
**சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன்**

**100 நாள் வேலைத்திட்டங்களின் கீழ்வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு புதிய திட்டங்கள் உண்டா ?**

தற்போது அப்படியான ஒரு திட்டம் இல்லை. ஆனால் இராணுவம் ஆக்கிரமித்த காணிகளை மக்களிற்கு வழங்குவதற்கும் தற்போது கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு அரசுடன் கலந்துரையாடினோம். ஜனாதிபதி இக்கோரிக்கைகளுக்கு உடன்பட்டுள்ளார்.

**தடுப்புக் காவலில் உள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை ?**

தடுப்புக் காவலில் உள்ள இளைஞர்களை மூன்று வகையாக வகைப்படுத்தலாம்.

1. விசாரணைகள் முடிவடைந்தாலும் சுதந்திரமான வாழ்க்கைக்கு உரிமையற்றவர்கள். இவர்களுக்கு ஜனாதிபதியின் பொது மன்னிப்பு அவசியமாகும்.

2. தற்போது விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டோர். அவர்கள் தொடர்பாக சட்டமா அதிபரின் இடையீடு அவசியம்.

3. எதுவிதமான விசாரணையும் இன்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நிலையில் உள்ள பாரிய எண்ணிக்கையினர் பற்றி நியாயத்தை நிலைநாட்டுவது புதிய அரசின் ஒரு வகைப்பொறுப்பாகும்.

மீளக் குடியமர்த்தும் விடயம் தொடர்பான முன்னேற்றம் எவ்வாறு அமைந்துள்ளது ?

யாழ்ப்பாணத்தில் சுமார் 6500 ஏக்கர் காணி இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இவற்றை படிப்படியாக விடுவித்துக்கொண்டு சுமார் 23,000 குடும்பங்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவில்லை. 2012 இல் திரு மாவை சேனாதிராஜா தொடுத்துள்ள வழக்கிற்கு அமைய மீளக் குடியேற்றம் மேலும் தாமதமாகியது. இம்மக்களுக்கு துரிதமான நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றே நாம் அரசிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் அனைத்து மக்களும் தென்னிலங்கையின் மக்களைப் போலவே இராணுவ ஆட்சியின்றி சுதந்திரமாக செயற்படுவது அவசியமாகும். வடக்கு கிழக்கு மாகாணங்களின் யுத்தம் முடிவுற்றாலும் அங்கு வாழும் சிவில் மக்கள் தொடர்ந்தும். பகுதி இராணுவ அரசின் கீழேயே வாழ்கின்றனர். அனைத்து இனங்களும் சுதந்திரமாக வாழ்வதற்கான ஒரு நாட்டை நிர்மாணிப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

*(2015–02–01 வீரகேசரி பத்திரிகையில் வெளியிடப்பட்ட நேர்காணலில் இருந்து)*



சமாதான நோக்கு
2015 பெப்ரவரி–மார்ச்



# தேசிய அரசாங்கத்தின் கனவை நனவாக்குவோம்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் நாயகம்
**சட்டத்தரணி நிஷாம் காரியப்பர்**

**கடந்த ஜனாதிபதித் தேர்தல் அண்மிக்கும் வரை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்ட உங்கள் கட்சி இறுதித் தருணத்தில் 100 நாள் வேலைத் திட்டத்திற்கு உடன்பாடு தெரிவித்து பொது வேட்பாளருக்கு ஏன் உதவியளித்தீர்கள் ?**

நாம் இக்கலந்துரையாடலை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்தோம். ஆரம்ப காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதில் தவறு இல்லை எனக் கருதினோம். பொது மக்களின் விருப்பம் இருந்தால் மீண்டும் தெரிவுசெய்யப்படுவதில் தவறு இல்லை என எண்ணினோம். ஆனால், அரசியலமைப்பிற்கான 18வது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ படிப்படியாக அனைத்து அதிகாரங்களையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். அதன் பயங்கரத் தன்மை அப்போது தான் எமக்குப் புரிந்தது. இதனிடையே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட பல்வேறு கட்சிகளின் உட்கட்சி முரண்பாடுகளை மஹிந்த ராஜபக்ஷ கூர்மைப்படுத்தியதையும் நாம் காண முடிந்தது. காலத்திற்குக் காலம் இத்தவறை முன்னைநாள் ஜனாதிபதிக்கு நாம் சுட்டிக் காட்டினோம். ஆனால் அவர் எப்போதும் “எனது அதிகாரம்” என்ற மந்திரத்தை ஜபித்துக்கொண்டு ஜனநாயகத்திற்கு எதிரான நடைமுறையைப் பின்பற்றினார். அளுத்கமை தாக்குதல்கள் மூலம் முஸ்லிம் மக்கள் மிகுந்த மன வேதனையுடன் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர். இப்படியான ஒரு சூழ்நிலையில் ஒரு கட்சி என்ற வகையில் பொது வேட்பாளருக்கு ஒத்துழைப்பு வழங்கும் தீர்மானத்தை நாம் மேற்கொண்டோம்.

**பழைய வெஸ்ட் மினிஸ்டர் முறையா அல்லது நிறைவேற்று ஜனாதிபதி முறையா இலங்கைக்கு ஏற்றது என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

இந்த இரண்டும் இலங்கைக்குச் சரிவரமாட்டாது. வெஸ் மினிஸ்டர் முறைமையின் கீழ் சிறுபான்மையினங்களின் பிரதிநிதித்துவம் பொருட்படுத்தப்படவில்லை. 51 சதவீதமான பிரதிநிதித்துவம் முக்கியத்துவம் வாய்ந்த நிலையில், 49 சதவீதமான பிரதிநிதித்துவம் நிராகரிக்கப்பட்டது.

1978ம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்திய பின்னர். விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் சிறுபான்மை பிரதிநிதித்துவத்திற்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அங்கும் ஒரு தீவிரத் தன்மை இருந்தது. துஷ்டத் தனமும் அராஜகமும் கொண்ட ஆட்சியை விட சிறுபான்மையினம் என்ற இணக்கப்பாட்டுடன் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது அவசியமாகியது. எனவே கலப்பு முறைக்குச் செல்வது சிறந்தது. எனக் கருதுகிறேன்.

**100 நாட்களுக்குப் பின்னர் உங்கள் கட்சியின் எதிர்பார்ப்புகள் யாவை?**

எமது இலக்கு தேசிய அரசாங்கமாகும். இது எமது பழைய கோரிக்கையுமாகும். எமது மறைந்த தலைவர் திரு அஷ்ர:.ப் சந்திரிகா பண்டாரநாயக்க அம்மையாருடனும், திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களுடனும் இது பற்றி நீண்ட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். தேசிய அரசாங்கம் என்பது எமது கனவு. அதனை நாம் நனவாக்குவோம்.

வேறு பல விடயங்களைச் சேர்ப்பதற்கே சிருஷ்டிகர ஆற்றலுடன்,
மனிதனுக்கு திறனாய்வு அறிவு உரித்தாக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை காலம் மனிதன் சிருஷ்டிகர

ஆற்றலுக்குப் பதிலாக அழிவையே தேடியுள்ளான்.

ஏன் ?

காடுகள் அழிக்கப்படுகின்றன.

ஆறுகள் வற்றுகின்றன.

வனசீவராசிகள் இல்லாதொழிக்கப்படுகின்றன.

காலநிலை சீரழிக்கப்பட்டுள்ளது.

பூமி நாள் தோறும்

தன் அழகை இழந்து

வறுமையடைந்து வருகிறது.

– அன்ரன் செக்கோவ்



ISSN 955-1800-0061

க்ளோப் பிரின்டிங் வர்க்ஸ் – இல. 5A, ஸ்டோர்க் வீதி, கொழும்பு 10 – தொலைபேசி : 0777-315971